பசவண்ணர்
வாழ்க்கை வரலாறு

கன்னட மூலம்: டாக்டர். எம். சிதானந்த மூர்த்தி

தமிழாக்கம்: டாக்டர். சி. சிவசண்முகம்

பசவண்ணர்

வாழ்க்கை வரலாறு

கன்னட மூலம்: டாக்டர் எம். சிதானந்தமூர்த்தி

தமிழாக்கம்: டாக்டர் சி. சிவசண்முகம்

BASAVANNAR VAALKKAI VARALAARU : Tamil translation of the life history of Basavanna from the Kannada original by Dr. M. Chidananda murthy.

விலை ரூ. 14-00

Published by :
Smt. Lakshmisundaram
Kaavya,
8, Shastri Nagar II Cross
Bangalore-560 038.

பசவண்ணர்

வாழ்க்கை வரலாறு

தமிழாக்கம் : டாக்டர் சி. சிவசண்முகம்

முதுநிலை ஆய்வாளர், மொழி பெயர்ப்புத்துறை,

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

எனது பெற்றோர்களுக்கு

நன்றியுரை

திராவிட மொழிகளின் ஒன்றுபட்ட வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும் மனதிற்கொண்டு தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் தமிழ், கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில் உள்ள இலக்கியங்களை ஒன்றிலிருந்து ஒன்றிற்கு மொழிபெயர்க்கும் திட்டத்தைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் துவக்கினார்கள். இத்திட்டத்தைத் துவக்கி எனக்கு ஒரு ஆய்வூதியம் வழங்கி பெங்களூர்ப் பல்கலைக்கழகம், கன்னட ஆய்வு மையத்திற்கு அனுப்பி கன்னடம் - தமிழ் மற்றும் தமிழ்-கன்னடம் மொழிபெயர்ப்புப் பணிகளை மேற்கொள்ள உதவியவர் தமிழ்ப்பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஆவார்கள்.

பெங்களூர்ப் பல்கலைக்கழகம், கன்னட ஆய்வு மையத்தின் இயக்குனர் டாக்டர் எம். சிதானந்தமூர்த்தி அவர்கள் தமது மூல நூலை மொழிபெயர்க்க அன்புடன் இசைவு அளித்ததுடன் நான் கன்னட மொழியை நன்கு கற்கவும் மொழிபெயர்ப்புப் பணியைச் சிறப்பாகச் செய்யவும் மிகுந்த உற்சாகமும் ஊக்கமும் அளித்துள்ளார். இம்மையத்திலேயே தமிழ் விரிவுரையாளர் பணியாற்றும் திரு. தமிழவன் அவர்கள் இம்மொழிபெயர்ப்பின் முதற்படியைப் படித்துத் தமது கருத்துக்களைக் கூறியதோடு எனது எல்லாப் பணிகளிலும் மிகுந்த உற்சாகத்தை அளித்துள்ளார்.

இந்நூலைத் தமது வெளியீடாக ஏற்றுக்கொண்டுள்ளார் சிறந்த நூல்களை வெளியிடுவதில் அக்கரை காட்டிவரும் காவ்யா வெளியீட்டகத்தின் உரிமையாளர்.

இவர்கள் யாவரும் செய்த உதவிகளை நான் நினைத்துப் பார்க்கிறேன். இவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப் பட்டுள்ளேன்.

பெங்களூர்,
ஜனவரி, 1984

சி. சிவசண்முகம்

முன்னுரை

இந்நூலை எழுதுவதற்கு முக்கியமாக இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று-பசவண்ணரின் மேல் எனக்கிருக்கும் வியப்பும் கௌரவமும். இரண்டு-அப்படிப்பட்ட பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிக் கிடைக்கும் தற்போதைய நூல்களின் மேல் எனக்கிருக்கும் அதிருப்தி.

பசவண்ணரின் தனித்தன்மை, அவரது வசனங்களின் இலக்கியச் சிறப்பு, பன்னிரண்டாம் நூற்றாண்டின் புரட்சி இவற்றைப்பற்றி கன்னடத்தில் பற்பல சிறந்த நூல்கள் வந்துள்ளன. ஆனால் அவரை வரலாற்று நோக்கில் பார்த்து, அவரது வாழ்க்கை வரலாற்றில் இருக்கும் சிக்கல்களை ஆராய்ந்து அவற்றைத் தீர்க்க முயலும் வரலாற்று நூல்கள் கன்னடத்தில் இன்னும் வெளியாகவில்லை. 'பக்தி பண்டாரி பசவண்ணர்' எனும் நூல் சிறந்த நூலாயினும் வாழ்க்கை வரலாற்று நோக்கில் அது அவ்வளவு சரியான நூலாகப்படவில்லை. இதர நூல்களைப் பற்றி எதுவும் சொல்லாமல் இருப்பதே நல்லது.

எனது இந்த நூலில் எனக்குத் திருப்தி என்று சொல்ல மாட்டேன், ஆனால் மேலே குறிப்பிட்ட அதிருப்தி மட்டும் குறைந்துள்ளது. இந்த நூலை எழுதும்போது மிகுந்த மனமகிழ்ச்சியை அடைந்தேன்; அவ்வாறே அதே அளவு மனத்துன்பத்தையும் அனுபவித்தேன். அவரது

வாழ்க்கைக்குத் தொடர்புகொண்ட மிகவும் முக்கியமான செய்திகளைத் தெரிந்துகொள்ள எந்த ஆதாரமும் கிடைக்காமலிருந்த போது அல்லது ஒன்றுக்கொன்று முரணான செய்திகள் கிடைத்து ஒரு முடிவிற்கு வருவது சிரமமாக இருந்தபோது நான் அனுபவித்த துன்பம் எனக்குத் தான் தெரியும். ஆனாலும், போதுமான அளவிற்குச் சரியானதொரு வாழ்க்கை வரலாற்றை நான் இங்கு அளித்துள்ளேன் என்னும் நம்பிக்கை இருக்கிறது.

பசவண்ணரைப் பற்றிய ஆராய்ச்சி நூல் எழுதுவது எளிது. அப்படிப்பட்ட நூலில் எல்லாவற்றையும் விவாதித்து தெரிந்துள்ளனவற்றைத் தெரிந்துள்ளது என்னும், தெரிய வராதிருப்பனவற்றைத் தெரியவில்லை என்றும் சொல்லி விடலாம். அல்லது, அவரைப் பற்றிய ஒரு கதையை எழுதுவது சுலபமோ என்னவோ! ஆனால் வாழ்க்கை வரலாறு எழுதுவது எனக்குக் கடினமான வேலையாக இருந்தது. வாழ்க்கை வரலாறு வெறும் 'வரலாறு' மட்டுமல்ல இலக்கியமும் ஆகும். ஆனால் அது கதை நூல் அல்ல; அங்கு கதாசிரியனுக்கு இருக்கும் கற்பனைச் சுதந்திரம் இல்லை. பசவண்ணரின் இளமைக் காலத்தைப்பற்றிய செய்திகள் அதிகம் தெரியவரவில்லை. அதனால் அவரது இளமையைப் பற்றிய ஆராய்ச்சியில் நான் சில செய்திகளைக் கற்பனை செய்து கொண்டுள்ளேன். அங்கும் கூட அவரது வசனங்களி லிருந்து தெரியவரும் அவரது மனோதர்மம், சிந்தனை போன்றவற்றின் துணைகொண்டே செயல்பட்டுள்ளேன். அவ்வாறே இன்னும் ஓரிரு இடங்களில் சிறு ஊகங்களைச் சேர்த்துள்ளேன், இவற்றைவிட்டுவிட்டால், இந்நூலின் ஒவ்வொரு சொற்றொடரை எழுதும்போதும் அதற்கு ஆதாரமாக ஏதாவது வசனம் அல்லது இலக்கியம் அல்லது கல்வெட்டு போன்றன என் மனதில் இருந்தன. சில இடங் களில் என் மொழிநடை ஆய்வுக்கட்டுரையின் மொழிநடை

யில் இருக்கிறதென்றால் அதற்கு என்னுடைய இயல்பே காரணம் என்பதை இங்கே சொல்லவேண்டியுள்ளது.

இந்த நூலை எழுதும்போது முக்கியமாகமாணவர்களை நினைவில் வைத்துக்கொண்டு எழுதியுள்ளேன். இவ்வாறு செய்தது செய்திகளின் விவரங்களுக்கு எல்லை வகுத்துக் கொடுத்திருக்குமே தவிர செய்திகளுக்கோ என் முயற்சி களுக்கோ எல்லை வகுக்கவில்லை. இதில் இயல்பாகவே விவாதங்களுக்கு உட்பட்ட செய்திகள் உள்ளன. இந்த அம்சத்தை நூல் எழுதும் எல்லா சமயத்திலும் மனதில் வைத்துக் கொண்டிருந்தேன். மேலும் இந்த அம்சம் எனது பொறுப்பை அதிகமாக்கிற்று.

நான் பெரும்பாலும் மூல நூல்களின் துணைகொண்டு செய்திகளைத் திரட்டியுள்ளேன். இந்த நோக்கில் பசவண்ணரின் வாழ்க்கை வரலாற்றுடன் தொடர்புடைய தற்காலத்திய நூல்களிலிருந்து எனக்கு மிகக் குறைந்த அளவிலேயே உதவி கிடைத்தது என்று சொல்லலாம்.

எம். சிதானந்தமூர்த்தி

மைசூர்
1-8-1967

(மூல நூலிலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது)

பதிப்புரை

தமிழும் கன்னடமும் வேறல்ல. இரண்டும் ஒன்றின் கூறுகளே - திராவிடத்தாயின் திருக்குழந்தைகள். தமிழர் களும் கன்னடர்களும் வேறல்லர். இருவரும் ஒரு தாய் பிள்ளைகள் இவர்களது மொழியும் இலக்கியமும் கலையும் கலாச்சாரமும் உணர்ந்து ஒப்பிட்டு மகிழத்தக்கவை. பசவண்ணரின் வாழ்வும் தமிழர்கள் அறியதக்கதே.

டாக்டர் எம் சிதானந்தமூர்த்தி பல்கலைக்கழகத்தின் கன்னடத்துறையின் தலைவராக உள்ளார். இவரது கன்னட நூலை டாக்டர் சிவசண்முகம் அவர்கள் தமிழில் பெயர்த் துள்ளார். இவர் கன்னடம் கற்று கன்னட நூல்களைத் தமிழோடு சேர்த்து ஆராயும் தமிழ் அறிஞர், ஆய்வாளர்.

இந்நூலை வெளியிடுவதன் மூலம் காவ்யா தமிழுக்கும் கன்னடத்துக்கும் உறவுப் பாலத்தை வருவாக்குகிறது. இப் பாலம் விரிந்துகொண்டே செல்ல காவ்யா இன்னும் பல நூல்களைத் தயாரிக்க விரும்புகிறது அதற்கான முதல் முயற்சியே இது.

அன்புடன்,
காவ்யா

☐ உள்ளே ☐

		பக்கம்
நன்றியுரை		vii
முன்னுரை		viii
1.	அரசியல் பின்னணி	1
2.	சமுதாய மற்றும் சமயப் பின்னணி	14
3.	பிறப்பும் இளமைக் காலமும்	36
4.	கூடலசங்கமத்திற்கு	49
5.	மங்களிவேடத்திற்கும் அங்கிருந்து கல்யாணிற்கும்	63
6.	கல்யாணில் கருவூல அதிகாரி பசவண்ணரும் பிஜ்ஜளனும்	80
7.	பசவண்ணரின் சாதனை சித்தி மற்றும் தனித்தன்மை	98
8.	அற மற்றும் சமுதாயச் சீர்திருத்தம்	125
9.	பசவண்ணரும் அவரது சமகாலத்தவர்களும்	151
10.	இறுதி நாட்கள்	176
11	வசனங்கள்	188
12.	செய்திகள்	205

1. அரசியல் பின்னணி

கன்னட நாட்டின் வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் அதில் பல அறிஞர் பெருமக்களைக் காணலாம். ஞானிகள், கவிகள், அரசர்கள், பேரரசர்கள், அமைச்சர்கள், சாதனையாளர்கள், கலை வல்லுனர்கள், சமுதாய சீர்திருத்த வாதிகள், அரசியல் ஞானிகள், வீரர்கள், வீராங்கனைகள்— இவ்வாறு ஒன்றல்ல, இரண்டல்ல நூற்றுக்கு மேற்பட்ட துறைகளில் அரும் பணியாற்றி நாட்டு மக்களுக்காக தம்மைத் தாமே அர்ப்பணித்துக்கொண்டு அமரராகி இருக்கும் பலரின் பெயர்களை அதில் காணலாம். உண்மையில், இவர்களின் வரலாறே கன்னட நாட்டின் வரலாறாக இருப்பதைக் காணலாம். இவர்களாலேயே இந்நாட்டின் வரலாறு நமக்குக் கிடைத்தது. இவர்களின் படைப்புக்களாலேயே கன்னடநாடு பெருமிதத்துடன் தலை நிமிர்ந்து நிற்கும் பெருமை பெற்றுள்ளது, இவர்களே கன்னட நாட்டின் சொத்து. இப்படிப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலில் பசவண்ணரின் பெயர் ஒரு துருவ நட்சத்திரம் போல் விளங்குகிறது.

பசவண்ணர் ஒரு தனி மனிதனாக விளங்காமல் ஒரு சக்தியாக விளங்கினார். அவரது தனித்தன்மை பலகோணங்களில் காணக்கிடக்கின்றது. அவர் பல துறைகளில் செயல்பட்டார். பிஜ்ஜளன் என்பவனின் அரசில் அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார்; மிகுந்த தொல்லைகளுக்கிடையில் தமது கொள்கைகளையும், ஞான நெறியையும் பரப்பியுள்ளார்; ஒரு

பெரிய குழுவின் தலைவராக இருந்து பல வகையான காரியங்களை ஈடேற்றியுள்ளார்; வசனகவிதைகளை எழுதியுள்ளார். இவ்வாறு பலவகையான தனித்தன்மை வாய்ந்த செயல்களை நிறைவேற்றி வெற்றிகண்டுள்ளார். இப்படிப்பட்ட பலவகையாலும் தனித்தன்மை பொருந்தி விளங்கிய ஒரு அறிஞரை ஏன்கு அறிந்துகொள்ள வேண்டுமென்றால் அவர் பிறந்து வளர்ந்த சூழ்நிலையையும் மற்றும் தனது எண்ணங்களைச் செயல்படுத்திக் கொள்ளவேண்டும் என்னும் ஒரே எண்ணத்துடன் அவர் கடமையாற்றிய சூழ்நிலையையும் நாம் ஆழ்ந்து கவனிக்கவேண்டும். ஏனென்றால், ஒரு தனி மனிதன் தனது சுற்றுப்புறச் சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வதைப் போலவே ஒரு மனிதனின் சூழ்நிலையும் அவனை உருவாக்குவதில் துணைபுரிகிறது. மனிதனை ஒரு சித்திரத்திற்கு உவமைப்படுத்தினால் அவன் வளர்ந்த சூழலை அச்சித்திரத்தின் சட்டத்திற்கு ஒப்பிடலாம். சித்திரத்தினால் சட்டம் முழுமையடைகிறது; சட்டத்தினால் சித்திரம் பாதுகாப்படைகிறது, நன்றாக விளங்குகிறது. எனவே, பசவண்ணரின் தனித்தன்மையையும்: சாதனைகளையும், அவர் தமது சுற்றுப்புறச் சூழ்நிலைகளுடன் நடத்திய போராட்டத்தையும் நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டு மென்றால் அவருக்குப் பின்னணியிலிருந்த அரசியல், சமுதாய மற்றும் சமயச் சூழல்களைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது மிக முக்கியமாகிறது.

பசவண்ணர் வாழ்ந்தது பன்னிரண்டாம் நூற்றாண்டில். அப்பொழுது நாட்டை ஆண்டுவந்த மன்னன் கலசூரி வம்சத்தைச் சேர்ந்த பிஜ்ஜளன் என்பவன் ஆவான். பிஜ்ஜளனின் வாழ்க்கையும். பசவண்ணரின் வாழ்க்கையும் அரசியல் மற்றும் தர்ம மையங்களில் ஒன்றையொன்று சந்தித்தன; ஒன்றையொன்று ஆதிக்கம் செலுத்தின. பசவண்ணரின் வாழ்க்கையில் பிஜ்ஜளனால் அவருக்கு ஏற்பட்ட நன்மைகளைவிட

தொல்லைகளே அதிகம். எனினும், அவனது தொல்லைகளே அவர் தனது பணியில் மிகுந்த ஈடுபாடுகொள்ள உதவின என்றும் கருதலாம். பிஜ்ஜளன் சாளுக்கியப் பேரரசுக்கு வாரிசுதாரனாக ஆன விதத்தை அறிந்துகொள்வது மிகவும் முக்கியமாகிறது.

ராட்டிரக்கூடர்கள் பாதாமி சாளுக்கியரை வென்று அவர்களது பரந்த அரசைக் கைக்கொண்டு ஆண்டுவந்தார்கள். இந்த ராட்டிரக்கூடர்களில் இறுதியில் ஆட்சி செலுத்திய மூன்றாம் கிருஷ்ணன் என்பவன் மிகவும் பெருமை படைத்தவன். ராட்டிரக்கூடர்களின் காலத்தில் சாளுக்கியர்கள் சிறப்பிழந்து, சீர்கெட்டு வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் அஹவமல்லதைலபரசன் என்றும் இரண்டாம் தைலன் என அழைக்கப்படுபவனும் ஒருவன். மூன்றாம் கிருஷ்ணன் இந்த தைலபரசனுக்கு தர்தவாடி பாகத்தை (இன்றைய பிஜப்பூர் மாவட்டத்தின் இண்டி, சிந்தகி. பாகவாடி ஆகிய வட்டங்கள்) அன்பளிப்பாக வழங்கினான். கிருஷ்ணனுக்குப் பிறகு அவனது சகோதரன் கோட்டிகன் என்பவன் பட்டத்திற்கு வந்தான். இவன் அவ்வளவாகச் சிறப்படையவில்லை; வலிமை குன்றி விளங்கினான். இவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த இவனது சகோதரன் நிருபமனனின் மகனாகிய கர்கன் என்பவனும் கூட மிகவும் வலிமை குறைந்து திறனற்றிருந்ததனால் வலிமை படைத்தவனும், நிறைய செயல்களைச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தவனுமான இரண்டாம் தைலன் கி. பி. 973ல் கர்கனை ஆட்சியிலிருந்து இறக்கிவிட்டு ராட்டிரக்கூட பேரரசைத் தனதாக்கிக் கொண்டு முடிசூடி அரசாண்டு வந்தான். இவன்தான் கல்யாண் சாளுக்கிய பரம்பரையைத் தோற்றுவித்தவனாவான். கங்கர நாட்டின் அரசனாகிய மாரசிம்மன் இவனைத் தோற்கடித்து ராட்டிரக்கூடப் பேரரசை மீண்டும் நிலைநாட்டவேண்டும் என்னும் எண்ணத்துடன் செய்த அனைத்து

முயற்சிகளும் தோல்வியைத் தழுவின. இவன் கி. பி 975-ந்திலும், இவன் அரசனாக்க முயற்சி செய்த இந்திரன் (மூன்றாம் கிருஷ்ணனின் பேரன்) 982 லும் முறையே பங்காபுரத்திலும், சிரவணபெலகொலாவிலும் தமது சமய நெறிப்படி உபவாசம் இருந்து உயிர் நீத்தனர். இத்துடன் ராட்டிரக்கூடர்களின் வரலாறு முடிகிறது.

இரண்டாம் தைலன் ராட்டிரக்கூடரின் தலைநகராகிய மான்யகேடத்திலிருந்தே அரசாண்டு கொண்டு தனது ஆட்சியின் கீழ் வந்த பேரரசைக் காப்பாற்றிக் கொண்டான். மாளவத்தின் அரசனாகிய பரமாரரமுஞ்சன் தனது நாட்டின் மேல் படையெடுத்து வந்தபோது அவனைத் தோற்கடித்து சிறைப் படுத்தியதோடு இறுதியில் கொன்றும் விடுகிறான். தைலனுக்குப் பிறகு அவனது மகன் இறிவபெடங்க சத்யாஸ்ரயன் கி.பி. 997 ல் அரசனானான். இவ்விருவர்களின் அரசவையில் புலவனாக இருந்த புலவன் ரன்னன் என்பவன் அஜீத புராணம் மற்றும் சாஹசபீமவிஜயம் அல்லது கதாயுத்தம் என்ற இரு காவியங்களை இயற்றினான். இவன் தனது சாஹசபீம விஜயத்தில் இறிவபெடங்க சத்யாஸ்ரயனையும் பீமனையும் சமமாகப் பாராட்டி தன்னை ஆதரித்த அரசனைப் போற்றியுள்ளான். சத்யாஸ்ரயனுக்குப் பிறகு அவனது தம்பி மகனான ஐந்தாம் விக்ரமாதித்யன் என்பவன் அரசனானான். இவனது காலத்தில் சிறப்பாகக் குறிப்பிடக் கூடிய அளவுக்கு முக்கிய செயல்கள் எதுவும் நடைபெறவில்லை. இவனது சகோதரியாகிய அக்காதேவி என்பவள் அப்போது நிருவாகம் செய்வதில் மிகவும் திறமை படைத்தவள் என்ற பெயர் பெற்று விளங்கினாள். கி. பி. 1015 ல் அவனது தம்பி இரண்டாம் ஜயசிம்ஹன் பட்டத்திற்கு வந்தான். இவன் காலத்தில் பல யுத்தங்கள் நடைபெற்றன. அவற்றில் சாளுக்கியர்களின் பரம விரோதிகளாக இருந்த

சோழர்களுடன் நடைபெற்ற சண்டைகள் குறிப்பிடத்தக்கன. இவனது மனைவியான சுக்கலதேவி தேவர தாசிம்மையனின் கொள்கைகளில் மிக்க ஈடுபாடு கொண்டவளாக இருந்தாள். (பசவண்ணர் தமது வசனங்களில் தேவர தாசிம்மையனின் பக்தியையும் அவன் சிவபெருமானிடம் தன் மனதைப் பறிகொடுத்ததையும் மிகவும் சிறப்பித்துக் கூறியுள்ளார்.) சோழர்கள் தமது படையெடுப்புகளில் மான்யகேடத்தை அழித்து விட்டதனால் இவன் தனது தலைநகரை ஏதகிரிக்கு (இன்றைய குல்பர்கா மாவட்டத்தின் யாதகிரி) மாற்றினான். ஜயசிம்மனின் ஆட்சிக்குப் பிறகு அவனது மகனான முதலாம் சோமேஸ்வரன் 1043ஆம்ஆண்டளவில்பட்டத்திற்கு வந்தான். இவன் சுமார் 1048 ஆம் ஆண்டளவில் கல்யாணைத் தலை நகராக்கிக் கொண்டு சிறப்பாக ஆட்சி புரிந்தான். (இவ்வரச னிலிருந்து சாளுக்கிய வம்சத்தின் இறுதி அரசனின் ஆட்சி வரையும் கல்யாணே இவர்களின் தலைநகராக விளங்கியது. மேலும், பசவண்ணர் போன்ற சமயப் பெருமக்கள் வாழ்ந்து சாதனை நிகழ்த்திய பெருமையையும் படைத்தது கல்யாண்) இவனது மகனான ஆறாம் விக்கிரமாதித்யனின் காலத்தில் சாளுக்கியப் பேரரசு மிகவும் சிறப்பெய்தி புகழின் உச்சியில் இருந்ததென்றால் அதற்குக் காரணம் இந்த சோமேஸ்வரனே ஆவான். இவனது ஆட்சிக்காலத்தில் சோழர்கள் சாளுக்கியப் பேரரசிற்குள் நுழைந்து தலைநகராகிய கல்யாணைத் தாக்கத் தொடங்கினார்கள் என்று தெரிகிறது. சோமேஸ் வரனுக்கும் சோழர்களுக்கும் கொப்பளம் எனுமிடத்தில் கடுமையான போர் நடைபெற்றது. போரில் சோழ மன்னன் ராஜாதிராஜன் மடிந்தான். கி. பி. 1068ல் சோமேஸ்வரன் நோயினால் தாக்கப்பட்டு தான் அந்நோயிலிருந்து மீளுவது அரிது என்று உணர்ந்து துங்கபத்ரா நதியில் முழுகித் தானே தன் உயிரை மாய்த்துக் கொண்டான். அவனுக்குப் பின் அவனது மூத்தமகன் இரண்டாம் சோமேஸ்வரன் ஆட்சிக்கு வந்தான். ஆனால் அவனது தம்பி ஆறாம் விக்கிரமாதித்யன்

சோழர்களின் உதவியுடன் மோசமானவனும் கெட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டு தனது வம்சத்திற்கே கெட்ட பெயரை சம்பாதித்துக் கொண்டவனுமாகிய தனது அண்ணனை ஆட்சியிலிருந்து இறக்கிவிட்டு கி. பி. 1076 ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றான். கல்யாணைத் தலைநகராகக் கொண்டு அரசாண்ட சாளுக்கிய அரசர்களில் இவன் மிகவும் சிறப்பானவன். இவனது ஆட்சிக் காலத்தில் எங்கும் அமைதி நிலவியது. கலைகளின் வளர்ச்சிக்கும் இலக்கியங்களின் வளர்ச்சிக்கும் இவன் மிகவும் பாடுபட்டு அவற்றை உற்சாகத்துடன் வளர்த்தான். பில்ஹணனைப் போன்ற கவிஞர்களும் விஞ்ஞானேஸ்வரனைப் போன்ற கல்வியிற் பெரிய அறிஞர்களும் இவனது அரசவையில் இருந்தனர். இவனது ஆட்சியின் கீழ் இருந்த சிற்றரசர்களில் ஒருவனான ஹொய்சல அரசனாகிய விஷ்ணுவர்த்தன் இவனிடமிருந்து விடுதலைபெற்று தனியரசனாக வேண்டும் எனத் திட்டமிட்டுப் போருக்கு வந்தபோது இவன் விஷ்ணுவர்த்தனைத் தோற்கடித்து தனது பேரரசை நிலைநாட்டினான். விஷ்ணுவர்த்தன் விக்ரமாதித்யனைப் பேரரசனாக ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று.

தைலனிலிருந்து விக்ரமாதித்யன் வரை வளர்ந்து வந்த சாளுக்கியப் பேரரசு பிற்காலத்தில் சிறப்பிழந்து போயிற்று. விக்ரமாதித்யனுக்குப் பின் 1126 ல் அவனது மகன் மூன்றாம் சோமேஸ்வரன் ஆட்சிக்கு வந்தான். இவன் மிகவும் அமைதியான அரசன். அமைதியாக இருக்கும் தன்மை அரசர்களுக்கு ஏற்றதல்ல அல்லவா? இவனது காலத்தில் முன்பு போரிட்டுத் தோற்றுப்போன ஹொய்சல அரசனான விஷ்ணுவர்த்தன் தனது அடிமைத் தளையை விடுவித்துக் கொண்டதோடு சாளுக்கியப் பேரரசின் பல பகுதிகளைத் தனதாக்கிக் கொண்டான். மூன்றாம் சோமேஸ்வரனின் மகன்களாகிய ஜகதேகமல்லன் மற்றும் மூன்றாம் தைலன் ஆகியோரின் காலத்தில்

சாளுக்கியப் பேரரசின் பல சிற்றரசர்கள் தமது படையைப் பெருக்கி போரில் வென்று விடுதலை பெற்று தனியரசர்களாயினர். அதிலும், முக்கியமாக மூன்றாம் தைலனின் காலத்தில் சிற்றரசனாக இருந்த கலசூரி பிஜ்ஜளன் என்பவன் சிறிது சிறிதாக தனது படையைப் பெருக்கி திறனை வளர்த்துக் கொண்டு சுமார் 1157-62 ம் ஆண்டுகளுக்குட்பட்ட காலத்தில் தைலனை அரசிலிருந்து இறக்கிவிட்டு தானே பேரரசன் என்று அறிவித்துக் கொண்டான். தைலனிடமிருந்து பிஜ்ஜளன் நாட்டைப் பிடுங்கிக்கொண்டு அரசனான விவரமே ஒரு தனிக் கதையாகும்.

முன்னமேயே கூறியிருந்தது போல பிஜ்ஜளன் கலசூரி வமிசத்தைச் சேர்ந்தவன். காலசூரிகள் உண்மையில் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்; மத்திய இந்தியாவைச் சார்ந்தவர்கள். இவர்கள் சிவபெருமானிடம் மிகவும் அன்பு கொண்டு ஒழுகியதால் இவர்களை கல்வெட்டுக்கள் 'பரமமாஹேஸ்வரர்' என்று குறிப்பிடுகின்றன. இவர்களது நாட்டின் அரச முத்திரையில் சிவபெருமானின் ஊர்தியாகிய நந்தியின் சித்திரம் இருந்தது. இவர்கள் மிகவும் திறமை படைத்த அரசர்களாக விளங்கினார்கள். 9-10ம் நூற்றாண்டுகளில் இவர்களது எதிரிகளின் கை ஓங்கி இவர்களின் வலிமை குன்றியதால் இவர்கள் தம்முடைய நாடான காலஞ்ஜர மண்டலத்தை விட்டு விட்டு சிறுசிறு கூட்டங்களாகப் பிரிந்து இந்தியாவின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று அங்கேயே நிலைத்துத் தங்கிவிட்டனர். அப்படிப்பட்ட கூட்டங்களில் ஒன்றானது கர்நாடகத்திற்கு வந்து இங்குள்ள தறிகாடு நாட்டின் மங்களிவேடம் எனும் ஊரில் (சோலாப்பூர் மாவட்டத்தின் மங்கள வேடம்) தங்கி வலிமைபெற்று அப் பகுதியை ஆளத்தொடங்கினார்கள், இவர்களே கர்நாடகத்தை ஆண்ட கலசூரிகளின் வம்சத்தைத் தோற்றுவித்தவர்களாவார்கள்.

ஆயினும், கர்நாடக கலசூரிகளின் வம்சத்தை ஆரம்பத்தி லிருந்து விவரிக்க முடியுமென்றாலும் அவர்களது காலத்தின் ஆரம்பத்திலிருந்து ஜோகமன் வரையில் உள்ள அரசர்களில் சிலரின் விவரங்களைத் தவிர்த்து மீதியுள்ள அரசர்களைப் பற்றிய விவரம் நமக்குக் கிடைக்கவில்லை. சிற்றரசர்களாக இருந்த கலசூரிகளுக்கு பெருமையைத் தேடித்தந்தவன் இந்த ஜோகமன் என்பவனே (இவனது காலம் கி. பி. 1110). கல் யாண் சாளுக்கியர்களின் சிற்றரசனாக இருந்த இவன் அவர் களது பல படையெடுப்புக்களில் முக்கிய பங்கு வகித்து பெரும் பணியாற்றி அவர்கள் தமது அரசைப் பெருக்கிக் கொள்ளும் பணியில் முழுதுமாகத்தன்னை ஈடுபடுத்திக் கடமையாற்றினான், இவன் தனது மகளான சாவள தேவியை ஆறாம் விக்கிரமாதித்யனுக்கு கொடுத்த செய்தி இங்குக் குறிப்பிடத்தக்கது. விக்கிரமாதித்யன் மிகுந்த வலிமை படைத்தவன், பலரும் போற்றும் திறன் படைத்தவன் என்ப தையும் நாம் முன்பே குறிப்பிட்டோம். இதனால் ஜோகமன் சாளுக்கியர்களின் அன்பிற்குப் பாத்திரனானான் என்பது தெளிவாகிறது. ஜோகமனின் மகனின் பெயர் பெர்மாடி ஆகும் (காலம் கி பி. 1118-1140). இவனும் தனது தந்தை யைப் போலவே மங்களிவேடத்திலிருந்து கொண்டு தனது சிற்றரசை ஆண்டு கொண்டுவந்தான். விக்கிரமாதித்ய னுக்குப் பின்னர் பட்டத்திற்கு வந்த மூன்றாம் சோமேஸ் வரனுக்கு இவன் மாமன் ஆவான். விக்கிரமாதித்யன் தனது வேறொரு ராணியான சந்தலதேவிக்குப் பிறந்த தன்மகளை பெர்மாடிக்குத் திருமணம் செய்துவைத்தான். இவர்களின் மகனே பிஜ்ஜளன் ஆவான். நாம் முன்பே பார்த்தைப் போல மூன்றால் சோமேஸ்வரன் வலிமை குன்றிய அரசனாக இருந் தான். இவனது வலிமைக் குறைபாட்டைப் பயன்படுத்திக் கொண்டு பெர்மாடி இவனுக்கு வரிசெலுத்தும் சிற்றரசனாக இருக்க விரும்பாமல் விடுதலை பெற முயற்சித்தான் என்ப தற்கு ஆதாரங்கள் உள்ளன.

பெர்மாடி கண்ட கனவு பிஜ்ஜளனிடத்தில் நனவாயிற்று. பிஜ்ஜளன் சுமார் 1140 இல் அரசனானான் என்று தெரிகிறது. இவனது காலத்தில் இரண்டாம் ஜகதேகமல்லன் என்பவன் பட்டத்திற்கு வந்து அரசைக் கைக்கொண்டான். இவன் பிஜ்ஜளனின் மாமனின் மகன். இவ்வாறு பிஜ்ஜளன் அரசனின் நெருங்கிய உறவினனாகவும் மேலும் அவனுக்கு சமமான வயதினனாகவும் இருந்துவந்தான். ஜகதேகமல்லன் நோயாளியாக இருந்ததனால் அவனது தம்பியாகிய மூன்றாம் தைலன் பட்டத்திற்கு வந்தபொழுது தான் விடுதலைபெற்று தனியரசு அமைக்கவேண்டும் என்னும் பிஜ்ஜளனின் விருப்பம் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. தைலபன் பிஜ்ஜளனைவிட வயதில் சிறியவனே. அதைவிட வலிமை குன்றியுமிருந்தான். தனியரசனாக வேண்டும் என்ற தந்தையின் எண்ணம் நிறைவேறவில்லையென்றாலும் அவரது விருப்பத்தைத் தானாவது நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தைத் தீவிரமாக வளர்த்துக் கொண்டிருந்த பிஜ்ஜளன் மிகுந்த தீரனாகவும், அரச நீதியை நிலை நாட்டுபவனாகவும், எந்த செயலையும் தானே முன்னின்று சரியாக முடிக்கும் தன்மை படைத்தவனாகவும் விளங்கிவந்தான். அவன் ஒரு வாய்ப்பு கிடைத்தால் அதை நன்றாகப் பயன் படுத்திக் கொள்ளும் திறமை பெற்றிருந்தான். அடிமைத் தளையிலிருந்து விடுபட சிறிது சிறிதாக அவன் முயற்சித்துக் கொண்டேயிருந்தான். தைலனின் அவையில் மிகவும் முக்கிய பொறுப்பு வகித்த அவன் தைலனின் ஆளுகைக்குட்பட்ட பல சிற்றரசர்களைத் தன் பக்கத்தில் சேர்த்துக் கொண்டான். இவர்களில் பனவாசியைப் சேர்ந்த கசபய்யன் என்பவன் குறிப்பிடத்தக்கவன். இவன், தைலனின் அரசை வேறுயாரோ எதிரிகள் கைக்கொள்ளுவதற்குத் திட்டமிட்டுள்ளார்கள் என்றும் அதை பிஜ்ஜளனே தகர்த்தான் என்றும் தைலனிடம் கூறிப் பிஜ்ஜளனுக்கு 'ராயசமுத்தரணம்' என்னும் பட்டம் வரக் காரணமாக இருந்தான். இதிலிருந்து தைலபன்

பிஜ்ஜளனின் மேல் தனிப்பட்ட அன்பும் கவனமும் கொண்டு விளங்கியதோடு அரசுகாரியங்கள் பலவற்றில் அவனை ஈடு படுத்தவும் ஆரம்பித்தான். இத்தகைய எல்லாச் சூழ்நிலை களையும் பிஜ்ஜளன் தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்தான். முதன் முதலாக 'மஹாமண்டலேஸ் வரன்' என்ற தனது இரண்டாம் தர விருதை விட்டு விட்டு 'புஜபல சக்ரவர்த்தி', 'திரிபுவன மல்லன்' என்ற விருது களை—பேரரசன் என்னும் பொருள் உள்ள விருதுகளைச் சூட்டிக்கொண்டான். மேலும் அவன் தன்னை 'மஹாராஜாதி ராஜன்' என்றும் கூறிக் கொண்டான். ஒரு முறை மனிதனைக் கொன்று அவனது சதையின் சுவையை அறிந்து கொண்ட புலியானது எவ்வாறு தனது பயத்தை விட்டு—ஆனாலும் எச்சரிக்கையுடன்—மேலும் மேலும் மனிதர்களை வேட்டை யாடத் தொடங்குகிறதோ அவ்வாறே இவனும் தனது காரி யங்களை மேலும் மேலும் தொடர்ந்தான். நிலம் இருப்பது வீரர்கள் துய்ப்பதற்காகவே; வீரமும் தீரமுமே வாழ்வின் குறிக்கோளாக இருக்கவேண்டும் என்று மனதில் கொண்டு அவன் செயல்படலானான். மேலும், தனது முன்னோர்கள் ஒரு காலத்தில் நடு இந்தியாவில் மிகவும் திறமை மிக்க வீரர் களாகவும் சிறந்த அரசர்களாகவும் பெருமை பெற்றிருந் திருக்க தானோ இப்பொழுது ஒரு சிற்றரசன் நிலைக்கு இறங்கிவிட நேர்ந்துவிட்டதை எண்ணி அவன் மிகவும் வருத்தம் கொண்டான். எப்படியும் தனது முன்னோர்கள் பெற்றிருந்த பெருமையைத் தானும் பெறவேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் வேரூன்ற ஆரம்பித்தது. அரசைப் பெறுவதில் அவனுக்கு பனவாசி நாட்டின் கசபய்யநாயக்கன் போன்றவர்களின் உதவியும் கிடைத்தது. சுமார் 1155-6 லிருந்தே விடுதலை பெற்று தனியரசமைக்கவேண்டும் என்று அவன் முயன்று வந்தாலும் அவனது முயற்சிகள் பலித்து அவனது எண்ணம் ஈடேறியது 1162ல் தான். அந்த ஆண்டில் அவன் தைலபனை பட்டத்திலிருந்து இறக்கி அரசைக் கைக்

கொண்டு தானே சாளுக்கியப் பேரரசின் தலைவன் என்றும் பேரரசன் என்றும் அறிவித்துக் கொண்டான். தைலபனும் அவ்வளவு எளிதாக அரசை அவனிடம் கொடுத்துச் சென்று விடவில்லை. தைலபனின் ஆதரவாளர்களுக்கும் பிஜ்ஜளனின் ஆதரவாளர்களுக்கும் தொடர்ந்து போர்நீடித்தது; அப்போர் களில் தைலபனுட்பட பல சாளுக்கிய அரச குமாரர்கள் மடிந்துபோனார்கள்.

இவ்வாறு பிஜ்ஜளன் தனது பேரவாவால் உந்தப்பட்டு தான் செய்கின்ற செயல்கள் அநீதியானவை, தர்மத்திற்குப் புறம்பானவை, கொடுமையானவை என்ற எண்ணம் சற்றும் இல்லாமல் அரசைக் கைக்கொள்ளவேண்டும், தான் பேர ரசனாகவேண்டும் என்னும் ஒரே குறிக்கோளுடன் ரத்த வெறியனாகி பல போர்கள் நடத்தி இறுதியில் பட்டத்திற் கும் வந்துவிடுகிறான். மங்களிவேடத்தில் சிற்றரசனாக இருந்த அவன் கல்யாணின் பேரரசனாகித் தனது திறமையை வெளிப்படுத்தினான். அத்துடன் அவன் மனது திருப்தி யடைந்து விடுகிறது.

ஆனால் உண்மையில் இந்த திருப்தியின் பயனை அவன் நீண்ட நாட்கள் அனுபவித்தானா? பேரரசனாக ஆனபின்பு அவன் வாழ்ந்தது சுமார் ஐந்து ஆண்டுகள் மட்டுமே போகட்டும், அந்து ஐந்து ஆண்டுகளிலாவது அவன் நிம்மதி யாகவும் இன்பமாகவும் வாழ்ந்தானா? பேரரசனாகி அவன் பிறர் புகழும் வண்ணம் சாதித்த காரியங்கள் என்ன? இக் கேள்விகளுக்குப் பின்னர் பதில் காண்போமாக.

பழங்கருநாடகத்தில் அரசனுக்குக் கிடைத்த மரியா தையைப் பற்றியும் அவன் பெற்றிருந்த சிறப்புக்களைப்பற்றி யும் சிறிது குறிப்பிடுவது இங்குப் பொருத்தமாக அமையும். நாடு அரசனைச் சார்ந்தது, அதை அவன் தனது அமைச்சர்

களின் உதவியுடன் ஆண்டுவருவான் மொத்தம் ஐந்திலிருந்து ஏழு அமைச்சர்கள் வரை ஒரு மன்னனின் அரசவையிலிருந் தார்கள். அரசன் அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும்போது அவர்களது குலம் கல்வி, குடும்ப வரலாறு முதலியனவற்றை யெல்லாம் நன்கு தெரிந்துகொண்டு செயல்பட்டான். சில சமயங்களில் அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கும் பொழுது அவர்களுக்குத் தெரியாமலேயே அவர்களைச் சில தேர்வு களுக்கு உட்படுத்தி அதில் அவர்கள் தேர்வு பெற்றால் அமைச்சராக்கிக் கொள்வர். இவ்வமைச்சர்களை நாட்டின் வெவ்வேறு பகுதிகளை ஆள்வதற்கு நியமிப்பதுண்டு. அரசன் அவ்வப்போது நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மக்களின் நிறைகுறைகளை விசாரித்தறிந்து அவர்களது துயர்துடைக்கும் பணியில் ஈடுபடுவான். அரசனின் முக்கிய மான கடமைகள் இரண்டு. ஒன்று, கொடியவர்களை அடக்குவது; இரண்டு, நல்லோரைப் போற்றுவது. பண்டைக் காலந்தொட்டு நடைபெற்று வரும் அறச்செயல்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதும் அவனது கடமையாக இருந்தது. அவன் தனது ராணிகளையும், தனது மகன் மகள் களையும் மற்றும் உறவினர்களையும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளுக்கு அனுப்பி அப்பகுதியை அவர்கள் ஆளும் வண்ணம் செய்வதுண்டு என்றும் தெரியவருகிறது. அமைச்சர்களை நியமிக்கும்போது எவ்வளவு கவனமாகச் செயல்படுகிறானோ அவ்வளவு கவனத்துடனே தனது கருவூல அதிகாரிகளை நியமிக்கும்போதும் செயல்படுவது வழக்கம். குறிப்பிட்ட ஒருவன் எந்த ஒரு தீச்செயலிலும் ஈடுபட்டதில்லை, மேலும் ஒழுக்கத்தில் சிறந்தவன் என்பதை நன்கு உணர்ந்த பின்பே அவனைப் பதவியிலமர்த்துவது வழக்கம்.

பொதுவாக, அரசனுக்குப் பின் அவனது மூத்த மகன் பட்டத்திற்கு வருவது வழக்கம் சில சமயங்களில் மூத்தமகன்

திறமை குறைந்து காணப்பட்டால் அரசனின் இளைய மகன் பதவிக்கு வந்துவிடுவதையும் நாம் காண்கிறோம். அரசனுக்கு மகன்கள் இல்லாவிட்டாலோ அல்லது அவர்கள் சிறுவயதினர் களாக இருந்தாலோ அவ்வரசனின் தம்பி அல்லது வேறு நெருங்கிய உறவினன் ஆட்சிக்கு வருவது வழக்கம்.

அரசனின் ஆளுகைக்குட்பட்ட சிற்றரசர்கள் பலர் இருப்பது வழக்கம். இவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளின் உரிமையாளர்களாக இருப்பார்கள். இவர்கள் அவ்வப்போது அரசனுக்கு கொடுக்கவேண்டிய கப்பத்தைக் கொடுத்துவிடு வார்கள். போர்க்காலங்களில் இவர்கள் தமது படையைத் திரட்டிக் கொண்டு வந்து அரசனுக்குப் போரில் உதவி செய்வார்கள். அரசனைப் போலவே சிற்றரசர்களுக்கும் தனிப்பட்ட கொடிகளும், முத்திரைகளும், பட்டப்பெயர் களும் இருந்தன.

இதுவரை பசவண்ணர் பிறந்த, மற்றும் அவர் அமைச் சராக இருந்து செயலாற்றிய துறை இவைகளுக்குப் பின்னணி யாக நிலவிவந்த அரசியல், வரலாறு மற்றும் சூழ்நிலை இவற்றின் சுருக்கமான விவரத்தைக் கண்டோம். இவற்றின் தாக்கம் பசவண்ணரின் மேலும், பசவண்ணர்-பிஜ்ஜளன் ஆகியோரின் தொடர்பின் மேலும், மற்றும் வீரசைவ சமயத் தின் வளர்ச்சியிலும் எவ்வாறு இருந்தது என்பதைப் பின் வரும் பகுதிகளில் காண்போமாக.

2. சமுதாய மற்றும் சமயப் பின்னணி

பசவண்ணரின் காலத்தில் நிலவிவந்த அரசியல் மற்றும் சமுதாய அமைப்புக்களைப்பற்றிய விவரங்களைத் தெரிவிக்கக்கூடிய நூல்கள் அவரது காலத்தில் எழுதப்படவில்லை. அக்காலத்தில் நிறுவப்பட்ட கல்வெட்டுக்களின் துணை கொண்டும் மற்றும் அப்பொழுது தோன்றிய காவியங்களிலிருந்தும் பசவண்ணர் போன்றோர் எழுதிய ஆயிரக்கணக்கான வசனங்களிலிருந்தும் மதசம்பந்தப்பட்ட நூல்களிலிருந்துமே தகவல்களைத் திரட்டி ஊகத்தின் உதவியுடன் பசவண்ணரின் சமுதாய மற்றும் சமயப் பின்னணியைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இப்பகுதியில் பசவண்ணரின் காலத்திலிருந்த சமுதாயத்தின் அமைப்பைப் பற்றியும், கட்டுப்பாடுகளைப் பற்றியும், சமுதாயத்திலிருந்த பல்வேறு மக்களிடையே இருந்த உயர்வு தாழ்வுகள், அவர்களது அன்றாட வாழ்க்கை முறை நம்பிக்கைகள் முதலியனவற்றைப் பற்றியும் காணலாம். மேலும் அவரது காலத்திலிருந்த வெவ்வேறு சமய நெறிகள் அறநெறிகள், அவற்றின் ஆளுகை அவற்றைக் கடைப்பிடித்து வந்த மக்களிடையே காணப்பட்ட குணவியல்புகள் இவற்றைப் பற்றியும் காணலாம். பசவண்ணரின் தனித்தன்மையை வளர்ப்பதில் இவை எவ்வாறு உதவி புரிந்தன என்பதைப் பற்றி இங்கு குறிப்பிடப்போவதில்லை. முன்பே குறிப்

பிட்டுள்ளதைப் போல, பசவண்ணரை நாம் முற்றிலும் புரிந்து கொள்ள எவை எவை மிகவும் முக்கியமோ அவை களைப் பற்றி மட்டும் இப்பகுதியில் விரிவாகக் காணலாம்.

இங்கு ஒரு செய்தியைத் தெளிவாகக் கூறிவிடுவது சிறப்பானது. பசவண்ணர் பிறவியிலேயே புரட்சிகரமான எண்ணங்களைக் கொண்டவராக இருந்தார். தன்னைச் சுற்றி லும் உள்ள சமுதாயத்தின் குறைபாடுகளையும், குற்றங் களையும் கண்டு அவர் மிகுந்த சோபம் கொண்டிருந்தார். இப்பகுதியில் விளக்கப்பட்டுள்ள பசவண்ணரின் பின்னணியில் அக்குறைபாடுகளைப் பற்றியும் குற்றங்களைப் பற்றியும் மிகவும் விரிவாகக் கூறவேண்டியது தவிர்க்கவியலாததாகிறது. ஆனால், இதிலிருந்து அவரது காலத்திலிருந்த சமுதாயம் முற்றிலும் கெட்டுப்போய்விட்டது என்றும் அறநெறியைக் கடைப்பிடிப்பவர் யாரும் இல்லாமல் மறநெறி தலைவிரித் தாடியது என்றும் எண்ணிவிடலாகாது. அத்தகைய கண் ணோட்டத்தோடு நாம் பார்த்தால் இந்த உலகமே கெட்டுப் போய்விட்டதாகத்தான் நமக்குத் தோன்றும். சமுதாயக் குறைபாடுகளைச் சீர்திருத்தி சமுதாயத்தை மேம்படுத்தும் சீரிய முயற்சியில் ஈடுபடுவதற்கென பல மஹாத்மாக்கள் பிறந்த வண்ணம் இருக்கவேண்டும். ஆனால், உண்மையில் எல்லாக் காலத்திலும் மஹாத்மாக்கள் பிறப்பதில்லை. ஏதாவது ஒரு காலத்தில் இப்பூவுலகம் செய்த தவத்தின் பயனாக மஹாத்மாக்கள் அவதாரம் செய்கிறார்கள். பெரியோர்கள் தோன்றி அவர்கள் பெரியவர்களாகுவதற்கு அவர்களும் அவர்களது தந்தை தாய்களும் எவ்வளவு முக்கிய மானவர்களோ அவ்வளவு முக்கியமானது அவர்கள் பிறந்து வளர்ந்த சூழ்நிலையும் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும். இக்கண்ணோட்டத்தின் அடிப்படையில் பசவண்ணரின் வாழ்க்கையின் பின்னணியாக இருந்த

சமுதாயத்தைப் பற்றியும் சமயநெறிகளைப் பற்றியும் இப் பகுதியில் காண்போமாக.

சமுதாய அமைப்பின்படி பிராமணர்கள் பிறரைவிட உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டார்கள். வழக்கமான கல்வி பயில்வதற்கு இவர்கள் உரிமை படைத்தவர்களாக இருந் தனர். சிறந்த பண்பாடு உடையவர்களாகவும், கல்வியில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், அறிஞர்களாகவும், அரசியல் நிபுணர்களாகவும் விளங்கிய இவர்களில் பலரை அரசர்கள் தமது அமைச்சர்களாக்கிக் கொண்டு ஆண்டு வந்தார்கள். இவர்கள் தமது உணவுக்காகவும் உடைக்காகவும் சிரமப்படக் கூடாது என்பதற்காகவும் தமது கல்வியிலும் அறிவை வளர்த்துக் கொள்வதிலும் மிகுந்த நாட்டம் செலுத்த வேண்டும் என்பதற்காகவும் அரசர்கள், செல்வந்தர்சள், அதிகாரிகள் போன்றோர்கள் இவர்களுக்கு நிலங்களையும், பணங்களையும், ஊர்களையும் வாரி வழங்கிவந்தனர். இவர் களுக்கு தானமாக வழங்கப்பட்ட ஊர்களே அக்ரஹாரங் களாகின. அந்த அக்ரஹாரங்களில் வரும் வருவாயிலிருந்து அவர்கள் தமது அன்றாட வாழ்க்கைத் தொல்லைகளிலிருந்து விடுபட்டு தமது தொழிலைக் கவனித்து வந்தனர். யஜனம் (யாகம் செய்தல்), யாஜனம் (யாகம் செய்வித்தல்), தானம் (தானம் கொடுத்தல்), ப்ரதிக்ரஹம் (தானம் பெற்றுக் கொள்ளுதல்), அத்யயனம் (ஆய்வு மேற்கொள்ளுதல்), அத்யாபனம் (கல்வி கற்பித்தல்), இவைகளே அவர்கள் மேற் கொண்ட ஆறு தொழில்கள். பெருநகரங்களில் பிராம்மணர் கள் வாழ்ந்துவந்த பகுதிகளுக்கு பிரம்மபுரி என்ற பெயர் வழங்கி வந்தது. பழங் கர்நாடகத்தின் அக்ரஹாரங்களும், பிரம்மபுரிகளும் மிகவும் சிறப்பான கல்வி நிலையங்களாக விளங்கிவந்தன. ஒரு குறிப்பிட்ட ஊரின் மாணவர்கள் மட்டுமல்லாது தொலைதூரப் பகுதி மாணவர்கள்கூட ஒரு குறிப்பிட்ட ஆசிரியரின் திறமையினால் ஈர்க்கப்பட்டு

அவரிடம் வந்து கல்வி பயின்றதுண்டு. செல்வந்தர்கள் கோவில்களிலும், சத்திரங்களிலும் இவ்வாறு வேறு இடங்களிலிருந்து வந்து தங்கி கல்வி பயிலும் மாணவர்களின் உணவுக்கு ஏற்பாடு செய்து கொடுத்திருந்தனர். அக்ரஹாரங்களிலும், பிரம்மபுரிகளிலும் வேதங்கள், வேதாகமங்கள், ஸ்ம்ருதிகள். புராணங்கள், இலக்கணங்கள், சந்தங்கள், ராமாயணம், மஹாபாரதம் முதலான காவியங்கள், ரத்ன சாஸ்திரம், ஹயசாஸ்திரம், கஜ சாஸ்திரம் போன்ற சாஸ்திரங்கள் மற்றும் தத்துவ சாஸ்திரத்தின் நூல்கள் போன்றன கற்கப்பட்டும் ஆராயப்பட்டும் வந்தன. தூரத்திலிருந்து அக்ரஹாரத்தைப் பார்த்தால் எப்பொழுதும் யாக சாலைகளிலிருந்து புகை வந்த வண்ணமாகவும், அக்ரஹாரத்தின் உள்ளே சென்றால் எப்பொழுதும் வேதங்களை இசைக்கும் ஓசை கேட்ட வண்ணமாகவும் இருந்தது என்று கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது.

ஒரு ஊரை அக்ரஹாரமாக மாற்றி எந்த பிராம்மணர்களுக்கு அதை அரசன் கொடுக்கிறானோ அவர்களே மஹாஜனங்கள் என அழைக்கப்பட்டனர். அவர்களே அக்ரஹாரத்தின் உரிமையாளர்கள். அவர்கள் தமக்குள்ளேயே தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். இல்லையென்றால் வயதில் மூத்தவரையோ, அறிவிற் சிறந்தவரையோ அல்லது செல்வந்தரையோ தமது தலைவராக ஏற்றுக் கொள்வதும் உண்டு. இவர்களது தலைமையின் கீழ் மஹாஜனங்கள் தமது வேலைகளில் ஈடுபட்டு வந்தார்கள். இயல்பாகவே இவர்கள் பிறரால் போற்றப்படக்கூடிய இடம் பெற்று வந்தார்கள்.

இது அக்காலத்திய பிராம்மணர்களின் சீரிய இயல்பாகும். ஆனால் அப்பிராமணர்களுக்கு இன்னொரு இயல்பும் இருந்

தது. கல்வியிற் சிறந்தவர்களாயும், அரசை அலங்கரிப்பவர்களாயும், தவறிழைப்போர் தம்தவற்றை உணரும் வண்ணம் செய்து அவர்களது நெறியைத் தூய்மைப்படுத்தும் அறச் சிந்தையாளர்களாகவும் இருந்த பிராமணர்களில் பலர் தமது இனத்தைக் காக்கவேண்டும், தம்மைச் சேர்ந்தவர்கள் மேலும் முன்னேற வேண்டும் என்ற சுயாபிமானம், இதர இனத்தைச் சேர்ந்தவர்கள்மீது வெறுப்பு, கோபம் போன்ற தன்மைகளைக் கொண்டிருந்தனர். பொதுவாக இது மக்களின் இயல்பே, சிறந்த எண்ணங்களும் கொள்கைகளும் சொல்வதற்கு எளிதாக இருப்பதைப்போல் கடைப்பிடிப்பதற்கு இருப்பதில்லையே. சொல்லியதைக் கடைப்பிடிப்பவர் எவ்வளவு பேர்? இதை பசவண்ணரின் கூற்றில் சொல்ல வேண்டுமென்றால் 'தனக்கொரு உடை, சாத்திரத்திற்கொரு உடை' என்று கூறலாம். தாமே அறநெறியின் காவலர்கள், இறைவனையும் பொதுமக்களையும் இணைக்கும் பாலமாக இருப்பது தாமே என்பன போன்ற எண்ணங்களை இவர்கள் மனதில் வைத்திருந்திருக்கக் கூடும். அவர்களிடம் வேதங்களின் அறிவு இருந்ததைவிட அதைக்கொண்டு எவ்வாறு தொழில் நடத்துவது என்ற அறிவே அதிகம் இருந்தது. இவர்கள் தெய்வத்தின்மீது கொண்டிருந்த பக்தி பாறையின் மேல் நட்ட நாற்றைப் போல—வேரூன்றப்போவதுமில்லை, பலனளிக்கப் போவதுமில்லை என்ற எண்ணம் பிறருக்கு வந்திருக்கலாம். இவர்களில் பலர் விஷ்ணுவின் தொண்டர்கள். இவர்கள் தமது கையின் மேல் சக்கர முத்திரையைச் சுட்டுக் கொண்டனர். யாகத்தில் நெருப்பிற்கு நெய்யிடுவர். ஆனால் அதே நெருப்பு வீட்டைப் பற்றிக் கொண்டாலோ நீரையும், வீதி மண்ணையும் எடுத்து வீசி கூச்சலிட்டு எல்லோரையும் உதவிக்கு அழைப்பர். மேலும், யாகங்களில் பிராணிகளைக் கொன்று வந்தனர். தர்கசிம்ஹனைப் போன்ற இறையுணர்வு நிறைந்த கவிகள் மிருகங்களைப் பலியிடுவது என்பதானது வேதங்களினால் அனுமதிக்கப் பட்டிருப்பதாலும்,

நமது மூதாதையர்களைக் காக்கும் தெய்வங்களைக் கருத்தில் கொண்டு செய்யப்படுவதாலும் உண்மையில் அது 'பிராணி வதை' அல்ல என்று அதைச் சிறப்பிக்க முயன்றாலும் உண்மையில் அதில் நியாயமுமில்லை, புண்ணியமும் இல்லை.

சமுதாயத்தில் பிராமணர்களுக்கு அடுத்தபடியாக முக்கிய இடத்தைப் பெற்று வந்தவர்கள் செல்வந்தர்களும், வணிகர்களும் ஆவார்கள். எப்போதும் போல் செல்வந்தர்கள் எவ்வாறெல்லாம் இயலுமோ அவ்வாறெல்லாம் செல்வத்தை ஈட்டி வந்தனர். குதிரையில் வருபவர்களையும் குடை பிடித்துக் கொண்டு (செல்வந்தர்கள்) வருபவர்களையும் கண்டால் மக்கள் அவர்களின் காலில் விழுந்து வணங்கினார்கள். ஏழைகள் வந்தால் ஒதுங்கிப் போ என்பார்கள். செல்வந்தர்கள் கோயில்களைக் கட்டுவித்து லிங்கங்களை பிரதிட்டை செய்தும், குளங்களை வெட்டுவித்தும் தமது பணக்காரத்தன்மையை விளம்பரப்படுத்திக் கொண்டனர். ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்துடன் அறச் செயல்கள் செய்து வந்த போதும் சில சமயங்களில் புகழ் மீது ஆசைகொண்டும், தான் செய்த பாவங்களுக்கு நிவர்த்தி செய்ய வேண்டும் என்ற எண்ணங் கொண்டும் தர்ம காரியங்களைக் கைக்கொண்டனர். இவ்வாறு சமுதாயத்தில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையில் ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டது. இவ்வாறே வணிகர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையில் கூட ஒரு பெரிய இடைவெளி ஏற்பட்டிருந்தது. செல்வத்தில் செழித்து வந்த விவசாயிகள் தாம் நிலத்தை வாங்கும் போது ஒரு அளவுகோலையும், விற்கும் போது இன்னொரு அளவுகோலையும் பயன்படுத்தி வந்தனர். அவ்வாறே எவ்வளவோ வணிகப் பெருமக்கள் பொருட்களை அளந்து வாங்கும் போது ஒரு படியையும் அளந்து கொடுக்கும் போது இன்னொரு படியையும் பயன்படுத்தியுள்ளனர். இவ்

விரண்டையும் பிரம்மசிவன் என்ற கவிஞன் கண்டித்துள்ளான். பெருங்கவி பம்பன் கூட 'செட்டியின் வள்ளம் சிறியது' என்று குறிப்பாகக் கூறியுள்ளான். பணக்காரர்களிலும், பணக்கார வணிகர்களிலும் உண்மையிலே அறத்தின் வழி நிற்பவர்களும் இருந்தாலும், மேலே குறிப்பிட்ட வஞ்சக புத்தியுடைவர்களே அதிகமாக இருந்திருக்கிறார்கள். உள்ளே வஞ்சனையும் வெளியே நாகரிகமும் கொண்டு இருந்தனர்.

இவர்களில் உடல் உழைத்து கஷ்டப்பட்டு செல்வம் சேர்த்தவர்கள் எத்தனைபேர்? பிறரது உழைப்புக்களில் துணை நிற்பதுபோல் இருந்து பின்னர் அவர்கள் பட்ட துன்பத்தின் பலனை தந்திரமாக தமதாக்கிக் கொள்பவர்கள் எத்தனைபேர்? உடல் உழைத்து பணம் ஈட்டுவது சிறுமையாகக் கருதப்பட்டது. மக்கள் தம் வாழ்விற்காக வெவ்வேறு தொழில்களை மேற்கொண்டிருந்தனர். உழவுத்தொழில், பாத்திரம் செய்தல், மரவேலை செய்தல், துணி வெளுத்தல், பொன்வேலை செய்தல், கல்வேலை செய்தல், தோல் வேலை செய்தல், நோய் தீர்த்தல், படகோட்டுதல், கட்டிடவேலை செய்தல், எண்ணெய் வாணிகம் செய்தல், தையல் வேலை செய்தல் போன்ற தொழில்களைச் செய்து வந்தனர். ஆனால் இவர்களுக்குள்ளும் ஒரு குறிப்பிட்ட தொழிலைச் செய்து வருபவன் இன்னொரு தொழிலைச் செய்து வருபவனை விட உயர்ந்தவன் அல்லது தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இருந்து வந்தது. ஒரு குறிப்பிட்ட சாதியில் பிறந்தவன் அச்சாதிக்குரிய குலத்தொழிலையே மேற்கொள்ள வேண்டும். அத்தொழிலின் மூலமே அவன் தன் வாழ்வில் முன்னேற்றம் காண வேண்டும். சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட சாதிக்கு எந்த இடம் உள்ளதோ அந்த இடமே அவனுக்கும் கிடைத்தது. பழங் கருநாடகத்தில் ஒருவன் தனது குழுவின் அல்லது இனத்தின் ஒரு அங்கமாக மட்டுமே வாழ வேண்டி

யிருந்தது. தனது அறிவின் திறமையால் தனது இனத்திற்குள் பெருமையை சம்பாதிக்க வேண்டியிருந்ததே தவிர அதனால் சமுதாயத்தில் அவன் வகித்து வந்த இடம் ஏதும் மாற்றமடையாமல் அப்படியே இருந்தது. எடுத்துக் காட்டாக, ஒரு நாவிதன் கடவுளின் பரம பக்தனாக இருக்கலாம். செல்வந்தனாகி தன்னிடம் இருக்கும் பெரும் பணத்தின் துணை கொண்டு ஒரு கோயிலைக் கட்டுவிக்கக் கூடும். ஆனாலும், அவன் பிராம்மணர்களை விடத் தாழ்ந்தவனே. அவற்றோடல்லாமல், சாதிக் கட்டுப்பாடுகள் அப்பொழுது மிகவும் தீவிரமாக இருந்தன. ஒருவன் ஏதாவது ஒரு தவறு செய்திருந்தால் மன்னிக்கப்படலாம். ஆனால் சாதிக் கட்டுப்பாடுகளை மீறிச் செய்கின்ற தவற்றிற்கு மன்னிப்பு கிடையாது; அதைவிடப் பெருந்தவறு ஏதுமில்லை. அவனைச் சாதியிலிருந்து நீக்கி விடுவார்கள். இயல்பாக மக்கள் இவ்வாறு சாதியிலிருந்து நீக்கப்படுவது குறித்து மிகவும் பயந்து தனது சாதியினது கட்டுப்பாடுகளை ஏற்று வாழ்ந்து வந்தனர். தனது மதம், சாதி இவைகளை விட சிறப்பான வேறொரு மதம் அல்லது சாதியைச் சார்ந்து அதன் மூலம் நலமாகவும் சிறப்பாகவும் வாழ இயலும் என்று எண்ணாமல் தனது இனத்திற்கு விசுவாசியாக இருந்ததோடு தனது மதம் மற்றும் சாதியின் கட்டுப்பாடுகளைப் பயபக்தியுடன் கடைப்பிடித்து வந்தனர்.

பிராமணர்கள்—பிராமணரல்லாதார், செல்வந்தர்கள்—வறியவர்கள், அந்த சாதி—இந்த சாதி போன்ற வேறுபாடுகள் அல்லாமல் ஒவ்வொரு குழுவிற்குள்ளும் ஆண்—பெண் என்ற பெரிய இடைவெளி வேறு இருந்தது. எந்த சாதி—மதத்தைச் சார்ந்த பெண்மக்களைப் பார்த்தாலும் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வந்தனர். அவர்களது நிலையில் முன்னேற்றம் வேண்டும் என்ற எண்ணம் சாதாரணமாக யாரிடமும் இல்லை ஆண்கள் பெரியவர்கள்; பெண்கள்

சிறியவர்கள் என்ற நம்பிக்கையே எங்கும் நிலவி வந்தது பெண்ணுக்கு சமையற்கூடமே கல்விக்கூடம்; கணவனே தெய்வம்; கணவனைக் கவனிப்பதே தொழில் என்று ஸ்மிருதிகள் கூறியுள்ளதை மக்கள் வெகுவாக ஏற்றுக் கொண்டிருந்தனர். பழங்கருநாடகத்தில் ஆண்களைப் போலவே தைர்யத்துடன் செயலாற்றி நாடாண்ட மகளிரைப் பற்றிய செய்திகள் இருக்கின்றன. ஆனால் அத்தகையவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய எண்ணிக்கையிலே இருந்தனர். பெண்களுக்கு கல்வியறிவு தேவையில்லாதது என்று எண்ணி வந்தனர். அரச குடும்பங்களைச் சார்ந்த பெண்களையும், தேவதாசிகளில் சில பெண்களையும் தவிர்த்து மீதமிருந்த பெண்களில் பெரும்பாலானவர்கள் கல்வியறிவில்லாதவர்களே. இதற்கு பிராமணர்கள் கூட விதிவிலக்கல்ல. அத்தமப்பே, சாந்தலே போன்ற சில பெண்மணிகளைத் தவிர வேறு பெண்கள் சமுதாயத்திலாவது அல்லது வேறு துறையிலாவது முக்கிய பங்கு வகித்துச் செயலாற்றியதாகக் காண்பது அரிது.

மேலும் புலையர்கள்—மன்னிக்கவும் அரிசனங்கள் (காந்திஜீக்கு நாம் நன்றி கூறவேண்டும். புலையர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்துவது கூட நமக்கு வெட்கமாக இருக்கிறது.) சமுதாயத்தில் மிகவும் கீழ்மட்டத்தில் இருந்தார்கள். இவர்கள் வாழ்ந்தது ஊரின் வெளிப்பாகத்தில். இவர்களைப் பிறர் 'சம்போளி' என்று அழைத்தனர். நாட்டின் சில பாகங்களில் அவர்கள் ஊருக்குள் வந்தாலும் 'சம்போளி, சம்போளி' என்று கூவிக்கொண்டு வரவேண்டியிருந்தது. அப்போது மக்கள் அவர்கள் வருவதை உணர்ந்து அவர்களை விட்டு விலகி தூரமாகச் சென்றுவிடுவர். அவர்கள் ஊரில் இறந்த பிராணிகளின் மாமிசத்தைப் புசித்து வந்தனர். அவற்றின் தோல்களிலிருந்து தோணி, வார், சாட்டை, செருப்பு முதலியனவற்றைத் தயாரித்துக் கொடுத்தார்கள். அவர்கள் பிறரைப் போல கை, கால், கண் முதலியன இருப்ப

தாலேயே மனிதர்களாகக் கருதப்பட்டார்கள். வேறு எக்காரணத்தை முன்னிட்டும் அவர்கள் மக்களின் கண்களில் மனிதர்களாக வாழவும் இல்லை; மதிக்கப்படவுமில்லை இவர்கள் மக்களின் தீவிரமான வெறுப்பிற்கும், அவப்பேச்சிற்கும், உதாசீனத்திற்கும் ஆளாகவேண்டும் என்பதற்காகவே பிறந்து வளர்ந்துள்ள சண்டாளர்கள் என்று கருதப்பட்டு வந்தார்கள்.

பசவண்ணர் கண்டிருந்திருக்கக்கூடிய சமுதாயத்தின் நிலையானது இவ்வாறு கெட்டும் மோசமாகவும் இருந்தது. அவருக்குப் பின்னணியாக இருந்த வெவ்வேறு அறநெறிகள் நம்பிக்கைகள் யாவை என்பதைச் சற்றுக் காண்போமாக அக்காலத்தில் மிகவும் முக்கியமானதாக விளங்கிய புத்த சமண சமயங்களைப் பற்றியும் அவற்றின் நெறிகளைப் பற்றியும் பார்ப்பதைவிட முன்காலத்தில் இருந்த தாழ்த்தப்பட்ட இனங்களைச் சார்ந்த மக்களில் சாதாரணமாக பலமக்களிடையே காணப்பட்டுவந்த சில நம்பிக்கைகளைப் பற்றியும் கட்டுப்பாடுகளைப் பற்றியும் அவர்களால் வணங்கப்பட்டும் போற்றப்பட்டும் வந்த தெய்வங்களைப் பற்றியும் இங்கு விவரிப்போமாக.

தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த சாதாரண மக்களிடையே காணப்பட்ட மூடநம்பிக்கைகளும், அறிவின்மையும் வேடிக்கையானவை. அவர்கள் வழிபட்டு வந்த தெய்வங்களின் எண்ணிக்கை அபாரமானது. மைலார, ஜோகுமாரன், தூளிமாகாளன், மாளசி, எக்கநாதி, மாரி, மசணி, மாரய்யா, வீரய்யா, கேசரன், காவிலன், அந்தரன், பெந்தரன், காளய்யா, கேதய்யா, எல்லம்மா, பைரவன், மிண்டா, குக்கநூர பநதி, வனசங்கரி, காளி, சாமுண்டி, கங்கை, கௌரி, புலிகை போன்றன. இதுபோன்று ஒன்றல்ல இரண்டல்ல நூற்றுக்கணக்கான ஆண் பெண் தெய்வங்களின் பெயர்

களைக் குறிப்பிடலாம். மண் மேட்டிற்குச் சென்றால், ஊரின் தெருக்களில் சுற்றினால் குளங்குட்டைகளிலும், செடி கொடிகளிலும் மற்றும் கிராமத்தின் நடுவிலும், ஆலமரத் திலும் இதுபோல் இன்னும் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தெய்வங்கள் நிறுவப்பட்டிருப்பதைக் காண லாம். இத்தோடல்லாமல், இத்தெய்வங்களுடன் ஒவ்வொரு சாதியைச் சார்ந்த மக்களும் தமக்கே உரிய குலதெய்வங் களை வேறு கொண்டிருந்தனர். பண்டாரங்கள் கிணற்று பொம்மனை வழிபட்டனர். உலோகவேலை செய்பவர்கள் காளிகா தேவியை வழிபட்டனர். விவசாயிகள் தமது அறு வடைக் குவியல்களைத் தெய்வமாக வணங்கினர். இது போன்று ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைக் கடவுளாகக் கொண்டனர். மக்கள் தமக்கு துன்பங்கள் நேரும் போது பல விதமான பொருட்களை கடவுளின் மீது ஊற்றுவர். அவற்றில் சில எளியவை, சாதாரணமானவை. அம்பலி என்னும் ஒருவகைக் கஞ்சி, விறகுக் குவியல், சூடாக இருக்கும் சோறு போன்றவற்றை அவற்றிற்கு அர்ப்பணம் செய்வார் கள். மேலும், பால் தயிர் போன்றவற்றை அவற்றின் விதி நியமப்படி ஊற்றுவது போன்றவற்றையும் செய்து வந்தார் கள். இதைவிட இவர்கள் கடைப்பிடிக்கும் விரதங்கள் மிகவும் பயங்கரமானவையாகும். வாயை வேகவைத்துக் கொள்ளுவது, நெருப்புக் குவியலைத் தாண்டுவது, அதன் மேல் நடப்பது, குதிப்பது, மரப்பட்டையை இலை தழைகளை அணிந்து கொள்வது, அசுத்தப் பொருட்களைத் தலையின் மேல் தூக்கிக் கொண்டு செல்வது, சாட்டையால் அடித்துக் கொள்வது போன்ற துன்பத்தைத் தரக்கூடிய மற்றும் தவிர்க் கப்பட வேண்டிய வழக்கங்களைக் கொண்டிருந்தனர். விரல் களை வெட்டி கடவுளுக்குக் காணிக்கையாக்குவது, தலை முடியை கடவுளுக்கு அர்ப்பணம் செய்தல், கையில் கற்பூரம் போன்ற பொருட்களை எரியவிட்டு கடவுளுக்கு தீபாராதனை செய்தல், இதேபோல் கைவிரல்களையும் எரிய விடுதல்

போன்ற பலவற்றைச் செய்து வந்தனர். இத்தெய்வங்களுக்கு ஆண்களை விட பெண்களுக்கிடையிலேயே அதிக வரவேற்பிருந்தது. பெண்களே மிகவும் அதிகமாக கடவுள் நம்பிக்கை கொண்டு விளங்கினர். ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் சமண சமயத்தைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் அவர்களின் தெய்வத்திற்கு ஒரு சிறு பூவைக் கூடச் சூட்டியிராத அக்குடும்பத்தின் தலைவியானவள் அவ்வூரின் சிறு தெய்வங்களான 'மாளசி'க்காவது, 'மசணி'க்காவது தன்னாலியன்ற அளவு செலவு செய்து வழிபாடு நடத்தி வந்தாள். இத்தெய்வங்கள் தம்மைத் தொல்லைக்கு ஆளாக்குகின்றன என்றும் அவற்றைச் சாந்தப்படுத்துவதன் மூலமே தாம் அவற்றின் தொல்லைகளிலிருந்து விடுபட முடியும், இல்லையென்றால் அவை தமக்குத் துன்பம் தந்துகொண்டேயிருக்கும், குடும்பத்தில் அமைதியின்மை நிலவும், நாலாவிதமான நோய்களும் நம்மைப் பீடிக்கும் என்றும் நம்பி வந்தனர்.

இத்தெய்வங்களைப் பற்றி மக்களிடையே நிலவிவந்த கதைகளோ மிகவும் விசித்திரமானவை. மைலாரன், ஜோகுமாரன் முதலிய தெய்வங்களைப் பற்றிய கதைகளை மட்டும் நாம் இங்கு காண்போமாக. மைலாரன் கிருஷ்ணனின் மனைவியரான கோபிகைப் பெண்டிரின் தீட்டுத் துணியிலிருந்து பிறந்து பலமுள்ளவனாக வளர்ந்து சிவபெருமானின் குடையைப் பிடிக்கும் செயலைச் செய்து வருபவனாக ஆனான். உலகத்தில் மணிமல்லாசுரன் என்னும் அசுரன் மக்களுக்கு மிகுந்த தொல்லைகள் கொடுத்து வந்தான். அவனது ஆர்ப்பாட்டங்கள் கட்டுக்கடங்காமல் போகவே திருமால் போன்ற பெரிய தெய்வங்கள் அவனை வதை செய்ய முயன்றும் இயலாமல் போகவே மைலாரன் சிவபெருமானின் கட்டளைப்படி பூவுலகிற்கு வந்து நாயின் உருவம் பெற்று மல்லாசுரனின் மரணத்தின் ரகசியத்தை அறிந்து கொண்டு அவனிடம் போரிட்டு வதை செய்தான். பின்னர்

அவன் இடைக்குலத்தைச் சார்ந்த மாளி என்னும் பெண்ணை மணம் புரிந்து கொண்டு சிவபெருமானின் அருளைப் பெற்று சிவனின் கட்டளையின் படி வாயில் குத்திக் கொள்ளும் ஒரு வகையான ஊசி, முதுகில் குத்திக் கொள்ளும் ஒருவகையான ஊசி போன்றவற்றின் துணை கொண்டு மக்களை அவர்களின் துன்பத்திலிருந்து காப்பாற்றி வருகிறான். மைலாரனின் கதை இவ்வாறு இருக்கும் பொழுது ஜோகுமாரனின் கதை இன்னொரு விதமாக இருக்கிறது. ஜோகன் என்னும் சப்த ரிஷிகளின் வேலையாள் பூவுலகிற்கு வந்து மாரி என்னும் பெண்ணின் மேல் இச்சை கொண்டு அவளைப் புணர்ந்த பொழுது பிறந்தவனே ஜோகுமாரன் என்பவன். இவன் பின்னர் தனது தந்தையைத் தேடிக்கொண்டு சென்றான். வழியில் ஒரு வண்ணாரப் பெண்ணைக் கண்டு அவள் மீது மையல் கொண்டு அவளை அடைய முயற்சித்த பொழுது அவளது இனத்தைச் சார்ந்த பிறர் அவன் மீது சீற்றம் கொண்டு அவனை நன்றாக அடித்து ஒரு நதியில் வீசி எறிந்து விட்டனர். மொத்தத்தில் அவன் வாழ்ந்தது ஏழு நாட்கள் மட்டுமே. இப்பொழுது செய்து வருவதைப் போலவே அப்பொழுதும் மக்கள் இவனைத் தாம் வழிபடும் இறைவனாக்கி அவன்மேல் பாடல்கள் இயற்றி அவற்றைப் பாடி வழிபட்டு வந்திருக்கலாம். உழவர்கள் அவனது அருளாலேயே நாட்டில் நல்ல மழை பொழிகிறது என்றும் வளம் செழிக்கிறது என்றும் நம்பியிருந்திருக்கலாம். நாட்டுப் பாடல்களில் இவன் காமுகனாகவும், முரடனாகவும், அறநெறியைப் பற்றிய சிந்தனை இல்லாதவனாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

இந்த தெய்வங்களைப் பற்றிய நம்பிக்கைகளில் மக்களிடம் இருந்தது பயமே தவிர பக்தி அல்ல என்று கூறலாம். ஆனால், இத்தெய்வங்களை வழிபட உதவுவதற்கும் பூசை செய்வதற்கும் என்று நியமிக்கப்பட்ட பூசாரிகள் கடவுளின்

மேல் மக்களுக்கு உள்ள பயத்தை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். அல்லம பிரபு என்பவர் இதைத் தான் 'பக்தி என்பது புறத்தோற்றத்தின் லாபம்' என்று மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். ஒரு பாம்பாட்டி பாம்பைக் காட்டி வயிற்றுப் பிழைப்பை நடத்துவது போலவே இப்பூசாரிகள் தத்தமது தெய்வங்களைக் காட்டித் தமது வயிற்றை நிரப்பிக் கொண்டனர். தமக்குக் குழந்தைகள் பிறந்தால் அது இத்தெய்வங்களின் கருணையினாலேயே என்று எண்ணி அக்குழந்தைகளுக்கு தெய்வங்களின் பெயரைச் சூட்டி வந்தனர். சித்தராமன் பிறந்த பொழுது அவனுக்கு பெற்றோர்கள் வைத்த பெயர் ''தூளிமாகாள'' என்னும் அவர்களது குலதெய்வப் பெயரே என்பதை இங்கு நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

அக்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சில அறநெறி களைப் பற்றியும் இங்கு காண்போமாக. பிராமணர்களில் துவைத நெறியைப் பின்பற்றுபவர்களும் அத்வைத நெறி யைப் பின்பற்றுபவர்களும் இருந்து வந்தனர். ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வெவ்வேறு என்று கூறுவது துவைதம். ஜீவாத்மனே பரமாத்மா என்று கூறுவது அத்வைதம். ''வேதாந்தியின் அறிவு வாதத்தில் சென்று விட்டது'' என்னும் சித்தராமனின் வாக்குக்கேற்ப அக்காலத்தில் அறநெறிகள் யாவும் வாத விவாதங்களுக்கு மட்டுமே ஏற்றன வாக இருந்தனவே தவிர கடைப்பிடிக்கப்படுபவனவாக இருக்கவில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சோழ வேந்தர்களின் கெடுபிடியைத் தாங்க இயலாத ராமா னுசர் தென் கருநாடகத்தின் ஹொய்சள நாட்டிற்கு வந்து மேலுகோட்டி என்னுமிடத்தில் தங்கி ஹொய்சள அரசனான விஷ்ணு வர்த்தனனை வைணவ மதத்தை ஏற்றுக் கொண்டு அதைத் தழுவும்படிச் செய்தார். இவர் மிகவும் சிறந்த பக்தி மான். நல்லுள்ளம் கொண்ட ஆச்சாரியர். தனக்கு தனது

குருவானவர் மிகவும் ரகசியமாகக் கற்பித்த அஷ்டாக்சரமந்தி ரத்தை எல்லோரும் கேட்கும் வண்ணம் வெளிப்படையாகக் கற்பித்தவர். இவ்வாறு செய்வதனால் தமக்குத் தீங்கு ஏற் பட்டாலும் பிறருக்கு நன்மை உண்டானால் அதுவே போது மானது என்று செயல்பட்டவர். டெல்லியிலிருந்து இராமனின் உருவச் சிலையைக் கொண்டு வருதற்கு உதவி புரிந்த அரிசனங்களை 'திருக்குல'த்தவர்' என்று அன்புடன் அழைத்த தோடல்லாமல் மேலுகொடையில் உள்ள திருநாராயண சுவாமியின் ஆலயத்திற்குள் வருடத்தில் ஒரு நாள் அவர்கள் சென்று வருவதற்கு அனுமதியளித்தவர். இவர் கற்பித்த நெறியின் சாரம் என்னவென்றால் ''இறைவன் மீது தூய இன்ப அன்பு கொண்டு அவனுக்குத் தன்னை முற்றிலு மாக அர்ப்பணம் செய்து கொள்ளவேண்டும்'' என்பதே யாகும். இதே ''ப்ரபத்தி'' என்று அழைக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் கருநாடகத்தில் சமணசமயம் மிகவும் முக்கியமான சமயமாக விளங்கிவந்தது. வடகருநாடகத்தில் கொப்பளம், தென் கருநாடகத்தில் சிரவணபெளகொள என்ற ஊர்கள் அறநெறியின் வளர்ச்சி மையங்களாக விளங்கின. இவர்களது நெறிப்படி உலகையும் மக்களையும் படைத்தவன் என்று ஒருவன் இல்லையென்றாலும், எல்லா கர்மங்களையும் நாசமாக்கி எல்லையில்லா சக்தியினையும், எல்லையில்லா அறிவையும், எல்லையில்லா அமைதியையும் பெற்ற பெருந்தகையாளர்களான இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களை இவர்கள் வணங்கி வழிபட்டு வரு கின்றனர். கருநாடகத்தில் திகம்பர நெறி என்னும் சமண சமயப் பிரிவே மக்களிடையே மிகவும் அதிகமாகக் காணப் பட்டது. இந்நெறியின் படி பெண்களுக்கு இப்பிறப்பில் மோட்சம் இல்லை. அவர்கள் தாம் செய்த பாவ புண்ணியங் களுக்கு ஏற்ப ஆணாகப் பிறக்கிறார்கள். பின்னரே அவர்கள் மோட்சமடைய இயலும். தனது மிகவும் சிறப்பான படைப்புக்

களால் கன்னட மொழியை அலங்கரித்துள்ள கவிப்பெருமகன் களில் முதன்மையான கவிஞர்கள் சமணசமயத்தைச் சார்ந்த வர்கள் ஆவார்கள். இப்படிப்பட்ட நெறியானது பதினொன் றாம் நூற்றாண்டின் துவக்கத்தில் அரசின் ஆதரவை இழந்து சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. சமண சமயத்தை விட்டுவேறு சமயத்திற்கு மக்கள் மாறினர் என்று கூறுவதற்குத் தெளிவான சான்றுகள் பல உள்ளன. சமண முனிவர்களின் தவம். கல்வி, அறிவு, அடக்கம் மிகவும் பிரபலமானவையாக இருந்த போதிலும் திகம்பர நெறியானது பலமக்களின் வெறுப்புக்குப் பாத்திரமாயிற்று. அவர்களது கடூரமான வாழ்க்கையையும், சமணசமயத்தின் சிரமமான விரதங்களை யும் கண்ட சாதாரணமக்கள் முற்பிறப்பில் சனிபார்வை பெற்றவனே இப்பிறப்பில் சமணசமயத்தைச் சேர்வான் என்று கூறுமளவுக்கு வந்துவிட்டனர். பன்னிரண்டாம் நூற்றாண்டில் சமணமானது சைவம் வைணவம் போன்ற நெறிகளுடன் போட்டிபோட்டுக்கொண்டு சிறிதளவு மக்களின் ஆதரவைப் பெற்றது.

புத்தசமயமோ கருநாடகத்தில் என்றும் முக்கியமான ஒரு நிலையை அடைந்ததில்லை. பன்னிரண்டாம் நூற்றாண்டில் புத்தசமயத்தைப் பின்பற்றுபவர்கள் பள்ளிகாவே, டம்பள, சிக்கிண்டி, கத்ரி முதலான இடங்களில் இருந்தார்கள். இங்கு காணப்பட்டது புத்த சமயத்தின் வஜ்ரயானம் என்னும் பிரிவேயாகும். இவர்கள் தந்திர தேவதையை வழிபட்டு வந்தனர். இவர்கள் வணங்கிய தெய்வம் தாரா ஆகும். புத்தர் போதித்த தர்ம நெறிகளை இவர்கள் சற்றும் கடைப் பிடிக்கவில்லை. தெய்வ சாதனை என்னும் பெயரில் இப்புத்த மதத்தவர்கள் மது, மீன், மாமிசம் போன்றவற்றை உண்டு வந்தனர். இவர்கள் உலக விஷயங்களில் அக்கரை காட்டுவது பாவம் என்பதைக் கவனத்தில் கொள்ளவில்லை. இவ்வாறு

கருநாடகத்தில் இருந்துவந்த புத்த நெறியானது வெறுப்பையும் கோபத்தையும் தரக்கூடிய ஒரு சமயமாக இருந்தது.

சைவசமயத்தில் இருந்து வந்த பிரிவுகளையும் பாகுபாடுகளையும் பற்றி விளக்குவதற்கு முன்பு கருநாடகத்தில் அப்போது வழக்கிலிருந்த இன்னும் சில சிறு சமயங்களைப் பற்றி விளக்கமாகக் காண்போமாக. காபாலிகர்கள் என்னும் மிகவும் பயங்கரமான சாதகர்கள் இங்கு இருந்தார்கள். இவர்கள் சுடுகாட்டில் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் வழிபட்டு வந்த தெய்வம் பைரவன் ஆகும். மனிதர்களின் தலையிலிருந்து கொட்டும் ரத்தத்தின் மூலம் இவர்கள் தமது தெய்வமான பைரவனைத் திருப்தி செய்து அவனை வணங்கி வந்தனர். தங்கள் தெய்வத்திற்கு மனிதர்களின் தலைகளை மாலையாக அணிவித்ததோடல்லாமல் மண்டையோட்டிலேயே தாங்களும் சாப்பிட்டு வந்தார்கள். பைரவ வடிவத்திலிருக்கும் சிவபெருமானின் அருளுக்குப்பாத்திரராவதன் மூலம் கயிலாயத்தில் உமையம்பிகையைப் போன்ற அழகுள்ள பெண் ஒருத்தியை சல்லாபிக்க முடியும் என்று நம்பி வந்தார்கள். இதேபோன்ற கோரமான செயல் முறைகளைக் கடைப்பிடிக்கும் மற்றொரு குழுவே கௌளர் என்பவர்கள். இவர்கள் சக்தியை அல்லது துர்க்கையை வழிபட்டு வந்தார்கள். இவர்கள் மது, மாமிசம், மங்கை முதலியனவற்றைத் தவிர்த்து வந்தார்கள். இவர்கள் பேயம்-அபேயம், பக்ஷ்யம்-அபக்ஷ்யம் போன்ற பாகுபாடுகளைக் கொண்டிருக்கவில்லை. இவர்களது கொள்கை எவ்வளவு பெரியதாக இருந்தாலும் இவர்கள் வெகு எளிதில் உடலிச்சைக்குப் பலியாகி அதிலேயே நின்றுவிட்டனர். இவர்களைப் போலவே சூரியனை வழிபட்ட சௌரர்கள், கணபதியை வழிபட்ட காணாபத்தியர்கள் போன்றவர்கள் தாந்திரீக சாதனை செய்பவர்களாக இருந்தனர். தங்களை இறைவனை வழிபடுபவர்கள் என்று கூறிக்கொண்டே சிலர் மலமூத்திரங்களை

உண்டும், தமது கபமே அமிர்தம் என்று மக்களுக்குக் கூறியும், பழரசங்களையும் பாலையும் உண்பதால் நாங்கள் சோறு தின்பதில்லை என்று முழங்கிக்கொண்டும் மக்களை ஏமாற்றி வந்தார்கள். நமது உடலே என்றும் நிலைத்திருக்கக் கூடியது, அதை நன்றாக கவனித்துக் கொள்வதே நமது முக்கிய குறிக்கோள் என்று சில பிரிவைச் சேர்ந்த சன்னியாசிகள் நம்பிவந்தார்கள். ஆனால் இன்னும் சிலரோ, காட்டிற்குச் சென்று உடலின்பங்களைத் தவிர்த்து உடலை வாட்டி வதைத்தனர். இவர்களில் உண்மையிலேயே உலக மாயையி லிருந்து விடுபட்டு சித்தியைக் கைகொண்ட பெரியோர்கள் பலர் இருந்தனர். ஆனால் யோகியை யோகிணியின் வடிவத்தி லும், சவணி (சமண சந்நியாசி)யை கந்தி (சமண சந்நியாசினி) யின் வடிவத்திலும், பகவ (வைணவ சந்நியாசி)னை மாச கப்பே (வைணவ சன்னியாசிநி) யின் வடிவத்திலும் யதியைப் புகழ்ச்சியின் ரூபத்திலும் மாயையானவள் தொடர்ந்து சென்றிருந்திருக்கிறாள். அவர்கள் தாம் மாயையை விட்டு விட்டோம் என்று சொல்லிக் கொண்டு மலை மீது ஏறிக் கொண்டாலும், காட்டிற்குச் சென்றாலும் விடாது பின் தொடர்ந்து சென்று விடுவாள். ரசவாதத்தைத் தெரிந்து கொண்டு மக்களை ஏமாற்றிய சித்தர்கள் கூட இருந்தனர்.

பசவண்ணரின் பின்னணியாக இருந்த சைவ சமயத்தை விளக்குவது அவ்வளவு எளிதான வேலையல்ல. ஏனென்றால் அதுபற்றிய விவரங்கள் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. பன்னெடுங் காலமாகவே கருநாடகத்தில் லகுலீச-பாசுபதம் என்று அழைக்கப்பட்ட பிரிவைச் சார்ந்த சைவர்கள் சிறப்பாக விளங்கிவந்தனர். இவர்கள் சிவனை வழிபட்டு வந்தனர். இவர்களைப் போலவே காளாமுகர்கள் என்னும் பிரிவினரும் இருந்தார்கள். நெற்றியின் மீது மையைப் பூசிக் கொள்ளும் பிரிவினைச் சார்ந்த மக்களைப் பற்றி சன்ன பசவண்ணர் குறிப்பிட்டுள்ளார். இவர்களே காளாமுகர்

களாக இருக்க வேண்டும். ஏதோ ஒரு சில கட்டுப்பாடுகளைத் தவிர்த்து லகுலீச-பாசுபதருக்கும் காளாமுகருக்கும் அவ்வள வாக முக்கியமான வேறுபாடுகள் ஏதும் இருக்கவில்லை. இப்பிரிவினர் நாள்தோறும் மும்முறை சாம்பலில் குளித்து வந்தனர். அவ்வப்பொழுது 'ஆஹா ஆஹா' என்று கூவிக் கொண்டு இறைவனின் பெயரை கூறிக் கொண்டிருந்தனர். உறக்கம் வரவில்லையென்றாலும் உறக்கம் வந்தவரைப் போலவும், முடமாக இல்லாவிட்டா லும் முடவனைப்போலவும், நோயாளியைப் போலவும், பித்தரைப் போலவும் நடித்துவந்தனர். இவற்றாலெல்லாம், மக்கள் இவர்களைப்பற்றி கேலிபேசி அவமானம் செய்தனர். இவ்வாறு அவமானம் செய்யப்பட வேண்டும் என்பதே அவர்களது எண்ணமுமாகும். இந்த அவமானத்தைத் தாங்கிக் கொள்வதன் மூலம் தங்களது பொறுமையையும், சகித்துக்கொள்ளும் தன்மையையும் அவர்கள் வளர்த்துக் கொண்டார்கள்.

இந்த லகுலீச-பாசுபதப் பிரிவைச் சேர்ந்த சைவசமயத் தவர்கள் அரசர்களால் போற்றப்பட்டு மிகவும் பெருமையுடன் விளங்கிவந்தனர். பெருந்தவ முனிவர்களும், ஞானிகளும் ஆகிய இவர்கள் கோயில்களில் இருந்துவந்த மடங்களில் தங்கி மக்களுக்கு அறநெறியை விளக்கிக் கூறி மக்களை நல் வழிப்படுத்தி வந்தனர். இம்மடங்கள் கல்வி கற்பிக்கப்படும் மையங்களாக விளங்கிவந்தன. மேலும் பெல்காமைச் சேர்ந்த கோடி போன்ற சில மடங்கள் தொலைதூரத்திலிருந்து வந்த மாணவர்களுக்கு சிறப்பான கல்வியை அளிக்கும் கல்வி நிலை யங்களாக இருந்தோடல்லாமல், நோயாளிகளுக்கு நோய் நீக்கும் மருந்துகளை அளிக்கும் மருத்துவச் சாலைகளாகவும் இருந்தன. அங்கு நாட்டின் பல பாகங்களிலிருந்தும் துன்பத் தால் துவண்டவர்கள், அநாதைகள் போன்றோர் வந்து

தஞ்சமடைந்தனர். மேலும், கவிஞர்கள், பாடகர்கள், நடிகர்கள் போன்றோர் வந்து புத்துணர்ச்சி பெற்றுச் சென்றனர்.

இங்கு ஒரு செய்தியைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேலே கூறப்பட்ட சில நடைமுறைகள் முரணாகத் தோன்றினாலும் லகுலீச-பாசுபதப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அமைதியான சன்னியாசிகளாகவே விளங்கினார்கள். இவர்கள் மாமிசத்தை உண்டதோ மதுவை அருந்தியதோ இல்லை; இவர்கள் மக்களுடன் ஒன்றாகக்கூடி அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு மக்களுடன் மக்களாகவே வாழ்ந்து வந்தனர். ஆலயங்களில் நிறுவப்பட்டிருக்கும் லிங்கங்களை வழிபடும் அன்பர்களாக இருந்தனர். மேலும் சிலர், சிவபெருமானின்மேல் கொண்ட பக்தியின் தீவிரத்தால் தம்மை மறந்து ஒன்றி உலக சம்பந்தமான எல்லா விடுப்புக்களையும் துறந்து இறைவழிபாடே தமது வாழ்வின் முக்கிய குறிக்கோள் என்று அமைத்துக் கொண்டவர்கள்.

இவர்களை மக்கள் 'குரவர்'கள் என்று அழைத்தனர். குரவர் என்ற சொல்லுக்கு இக்காலத்தில் வேறு பொருள் வந்திருந்தாலும் அக்காலத்தில் அச்சொல்லுக்கு நல்ல பொருள் இருந்தது. சில கல்வெட்டுக்களில் அறத்திற்குப் புறம்பான செயல்களைச் செய்த சில குரவர்களைப் பற்றிய செய்திகளும் இருக்கின்றன. இறையன்பர்கள் கொடுத்த பணத்தை தமது சடைகளில் மறைத்துவைத்துக் கொண்டு பின்னர் அதை திருட்டுத்தனமாக கெட்ட நடத்தையுடைய பெண்களுக்குக் கொடுத்த குரவர்களை மடத்தை விட்டு ஓட்ட வேண்டும் என்பனபோன்ற செய்திகளைக் கல்வெட்டுக்களிலிருந்து நாம் அறிய வருகிறோம்.

வசன இலக்கியங்களிலிருந்து மேலே குறிப்பிட்ட சைவ சமயப் பிரிவுகள் அல்லாது மேலும் சில பிரிவுகள் கருநாடகத்தில் அனுசரிக்கப்பட்டு வந்ததற்கான சான்றுகள் நமக்குக் கிடைக்கின்றன, சுத்த சைவம், பூர்வசைவம், மார்க்க சைவம், ஆதிசைவம் இவற்றுடன் வீரசைவமும் இருந்திருக்கிறது. ஆதையன் என்பவன் தரும் விளக்கத்தின்படி சுத்த சைவர்களுக்கும் வீரசைவர்களுக்கும் உள்ள வேற்றுமையானது சுத்த சைவர்கள் ஆலயத்தில் உள்ள லிங்கங்களை (ஸ்தாவர லிங்கங்களை) வழிபட்டு வந்தனர்; ஆனால் வீரசைவர்களோ இஷ்ட (ஜங்கம) லிங்கங்களை வழிபட்டு வந்தனர். இத்தகைய சைவசமயப் பிரிவுகளுக்கும் லகுலீச - பாசுபத சமயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் என்ன தொடர்போ தெரியவில்லை.

மேலே குறிப்பிடப்பட்ட எல்லா சைவசமயப் பிரிவினருள்ளும் வீரசைவர்களைத் தவிர்த்து பிறர் யாவரும் ஆலயங்களில் நிறுவப்பட்டுள்ள லிங்கங்களை வழிபட்டு வந்தனர். இவர்களில் சிலராவது தமது உடலின் மேல் தமது குரு வழங்கிய இஷ்டலிங்கத்தை அணிந்து வழிபட்டிருக்க வேண்டும் என்பதற்கும் இவர்கள் மக்களுக்கு சைவ சமயத்தின் நியமங்களைக் கற்பித்தனர் என்பதற்கும் ஆதாரங்கள் இருக்கின்றன. சைவசமயத்தில் காணப்படும் இத்தனைப் பிரிவுகளுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை? தொடர்புகள் யாவை? என்பன போன்ற விவரங்கள் நமக்கு இப்பொழுது தெளிவாகக் கிடைத்தில. வீர சைவ சமயத்தின் கொள்கைகளைப் பற்றியும் அமைப்பைப் பற்றியும் பின்வரும் பகுதிகளில் தெளிவாகக் காண்போமாக. மொத்தத்தில், பசவண்ணருக்கு முன்பேயே வீரசைவசமயம் இருந்ததென்பதையும், பசவண்ணர் வீரசைவ சமயத்தைத் தோற்றுவித்தவர் அல்லர் என்பதையும் நாம் இதுவரை கண்டதிலிருந்து தெளிவாக அறிகிறோம்.

இங்கு தமிழ்நாட்டின் சைவசமயத்தைப் பற்றிச் சில செய்திகளைக் கூறவேண்டும். தமிழ் நாட்டில் கிருத்துவுக்குப் பிந்திய ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் 'நாயன்மார்கள்' என்று அழைக்கப்பட்ட பல சைவசமயப் பெரியோர்கள் தோன்றி தென்னிந்தியா முற்றிலும் பக்திமார்க்கத்தைப் பரப்பினார்கள். இந்த அறுபத்துமூவரை அறுபத்துமூன்று நாயன்மார்கள் (திரிசஷ்டி புராதனர்) என்று மக்கள் அழைத்து வந்தனர். இவர்களுள் காரைக்கால் அம்மையார் என்னும் பெண் ஒருவர் இருந்தார். நந்தனார் என்னும் அரிசனர் ஒருவர் இருந்தார். அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி என்னும் மூவர் சைவசமயத்தில் மிகவும்முக்கிய மானவர்கள். இவர்கள் யாவரும் அமைதியான இயல்பைக் கொண்ட சைவர்கள். ஆனால் இவர்கள் மேற்கொண்ட சமயத்தொண்டோ மிகவும் சிறப்பானது. சாதி மதங்களின் கட்டுப்பாடுகளை மீறிச் செயல்பட்ட தமிழ்நாட்டின் சைவ சமயமானது மனப்பூர்வமான உண்மையான பக்தி நெறியை வளர்த்தது. கன்னடநாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் என்றென்றும் பண்பாட்டுத்தொடர்பு இருந்தே வந்தது. பாதாமி சாளுக்கியர்களுக்கும் சோழர்களுக்கும் அதேபோல் கல்யாண் சாளுக்கியர்களுக்கும் சோழர்களுக்கும் எப்பொழுதும் சண்டை இருந்து கொண்டேயிருந்தது. சோழர்கள் சைவர்கள். அவர்களுக்கும் இவர்களுக்கும் சில சமயங்களில் நட்புறவு இருந்து வந்ததை நாம் முன்னமேயே கண்டோம். பசவண்ணரின் பிறப்பிற்கு முன்பேயே கன்னடநாட்டில் சிவபக்தர்களைப் பற்றிய இத்தகைய கதைகள் வீடுதோறும் பேசப்படும் அளவுக்கு பரவியிருந்தன. அதைப்போலவே வட இந்தியாவின் அதிலும் முக்கியமாக காஷ்மீரம், குஜராத் ஆகிய பகுதிகளின் சிவபக்தர்களைப் பற்றிய கதைகளும் கூட கருநாடகத்தில் வழக்கிலிருந்திருக்கின்றன. அவர்கள் தமது நாடு மற்றும் காலம் போன்ற எல்லைகளையெல்லாம் கடந்து கருநாடக மக்களின் இதயத்தில் நிலைத்து நின்று நீங்காத இடத்தைப் பெற்று கருநாடக மக்களாகவே ஆகி விட்டிருந்தனர்.

3. பிறப்பும் இளமைக் காலமும் □□

இனி நாம் பசவண்ணரின் வாழ்க்கையைப்பற்றிக் காண லாம். இவரது வாழ்க்கை வரலாறு இன்னும் தெளிவில்லாத தாகவே இருக்கிறது. ஏனென்றால் பசவண்ணரைப் பற்றி எழுதப்பட்ட காவியங்களிலோ புராணங்களிலோ அவரது வாழ்க்கையைப் பற்றிய செய்திகளில் ஒற்றுமையில்லாமல் ஒன்றுக்கொன்று முரணான செய்திகளே இருக்கின்றன. பல இடங்களில் முரண்பாடான செய்திகளையே நாம் காண்கி றோம். இவ்வாறு முரண்பாடில்லாமல் உண்மையாக இருக்கக் கூடிய செய்திகளையும் விவரங்களையும் நாம் இங்கு காண் போமாக. முழுமையாகக் கிடைக்காத செய்திகளின் விவரங் களை நாம் இங்கு தரவில்லை. சில இடங்களில் அவைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன; இன்னும் சில இடங்களில் நமக்கு ஏற்புடைத்தான விவரங்களையும் செய்திகளையும் கொடுத்து முரண்பாடான விவரங்களைத் தவிர்த்துள்ளோம். சில இடங்களில் தனி மனிதனின் இகவாழ்வு என்ற தீர்மானத் திற்கு வருவதும் தவிர்க்க இயலாததாகிறது.

பசவேஸ்வரர் தர்தவாடி நாட்டின் பாகேவாடி என்னும் ஊரில் பிறந்தவர். இது இன்றைய பிஜப்பூர் மாவட்டத்தில் உள்ளது, தற்போது இது பெரிய ஊராகவும் தாலூக்க மையமாகவும் உள்ளது. இதைப் பசவன பாகேவாடி என்றும் கூறுவதுண்டு. இது மிகவும் புகழ் பெற்ற ஒரு அக்கிரஹாரமாக விளங்கியது. பதினொன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த கல்

வெட்டு ஒன்றில் அங்கு வாழ்ந்து வந்த மஹாஜனங்கள் அதாவது பிராமணர்களைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. ''நூதன வேத வேதாந்த தத்துவ ஞான மார்த்தாண்ட சுவாலாமண்டித புண்டரீகாக்ச பிரம்ம லச்சுமி லக்சிதவிசாலவக்சஸ்தளர் ஹம்ஸயுவதி ஸராஜீவிராஜ மான ரப்ப ஸ்ரீமத்பாகவாடி மஹாஜனம் ஐநூற்றுவரும். ''என்று உள்ளது. அவர்கள் வேத வேதாந்தங்களில் விற்பன்னர்களா கவும், தத்துவஞான மேதைகளாகவும் இருந்தார்கள் என்பது தெளிவாகிறது. பசவண்ணர் பிறந்த பொழுதும் அங்கே இருந்தது ஏறத்தாழ அதே ஐநூறு பிராமண வீடுகளாகும். அது ஒரு ''மஹாக்ரஹார''மாக விளங்கியது. அங்கு பிராமணர் கள் மட்டுமல்லாது பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள மற்றும் பல்வேறு அறநெறிகளைப் பின்பற்றும் பெருமக்களும் இருந்ததனால் அது ஒரு பெரிய கிராமமாக விளங்கிற்று.அங்கு எங்கு பார்த்தாலும் சிவபுராணங்களும்,சிவனின் பெருமையை விளக்கும் ஆகமங்களும், சிவசாத்திர முழக்கங்களும் ஒலித்துக் கொண்டிருந்தன. அங்கிருந்த பிராமணர்களின் தலைவராக மண்டகே எனும் இடத்தைச் சேர்ந்த மாதிராஜன் என்பவர் இருந்தார். அவரது மனைவி மாதாம்பாள் என்பவர் ஆவார். இருவரும் சாங்க்யநச கோத்திரத்தைச் சேர்ந்த கம்மே குலத் தின் சிவபிராமணர்கள் ஆவார்கள். மாதிராஜன் தலை சிறந்த ஞானியாகவும், விவேகியாகவும், திடசித்தம் உடையவராக வும் விளங்கியமையால் அவர் அவ்வக்ரஹாரத்தின் ஒப்பில் லாத தலைவராக இருந்துவந்தார்.

அவருக்கு நீண்ட நாட்களாக ஆண்மக்கள் பிறக்க வில்லை. தெய்வத்தின் மீது எல்லையில்லா அன்புகொண்ட அவரது மனைவியான மாதாம்பாள் இதனால் மிகுந்த மன வருத்தத்திற்கு ஆளாகி இக்குறை தீர ஏதேனும் வழிகூறு மாறு அறிஞர்களை விசாரித்தார். அவர்கள் பல நூல்களைப் படித்து அவற்றில் கூறப்பட்டுள்ள பலவகையான விரதங்

களையும், அவற்றைக் கடைப்பிடிக்கும் பொழுது அனுசரிக்க வேண்டிய சட்டுப்பாடுகளையும், அவ்வாறு விரதமிருப் பதனால் ஏற்படும் பலாபலன்களையும் விரித்துக் கூறினர். அவ்வாறு அவர்கள் கூறியவற்றில் மாதாம்பாளுக்குப் பிடித்த மானதாகவும் சிறப்பானதாகவும் இருந்தது விருஷபன் நோன்பு என்றழைக்கப்படும் நந்திநாதன் நோன்பே ஆகும். அந்த ஊரில் ஒரு மிகப்பெரிய சிவன் கோயில் இருந்தது (அக் கோயிலே இங்கலேஸ்வரரின் கோயிலாக இருந்திருக்கக்கூடும். அங்கு சிவலிங்கத்தின் முன்பு இருந்த பக்தியின் முழுவடிவான நந்தியின் திருவுருவச்சிலையின்கொம்புகளின் வழியாக சிவலிங் கத்தை மக்கள் கண்டு, வணங்கி, வழிபட்டு வந்தனர். அக் கோயிலில் இருந்த நந்தியை மாதாம்பாள் வழிபட்டுவந்தார். ஒரு திங்கட்கிழமையில் ஆரம்பித்த தனது நோன்பை ஒன்பது நாட்களுக்கு அனுசரித்துப் பின்னர் அந்த நந்திக்கு நீராட்டி சந்தனம், பூமாலை போன்றவற்றைச் சூட்டினார். அதன் பின்னர் நந்திக்கு தீபாராதனைகளைச் செய்து மிகவும் சிறப்பான முறையில் சிவத்தொண்டர்களை திருப்தி செய்து நந்தியை வணங்கினார். எனக்கு மகன் பிறந்தால் உன் பெயரையே சூட்டுகிறேன் என்று வேண்டிக்கொண்டார். இந்த நந்திநோன்பு இருந்ததன் பலனாலோ என்னவோ மாதாம்பாளுக்கு நல்லநேரத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்தபின்னர் நந்தி என்னும் பொருள் கொண்ட 'பசவன்' என்னும் பெயரிட்டு வளர்த்தனர். அக்குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. குழந்தைக்கு ஆமணக்கு இலை, மாங்காய், புலிநகம், அரை ஞாண், சலங்கை போன்ற பல்வேறு அணிகலன்களை அணி வித்து அழகுபடுத்திவந்தனர். குழந்தை பார்ப்பதற்கு நில வொளியைப் போல் தூய்மையாகவும் இளங்குருத்துப் போல வும் விளங்கிற்று.

குழந்தை வளர்ந்து பெரியவனாயிற்று. பெற்றோர்கள் அறநெறியாளர்கள் அல்லவா? ஊரிலிருந்து பலசிறந்த அறிஞர்களின் வீடுகளில் பசவனின் கல்வி நடைபெற்றது. இதனால் பசவனுக்கு சிறு வயதிலேயே நூற்றுக்கணக்கான சுலோகங்களும், அவற்றின் பொருள்களும் தெரிந்திருந்தன. ஆனாலும், அப்பொழுதே அவற்றை அவன் நன்கு உணர்ந் திருந்தான் என்றுகூற இயலாது சிறுவனாக அவன் வெளியில் பெற்ற அனுபவங்கள் பலப்பல. ஒரு நாள் யாகத்தில் பலி கொடுப்பதற்கென இழுத்துச் செல்லப்பட்ட ஒரு கடா ஆட்டின் அரற்றும் ஓசை அவன் மனதில் மிகவும் ஆழமாகப் பதிந்துவிட்டது. ஒவ்வொருமுறை அந்நிகழ்ச்சியைக் கனவில் கூட கண்டு பயந்து நடுநடுங்கி திடீர் என்று எழுந்து உட்கார்ந்து கொள்வதும் உண்டு. கல்லால் ஆன நாகரின் மேல் மக்கள் பாலை ஊற்றி பூசை செய்வதைக் கண்டிருக் கிறான். சிலசமயங்களில் தானே கூட இவ்வாறு செய்தும் இருந்திருக்கிறான். ஆனால், உண்மையான பாம்பு வந்தாலோ அதைக் கொன்றுவிடுவதையும் அவன் கண்டிருக்கின்றான். இத்தகைய முரண்பாடுகளுக்குக் காரணம் என்ன என்று அவனது சிறிய மனது அப்பொழுதேயே ஆழ்ந்து சிந்தித்திருக் கிறது. பொதுமக்கள் எவற்றையெல்லாம் தெய்வங்கள் என்று கொண்டாடி வழிபட்டுவந்தனரோ அவையெல்லாம் வெறும் ஜடப்பொருட்களாகவே அவனது கண்ணிற்குப் பட்டது.

பசவன் எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்து சிந்திக்கும் திறமை படைத்தவனாக இருந்தானோ அவ்வளவுக்கவ்வள எளிய மனப்பான்மை உடையவனாகவும் இருந்தான். அவனைச் சுற்றிலும் எப்பொழுதும் இளைஞர்களின் கூட்டம் இருந்தது. அவன் அக்ரஹாரத்தின் தலைவரின் மகனாக இருந்ததனாலும், தனது வயதை ஒத்த பிற சிறுவர்களிடம் காணப்படாத தன்வயதுக்கு மீறிய ஆழ்ந்த சிந்தனைத் திற மையும் பக்குவமும் இருந்ததனாலும், தன்னைமறந்து தன்

நலத்தை மறந்து எப்பொழுதும் பிறருக்கு உதவி புரிய வேண்டும் என்னும் தொண்டு உள்ளத்துடன் செயல்பட்ட தன்மையாலும் இயல்பாகவே பசவன் அவ்விளைஞர்களின் தலைவனாக ஆனான். ஆனாலும் அவன் அவர்களின் தலைவன் என்னும் தலைக்கனம் கொண்டிருக்கவில்லை. சிறு வயதிற்கே உரித்தான சிலகெட்ட நடவடிக்கைகளும் பழக்க வழக்கங்களும் இவர்களை ஆட்கொள்ளவில்லை. பசவனின் நண்பர்கள் குழுவில் இருந்த இளைஞர்கள் யாவரும் பல திறப்க்ட்ட சாதியைச் சேர்ந்தவர்களாவார்கள்.

அவனது நண்பர்களுக்கு அவன் எவ்வளவு நெருங்கியவனாக இருந்த போதிலும் ஒரு விசயத்தில் மட்டும் அவர்களால் அவனைப் புரிந்து கொள்ள முடியாமற் போய் விட்டது. பசவன் எவ்வளவுக்கெவ்வளவு இரக்க சுபாவம் கொண்டு விளங்கினானோ அவ்வளவுக்கவ்வளவு கடின சுபாவமும் கொண்டு விளங்கினான். அவனுக்குப் பிடித்த மானவர்களிடம் குலைதள்ளிய வாழை எவ்வாறு குனிகிறதோ அவ்வாறு நயமாக பழகிவந்தான்; ஆனால் கெட்ட செயல்களைக் கண்டாலோ அவன் கல்லைவிட கடின சிந்தை கொண்டவனாக மாறிவிடுவான். அவனது சொற்களும் அவ்வாறே சில சமயங்களில் அவனது சொற்கள் மிகவும் இனிமையாகவும் அன்பானதாகவும் இருக்கும். ஆனால் இன்னும் சிலசமயங்களிலோ சுடுசொல்லாக மாறிவிடும். இப்படிப்பட்ட தனிப்பட்ட தன்மைகள் அவனுக்குத் தனது பெற்றோர்களிடமிருந்து வந்தன. மக்களின் தலைவரான தந்தையானவர் சிலசமயங்களில் சுடுசொற்களைப் பயன் படுத்த வேண்டியிருக்கிறது, ஊரின் வேலைகளைக் கவனித்துக் கொள்ளவேண்டும், அவற்றைச் சரியாக நிறைவேற்ற வேண்டும் என்றால் சில சமயங்களில் கடுஞ்சொற்களில் கட்டளை பிறப்பிக்க வேண்டியிருந்தது. ஆனால் தாயோ எப்பொழுதும் இன்சொல் பேசுபவர். நன்கு பழுத்த

மாவினைப் போல அவரிடம் எந்த ஒரு சமயத்திலும் கடுந் தன்மையைக் காணமுடியாது. அவரது சொற்கள் தேனையும் அமுதத்தையும் போன்றன. பசவனையும் அவர் அன்பு எனும் நதியில் சீராட்டியும் பாசம் எனும் தொட்டிலில் தாலாட்டியும் வளர்த்து வந்தார்.

பசவனுக்கு இளமைக் காலத்தில் உண்டான மிகப்பெரிய அனுபவம் என்னவென்றால் சிவசரணர்களின் கதைகளைப் பற்றியதாகும். அவ்வூரில் பிராமணரல்லாத சிவபக்தர்களும் மிகுதியாக இருந்தனர். அவ்வப்பொழுது அங்கே புராணச் சொற்பொழிவுகளும் சிவகதை விளக்கக் கூட்டங்களும் நடை பெற்றன. அங்கு பல சிவசரணர்களின் கதைகளைக் கேட்டுக் கேட்டு தன்னையே மறந்துவிட்டான். கண்ணப்பன் என்பவன் திருக்காளத்தியைச் சார்ந்த ஒரு சாதாரண வேடர் இனத்தவனாவான். அவனுக்கு பக்தி என்பதன் பொருள் கூட தெரியாது. வேட்டையாடி பிராணிகளைக் கொன்று வாழ்க்கை நடத்துவதே அவனது தொழில். அவன் ஒருநாள் வேட்டைக்குப்போன பொழுது ஒரு மான் அவனது கைக்குச் சிக்காமல் தப்பி ஓடிச் சென்று கொண்டிருந்தது. அதன் பின்னரேயே சென்ற கண்ணப்பனானவன் வழி தவறிக் காட்டின் நடுவில் இருந்த ஒரு சிவாலயத்தை அடைந் தான். அங்கிருந்த சிவலிங்கத்தை நோக்கி மான் எங்கே என்று கேட்ட பொழுது லிங்கமானது மான் சென்ற திசையைக் காட்டியது. தனக்கு உதவி செய்த சிவலிங்கத்தின் பேரில் அவனுக்கு அன்பும் இரக்கமும் தோன்றிற்று. காட்டில் தனியாக விட்டுச் சென்றால் கொடிய விலங்குகளினால் சிவனுக்கு ஏதேனும் அபாயம், தொல்லை போன்றன நேருமே என்று பயந்து சிவனுக்காக அக்கானகத்தில் காவ லிருக்குமளவுக்கு அவனது அன்பு அவனை மாற்றியிருந்தது. எனவே அவன் அங்கேயே தங்கி சிவனுக்குக் காவலிருக்கத் தலைப்பட்டான். மறுநாள் விலங்குகளைக் கொன்று

அவற்றின் மாமிசத்தைச் சிவனுக்குத் தின்பதற்கென்று கொடுத்தான். வாய்நிறைய நீர் கொண்டு வந்து சிவனுக்கு அபிசேகம் செய்தான். மிக்க பக்தி சிரத்தையுடனும் ஆசார அனுட்டானங்களின் நெறிப்படியும் தன்னை வணங்கிவந்த பிராமண அர்ச்சகரின் பூசையைக்காட்டிலும் வேடனும் காட்டுமனிதனும் ஆன கண்ணப்பனின் பூசையே மிகுந்த அன்புடையதாகவும் ஏற்புடையதாகவும் சிவனுக்கு இருந்தது, அந்த பிராமணனின் தோற்றம் அமுதத்தைப் போல தூயதாக இருந்தாலும் உட்புறமோ முற்றிலும் நஞ்சாக இருந்தது. ஆனால் கண்ணப்பனுடைய மனதோ மிகவும் தூய்மையானது; தோற்றம் மட்டும் விகாரமானது. கண்ணப்பனின் உண்மையான பக்தியை உலகிற்குத் தெரிவிக்கும் பொருட்டு சிவபெருமான் தனது இரு கண்களில் ஒன்றிலிருந்து ரத்தம் கொட்டும்படிச் செய்தான். பிராமண அர்ச்சகன் சிவனின் கண்ணிலிருந்து ரத்தம் ஒழுகுவதைக் கண்டு மிகவும் பயந்து ஊர் மக்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டு அவன் ஓடிபோய்விட்டான். ஆனால் அப்பொழுது தான் வேட்டைக்குச் சென்று பின் திரும்பி வந்த கண்ணப்பன் ரத்தம் வடிவதைக் கண்டு தனது அம்பினால் தன்னுடைய கண்ணையே தோண்டி சிவனின் கண்ணுக்கு அப்பி வைத்தான். இப்பொழுது சிவனின் இரண்டாவது கண்ணிலிருந்து ரத்தம் வடிய ஆரம்பித்தது. இதைக்கண்ட கண்ணப்பன் தனது மற்றொரு கண்ணையும் தோண்டத் துவங்கினான். பக்தியென்றால் இதுவல்லவோ பக்தி? இதைக் கேட்கக் கேட்க பசவனின் கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாக ஊற்ற ஆரம்பித்தது. தான் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவன் என்றும் சிவனுக்கு தானே கண்ணைக் காணிக்கையாகக் கொடுத்தாகவும், சிவபெருமான் வந்து கண்ணப்பனுக்கு மோட்சமளித்து கயிலாயத்துக்குஅழைத்துக் கொண்டதுபோலவே தன்னையும் அழைத்துக்கொள்வதைப் போலவும் அவன் மனதில் கற்பனை செய்து கொள்வான்.

இதைப் போலவே மனதை ஆட்கொள்ளக் கூடியதாக இருப்பது மாதார சன்னய்யன் என்பவனின் கதையாகும். இவன் கரிகாற் சோழனின் அரசில் குதிரைகளுக்குப் புல் போடும் வேலையைச் செய்து வந்த ஒரு அரிசனன் ஆவான். அவனுடைய தூய அன்பையும் பக்தியையும் சிவன் மிகவும் நேசித்தான். அவன் தினமும் தனது வேலைகளை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வருவான். அதற்குள், அவனது மனைவி அவன் பூசை செய்வதற்கு வேண்டிய நீர் போன்ற பொருட்களைத் தயாராக வைத்திருப்பாள். அவர் களிருவரும் மிகுந்த அன்புடன் தனக்குக் கொடுக்கும் கஞ்சியை சிவபெருமான் மிக்க இன்பத்துடன் சுவைத்துப் பருகுவான். சோழ அரசனின் அரண்மனையில் தயாரிக்கப் படும் விதவிதமான உணவுகள் சிவனுக்குப் பிடிக்காதவையாகி விட்டன. இதையறிந்த கரிகாற்சோழன் அவனைத் தேடிக் கொண்டு சன்னய்யன் இருந்த புலைச் சேரிக்கே வந்துவிட் டான். இதைக்கண்ட சன்னய்யன் அரசனுக்குத் தன்மேல் கோபம் வந்துவிட்டது என்றும், தனக்கு ஏதோ பெரிய தண்டனை காத்திருக்கிறது என்றும் எண்ணிக் கொள்கிறான். ஆனால் வந்த அரசனோ அவனது காலின் கீழ் நெடுஞ்சாண் கிடையாக விழுந்ததைக் கண்டு நடுநடுங்கிப் போனான். ''உங்களது கால்களை விட்டுவிட்டு நான் வாழேன்'' என்று அரசன் மிகுந்த பணிவுடன் கூறினான். சன்னய்யன் அரச னுடன் கோயிலுக்குச் சென்று 'மன்னவன் வந்து எனது கால் களைப் பிடித்துக் கொள்ள நான் என்ன தவறு செய்தேன்?' என்றும் தனது பக்தியை உலகறியும்படிச் செய்தது தவறு என்றும் சிவனின் மேல் கோபித்துக் கொள்கிறான். சிவன் சன்னய்யனின் பக்தியை வியந்து, அவனைக் கயிலாயத்திற்கு அழைத்துக் கொள்கிறான். இதைப் போலவே முக்கியமானது சிரியாளன் என்னும் சிறுத்தொண்டனின் கதையுமாகும். சிறுத்தொண்டன் என்பவன் காஞ்சிபுரத்தில் வணிகம் செய்து வந்த ஒரு வணிகன் அவனது மனைவி செங்களை என்பவளா

வாள். இவர்களுக்குப் பிறந்த மகனின் பெயர் சீராளன் என்பதாகும். இவர்கள் யாவரும் சிவனின் மீது எல்லை யில்லா அன்பு கொண்டு வாழ்ந்து வந்தவர்கள் ஆவார்கள். சிவத்தொண்டர்களைத் திருப்தி செய்யும் பொருட்டுத் தன்னிடம் உள்ள எல்லா செல்வங்களையும் வழங்கத் தயாராக இருக்குமளவிற்கு அவன் இறைவனின் மீது காதல் கொண்டு விளங்கிவந்தான். இவர்களது பக்தியைச் சோதிக்க வேண்டி இறைவன் ஒரு நாள் ஒரு வீரசைவபக்தன் வேடம் தரித்துக் கொண்டு இவர்களது வீட்டிற்கு வந்து, தனக்கு மனித மாமிச உணவு தயாரித்துக் கொடுக்கவேண்டும் என்று கூறினான். உடனே முன்பின் ஏதும் யோசிக்காமல் பள்ளிக்குச் சென்றிருந்த சீராளனை அழைத்துக் கொண்டு வந்து அவனைக் கொன்று அவனது மாமிசத்திலிருந்து உணவு தயாரித்து பக்தனைத் திருப்தி செய்யத் தயாரானார்கள். இச்சோதனையின் இறுதியில் தோற்றுப்போன இறைவன் சீராளனின் உயிரை மீட்டு அவர்களுக்கு அருள்பாலித்தான். பசவன் அவ்வப்போது கேட்ட கதைகள் இதைப்போல் இன்னும் எத்தனையோ. இறைவன் வீரசைவ வேடத்தில் வந்து தனது மனைவியைக் கேட்டபொழுது தயங்காமல் கொடுத்த சிந்து பல்லாளன்; இறுதி வரைக்கும் இறைவனின் கட்டளையைக் காப்பாற்றி அவனது அருளை மிகவும் வியந்து அவனது அருளுக்குப் பாத்திரமான திருநீலகண்டன் அவனது மனைவி; தக்களை என்னும் பெண்ணுடன் இல்வாழ்க்கை நடத்தியவனும், தான் நெய்த மிகவும் அபூர்வமானதுணியை வீரசைவ வடிவத்தில் வந்த சிவபெருமானுக்குக் கொடுத்து சிவனிடமிருந்து அருளைப் பெற்றுக் கொண்டவனும் ஆன தேவர தாசிம்மய்யன்—இப்படிப் பட்டவர்களது கதை களைக் கேட்டு பசவன் மிகவும் பரவசமானான். இறைவன் குலம், சாத்திரம், செல்வம், ஆடம்பரம், போன்றவற்றை விரும்புவதில்லை. புறத்தோற்றத்தை அவன் மதிப்பதே

யில்லை. அவன் காண்பதெல்லாம் அகத்தையே. மனதிலிருக்கும் பக்தி உண்மையான அன்பு போன்றனவே இறைவனுக்கு வேண்டியன என்பது பசவனுக்குத் தெளிவானது.

ஆனால் இந்த உண்மை நெறிக்கும் புறம்பான மற்றும் எதிரான நிகழ்ச்சிகளே தன்னைச் சுற்றிலும் நடைபெற்று வந்தன என்பதை பசவன் கண்டான். சமுதாயத்தில் உண்மையான அன்பைவிட சடங்குகளும் புறத்தோற்றமுமே மிகவும் மதிக்கப்பட்டு வந்தன. உறங்கும் போதும் எழும் போதும் உண்ணும் போதும் குளிக்கும் போதும், இறைவனுக்குப் பூசை செய்யும் போதும், யாகம் செய்யும் போதும், மணம் புரியும் போதும் எத்தனைச் சடங்குகள், சாத்திரங்கள்? சமயச் சடங்காக மேற்கொள்ளப்படும் உபவாசங்கள், மற்றும் அட்டமி நவமிகள், சுத்த அசுத்தங்கள் இவை ஒவ்வொன்றையும் அறநூல்களில் கூறப்பட்டுள்ளவாறே முறைப்படி கடைப்பிடிக்க வேண்டும். உண்மையில் இவையெல்லாம் சரியானவையே. ஆனால் இவைகளைக் கடைப்பிடிக்கும் ஆர்ப்பாட்டத்தில் பக்தி எங்கோ போய்விட்டதே! சிவன் அரிசனனான மாதார சன்னையனை ஆட்கொண்டதைச் சாத்திரம் ஏற்குமா? இல்லை. ஆனாலும் அவன் ஆட்கொண்டான். வேடனான கண்ணப்பனின் பூசை எந்த ஆகமத்தின் படி நடைபெற்றது? ஆனால் சிவன் அதை ஏற்றுக்கொண்டானே! தாழ்ந்த குலத்தைச் சேர்ந்த சுபச்சய்யன் என்பவன் தனது பார்வையில் பட்டுவிட்டான் என்பதற்காக பக்தி என்பதே சற்றும் இல்லாத உயர்ந்த குலத்தவனான சாமவேதி என்பவன் தனது சமையற் பாத்திரங்களைச் செருப்பால் மூடிவைத்தான். ஆயினும் சிவனுக்கோ சுபச்சய்யனின் மேல்தான் அன்பு. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு முன்னால் சாத்திரங்கள் யாவும் பயனற்றுப் போகின்றன; சாத்திரங்களின் கட்டுப்பாடுகள் நம்மை இறைவனிடமிருந்து தூரத்திற்கு எடுத்துச் சென்றுவிடுகின்றன என்பன போன்ற

எண்ணங்கள் பசவனின் மனதில் வளர்ந்தன. தான் பிறந்து வளர்ந்த சமுதாயத்தில் முதன்முதலில் கண்ட இத்தகைய துன்பந்தரும் நிகழ்ச்சிகள் அவனது மனதில் ஒரு வகையான வெறுப்பை ஏற்படுத்தின. தான் ஒரு காற்றில்லாத இருட்டான நெரிசலான அறையில் சிக்கிக் கொண்டதைப் போலவும், அதன் வெளியே சுதந்திரமான தான் தானாக இருக்க வழிவிடும் உலகம் இருப்பதைப் போலவும் அவனுக்குத் தோன்றலாயிற்று. இவை அவனது வயதிற்கு மீறிய சிந்தனைகளாக இருக்கலாம். ஆனாலும், அவன் இவ்வளவு தெளிவாகச் சிந்தித்திருக்கிறான் அல்லவா? பசவன் பிற சிறுவர்களைப் போன்றவனல்லன் பிறரைக்காட்டிலும் மாறுபட்ட வகையில் சிந்திக்கும் திறன் பெற்றிருந்தவனாக இருந்தான். தனது மனதைப் பிறருக்குக் கொடுத்துவிடாமல் எப்பொழுதும் தனதாகவே கொண்டு சுயமாகச் சிந்தித்து வந்தான் அவன்.

அவனது இளமைப் பருவத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சி மிகவும் முக்கியமானது. அவனது இறுதி நாட்களில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தவிர்த்து மீதியுள்ளனவற்றில் இதே மிகவும் சிறப்பானது. பிராமண சிறுவர்களின் வாழ்க்கையில் உபநயனம் செய்வது என்பது மிகவும் முக்கியமான ஒரு சடங்காகும். உபநயனம் என்றால் '(குருவின்) அருகில் கொண்டு செல்வது என்று பொருள்' உபநயனம் செய்வதன் முக்கியக் கருத்து சிறுவனை கல்விக்காக குருவிடம் ஒப்புவிக்க வேண்டும் என்பதேயாகும். அதற்கு முன்பே அவனுடைய ஐந்தாவது அல்லது ஆறாவது வயதில் எழுத்துக்களைக் கற்பித்தலும், சில சுலோகங்களை மனப்பாடம் செய்வித்தலும் நடைபெற்றிருக்கும். ஆனால் உண்மையான கல்வி ஆரம்பமாவது உபநயனத்தின் பின்னரே.

அப்பொழுது பசவன் எட்டு வயதுச் சிறுவனாக இருந்தான். அசுவலாயனின் கிருக சூத்திரம், அபஸ்தம்ப

கிருக சூத்திரம் முதலான கிருக சூத்திரங்களையும், ஸ்மிருதிகளையும் தனது எட்டாவது வயதில் ஒரு பிராமணச் சிறுவன் உபநயனம் பெறவேண்டும் என்று விதித்துள்ளார்கள். அதன்படி பசவனின் தந்தை மாதிராசன் தனது மகனின் உபநயனச் சடங்கை முடித்து தகுதியுள்ள ஒரு குருவிடம் அவனை அமர்த்தி சிறந்த கல்விமானாக ஆக்கவேண்டும் என்று விரும்பினார். அச்சமயத்தில் பசவன் வீட்டில் தன் தந்தையிடமே சில பாடங்களைக் கற்றுவந்தான். ஆனால் முறைப்படியான கல்வியைத் துவங்க வேண்டும் என்று அவனது தந்தை விரும்பினார். அதன்படி உபநயனம் செய்வதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடைபெற்றுவந்தன. பசவனுக்கோ இச்சடங்கில் சிறிதும் விருப்பமில்லை. தான் இதற்கு ஒத்துக் கொண்டால் வீண் தொல்லைகளில் சிக்கிக் கொள்வது நிச்சயம் என்றும், சிவனின் அருளைப் பெறும் தனது எண்ணம் கனவாகவே இருந்துவிடும் என்றும் எண்ணினான். இச்சடங்கினைச் செய்து கொள்ளத் தான் தயாராக இல்லை என்பதை உறுதியுடன் தன் தந்தைக்கு எடுத்துரைத்தான். இதைக் கேட்ட தந்தையோ என்ன செய்வதென்றறியாமல் போனார். பிராமண குலத்திற்கே எதிர்ப்பான சொற்களைப்பசவன் கூறக்கேட்டு நிலத்தில் விழுந்துவிட்டார். ''வேதமதத்தின்படி பிராமணனுக்குப் பதினாறு சடங்குகள் நடந்தே தீரவேண்டும். அவற்றில் இதுவும் ஒன்று. இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தவறவிட்டாலும் பிராமணர் என்று ஏற்றுக்கொள்ளுவதில்லை. எல்லா சாதிகளையும் விடத் தலைசிறந்த சாதியான பிராமணசாதியில் பிறந்த நீ இச் சடங்கை ஏற்றுக் கொள்ள மறுப்பது சரியல்ல'' என்று அவனது தந்தை கூறினார். தந்தையின் சொற்களை ஏற்றுக் கொள்ள பசவன் பிராமணீயம் வேறு இறைவன் வேறு இறையன்பு வேறு என்று வாதம் செய்தான். பிராமணீயம் ஒரு கர்மநெறி. பிராமணன் நெருப்பு, சூரியன், பிரமன், விஷ்ணு எல்லோரையும் வணங்கவேண்டும். சிவனைவிட்டுப் பிற தெய்வங்களைத் தொழுவது நரகத்திற்குச் சமானமானது.

என்று மேலும் சொல்லலானான். தந்தை மேலும் வற்புறுத்திய பொழுது நீங்கள் கருமம், கிரியை, ஆசாரம் போன்றவற்றின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுகிறீர்கள் ஆனால் நானோ காக்கையின் கூட்டில் வந்து பிறந்துவிட்ட குயிலைப் போன்றவன் என்று மிகவும் கண்டிப்பாகக் கூறினான். ஆனால் அவனது தந்தையோ அவனை விட்டாரில்லை. அது மகனின் உபநயனப் பிரச்சனை மட்டுமல்ல, தனது வமிசத்தின் கௌரவப் பிரச்சனையே என்று யோசிக்கலானார். இறுதியில் எவ்வாறோ பசவன் தனது உபநயனச் சடங்கிற்கு ஒத்துக் கொண்டான். ஆனாலும் முழு மனதில்லாமல் ஏனோதானோ என்றே ஏற்றுக் கொண்டான். குருவின் முன்னிலையில் வசந்த காலத்தில் ஒரு சுபமுகூர்த்தத்தில் அவனது உபநயனம் நடந்தேறியது. அன்று காலையில் அவன் குளிப்பதற்கு முன்பேயே சாப்பிட்டான் (இது சிறுவனின் பிள்ளைத் தனத்தின் இறுதி ஆசையை நிறைவேற்றிக் கொள்வதைக் குறிப்பது) தலை முடிகளை எடுத்துவிட்டுக் குடுமி வைத்துக் கொண்டான். பின்னர் நீராடி தபசியின் உடையை உடுத்துக் கொண்டான். இடுப்பில் அரைஞாண் கயிறுகட்டிக் கொண்டான். ஹோமம் செய்தல் போன்ற நியமங்கள் முடிந்த பின்னர் ஹோமம் செய்யும் போது உடுத்துக் கொள்வதற்கென்று உள்ள உடையை உடுத்து தண்டத்தைப் பிடித்துக் கொண்டு குருவை வணங்கினான். குருவிடம் இருந்து சாவித்திரி மந்திரத்தின் (இதை காயத்ரி மந்திரம் என்றும் அழைக்கிறார்கள்) உபதேசமும் முடிந்தது. எல்லாம் சற்றும் உற்சாகமில்லாமல் இயந்திர கதியில் நடந்தேறின. உபநயனச் சடங்கின் பிறகு கடைப் பிடிக்கவேண்டிய பெரிய நெறி ஒன்று உள்ளது. ஆனால் அந் நெறியைப் பற்றி உபநயனச் சடங்கை செய்து முடித்தவர் தெரிந்து வைத்திருக்கவில்லை. தெரிந்திருந்தாலும் அதைப் பற்றிச் சற்றும் மனதில் எண்ணிக் கொள்ளாமல் புறத் தோற்றத்திற்குப் பகட்டான செயல்களையே உபநயனச் சடங்கு என்று செய்து முடித்தார். ஆனால், பசவனுக்கு இவையாவும் பொருள் இல்லாத செயல்கள், வெறும் சடங்குகள் என்றே தோன்றியதில் வியப்பு ஏதுமில்லை.

4. கூடல சங்கமத்திற்கு

பசவன் மிகுந்த நிதானத்துடன் உபநயனம் செய்தல் என்ற பெயரில் நடைபெற்ற கொடுமைகளைத் தாங்கிக் கொண்டான். எப்பொழுதும் மனதில் பிராமணீயச் சடங்கு களைப் பற்றியும் அதன் பெயரால் இழைக்கப்படும் கொடுமை களைப் பற்றியும் எண்ணிவந்ததால் அவற்றின் மேல் ஒரு வகையான வெறுப்புத் தோன்றவாரம்பித்தது. தனக்குக் கட்டப்பட்டுள்ளது பூணூல் அல்ல வெறுங்கயிறு என்று சிந்தித்து வந்தான். உபநயனம் முடிந்து சிலகாலம் வரை சந்தியாவந்தன ஆசாரங்களைக் கடைப்பிடித்து வந்தான். மேலும், காலையிலும் மாலையிலும் தூய நீரை அங்கையி லிட்டு மந்திரத்தை உச்சரித்த பின்னர் உறிஞ்சிக் குடித்தல் (அசமனம் செய்தல்), பிராணாயாம மந்திரத்தை ஓதுதல், தனதுமேல் நீரைத் தெளித்துக் கொள்ளுதல் (மார்சனம் செய்தல்), நீர் நிரம்பிய அங்கையை மூக்கின் அருகில் வைத்துக் கொண்டு ஒரு ரிக்வேத மந்திரம் சொல்லுதல் (அகமர்ப் பணம் செய்தல்), சூரியனுக்குத் தீர்த்தத்தை அர்ப்பணம் செய்தல் (அர்க்யம் செய்தல்), காயத்ரிமந்திரத்தை ஓதுதல், சூரியன், வருணன் போன்ற தேவர்களைக்குறித்து தோத்திரப் பாடல்களைப் பாடுதல் (உபஸ்தானம் செய்தல்) போன்ற சடங்குகளையெல்லாம் குருவானவர் சொல்லிக் கொடுத்த வழியில் கிளிப்பிள்ளையைப் போலச் செய்து வந்தான்.

காலம் சிறிது சிறிதாகக் கழிந்த போது தனது உடலின் மேலிருக்கும் பூணூலானது தாங்கிக்கொள்ள இயலாத ஒரு பிரச்சனையாக உருவெடுத்தது.

இதற்கிடையில் பசவனின் முறைப்படியான கல்வி போதனையும் ஆரம்பமாயிற்று. எழுதுவது, படிப்பது, மேலும் கணக்கு, இலக்கணம், நாட்டியம், யாப்புநூல், இசை, இலக்கியம், வேதங்கள், வேதாந்தங்கள், ஹரரகசிய ஆகமம் போன்ற ஆகம நூற்களும், புராணங்களும் மொத்தத்தில் அக்காலத்திய முறைப்படி வைதிக குலத்தில் இருக்கும் ஒருவன் எவற்றையெல்லாம் கற்க வேண்டுமோ அவற்றை யெல்லாம் பசவன் கற்றுத் தேர்ந்தான். தனக்கு அவற்றில் விருப்பம் உள்ளதோ இல்லையோ அதைப் பற்றிச் சிந்திக் காமல் தனது கல்வியைக் கற்றுத் தேர்ந்தான். பெறற்கரும் நினைவுத் திறன் படைத்திருந்த பசவன் வேதங்களிலிருந்தும் ஆகமங்களிலிருந்தும் சமஸ்கிருத சுலோகங்களைச் சொல்ல வல்லவனாக இருந்தான்.

அக்காலத்தில் கல்வி கற்பிப்பதில் வேதங்களைப் பற்றிய அறிவே முக்கிய இடம் பெற்று வந்தது. வேத சூத்திரங்களின் பொருள் தெரியவில்லை என்றாலும் அவற்றை மனதில் பதிய வைத்துக் கொண்டு சரியான சுரபேதங்களுடன் சரியான உச்சரிப்பில் ஒப்பித்தாலே போதும்; மந்திரத்தை ஓதிய பலன் நமக்குக் கிடைக்கும் என்று நம்பி வந்தார்கள். ஆனால் பசவனுக்கோ இது ஏற்புடையதாக இருக்கவில்லை. வேதங்களின் பொருளைப் புரிந்து கொள்ளாமல் அவற்றின் சுமையை மட்டும் ஏற்றுக் கொண்டு சுமப்பவர்கள் வெறும் கழுதைகளே என்று பொருள் படும் சொற்றொடரைப் பின்னால் அவன் எழுதிய வசனகாவியத்தில் காணலாம் (வேதபாரபராக்ரம பிராமண கர்த்தபம் என்று குறிப்பிட்டுள்ளார்). அவனுக்குப் பொருள்

தெரிந்த வேத மந்திரங்களின் படியும் சிவனைவிட்டால் வேறு தெய்வம் இல்லை என்னும் கருத்தே வலியுறுத்தப்படுவதாக உணர்ந்தான் (கூடலசங்கமன் அல்லாது வேறு தெய்வம் இலதென்றது வேதம் என்று உரைக்கின்றார்). மொத்தத்தில் பசவனுக்குத் தலைசிறந்த அறிஞர்களிடமிருந்து கல்வியறிவு கிடைத்தது. இக்கல்வியினால் அவனது அறிவுக்குத் திருப்தி ஏற்பட்டதோடு சமுதாயத்தைச் சீர்திருத்த வேண்டும் என்ற மனவேட்கையும் அதிகமாயிற்று.

பசவன் மாணவனாக இருந்தபொழுது எவ்வளவு பொறுப்புடன் கல்வி கற்றானோ அவ்வளவு பொறுப்பை அவன் தனது வைதீக ஆசாரங்களைக் கடைப்பிடிப்பதில் காட்டவில்லை. மேலும், அவனுக்கு வயது அதிகமாக ஆக அறிவு வளரவளர உயர்ந்த சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியினருக்குச் செய்துவந்த கொடுமைகளும் துன்பங்களும் மிகத் தெளிவாகத் தெரிய ஆரம்பித்தன. தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த மக்களின் பேரில் இவன் மிகவும் பரிவு காட்ட ஆரம்பித்தான். அவர்களிலும் சிறந்தவர்களும் மெய்யன்பு பூண்டவர்களும் இருப்பதை இவன் கண்டு கொண்டான். பசவனின் இத்தகைய சிந்தனைகளும் எண்ணங்களும் வெளிப்படையாக எல்லோருக்கும் தெரிய ஆரம்பித்த பின்னர் அவனுக்கும் அவனது தாய்தந்தையருக்கும் மற்றும் அவனுக்கும் அவனது சமுதாயத்துக்கும் இடையே ஒரு பெரிய பிளவு தோன்ற ஆரம்பித்தது. அவனது உபநயனச் சடங்கின் போது நடைபெற்ற நிகழ்ச்சிகளை அவனது உறவினரும் பிறரும் மறக்கவில்லை. தந்தை இவனை ஒரு கட்டுப்பாட்டிற்குக் கீழ் கொண்டுவர வேண்டும் என்று எண்ணி பலவகையாலும் அறிவு கூறிப்பார்த்தார்; தண்டனை கொடுப்பேன் என்று பயமுறுத்திப் பார்த்தார்; வைதீக ஆசாரத்தை விட்டு வேறு நெறிக்குச் சென்று விடவேண்டும் என்று பல்லாற்றானும் முயற்சிகள் செய்து பார்த்தார்.

கொடுமையான தண்டனைகளைக் கொடுத்துப் பார்த்தார். எனினும் இவற்றால் அவருக்குப் பலன் கிடைக்கவில்லை' மாறாக பசவன் தந்தைதாயைப் பற்றி ஒரு வெறுப்புணர்வை வளர்த்துக்கொண்டான். பின்னால் பசவண்ணரால் எழுதப் பட்ட வசனங்களைக் கவனித்தால் சிறுவயதில் பசவனுக்குத் தனது பெற்றோர்களின் மீது எவ்வளவு அலட்சிய மனோ பாவமும் ஒரு வகையான வெறுப்புணர்வும் இருந்தன என்பதை உணரலாம். இதற்கு மேலே கூறப்பட்ட நிகழ்ச்சி களைப் போன்ற சூழ்நிலைகளே காரணமாக இருந்திருக்கக் கூடும்.

இவ்வாறு பசவனுக்கும் அவனது பெற்றோர்களுக்கும் இடையே வேறுபாட்டுணர்வு தோன்றி வளர்ந்து கொண்டிருந்த சமயத்திலே அவர்கள் உயிர் நீத்தனர். அப்பொழுது அவனுக்கு வயது பதினாறுகூட நிரம்பியிருக்க வில்லை. உலகத்தில் அவன் ஒரு அனாதையானான். அவனது முப்பாட்டி ஒருத்திமட்டும் அவன் மீது அன்பும் கருணையும் காட்டிவந்தாள். மீதமிருந்தவர்கள் எல்லோரும், ஏன் பிராமண சமுதாய முழுதுமே அவனை வெறுத்தது: அவனிடத்தில் சரியானபடி நடந்து கொள்ளவில்லை. கிராமத் தலைவரின் மகனாகப் பிறந்த காரணத்தினால் இயல்பாகவே பசவன் தனது நிலையிலிருந்து இறங்காமல் நடந்து கொண் டான். ஆனால், பிராமண சமுதாயத்தைப் பற்றி அவன் மனத்தில் வேரூன்றிவிட்ட வெறுப்புணர்வானது மேலும் மேலும் வளரத்தொடங்கியதே தவிரக் குறையவில்லை. தான் பிறந்த பிராமணகுலத்தில் இன்னும் இருப்பது நடை முறைக்கு ஏற்றதல்ல என்று எண்ணினான். உறவினர்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தவர்களிடமிருந்து எந்தவித மான ஆறுதலும் கிடைக்காமற் போயிற்று. அச்சமயத்தில் அவன் தனது பதினாறாவது வயதை எட்டிக் கொண்டிருந் தான். இளமை அவனுக்குச் செழிப்பான தோற்றத்தை

அளித்திருந்தது. தலைநிறைய முடி, பூ முடித்த சடை; அதைச் சுற்றி ருத்திராட்ச மாலை. அழகிய தோள்கள், முத்து புரளும் மார்பு, மொத்தத்தில் சிவபூசைக்கு இளமையழகே உருவெடுத்து வந்தது போலத்தோன்றும். தான் ஒரு பிராமணன் என்பதற்குக் கடைசி அடையாளமான பூணூல் கொடி படர்ந்திருப்பது போல் அவனது உடலின் மேல் படர்ந் திருந்தது. அதைப் பிய்த்தெறிந்துவிட்டு பிராமண குலத்தை விட்டே வெளியேறிவிடவேண்டும்போல இருந்தது அவனுக்கு. இவ்வாறு செய்யாமல் எத்தனை நாட்களுக்குத்தான் இத்தகைய துன்பங்களையும் மனவருத்தங்களையும் தாங்கிக் கொள்வது? நாட்கள் நகர்ந்தன. அவனது மனம் சிவ பக்தியில் மூழ்கித் திளைத்தது. தனது வாழ்க்கை முழுவதும் சிவனை வழிபடுவதிலேயே கழிய வேண்டும் என்ற எண்ணம் அவனது அடிமனத்தில் நன்கு வேரூன்றியது. ஒரு நாள் உறுதியான மனதுடன் எல்லோரின் முன்பாகத் தனது பூணூலைப் பிய்த்து எறிந்துவிட்டு மதசம்பிரதாயங்களி லிருந்து வெளியேறினான். அத்துடன் பிராமண குலத்திற்கும் அவனுக்கும் இருந்த தொடர்பு அற்றுப் போயிற்று.

இதனால் சமுதாயத்தில் எவ்வளவோ அல்லோல கல்லோ லங்கள் நடைபெற்றிருக்கக்கூடும். நாலாபக்கத்திலுமிருந்து வந்த பிரச்சனைகளையும், மறுப்புகளையும், எதிர்ப்புகளையும் எதிர்த்து நிற்கும் திறமை பசவனிடம் இருந்தது. சமாளித்து தனது பிராமண நெறியை விட்டு வெளியே வந்த பசவனுக்கு அவ்வூரில் உள்ள பிறரின் ஆதரவும் அன்பும் கிடைத்தது. ஆனாலும் அவன் நீண்ட நாட்கள் அவ்வூரிலேயே தங்காமல் அங்கிருந்து உடனே புறப்பட்டுவிட்டான்.

பாகேவாடியை விட்டுவிட்டுப் புறப்பட்ட பொழுது பசவனுடன் அவனது தமக்கையாகிய நாகலாம்பாளும் உடன் வந்ததாகத் தெரிகிறது. இவள் பசவனின் உடன் பிறந்த

தமக்கையோ அல்லது உறவினளோ என்று போதுமான ஆதாரங்கள் இல்லாமையால் கூறஇயலாத நிலையுள்ளது. அர்ச்சுனவாடம் என்னும் ஊரில் கிடைத்த கல்வெட்டில் கூறியுள்ள செய்தியின்படி பசவனுக்குத் தேவராசன் என்னும் பெயரில் ஒரு அண்ணன் இருந்துவந்ததாகத் தெரிகிறது. இவனைப் பற்றியும் ஆதாரபூர்வமான செய்திகள் வேறெதுவும் கிடைத்தில. இந்தத் தேவராசனின் பெயர் எந்த வசனத்திலும் காவியத்திலும் காணப்படவில்லை. ஆனால் நாகலாம்பாள் என்றழைக்கப்பட்ட அக்கநாகம்மாள் என்பவள் பசவனின் வாழ்வில் முக்கிய பங்கு வகித்துள்ளாள் என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன.

பசவன் பாகேவாடியிலிருந்து புறப்பட்டு வடபக்கமாகத் திரும்பி நடையாகவே கிருஷ்ணா மற்றும் மலப்பிரபா நதிகள் ஒன்றுகூடும் இடமான கப்படி சங்கமத்திற்கு வந்து சேர்ந்தான். அங்கு அவன் வரக்காரணம் என்ன? அல்லது அங்கிருந்த சிறப்பென்ன? அவ்விடத்தைப் பற்றி முன்பே அவன் அறிந்திருந்தானா? அல்லது பிறரிடமிருந்து அவ்விடத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு அங்கு வந்தானா? என்பன போன்ற கேள்விகளுக்கெல்லாம் நமக்குப் பதில் கிடைக்கவில்லை. கப்படி சங்கமத்தில் வீற்றிருந்த இறைவனின் பெயர் கூடலசங்கமேசுவரன் என்பதாகும். கப்படி என்பது 'கர்படி' என்னும் சமஸ்கிருதச் சொல்லின் திரிபாக இருக்கலாம் என்று தெரிகிறது. சமஸ்கிருதத்தில் கர்படி என்றால் கிழிந்த ஆடைகளை அணிந்துள்ள சன்னியாசி, தவசி என்று பொருள். அங்கு சிவமுனிவர்கள் அல்லது சமயக் குரவர்கள் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்த காரணத்தால் ஒருவேளை அவ்வூருக்கு கப்படி சங்கமம் என்ற பெயர் வந்திருக்கக்கூடும் (சங்கமம் என்பதற்கும் கூடல் என்பதே பொருள்). கி.பி 1070ம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் கூடல சங்கம தேவனின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதிலிருந்து இங்கிருந்த

கோயில் பசவனின் காலத்திற்கு முன்பே சிறந்து விளங்கி வந்திருக்கிறது என்பதற்கான ஆதாரம் நமக்குக் கிடைக்கிறது. இத்தகைய சிறப்புடைய கப்படி சங்கமத்திற்கு வந்து அங்கிருந்த சங்கமேஸ்வரனின் திருக்கோயிலைக் கண்டபொழுதும் லிங்கமூர்த்தியை வணங்கிய பொழுதும் பசவனுக்கு ஏற்பட்ட இன்ப அனுபவங்கள் விவரிக்க இயலாதன. அதைக் கண்ட போதுதான் அவனுக்குக் கண் வந்ததைப் போலவும், உயிர் வந்ததைப் போலவும் ஆயிற்று. அங்கிருந்து ஓடிவந்து முன் மண்டபத்தில் விழுந்து 'எத்தகைய எதிர்பார்ப்பும் இல்லாமல் என்னை விரும்பும் உறவினனே, எனது தந்தை தாய் மற்றும் நெருங்கிய உறவினரைப் போன்றவனே, எனது குலமே, எனது நண்பனே, எனது பிறந்தவீட்டு நாயகனே, எனது திட சிந்தையே, எனது கண்ணே, எனது கதியே, எனது அறிவே, எனது புண்ணியமே, எனது உயிரே, என்னைப் பிடித்துக் கொள், பிடித்துக் கொள்' என்று மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டே மயங்கி விழுந்துவிட்டனன்.

அத்திருக்கோயிலில் லகுலீச-பசுபதப் பிரிவைச் சேர்ந்த ஈசான்யகுருக்கள் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு வகையில் அவ்விறைவனின் அடிமையாக ஆகியிருந்தார். அவர் பசவனின் உருவத்தில் இருந்த கம்பீரத்தையும் முகத்தில் தெரிந்த சிவக்களையையும் அடையாளங் கண்டு கொண்டார். மேலும், அவன் வாழ்வில் மிகுந்த துன்பங்களுக்கு ஆளானவன் என்பதும் தெளிவாயிற்று. பசவனின் சிறப்பையும், திறமையையும் முதன்முதலாக அறிந்து கொண்டவர் இவரே. ''நீ எங்கும் செல்லவேண்டாம், யாரைப் பற்றியும் எண்ணவேண்டாம் சங்கமேஸ்வரனுக்கு புதுப் பூக்களையும் தெளிந்த நீரையும் கொண்டு முறைதவறாமல் நீயே பூசைசெய்'' என்று கூறி அவனைத் தூண்டினார். இவ்வார்த்தைகள் அவனது புண்பட்ட மனத்திற்கு மருந்திட்டதைப் போலிருந்தன.

கப்படி சங்கமத்தில் நாள்தோறும் இறைவனுக்குப் பூசை செய்து வணங்கும் பணி அவனதாயிற்று. அதிகாலையே எழுந்து திருநீறுபூசி சங்கமனின் தான் பணிந்து, வணங்கி அவனை ஒற்றிக் கொண்டால் அப்படியே அவனுக்கு மெய் சிலிர்த்துப் போய்விடும். விரைவில் வந்து விடுகிறேன் என்று சமாதானம் கூறி இறைவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு சென்று பூஜை நீர் தூக்கும் காவடியை எடுத்துக் கொண்டு வந்தால் அங்கேயே பக்கத்தில் அடர்ந்து வளர்ந் துள்ள தோட்டம். அங்கு பூக்களின் நறுமணம் இறைவனை வலம் வந்தது! இது இறைவனுக்கு மிகவும் ஏற்புடையதாக வும் இருந்தது. பூந்தோட்டத்தில் தும்பி முதலான வண்டினங்கள் தீண்டாத, மேலும் சூரியனின் ஒளிகூட பட்டிராத மொக்குகளாகப் பார்த்து தேர்ந்தெடுத்துக் கொள்வான். பிற பூக்களைத் தொடக்கூட மாட்டான். அத்தோட்டத்தின் எல்லா பாகத்திலும் சுற்றி சம்பங்கி தாழை, சிவந்தி, மல்லிகை முதலான மலர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஆற்றில் இறங்கி தூய குளிர்ந்த நீரைப் பாத்திரங்களில் நிரப்பி மெல்லிய துணியால் மூடி கோயிலுக்கு வருவான், வரும் வழியில் எல்லாம் சிவனைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு வருவான். தான் வருவதற்குத் தாமதமானதால் இறைவனுக்குத் துன்பம் உண்டாயிருக்குமோ என்ற கவலை வேறு. அதற்காக மன்னிக்கும்படி இறைவனைக் கேட்டுக் கொள் வான். லிங்கத்தைக் குளிர்ந்த நீரால் குளிப்பாட்டி சந்தனத் தால் அலங்கரித்து, பூக்களால் சிங்காரம் செய்து ஒரு முறை பூசை செய்தும் மனம் திருப்தி அடையாததால் மீண்டும் பூசை செய்வான். அவன் இஷ்ட முறைப்படியே பூசை நியமங்கள் நடைபெறும். அதன்பின்னர் சங்கமனுக்கு நைவேத்தியம் நடக்கும். திரையினால் மறைத்துக்கொண்டு ''தயவு செய்து ஏற்றருள வேண்டும்'' என்று வேண்டிக் கொள்வான். பின்னர், லிங்கத்திற்கு தெளிந்த நீரையும்,

கற்பூரத்தையும், சந்தனத்தையும் அர்ப்பணம் செய்வான். உணவருந்தியதால் சிவனுக்கு களைப்பு ஏற்பட்டிருக்கும் என்று எண்ணி களைப்பு தீர்வதற்காக லிங்கத்திற்குச் சாமரத்தைக்கொண்டு வீசுவான். பூசை செய்யும்போது ஆரம்பத்திலிருந்து இறுதி வரை அவனது கண்களிலிருந்து நீர் வடிந்து கொண்டிருக்கும். உடல் புளகாங்கிதமடைந்திருக் கும். வாய் பாடிக்கொண்டேயிருக்கும். ''கூடலசங்கமனே, நீ எனது கண்ணில் நின்றாடவேண்டும், எனது மனதில் தாண்டவமாடவேண்டும்'' என்று நட்பின் காரணமாகவும், சலுகையின் காரணமாகவும் கேட்டான். மேலும் இவ்வுணர்வு களின் காரணமாக அவன் திக்குமுக்காடினான். இதற்கிடை யில் தான் முன்பு சிக்கிக்கொண்டிருந்த இடத்தைப் பற்றிய எண்ணம் வந்து அவனைத் துன்புறுத்தியது. ஆனாலும் கூடல் தன்னைக் கைவிடப்போவதில்லை என்று நம்பிக்கொண்டு நிம்மதியடைந்தான். தன்வசத்தையிழந்து பலவாறும் ஆடிப் பாடி மகிழ்ச்சியடைந்து வந்தான். இறைவனைப் பார்த்துப் பார்த்து பார்வையே அவனுக்கு மறந்துபோயிற்று; ஆடி ஆடி ஆட்டமே மறந்துபோயிற்று. ஆனந்த மிகுதியால் என்ன செய்வதென்றறியாது கீழேவிழுந்து உருண்டான். சிவானந்த ரசஆற்றில் நீந்தி சிவனின் சரணத்தையடைந்ததாக அவன் மகிழ்ந்தான். இவ்வாறு மணிக்கு மணி, நாளுக்கு நாள் அவனது பக்தியானது மேன்மேலும் வளர்ந்துகொண்டிருந் தது. பாகேவாடியில் பூசைசெய்யும் போது அனுசரிக்கப்பட வேண்டிய நெறிமுறைகளும் சடங்குகளுமே இன்றியமை யாதன என்று கூறிய அம்மக்கள் எங்கே! பூசாவிதிகளை மீறி தனது விருப்பப்படி மிக்க அன்புடன் பூசைகளைச் செய்த இந்த பக்தன் எங்கே!

இங்கு பசவன் எவ்வளவு காலம் இருந்தான் என்பதற் கான ஆதாரங்கள் இல்லை. அவனது பக்திக்கு மக்கள் தங்கள் மனதை அர்ப்பணித்தார்கள். அவனது பணியைக்

கண்ட மக்கள் வியந்தனர். ஊர் மக்களுக்கு சங்கமனின் பெருமைகளைக் கற்பித்தான். 'சங்க சரணம்' என்று கூறி யவர்களின் பாதங்களில் விழுந்து வணங்கினான். நடக்கும் பொழுதும், பேசும் போதும், உண்ணும் பொழுதும், உடுக்கும்பொழுதும் கொள்ளும் பொழுதும் கொடுக்கும் பொழுதும் எப்பொழுதும் அவன் மனதிலும் சொல்லிலும் சங்கனின் பெயரல்லாது வேறு எதுவும் வருவதில்லை. சங்கனைப் போற்றுவதற்காகவே பிறந்தவன் இவன் என்று மக்கள் எண்ணும் வண்ணம் இருந்தான். அவன் தன்னைத் தானே சங்கனுடன் இறுக்கமாகப் பிணைத்துக்கொண்டான். மலர்களைப் பறிக்கும்போது சங்கனைவிட்டுப் பிரிந்திருக்கும் சில நிமிடங்கள் அவனுக்கு அனேக வருடங்களாகத் தோன்றும். ஆனால் அன்புடன் சிவனின் அருளை இசைக்கும் பொழுதோ பல்லாண்டுகளும் சில நிமிடங்களாகத் தோன்றும். சங்கனுக்கு நீராட்டும் பொழுதும், பூக்களைச் சூட்டும்போதும் இறைவன் கொஞ்சம் மறைந்தாலும் அவனுக்குப் பதறிப் போய்விடும். இறைவனைப் பூசித்துப் பூசித்து கைகள் வலி யெடுத்தாலோ சிவனை அப்படியே கட்டிக்கொள்வான். அவன் உண்மையிலேயே சிவபூசை என்னும் கடலில் பிறந்த நிலவைப்போல விளங்கினான். இதையெல்லாம் கண்ணுற்ற மக்களோ ஒரு வேளை சங்கனேதான் இவன் வடிவத்தில் வந்து பிறந்திருப்பானோ? சங்கனே பசவனோ, பசவனே சங்கனோ? என்று எண்ண ஆரம்பித்தார்கள்.

இவ்வாறு இருந்து வரும் சமயத்தில் ஒரு புரட்டாசி மாதம் தேய்பிறைத் திதியில் ஒரு செவ்வாய்க்கிழமை கபில சஷ்டி என்னும் ஊர்த்திருவிழாவிற்காக கப்படி சங்கமத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தூர தூரங்களிலிருந்து மெய்யன்பர்களும், பக்தர்களும் கூடினர். சாம்பல் நிறப் பசுவின் கொம்பு மற்றும் குளம்புகளைத் தங்கத்தால் அலங்கரித்து அங்கு சிவபெருமானின் திருமுன்பு தானம் செய்தால்

அப்பசுவின் ஒவ்வொரு ரோமத்திற்கும் கோடி யாகங்களைச் செய்த பலன் கிடைக்கும் என்று மக்கள் நம்பி அவ்வாறு தானம் கொடுத்து வந்தனர். அங்கு வந்த மக்கள் பசவன் சிவனின் அருளை அன்பொழுகப்பாடுவதையும், தன்னைத் தானே மறந்து சிவனைத்தான் விரும்பியபடியெல்லாம் வணங்குவதையும் கண்டு வியப்படைந்தனர். அவன் அப் பொழுதே தன்பால் பக்தர்களைக் கவர்ந்து இழுக்கத் தொடங்கினான். அவர்களுடன் ஒருவனாக உட்கார்ந்து சிவனைப் பற்றிப் பேசியும், சிவத்தொண்டர்களின் கதை களைச் சொல்லியும் கேட்டும் ஆனந்த பக்திரசத்தில் முழுகிப் போனான். கோயில் திருவிழா நிறைவு பெற்று மக்கள் தத்தமது ஊருக்குத் திரும்பினர்; ஆனாலும் அவர்களது மனதில் பசவனைப் பற்றிய எண்ணம் குடிகொண்டிருந்தது.

இவ்வாறு கப்படி சங்கமம் பசவனின் வாழ்வில் முக்கிய பங்குபெற்றிருந்தது. பாகேவாடியில் அவனது தனித்தன்மை முழுமையாக வெளிப்பட வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால் இங்கே பசவன் தனது தனித் தன்மையை நன்கு வளர்த்துக் கொண்டு தானே தானானான். தன்னுடைய இயல்புகளைக் கண்டுகொண்டான். அவனது மனதின் குறைபாடுகள் வெகுவாகக் குறைந்தன. அவன் தனது ஆத்ம விசுவாசத்தை வளர்த்துக் கொண்டதும், தன்து வாழ்வின் குறிக்கோளைச் சிறப்பானதாக ஆக்கிக்கொண்டதும் இந்த புனிதமான இடத்தில்தான் அவனுக்குப் பாகேவாடியில் பிராமண சம்பிரதாயப்படி கல்வி புகட்டப்பட்டது; இங்கு சிவ சம்பிர தாயப்படி ஞானம் கிடைத்தது. பலவிதமான சிவாக மங்களைப் பற்றியும், சிவபுராணங்களைப் பற்றியும், சிவத் தொண்டர்களைப் பற்றியும் அவன் இங்கு தெரிந்து கொண்டான்.

பிராமணீயத்தை ஏற்றுக் கொள்ளாமல் அதை மறுத்துப் புறப்பட்டு வந்த பசவண்ணர் வீர சைவநெறியை ஏற்றுக்

கொண்டது எங்கே? அதற்குக் காரணம் என்ன? வீரசைவத்தின் பால் அவரைக் கவர்ந்தவர் யார்? இவையெல்லாம் மிகவும் முக்கியமான கேள்விகள். ஆனால் இவைகளுக்கு ஆதார பூர்வமான பதில்கள் கிடைத்தில. பசவன் பிறந்தவுடனே சிவன் ஒரு குருவின் வடிவத்தில் வந்து அவன் உடலின்மேல் லிங்கத்தைக் கட்டிவிட்டான் என்று பசவ புராணம் கூறுகிறது; ஆனால் சிங்கிராஜ புராணமானது கப்படி சங்கமத்திலிருந்து பெருந்தவமுனிவர் ஒருவர் வந்து இட்டலிங்கத்தை அளித்து தீட்சையளித்ததாகக் கூறுகிறது. இவ்விரண்டையும் ஏற்றுக்கொள்வது இயலாது; ஏனெனில் ஆச்சாரசீலனும் சுத்தபிராமணனும் ஆன மாதிராஜன் இப்படிப்பட்ட சடங்குகளுக்கு எவ்வாறு அனுமதியளித்திருப்பான்? ஹரிஹரன் தன் பசவராஜதேவரகளையில் இதைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது பாகேவாடியிலிருந்து கப்படி சங்கமத்திற்கு வந்த பசவனுக்கு அங்கிருந்த 'ஸ்தான பதியான' ஈசான்யகுருக்கள் தஞ்சமளித்தான் என்று கூறியுள்ளான். ஸ்தானபதியான ஈசான்யகுருக்கள் லகுலீல-பாசுபதம் என்னும் சைவ சமயப்பிரிவைச் சேர்ந்தவராக இருந்திருக்கவேண்டும். 'ஸ்தானபதி' என்னும் சொல்லைப் பார்த்தால் இவரே அங்கிருந்த கூடலசங்கம திருக்கோயிலின் தலைவராக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. ஒருமுறை இவரது பெயரைக் குறிப்பிடும் ஹரிஹரன் இரண்டாம் முறையாக இவரது பெயரை எங்குமே குறிப்பிடவில்லை. இவன் கூற்றின்படி, பசவன் சங்கமத்தில் இருந்த பொழுது சங்கமதேவனின் முன்பு இருந்த நத்திதேவனின் உருவச்சிலையே அவனுக்கு இட்டலிங்கத்தையளித்தது. இது ஒரு செய்தியைத் தெளிவாக்குகிறது. அதாவது, பசவன் வீரசைவனானது கப்படி சங்கமத்தில்தான். ஆனால் அவனுக்கு தீட்சையளித்தது யார் என்று நமக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

இங்கு வீரசைவ நெறியைப் பற்றிய சில செய்திகளைக் குறிப்பிடுவது சிறப்பானது. நாம் முன்பே பார்த்ததுபோல, பசவண்ணரின் காலத்திற்கு முன்பே கருநாடகத்தில் சைவ நெறியில் பற்பல பாகுபாடுகள் தோன்றிப் பல பிரிவுகள் உண்டாயின, அவற்றினைக் கடைப்பிடிப்பவர்களும் பலர் இருந்தனர். ஆனால் லகுலீச-பாசுபதம் மற்றும் காளாமுகச் சைவர்கள் (இவர்களுக்கிடையே அவ்வளவாக அதிகமான வேறுபாடுகள் இல்லை) முக்கியத்துவம் பெற்றிருந்த அளவுக்கு பிற பிரிவைச் சேர்ந்த சைவர்கள் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. அப்பிரிவுகளின் பெயர்கள் கல்வெட்டுக் களில் இடம்பெறவில்லை. வீரசைவப் பிரிவைக் கடைப் பிடித்தவர்கள் கூட பசவண்ணரின் காலத்திற்கு முன்பு குறைவான எண்ணிக்கையிலேயே இருந்திருக்கவேண்டும். பசவண்ணரே இந்நெறியின் சிறப்பியல்புகளால் ஈர்க்கப்பட்டு இதனை நன்கு வளர்த்திருக்கவேண்டும் என்று தெரிகிறது.

வீரசைவப் பிரிவிற்கும் பிறசைவப் பிரிவுகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றிய சரியான விவரங்கள் நமக்குக் கிடைத்தில. பிறபிரிவைச் சார்ந்தவர்கள் ஆலயங் களிலிருந்த லிங்கங்களை (ஸ்தாவரலிங்கம்) வழிபட்டுவந்த போது வீரசைவர்கள் இட்டலிங்க வழிபாடு செய்து வந்தார்கள். குருவிடமிருந்து பெற்றுக்கொண்ட லிங்கத்தை உடலின்மேல் கட்டிக்கொண்டதைத் தவிர்த்து வீரசைவன் வேறு எதையும் புதிதாகச் செய்து கொள்ளவில்லை. இந்த இட்டலிங்கத்தைவிட்டுப் பிரிதல் கூடவேகூடாது ஒருவேளை அது தவறிப்போய்விட்டால் அவன் தற்கொலை செய்து கொள்வான். சித்தராமன் என்ற கவியானவன் ஒருவன் தனது இட்டலிங்கத்தைத் தவறவிட்டதற்காகத் தன்னைக் கொலை செய்து கொண்டதாகவும், அதைக் கண்டு அவன் நடுங்கிவிட்டதாகவும் தனது வசனத்தில் குறிப்பிட்டுள்ளான். இப்படிப்பட்ட சம்பிரதாயத்தை முன்னதாக சன்னபசவன்

போன்றவர்கள் கண்டித்து ஒரு இட்டலிங்கம் தவறிப் போய் விட்டால் அதற்குக் கொலை செய்து கொள்ளவேண்டிய அவசியமில்லை; வேறொரு இட்டலிங்கத்தை அணிந்து கொள்ளலாம் என்று கூறியுள்ளனர். வீரசைவர்களுக்கு குரு, லிங்கம் மற்றும் ஜங்கமர்கள் மும்மணிகளைப் போல. இவர்கள் உடல், மனம், செல்வம் போன்றவற்றைக் கடந்தவர்களாக இருக்கவேண்டும். நமக்கு உபதேசமளிப் பவனே குரு. உபதேசம் செய்ததன் சான்றாக அவன் அளிக் கும் சிவ அடையாளப் பொருளே லிங்கமாகும். வீரசைவர்கள் தாங்கள் அணிந்திருக்கும் லிங்கத்தை வழிபடும் அன்பர்கள்; இவர்களது ஆசாரப்படி கோயில்களில் இருக்கும் லிங்கங்களை இவர்கள் வழிபடுவதில்லை.

வர்ணாசிரம முறைப்படியிலான சாதிவேறுபாடுகளை வீரசைவமானது ஏற்றுக்கொள்ளவில்லை. 'சதுர்வர்ண' த்தை மறுப்பவனே வீரசைவன் என்று சித்தராமன் மிகத் தெளி வாகக் குறிப்பிட்டுள்ளான். சிவதீட்சையைப் பெற்ற பின்னர் எல்லோரும் ஒன்றே. இங்கு அறிவிற்கும், தொழிலுக்கும் கொடுக்கப்படும்—அளிக்கப்படும் இடத்தைவிட பக்திக்கே அதிக இடம் அளிக்கப்பட்டு வந்தது. சமுதாயத்தில் காணக் கிடக்கும் சாதிவேறுபாடுகளையும், பொருளாதார வேறு பாடுகளையும், தொழில் முறையிலான வேறுபாடுகளையும் இவர்கள் மதிப்பதில்லை. பெண்ணை மாயை என்று கூறுவ தில்லை. பெண்களுக்கும் ஆண்களைப் போலவே மதிப் பளித்துவந்தனர். பசவண்ணர் வீரசைவத்தின் பால் ஈர்க்கப் பட்டதற்கு ஒருவேளை வீரசைவத்தின் இத்தகைய சிறந்த கருத்துக்களே கூடக் காரணமாக இருந்திருக்கலாம் என்று எண்ண இடமிருக்கிறது.

5. மங்களிவேடத்திற்கும் அங்கிருந்து கல்யாணிற்கும்

கப்படி சங்கமத்தில் பசவண்ணரின் பக்திச்சாதனை மட்டும் வளராமல் அவரது கல்வியறிவும், சிந்தனா சக்தியும் வளர்ந்தன. பாகேவாடி என்ன, கப்படி சங்கமமென்ன— சீர்திருத்தங்கள் தேவைப்படாத செயல்கள் நடைபெறும் இடம் எது? அங்கே எவ்வெவற்றையெல்லாம் கண்டு மனம் நொந்தாரோ அதைப் போலவே ஏன் அதைவிட அதிகமான செயல்களைக் கூட இங்கும் கண்டார். அப்பொழுது பாகேவாடியிலோ அவருக்கு சிறுவயது; ஆனால் இங்கோ அவர் வாலிபப் பருவத்தை அடைந்து நன்கு சிந்திக்கும் திறன் பெற்றிருந்தார். உலக அனுபவங்கள் அதிகமாக அதிக மாக இங்கு நடைபெறும் கொடுமைகள் அவரை வாட்டின. மக்களின் அறிவின்மை, திடமின்மை போன்றவற்றை எதிர்த்துப் போராடி அவர்களை நல்வழிப்படுத்தவேண்டும் என்று உறுதி பூண்டார். கப்படி சங்கமத்திலிருக்கும் வரை, தான் சிவனை வழிபட்டு அவனது திருவருள் இன்பத்தில் திளைக்கத்தான் முடியுமே தவிர மக்களுக்காக ஏதும் செய்ய இயலாது என்று உணர்ந்தார். ஒரு மனது ‘வெளியே சென்று உனது செயல் திறனை விரிவுபடுத்திச் சமுதாயத்தைச் சீர்திருத்து; அதில் எதிர்ப்படும் சிக்கல்களைப் போராடி வெற்றி கொள்’ என்று சொன்னால், இன்னொரு மனதோ ‘இங்கேயே இருந்து சங்கமனின் திருத்தொண்டில் ஈடுபடு

ஏன் வெளியே போகவேண்டும்? என்று கூறிற்று. இம்மனப் போராட்டம் சில காலம் நடைபெற்றாலும் இறுதியில் அவரது முதல் மனதே வெற்றி பெற்றது.

அவர் தனது இளம் வயதின் காரணமாக உழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். ஒருவன் தனது உணவைத் தானேதான் சம்பாதிக்கவேண்டுமே தவிர பிறரது உதவியை எதிர்பார்த்து வாழ்ந்திருக்கக் கூடாது என்பது அவரது எண்ணம், கப்படி சங்கமத்தில் இருக்கும் பொழுதுதான் இன்னும் பிறரது தயவை எதிர்நோக்கியே வாழவேண்டியிருக்கிறது என்ற எண்ணம் அவனது மனதை அவ்வப்போது வாட்டிவந்தது. அதனால் தனக்கு ஒரு தொழில்வேண்டும். அதிலிருந்து கிடைக்கும் வருவாயின் ஒரு பகுதியை குரு, லிங்கவழிபாட்டிற்கு ஒதுக்கவேண்டும்; தன்னைப்போன்ற எண்ணங்கொண்ட அன்பர்களையெல்லாம் ஒரு குழுவாகச் சேர்த்து அதன் மூலமாக உலகை மகிழ்ச்சி மயமானதாக மாற்றவேண்டும் என்ற எண்ணங்கள் உருவாயின. அப்பொழுது சாளுக்கியப் பேரரசில் சிற்றரசனாக இருந்த பிஜ்ஜளனின் பெயர் எல்லா இடங்களிலும் பரவி யிருந்தது. அவ்வாறே தறிகாடுநாட்டின் தலைநகரான மங்களிவேடம் எனும் ஊரும், கல்யாணி எனும் ஊரின் பெயரும் மிகவும் சிறப்படைந்திருந்தன. இப்படிப்பட்ட சமயத்தில் அவரது மனதானது மங்களிவேடத்தைப் பற்றிச் சிந்திக்க ஆரப்பித்ததில் வியப்பு ஏதுமில்லை. இவ்வாறு அவர் எண்ணிய மறுநாளே சிவன் அவரது கனவில் வந்து ‘‘நீ பிஜ்ஜளராயன் இருக்கும் மங்களிவேடத்திற்குச் செல்’’ என்று திருவாய் மொழிந்தார். இதனால் பசவண்ணர் மிகவும் நொந்துபோனார். நான் ஏனோ தெரியவில்லை. சிவனுக்கு வேண்டப்படாதவனாகிவிட்டேன்; அதனாலேயே இறைவன் இவ்வாறு என்னை அங்கு செல்லச் சொல்லிவிட்டான் என்று வருந்தினார். நான் கெட்டவன் என்று என்னை அனுப்பு

கிறான். வானத்திலிருந்து கீழே விழுபவனைக் காப்பாற்றாமல் கைவிட்டு விட்டானே; நடுக்கடலில் விழுந்து தத்தளிப்பவனுக்குத் தெப்பமாக இருந்து உதவாமல் விட்டுவிட்டானே சங்கமன் என்றெல்லாம் எண்ணினார். உனது குழந்தையை வைத்துக்கொள்ளாமல் துரத்திவிட்டாயே என்று சினப்பட்டார். ஆனால் மீண்டும் அதே சிவன் கனவில் வந்து ''பசவா, உன்னைவிட்டு நான் அகன்றிருக்கப் போவதில்லை. உன் பெருமையை உலகிற்குக் காட்டவிரும்புகிறேன். மங்களிவேடத்திற்குச் சென்று சிவத்தொண்டர்களுக்குப் பணி செய்வாயாக'' என்று மீண்டும் மீண்டும் கூறி அவரைத் தூண்டிவிட்டான். சிவனை விட்டுச் செல்வது சிரமமாயிருந்தது பசவண்ணருக்கு. ஆனாலும் ''எப்படியிருந்தாலும் என்னிடம் கல்வியறிவு இருக்கிறது. அதையே விலைப்பொருளாக ஆக்கிக் கொண்டு வாழலாம். அதனால் வரும் பொருளைத் திருத்தொண்டர்களுக்கு அளிக்கலாம்; அவர்களுக்குத் கொடுத்ததுபோக மீதமிருப்பனவற்றைக் கொண்டு உயிர் வாழ்ந்து அவர்களது பெருங்கருணை இன்ப வெள்ளத்தில் திளைக்கலாம்'' என்று கொண்டு மீண்டும் மீண்டும் சங்கனை வணங்கியும், தழுவியும், சற்று தூரம் சென்று மனம் தாங்காமல் மீண்டும் திரும்பி வந்து ''சங்கனே, உன்னையே நம்பிப் போய்வருகிறேன். உன்னைக் கணமும் பிரிந்திருக்கமாட்டேன். என்மேல் கருணை கொள், கருணை கொள்'' என்று மீண்டும் மீண்டும் அரற்றினார். சிவனிடமிருந்து மீண்டும் ஆறுதலையும் துணையையும் அளிக்கும் சொற்கள் வந்தன. அச்சொற்களே அவருக்கு வழித்துணையாயின. கப்படி சங்கமத்திலிருந்து மங்களிவேடத்திற்கு கணக்குப் பிள்ளையின் உருவில் வந்தார்.

பசவண்ணர் மங்களிவேடத்திற்கு வந்துசேர்ந்த சமயத்தில் பிஜ்ஜளன் சாளுக்கியப் பேரரசை வஞ்சகமாக

அபகரித்து பேரரசன் என்று தன்னை அறிவித்துக்கொண் டிருக்கவில்லை — மகாமண்டலேசுவராகவும் மிகப் பெரும் திறமையானவனாகவும் இருந்த அவனுக்கு சாளுக்கிய அரசின் சிற்றரசர்களாக இருந்த பல அரசர்கள் தமது கப்பங்களைச் செலுத்திவந்தனர். தலைக் கவசம், தொப்பி போன்றவற்றை அணிந்திருந்த பசவண்ணர் நேராக பிஜ்ஜளனின் அலுவற் கூடத்திற்கு வந்தார். அங்கு மகிழ்ச்சியுடன் கணக்குகளை எழுதிக் கொண்டிருந்த கணக்காளனைக் கண்டார். அவன் முன்பு சில வேலையாட்கள் உட்கார்ந்திருந்தனர். வரி வசூலிப்பவர்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருந் தனர். சிலர் கையூட்டாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டி ருந்தனர். அவர்களின் கணக்குகளைச் சரிபார்க்க வந்த அரச குமாரனை அவர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்று உபசரித்தார் கள். மொத்தத்தில் அந்த அலுவற்கூடத்தின் நடைமுறை களைக் கண்டு வியந்தார்.

அந்த அலுவற்கூடத்தின் தலைமை அலுவலன் சித்த தண்டாதிபன் என்னும் கருவூல அதிகாரியாவான். அவன் வந்து தனதிருக்கையில் அமர்ந்து கணக்குகளைக் கேட்ட பொழுது கணக்கர்கள் தவறாக எழுதிய கணக்குகளை அவனிடம் கொடுத்தனர். அவனும் அவர்களது கணக்குகளை ஏற்றுக் கொண்டான். ஆனால், அக்கணக்கில் தவறுள்ளது என்பதைத் தான் வந்திருந்த சிறிது நேரத்திலேயே புரிந்து கொண்டிருந்த பசவண்ணர் அத்தவற்றைத் தலைமையலு வலர்க்குச் சுட்டிக் காட்டினார். கணக்கில் சுமார் ஐம்பது லட்சம் பணங்களுக்கு மோசம் நடந்திருப்பது தெரியவந்தது. பசவண்ணரின் கூர்மையான ஞானத்தையும் தெளிந்த முகத் தையும் கண்டு ஈர்க்கப்பட்ட அவ்வலுவலன் அப்பொழுதே பசவண்ணரைத் தனது கருவூல அலுவலகத்தில் சேர்த்துக் கொள்ள விரும்பி, பிஜ்ஜளனிடம் அழைத்துச் சென்று 'இப்படிப்பட்ட அறிவுள்ளவனை நான் எங்கும் காண

வில்லை' என்று புகழ்ந்து கூறி நூற்றொரு பொன்னை அவருக்கு வழங்கி தன்னிடமே வேலையில் அமர்த்திக் கொண்டார். உறவினர் யாருமில்லாமல் தனித்து வந்த அவரைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று அவரது குடும்பம் மற்றும் குலம்பற்றி விசாரித்து, அவரும் தன்னுடைய குலத்தைச் சேர்ந்தவரே என்று தெரிந்து கொண்டான். மேலும், அவர் தனது தூரத்து உறவினன் என்பதை அறிந்து பெரு வியப்பு கொண்டான். இவ்வாறு பசவண்ணனைப்பற்றி தெரிந்துகொண்ட அவன், அவரைத் தனது வீட்டிலிருக்கும்படிக் கேட்டுக் கொண்டான். சிவனின் பெருங்கருணையினால் பசவண்ணருக்கு அலுவலும், ஆதரவும் மிகவும் எளிதான முறையில் கிடைத்தது.

தனக்குக் கிடைத்த அலுவலை பசவண்ணர் கண்ணுங் கருத்துடன் செய்துவந்தார். சிறிது காலத்திலேயே அவர் பிஜ்ஜளனின் கவனத்தைக் கவர்ந்தார். கணக்கு அலுவலர் என்ற பெயரில் உள்ள பதவிக்கு சாளுக்கியனின் ஆட்சிக் காலத்தில் மிகவும் சிறப்பான பொறுப்புக்கள் இருந்தன. அவ்வலுவல்பொறுப்பில் இருப்பவன் தலைசிறந்த அறிஞனாகவும் எல்லாப் பொருட்களைப்பற்றிய அறிவு பெற்றவனாகவும் இருப்பதோடல்லாது 'தூய்மை'யானவனாகவும் இருக்க வேண்டும் என்று சோமசுவரன் என்பவன் தனது 'மானசோல்லாச'த்தில் கூறியுள்ளான். பிஜ்ஜளன் அப்படிப்பட்ட தூய்மையை பசவண்ணரிடம் கண்டான். பசவண்ணரின் நடவடிக்கைகள், அறிவுத்திறன், நேர்மை போன்றவற்றைக் கண்ட கருவூல அதிகாரி சித்தரசனும் அரசன் பிஜ்ஜளனும் சிறிது சிறிதாக அவருக்குப் பதவியுயர்வு அளித்து வந்தனர். சிறிது காலத்திற்குள்ளாகவே பல அதிகாரங்களைத் தனது வசமாக்கிக்கொள்ளும் திறன் படைத்தவராக விளங்கினார். அவரைக் கண்டு காணிக்கைகளைக் கொடுக்க அரசர்கள் காத்திருந்தனர். அவரைச் சுற்றிலும் ரத்தினக் குவியல்களும்,

பட்டுத்துணிகளும், பற்பல நூதனமான பொருட்களும், பெருஞ்செல்வமும் இருந்தன. அவற்றிற்கு இடையில் அமர்ந்து கொண்டு "இப்பெருஞ்செல்வங்களை யெல்லாம் ஏழை எளியவர்க்கும், சிவத்தொண்டர்களுக்கும் உதவும் காலம் என்றைக்கு வருமோ?'' என்று சிந்திப்பார் இவ்வாறு இருந்த பொழுது சித்ததண்டாதிபன் காலமானான். பிஜ்ஜளன் அவனது பதவியான கருவூல அலுவலர் பதவியை பசவண்ணருக்குக் கொடுத்தான். சித்ததண்டாதிபனின் எல்லா சொத்துக்கும் இவர் உரிமையாளர் ஆனார். கையில் எந்த காசுமில்லாமல் என்ன செய்வதென்று தோன்றாமல் வந்து சேர்ந்த பசவண்ணர் முதலில் சாதாரண கணக்கராகி இறுதியில் கருவூல அலுவலர் (பண்டாரி) பணியை ஏற்றார். பெரிய அதிகாரிகள் சூட்டிக்கொண்ட 'தண்டநாதன்' என்னும் பட்டப் பெயரைப் பெற்று பசவண்ண தண்டநாதன் என்று சிறப்பிக்கப்பட்டார். இவரது புகழ் எங்கும் பரவிற்று. பிஜ்ஜளனின் அரசவையில் இவருக்குச் சிறப்பான இடம் அளிக்கப்பட்டது.

இப்படியிருந்த சில நாட்களுக்குப் பின்னர் அவரது திருமணம் நடந்தேறியது. பசவண்ணர் என்றும் துறவைப் பற்றி எண்ணியது கூடக் கிடையாது. அவர் நூற்றுக்கு நூறு யதார்த்தவாதி. உடலிச்சைகளைக் கட்டுப்படுத்தச் சென்ற எத்தனையோ துறவிகள் இறுதியில் என்னவானார்கள் என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. தேவரதாசிம்மைய் யனும், துக்களையும் இல்வாழ்க்கை நடத்தியவர்கள்: சிரியாள சங்களேயரும் அப்படியே இவர்கள் யாவரும் இல்வாழ்வைத் துறந்தாரில்லை. ஆனாலும் இவர்கள் எல்லோரும் சிவனின் அருளைப் பெற்றவர்கள். உடலிச்சைகளை அடக்குவதன் மூலம் தோஷங்கள் வந்து சேருகின்றன என்று உணர்ந்திருந் தார். மேலும், கணவன் மனைவி இருவரும் சேர்ந்து சிவன் மேல் கொள்ளும் பக்தியானது அவனுக்கு மிகவும் பிடித்த

மானது என்றும் அவர் தெரிந்திருந்தார். அதனால் அவர் திருமணம் புரிந்து கொண்டார். அவருக்கு கங்காதேவி மற்றும் நீலலோசனை என்னும் இரு மனைவிகள் இருந்தனர் (நீலலோசனையானவள் மாயிதேவி என்றும் குறிப்பிடப் பட்டுள்ளாள்). இவர்களில் கங்காதேவி என்பவள் பிஜ்ஜ ளனின் அரசில் அலுவலராக இருந்த பலதேவன் என்பவனின் மகளாவாள். நீலலோசனையின் பெயரை பசவண்ணர் தனது வசனங்களில் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இவள் சித்தரசனின் மகளாக இருக்கக்கூடும். பலதேவன் சித்தரசனின் உடன் பிறந்தவனாகவும் இருக்கலாம் என்று தோன்றுகிறது.

பசவண்ணரின் இல்வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாக இருந் திருக்கிறது. அவரை நன்றாகப் புரிந்து கொண்டு, அவருடன் பின்னிப் பிணைந்த அவரது இரு மனைவியர்களும் அவரது சமுதாய மற்றும் அறநெறியின்பாற்பட்ட தொண்டுகளில் மிக்கத்துணை புரிந்தனர். அவரது வீட்டிற்கு வந்து சென்ற திருத்தொண்டர்களின் எண்ணிக்கைக்கு அளவில்லை. அத் தொண்டர்களை வரவேற்று அவர்களது மதிப்பிற்கு இழுக்கு வராமல் உபசரித்து வரும் பொறுப்பையும் இவர்கள் ஏற்றுக் கொண்டனர். கல்விகேள்வியில் சிறந்தவர்களாகவும் சிறந்த பண்பாட்டைக் கொண்டவர்களாகவும் விளங்கிய இவ்விரு பெண்மணிகளும் வசன இலக்கியங்கள் எழுதியுள்ளனர். கங்காதேவியின் வசனங்களில் ‘கங்காப்ரிய கூடல சங்கம தேவா’ என்ற சொற்றொடரும்; நீலலோசனையின் வசனங் களில் ‘சங்கைய்யா’ என்ற சொல்லும் இடம் பெற்றிருக்கும். மேலும், நீலலோசனையின் ஒவ்வொரு வசனத்திலும் பசவண்ணரைப் பற்றிய குறிப்பு இருக்கும்.

பின்னர் இவர்களுள் கங்காம்பிகைக்கு ஒரு மகன் பிறந் தான். அவனுக்கு ‘சிக்கசங்கையன்’, ‘சித்தரசன்’ என்ற பெயர் களைச் சூட்டினர். இவன் இளமைக் காலத்திலேயே இறந்து விட்டதாகத் தெரிகிறது.

பொருளும் அதிகாரமும் தான் தேடிச்செல்லாமல் அவை யாகவே நாடிவந்தபொழுதும் அவற்றின் மீது விருப்புக் கொள்ளவில்லை பசவண்ணர். அவர் செல்வந்தர்களைப் பற்றிக் கவலைப் படாமல் ஏழைகளின் முன்னேற்றத்திற்காக உழைத்து வந்தார். அவரிடமிருந்த செல்வமும், அதிகாரமும் அவர் அறநெறியைப் பரப்புவதற்கு உதவின. அவரது வீட்டின் கதவுகள் அருட்செல்வர்களுக்காகவும், திருத் தொண்டர்களுக்காகவும் எப்பொழுதும் திறந்திருந்தது. அவரது பக்தியையும், அன்பையும், மேலான பண்பையும் கேள்விப்பட்டு நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் மற்றும் தூரதூரங்களிலிருந்தும் கூட்டங்கூட்டமாக திருவருட் செல்வர்கள் வந்தனர். ஒரு நாள் அவர் பிஜ்ஜளனின் அரண் மனையில் தனது கடமைகளை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்து சிவிகையிலிருந்து இறங்கிப் பார்த்தபோது அவருக்கு முன்பாக பதினெட்டு காவதங்களிலிருந்து பல அறத் தொண்டர்கள் காத்து நின்று கொண்டிருந்தார்கள். 'நான் வாழ்ந்தேன், நான் வாழ்ந்தேன்' என்று கூறிக்கொண்டே அவர்களை வணங்கி வீட்டின் உள்ளே அழைத்துச் சென்று அன்புடன் உபசாரம் செய்து அவர்களுடன் லிங்கத்தைப் போற்றி அவர்கள் கொடுத்த படையல் பொருட்களைப் பெற்றுக்கொண்டார். இரவெல்லாம் அவர்களுடனே இருந்து நாயன்மார்களின் பாடல்களை அவர்களுடன் சேர்ந்து பாடி இன்ப வெள்ளத்தில் நீந்தினார். சிவபக்தர்களுடன் கலந்து இருந்த மகிழ்ச்சியில் என்ன செய்வது எதைச் சொல்வது என்று தெரியாமல் தடுமாறினார்.

பசவண்ணர் சிவனின் அன்பர்களுக்குச்செய்த இத்தகைய மரியாதைகளைப் பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவியது. சிவபக்தி என்னும் கடல் எல்லை மீறி வந்ததைப் போல பற்பல நாடுகளிலுமிருந்து நாலாபக்கங்களிலுமிருந்தும் மிருதங்கம், சங்கு, பேரிகை போன்ற பல்வகையான இசைக்

கருவிகளுடன் நந்திக் கொடியைத் தாங்கிக்கொண்டு பாடிக் கொண்டும் ஆடிக்கொண்டும் பற்பல சிவஅன்பர்களடங்கிய குழுக்கள் பசவண்ணரைத் தேடி வந்தன. இவர்களையெல் லாம் கண்டு பசவண்ணரின் மனம் இன்பத்தால் பூரித்துப் போயிற்று. 'சரணசதி, லிங்கபதி' என்று பசவண்ணர் நம்பி யிருந்ததனால் சிவபக்தரை அவர் சிவன் என்றும், தனது தலைவன் என்றும் கருதினார். அங்கே வந்தவர்களோ ஒரே வகையானவர்கள் அல்லர். வெவ்வேறு வகையான இயல்பு களை உடையவர்களும், பல்வேறு பண்பாட்டைச் சேர்ந்தவர் களும், பல்வேறு அளவில் இறையருளில் ஈடுபாடு உடையவர் களும் அங்கு வந்தனர். பூசை செய்வதற்கு உட்கார்ந்தால் சிலருக்கு பூக்கள் தேவைப்படும்; இன்னும் சிலருக்கு அவை தேவைப்பட்டிருக்காது தும்பிகள் போன்ற வண்டினங்கள் தொடாத பூக்களையே அவர்கள் பயன்படுத்தினர். சிலருக்கு பூக்கள் அவசியமாகவில்லை. சந்தனமே போதும். சிலர் நறு மணத்தையே லிங்கத்திற்குப் படைத்தனர். சிலர் தமது சிவ லிங்கத்தை வைத்து அதற்கு நீர் ஊற்றிக்கொண்டேயிருந் தார்கள். சிலர் இறைவனை வணங்கிக் கொண்டே ஆடினர். பாடவேண்டும் என்று எண்ணிப் பாட வாயைத் திறந்தவர் அதைமறந்து இறைவனையே பார்த்துக் கொண்டிருந்தனர். இறைவனைப் பார்த்துக் கண் பெற்ற பயனையடைய வேண்டும் என்று எண்ணியவர் அதை மறந்து பாடத்தொடங் கினார். சாப்பாட்டிலும் இப்படியே அவரவர்களது விருப் பங்கள் வேறுவேறானவையாக இருந்தன. இத்தகைய எல்லோரையும் பசவண்ணர் சிறிதும் சலிப்பில்லாமல் சிறப் பாக உபசரித்தார். அவருக்குச் சலிப்பு எங்கிருந்து வரும்? அவரே கூறியுள்ளதைக் காண்போம்

பாம்பின் வளைவு புற்றுக்கு ஏற்புடையதே;
நதியின் வளைவு கடலுக்கு ஏற்புடையதே;
நம்கூடல சங்கம அடியாரின் வளைவு லிங்கத்திற்கு
ஏற்புடையதே;

அடியார்களின் வெவ்வேறு வகையான நடவடிக்கைகள் சிவனுக்கு மிகவும் ஏற்புடைத்தாயிருக்கும் போது பசவண்ணருக்கும் அவ்வாறு தானே இருக்கும். அடியவர்களும் பசவண்ணரை மனதாரப் புகழ்ந்து பாடியுள்ளனர்.

பசவனின் சொல்லேசொல் பசவண்ணனின்
பக்திக் கூட்டமே கூட்டம் கேள்
பசவனின் ரீதி ரீதி பசவண்ணனின்
அடியவர் தொண்டுதொண்டு மேலும்
பசவனின் துணி துணி பசவண்ணனின்
உயர்ந்த மொழி மொழி ஹோ
பசவனின் பொறுப்புபொறுப்பு பசவண்ணனின்
நியமமேநியமம் உலகில்.

பசவனின் பாடல் பாடல் பசவண்ணனின்
சிறந்த உருவம் உருவம் கேள்
பசவனின் அழகு அழகு பசவண்ணனின்
உயர்ந்த புகழ் புகழ் மேலும்
பசவனின் புத்தி புத்தி பசவண்ணனின்
புண்ணிய கதை கதை ஹோ
பசவனின் காவல் காவல் பசவண்ணனின்
போதனையே போதனை உலகில்.

பசவனின் பெருமை பெருமை பசவண்ணனின்
உண்மை அன்பு அன்பு கேள்
பசவனின் நாடு நாடு பசவண்ணனின்
ஆழ்ந்த அமைதி அமைதி மேலும்
பசவனின் அறிவு அறிவு பசவதேவனின்
அன்பான காணிக்கை காணிக்கை ஹோ
பசவனின் பக்தி பக்தி பசவண்ணனின்
யுக்தியே யுக்தி உலகில்.

இப்புகழ்ச்சிகளைக் கேட்டு பசவண்ணர் தனது பக்திப் பரவசத்திலிருந்து பூமிக்கு இறங்கினார்: நடுங்கிப் போனார். நான் உங்களது அடியவர்க்கு அடியவர்க்கு அடியவன்; என்னைப் புகழவேண்டாம் என்று கை கூப்பி வேண்டிக் கொண்டார். இத்தகைய புகழ்ச்சிகள் வேண்டாம் என்று கருணைக்கடவுளான கூடல சங்கமனை நோக்கி வேண்டிக் கொண்டார்.

என்னைப் புகழ்ந்து புகழ்ந்து என்னவர்கள் என்னைப்
பொன் சூலத்தில் போட்டார்கள்
என்னைப் புகழ்வதே உங்கள் இயல்பாகிவிட்டது
ஐயோ, உங்கள் முகஸ்துதி கூரியவாள்போல்தாக்குகிறதே
ஐயோ வருந்துகிறேன், சகிக்க மாட்டேன்
கூடல சங்கமதேவா, நீ என் பக்கமாக இருப்பாயெனில்
அவர்களின் புகழ்ச்சிக்குத் தடையாக நீ வா

என்னில் பக்தி கடுகின் அரைக்கால் பாகமும் இல்லை
என்னைப் பக்தன் என்பர், சமயாச்சாரி என்பர்!
நான் என்ன பாவம் செய்தேன்
விளையுமுன் கொய்வார்களா? சொல், ஐயா!

எல்லோரும் என்னைப் புகழுகிறார்களே!
எனக்கு இது விதியா கூடலசங்கமதேவா

பிறர் அவரைப் புகழ்ந்தால் அவர் மிகவும் மனம் வருந்தி, எங்கே அத்தகைய புகழ்ச்சிகள் தனது முன்னேற்றத்திற்குத் தடையுண்டாக்குமோ என்று எண்ணிப் பயந்தார்.

இப்படிப்பட்ட சிறந்த குழுக்களால் முன்பு கூறப்பட்ட வசனங்களும் பாடல்களும் பாடப்பட்டன. அவர்களிடம் சிவ பக்தர்களின் கதைகளைக் கேட்டும் சொல்லியும் மகிழ்ந்து வந்தார். இறைவனைப் பற்றிய செய்திகளின் சர்ச்சையும் அங்கு நடைபெற்றது.

பசவண்ணரின் வீட்டில் தினமும் சிவராத்திரிதான். ஒரு முறை சிவத்தொண்டர்கள் அடங்கிய குழு வந்திருந்தபோது அவர் பெற்ற இன்பம் சிறப்பானதாக இருந்தது. இவ்வாறே தினமும் செய்தால் என்ன என்று எண்ணி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து சிவ இன்பத்தில் திளைத்து வந்தார். மேலும் அவர் சில உறுதிகளையும் எடுத்துக் கொள்வார். தினமும் சிவராத்திரி செய்வேன் என்னும் உறுதி; அடியவர்களைச் சிவனாகவே காணும் உறுதி; அடியவர்களின் குறைபாடுகளை விமர்சிக்காத உறுதி; சிவனை (தனது நலத்திற்காக) வேண்டிக்கொள்ளாத உறுதி; அடியவர் கேட்டதைக் கொடுக்கும் உறுதி; சொல்லியதைச் செய்யும் உறுதி. சொல்லிப்பின் மாறாத உறுதி; அன்பர்களை வெல்லும்; உறுதி; சிவனைத்தோற்கடிக்கும் உறுதி; பிற மதத்தவரைத் தோற்கடிக்கும் உறுதி; மக்களிடம் யாசிக்காத உறுதி; உடலிச்சையின்பால் மனதைச் செலுத்தாத உறுதி; தலையே போனாலும் 'சிவ' என்னும் உறுதி—இவைகள் அவர் எடுத்துக் கொண்ட உறுதிகளில் சில. தனது வீட்டிற்கு இறைவன் சங்கமதேவன் நிஜவடிவத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் வரக்கூடும்; தலைவன் வரக்கூடிய சமயத்தில் அடியவன் கட்டிலின் மேலிருப்பது சரியல்ல என்று எண்ணி எனறென்றும் கட்டிலின்மேல் படுப்பதில்லை என்னும் உறுதி பூண்டிருந்தார்.

பக்தர்களின் தேகத்திற்குத் தேவனான தேவன் நல்
    பக்தர்களின் பக்கமாக வரும்போது
அரசன் வரும்போது அடிமை கட்டிலின் மேல் இருப்பது
    சரியா? சொல்
கூடலசங்க தேவா
ஜங்கம ரூபத்தில் சங்கன் வருகிறான் என்று
நான் எப்போதும் கட்டில் ஏறுவதில்லை—உறுதி

இன்னொருநாள் எல்லோருடனும் சேர்ந்து உணவருந்த உட்கார்ந்த போது அவரது மனைவி பிறரைவிட அவருக்குச் சற்றே அதிகமான உணவு வகைகளைப் படைத்தபோது அவற்றை ஏற்றுக் கொள்ளாமல் எடுத்துக் கொள்ளும்படிச் செய்திருக்கிறார் (இதனை அவரே தனது வசனம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்).

பசவண்ணர் எடுத்துக் கொண்ட உறுதிகளில் பிற மதத்தைச் சேர்ந்தவர்களை வெல்லுவேன் என்பதும் ஒன்று என்பதை மேலே கூறியிருந்தோம். அக்காலத்தில் பிறமதங்களைத் தூற்றியும், அவற்றில் இருக்கும் குற்றங் குறைகளையும். அம்மதத்தைச் சேர்ந்தவர்கள் செய்துள்ள நெறியற்ற செயல்களைக் கண்டித்தும் வருவது ஒரு குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவன் தனது மதத்தின் வளர்ச்சிக்காகச் செய்யவேண்டிய தலையாய கடமையாக இருந்தது. பசவண்ணர் தமது அறநெறியை எல்லா இடத்திற்கும் பரப்பும் செயலை மங்களிவேடத்திலிருந்தபொழுதே ஆரம்பித்திருக்கக் கூடும். தனது வீட்டின் வாயில்களைத் திறந்து வைத்திருந்ததைப் போலவே தமது சமயநெறியின் வாயில்களையும் எல்லோருக்காவும் திறந்து வைத்திருந்தார். எந்த குலத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும், எத்தொழிலைச் செய்பவனாக இருந்தாலும், அவனை வீரசைவநெறியில் ஏற்றுக்கொண்டார். அவன் வீரசைவனான பிறகு அவனது பாவங்கள் யாவும் அழிந்து பிற வீரசைவர்களுக்குச் சமமானவனாகிறான். பசவண்ணர் கடைப்பிடித்திருந்த அறநெறி மிகவும் இயல்பானதாக இருந்தமையாலும் பக்தி, தூய வாழ்வு, ஏற்றத்தாழ்வற்ற வாழ்வு போன்றனவற்றை எடுத்துக் கூறியதாலும் பல எண்ணிக்கையிலான மக்கள் இவரது சமய நெறியைத் தழுவலாயினர். இவரது அறநெறி வளர்ச்சிப் பணி, அதனால் உருவான பிரச்சனைகள், சமுதாய மாற்றங்கள்பற்றியவிளக்கங்களை இனிக்காணலாம்,

கப்படி சங்கமத்தில் சொந்த நலனுக்கான சாதனைகளைச் செய்துகொண்டிருந்த பசவண்ணர் இங்கு சமுதாய நலனுக்கான தொண்டு செய்தார். இங்கு அவரது சுயச்சார்பான சாதனைகளும் சமுதாயச்சார்பான சாதனைகளும் கைகோர்த்துக் கொண்டு சென்றன என்று சொல்லலாம்.

இங்கு அவர் எத்தனை வருடங்கள் இருந்தாரென்பது தெரியவில்லை. இங்கு இருந்த சமயத்திலேயே மிகவும் சிறந்த சிவனடியார்கள் பலர் இவரைச் சந்தித்திருக்க வேண்டும். சித்தராமன் தனது “மிச்ரஸ்தோத்திர திரிவிதி” என்னும் நூலில் பசவண்ணரை இவ்வாறு சிறப்பித்துக் கூறியுள்ளான்.

மங்களவாடத்திலிருந்த வீரசைவர்களுக்கு
பயப்படாமல் கையில் உள்ள லிங்கத்தைக் காட்டி
அங்கத்தை லிங்கமாக்கும்
சட்ஸ்தலங்களைப்போதித்து சிறப்பித்த
மங்கள பிரபுராய யோகிநாதன்.

அல்லமபிரபு கல்யாணிற்கு வந்த செய்தி எல்லோருக்கும் தெரிந்ததே. ஆனால் மங்களிவேடத்திற்கும் வந்திருந்தான் என்றசெய்தி இங்குமட்டும் காணக்கிடைக்கிறது. பசவண்ணர் பிஜ்ஜளனிடத்தில் அதிகாரியாகப் பதவியேற்ற புதிதில் அல்லமபிரபு பசவண்ணரைக் காணவந்ததாகப் பசவண்ணர் புராணம் கூறுகிறது. ஒருவேளை இவர் மங்களிவேடத்திற்கும் வந்திருக்கக் கூடும். கல்யாண், மங்களிவேட (மங்களவாட) என்னும் பெயர்களை வீரசைவ இலக்கிய ஆசிரியர்கள் (மங்களம் = கல்யாணம்) மிகவும் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். ஹரிஹரனைத் தவிர்த்து இதர எல்லா ஆசிரியர்களும் மங்களவேட என்னும் பெயரைச் சொல்லுவதே இல்லை. சிலர் மங்களவாடமே கல்யாண், கல்யாணே மங்களவாட என்று விளக்கிக் கூறியுள்ளார்கள். இது எவ்வாறு இருந்தாலும், பசவண்ணர் மேற் கொண்ட புரட்சிகளுக்கான

வித்து மங்களிவேடத்தில் நடப்பட்டது. அவ்வித்து பலனளித்தது கல்யாணில் என்று நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன.

மங்களிவேடத்தில் பசவண்ணர் கருவூல அதிகாரியாக இருந்தபோது பல அரசியல் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. சாளுக்கியப்பேரரசில் சிறிதுசிறிதாகத் தனது உரிமையைச் செலுத்திவந்த பிஜ்ஜளன் சுமார் 1162ல் தைலப மாதாண்ட சாளுக்கிய ராஜகுமாரனைக் கொன்று அரசைக் கைக்கொண்டான். சாளுக்கியப் பேரரசின் சிம்மாசனத்தில் அமர்ந்து அரசு நடத்திவந்த அவன் தனது தலைநகரை மங்களிவேடத்திலிருந்து கல்யாணிற்கு மாற்றிக் கொண்டான். இவ்வாறு தலைநகர் மாறியிருக்கும் பொழுது, கருவூல அதிகாரியாக இருந்த பசவண்ணரும் சுமார் 1162 ம் ஆண்டு வாக்கில் கல்யாணிற்குச் சென்றிருக்க வேண்டுமல்லவா? ஆனால் இந்த ஊகத்தை ஏற்றுக் கொள்வதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. பிஜ்ஜளன் கொல்லப்படுவதும், பசவண்ணர் காலமாவதும் சுமார் 1167-8 ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்றிருக்க வேண்டும் என்பதற்கான பல ஆதாரங்கள் உள்ளன. இதன்படிப் பார்த்தால் பசவண்ணர் கல்யாணில் இருந்தது ஐந்து அல்லது ஆறுவருடங்களுக்கு மட்டுமே என்று கூறவேண்டியிருக்கிறது. ஆனால் அங்கு பசவண்ணர் ஆற்றிய பரந்த செயற்பாடுகளையும் மற்றும் வேறு வசன இலக்கிய ஆசிரியர்கள் கல்யாணின் பெயரைப் பல இடங்களில் கூறியும் சில விடங்களில் அவ்வூரைப் பற்றிய வருணனைகளை (உத்ப்ரேக்சிதம் என்னும் ஒரு காவிய அலங்காரத்தின் வாயிலாக) விளக்கிக் கூறியுள்ளதையும் கூர்ந்து நோக்கினால் பசவண்ணர் இன்னும் அதிககாலம் கல்யாணில் தங்கியிருந்திருக்க வேண்டும் என்று கருத இடமிருக்கிறது. பிஜ்ஜளன் கி.பி. 1156-7ம் ஆண்டு வாக்கில் அல்லது அதற்கு இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தைலபனின் அரசில்தான் சிறப்

படையவேண்டும் என்று முயற்சிகள செய்துவந்ததிலிருந்தும், தைலபனின் ஆட்சியில் அவன் ஒரு கொடுங்கோன்மையாள னாகவே இருந்ததனாலும், சுமார் 1155 ஆண்டு வாக்கிலேயே தனது பல அதிகாரிகளையும் மங்களிவேடத்திலிருந்து கல் யாணிற்கு அழைத்திருந்திருக்க வேண்டுமல்லவா? அவ்வாறு அழைத்து அவர்களைத் தனது தலைமையின் கீழ் நன்கு அமர்த்தி தன் இடத்தைப் பலப்படுத்துவது தனது கனவினை நனவாக்கும் முயற்சியின் முதற்படியாக அவன் எண்ணியிருந் திருக்கலாமல்லவா? அவ்வாறு அழைத்துவந்த அதிகாரிகளில் பசவண்ணரும் ஒருவராக இருந்திருக்க வேண்டும். இவை யெல்லாம் வெறும் ஊகங்களே. இந்த ஊகம் சரியானதாக இருந்தால் பசவண்ணர் சுமார் பன்னிரண்டு பதின்மூன்று வருடங்களாவது கல்யாணில் தங்கியிருந்திருக்க வேண்டும் என்று எண்ண இடமுண்டல்லவா?

கி.பி. 1162 ம் ஆண்டு வாக்கில் தைலபனைக் கொன்று பிஜ்ஜளன் பட்டத்திற்கு வந்தான். இச்சூழ்நிலையில் பசவண்ணரின் நிலை என்னவாக இருந்தது என்பது நமக்குத் தெரியவில்லை. ஆரம்பத்தில் அவருக்குப் பிஜ்ஜளனின் பெயரில் பணிவும் அரசபக்தியும் இருந்திருக்க வேண்டும். தைலபனைப் பற்றிய அவரது அபிப்பிராயங்கள் சிறந்தன வாகவோ, கெட்டனவாகவோ இல்லாமல் நடுநிலையான தாக இருந்தது ஒருவனைப் பட்டத்திலிருந்து தள்ளிவிட்டா வது அல்லது கொன்றுவிட்டாவது இன்னொருவன் பட்டத் திற்கு வருவது என்பது அக்காலத்தில் சகஜமான ஒரு நிகழ்ச்சி யாகவே இருந்து வந்தது. அதனால் பசவண்ணர் இந் நிகழ்ச்சி குறித்து எந்தவிதமான எண்ணமும் ஏற்படுத்திக் கொண்டிருந்திருக்காமல் அதை ஒரு சாதாரண அரசியல் நிகழ்ச்சியாக எடுத்துக் கொண்டிருந்திருக்க வேண்டும் என்று எண்ண இடம் உண்டல்லவா?

ஆனால் இந்நிகழ்ச்சியால் அவரது செயல்துறையில் ஏற்பட்ட மாற்றங்களைக் கூர்ந்து நோக்கினால் அந்நாட்டின் அரசு அதிகாரிகளின் அதிகார வரம்பு அதிகமாயிற்று என்பதைக் காணலாம். மிக்க திறமைபடைத்த சிற்றரசனாக விளங்கிய பிஜ்ஜளனிடம் கருவூல அதிகாரியாக விளங்கிய பசவண்ணர் தற்போது பேரரசன் பிஜ்ஜளனின் கருவூல அதிகாரியாக ஆனார். இதனால் அவரது பெருமையும் அதிகார வரம்பும் உயர்ந்தன. மேலும், மங்களிவேடம் போன்ற சிறு ஊரை விட்டு அரசியல் காரணமாகவும் பண்பாட்டுக் காரணமாகவும் மிகவும் பெரிய ஊராக அப்பொழுது விளங்கிய கல்யாணிற்கு வந்து தங்கியதனால் இயல்பாகவே அவரது சமுதாய முன்னேற்றத்திற்கான திட்டங்கள் மேலும் சிறப்பாகத் தீட்டப்பட்டுச் செயற்படுத்தப் படலாயின.

5. கல்யாணில் கருவூல அதிகாரி பசவண்ணரும் பிஜ்ஜளனும் □ □

ஆறாம் விக்கிரமாதித்தனின் காலத்தில் வாழ்ந்த விஞ்ஞானேஸ்வரன் என்பவன் ‘யக்ஞுலக்சிய ஸ்மிருதி’ யின் ‘மிதாக்ஷர’ம் என்னும் பெயருள்ள தனது விரிவான நூலில் கல்யாணைப் போன்றதொரு புகழ்மிக்க பெருநகரம் உலகில் இதற்கு முன்னரும் இருந்ததில்லை, தற்போதும் இல்லை, இனியும் இருக்கபோவதில்லை என்று சிறப்பித்துள்ளான். கல்யாணில் கிடைத்துள்ள கல்வெட்டுக்களிலிருந்து அந் நகரின் பரப்பளவு, அங்கு நடைபெற்ற வாணிகம் மற்றும் அறநெறி வளர்ச்சிப் பணிகள் போன்றவற்றைப் பற்றிய விவரங்கள் சிறிதளவு கொடுக்கப்பட்டுள்ளன. அத்தலை நகரில் நரசிம்மன், நாராயணன், கேசவன், பீமேஸ்வரன், பிரம்மதேவன், சுயம்பூஹாடகேஸ்வரன், குர்ஜரமலயவதி தேவி, திரிபுராந்தகன் போன்ற பெயர்களைக் கொண்ட பல்வேறு திருக்கோயில்கள் இருக்கின்றன. பீமேஸ்வரன் திருக்கோயிலில் காளாமுக மதப்பிரிவைக் கடைப்பிடித்து வந்த அர்ச்சகர்கள் இருந்தனர். அந்நகரத்தில் சைவ சமயத்தோரும் வைணவ சமயத்தோருமட்டுல்லாமல் புத்த சமயத்தோரும் இருந்தார்கள் என்று எண்ணப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. சமண சமயத்தவர்கள் கூட போதுமான அளவு எண்ணிக்கையில் இருந்திருக்க வேண்டும். பிராமணர்களுக்கும், சிவத் தொண்டர்களுக்கும் மிகவும்

சிறப்பான மதிப்பு அளிக்கப்பட்டு வந்தது. அது ஒரு பெரும் கல்வி மையமாகவும், அறநெறியை வளர்க்கும் மையமாகவும் விளங்கி வந்தது என்பதில் ஐயமில்லை. மேலும், அது ஒரு பெரிய வணிகமையமாகவும் பரிணமித்தது. அந்நகரின் பெரும் வணிகர்கள் மிகப்பெரும் அளவில் தூரதூரத்தில் இருக்கும் ஊர்களுடனும், வெளிநாடுகளுடனும் தங்களது வாணிபத்தைச் செய்து வந்திருக்கின்றனர். பாக்கு, மிளகு, மஞ்சள், வெல்லம் போன்றவற்றுடன் கற்பூரம், சந்தனம், கஸ்தூரி, போன்ற வாசனாதி திரவியங்களின் வாணிபம் நடைபெற்றது. அந்நகரில் வெவ்வேறு தொழில்களைச் செய் பவர்கள் நகரின் வெவ்வேறு பகுதிகளில் ஒன்றாக வாழ்ந்து வந்தனர். தையற்காரர்கள் வசித்துவந்த தையற்காரர்களின் வீதி என்னும் குறிப்பு ஒருகல்வெட்டில் காணப்படுகிறது. ராய நாராயணபுரம் (இதேபசவபுராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதாப நாராயணபுரமாக இருந்திருக்க வேண்டும்) என்பது பெருநகரின் ஒரு பகுதியின் பெயர். அங்கு குறிப்பாக பிராமணர்கள் அதிக எண்ணில் வாழ்ந்து வந்தனர். நாணயம் செய்யப்படும் பட்டறைகள் இருந்த வீதியைப் பற்றிய குறிப்பு ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது, சேனாதிபதி, அந்தப்புரக் காவற் தலைவன், நாணயச் சாலை அதிகாரி, கிராம அதிகாரி, நகர்க் காவலதிகாரி போன்ற பல அதிகாரிகளின் பெயர்கள் கல்வெட்டுக்களில் இருக்கின்றன. மொத்தத்தில் மக்கள் ஏராளமாகவும் அவர்களது நடவடிக்கைகள் மிகுந்தும் காணப்பட்ட தலைநகராக விளங்கியது கல்யாண். வெளியி லிருந்து இந்நகருக்கு வரும் போகும் மக்களின் எண்ணிக்கை யும் இயல்பாகவே அதிகமாக இருந்தது.

பிஜ்ஜளன் மஹாமண்டலேஸ்வரனாக இருந்த பொழுது அவனுக்கு 'சுவஸ்தி சமதிகத பஞ்சமஹாசப்த மஹாமண்ட லேஸ்வரன் சுவர்ண விருஷபத்வஜன், காலசூர்ய குலகமல

மார்த்தாண்டன், கலகளங்குசன், வைரீபகண்டீரன் போன்ற பட்டப் பெயர்கள் இருந்தன. பேரரசனான பிறகு 'புஜமல சக்ரவர்த்தி திரபுவனமல்லன்' என்னும் சாளுக்கியப்பட்டப் பெயரைத் தனது பெயரின் முன்னர்ச்சிறப்புடன் சேர்த்துக் கொண்டன். அவனது கல்வெட்டுக்களில் அவனது திறமையும் வீரமும் மிகவும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. ''பிஜ்ஜள தேவதராதிநாதன் பிறந்த பொழுதே பேரரசர்களுக்குப் பயம் பிறந்துவிட்டது. அவனிடம் பணம் கொடுத்து வாங்கி வந்த குதிரைகளோ இல்லவே இல்லை. அகந்தையால் வீங்கிப் போயிருந்த அரசர்களின் முதுகுத் தோல்களை உரித்து பின்னர் அவர்களிடமிருந்து கொண்டுவரப்பட்ட குதிரைகளும் யானைகளும் மட்டுமே அவனிடம் இருந்தன. ''அவன் பல அரசர்களைப் போரில் வென்றான்'' என்று ஒரு கல்வெட்டு இவனைச் சிறப்பிக்கிறது. இக் கல்வெட்டில் வரும் அவனது விருதுகளில் 'பரநாரிசகோதரன்' என்பதும் ஒன்றாகும். இன்னொரு கல்வெட்டானது ''பகையரசர்களின் பெருமை என்னும் நெருப்பை அவனது வாளிலிருந்து பெருக் கெடுத்துச் சென்ற பகையரசர்களின் ரத்தம் அணைத்தது. ஓடிச்சென்றுவிட்ட எதிரிகளின் தலைமுடிகளை அலங்கரிக்கும் அழகிய கற்கள் கனமழையின் போது உதிரும் அத்திக்கட்டிகளைப் போல உதிர்ந்தன. இவனது வீரர்களின் வாள்கள் எதிரிகளின் வாள்கள் மீது படும்போது உண்டாக்கும் ஒளியே மின்னல், கொட்டிய எதிரிகளின் ரத்தமே மழை; இவ்வாறு பிஜ்ஜளனின் போர்க்களம் மழைக்களமாகக் காட்சி தந்தது'' என்றும் இன்னொன்று ''பின்னர் சாளுக்கிய ராஜ்யலஷ்மியானவள் கலசூரி திலகனான பிஜ்ஜளனை மகிழ்ச்சியுடன் மணம் புரிந்து கொண்டாள். பெண்களின் மனம் எப்பொழுதும் புதியவர்களைத் தேடுகிறது. பிஜ்ஜளனுக்கு சிங்களம், நேபாளம்; கேரளம், கூர்ஜரம், துருக்கம் போன்ற நாட்டரசர்கள் ஏவல் புரிந்து வந்தனர்." என்றும் புகழுகின்றன.

இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்றொடர் மிகையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவனது கல்வெட்டுக்களில் இருந்து தெரியவரும் செய்திகள் இவை; அவன் மிகுந்த வீரமும் மனத்திண்மையும் கொண்டவனாக விளங்கினான். கோயில்களின் மீதும் மதகுருக்களின் மீதும் அவன் நல்லெண்ணம் கொண்டு விளங்கினான். அதிலும் காளாமுகப் பிரிவைச் சேர்ந்த குருக்களுக்கு பல வகைப்பட்ட பரிசில்களைக் கொடுத்திருப்பதையும் அவனது மகனான ராயமுராரீசோவிதேவன் தனது தந்தையைப் போலவே கோயில்களுக்குப் பெரு நிதிவழங்கும் தொண்டினை மேற்கொண்டு தொடர்ந்து செய்து வந்ததனையும் பார்த்தால் அவர்கள் எல்லோரும் காளாமுக சிவசமயத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது பிஜ்ஜளனின் அரசை எல்லையை விரிவாக்கும் பணியில் ஈடுபட்டுத் தனது வாழ்வின் பெரும்பாகத்தைச் .செலவு செய்த ரேசிதண்டாதிபன் என்பவன் சமணசமயத்தைச் சேர்ந்தவனாக இருந்தான். தனக்கு முன்னால் ஆண்டு வந்த எல்லா அரசர்களையும் போலவே பிஜ்ஜளனும் ஏதாவது ஒரு மதத்தைத் தழுவிக் கொண்டு தனது முழு ஆதரவையும் அன்பையும் அதற்கு மட்டும் காட்டி பிறமதங்களைப் புறக்கணிக்காமல் எல்லா சமயங்களையும் ஒன்றாகவே கண்டு வந்திருக்கிறான்.

பிஜ்ஜளனால் கலசூரி வமிசமானது மீண்டும் தனது பெருமையைப் பெற்றது என்று மற்றுமொரு கல்வெட்டு கூறுகிறது.

பிஜ்ஜளனால் ஆட்சிபுரிவதில் உதவிபுரிந்த சிற்றரசர்களைப் பற்றியும் அமைச்சர்களைப் பற்றியும் சில விவரங்களை இங்கு, கொடுப்பது அவசியம். பீமகவியானவன் தனது 'பசவ புராண'த்தில் பசவண்ணரைப் பற்றி பிஜ்ஜளனிடம் அவதூறு

கூறிய சில சிற்றரசர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆகியோரின் பெயர்ப் பட்டியினைத் தருகிறான். அவர்கள் காளிமரசன், கரியகேசவன். சோளியண்ணன், குந்ததமிபூபாலன், ஹெம்ம (ம்மா) டி, உக்கிரசண்டி, கசவமந்திரி மற்றும் மேளிகரசன் ஆவார்கள். இவர்களின் மூன்று பெயர்களைக் கல்வெட்டுக் களும் குறிப்பிடுகின்றன. கரியகேசிம்மய்யன் என்பவன் கி. பி. 1161 ம் ஆண்டில் பனவாசியின் 12000 பகுதியினை ஆண்டு வந்தான் கசவமந்திரி என்னும் கசபய்யன் கி.பி. 1163 ம் ஆண்டில் அதே பனவாசியை ஆண்டுவந்தான். இவர்களுள் கசபய்யன் மிகவும் புகழ் பெற்றவனாவான். இவன் பிஜ்ஜளனின் வலதுகையைப் போல விளங்கினான். ஆரம்பத் தில் பேரரசைக் கைக்கொள்ளும் பிஜ்ஜளனின் முயற்சிகளில் இவனே பின்பலமாக நின்று ஆக்கமும் ஊக்கமும் கூறிவந் தான். மேலே குறிப்பிடப்பட்டவர்கள் அல்லது பந்களிகை என்னும் பகுதியை கசபய்யனின் கீழ்ச்சிற்றரசனாக இருந்து ஆண்டு வந்த பர்மரசன் (இவன் பிஜ்ஜளனின் மருமகன் ஆவான்) என்பவனும் முன்பே நாம் கூறிய ரேசிதண்ட நாயகன் என்பவனும் பிஜ்ஜளனின் மிகவும் முக்கியமான அதிகாரிகளாக இருந்து அவனுக்கு உதவினர்.

இந்நூலின் முதற்பகுதியின் இறுதியில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் அரசனுக்கு இருந்த மதிப்பைப்பற்றியும், அமைச்சர்களின் எண்ணிக்கைகளைப் பற்றிய சிறுகுறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு அவற்றைப் பற்றியே சிறிது விளக்கமாகவும் அமைச்சர்களது மற்றும் கருவூல அதிகாரி களைப்பற்றிய செய்திகளையும் காண்போமாக. அரசன் தன்னிடம் உண்மையாக நடந்து கொள்பவர்களைத் தனது அமைச்சராக்கிக் கொள்கிறான். முன்பிருந்த அதிகாரிகளின் அமைச்சர்களின் மகன்கள் சிறந்தவர்களாகவும் உண்மை யானவர்களாகவும் இருந்தால் அவர்கள் தமது தந்தை யின் பதவியை எளிதாகப் பெற்று வந்தனர் (சித்த

ரசனுக்கு ஆண்மக்கள் இல்லாமல் இருந்தமையால் அவனது வீட்டிலேயே அவனது மகனைப் போலவே வாழ்ந்து வந்த பசவனுக்கு கருவூல அதிகாரி பதவி கிடைப்பது எளிதாக இருந்தது) அமைச்சர்களில் பலருக்கு நாட்டின் வெவ்வேறு பகுதிகளைக் கண்காணித்துக் கொள்ளும் பொறுப்பைக் கொடுத்தான். வரி மற்றும் சுங்கம் போன்றவற்றிலிருந்து வரும் வருமானத்தினாலேயே அரசு நடைபெற்றதால் அவற்றைக் கவனித்துக் கொள்ளும் பெரிய பொறுப்பைத் தனியதிகாரிகளுக்குக் கொடுத்திருந்தான். பிஜ்ஜளன் தனது பேரரசில் ஆண்டுவந்த பொம்மரசன் என்னும் அதிகாரியில் அதிகாரமும் செல்வமும் தவறாகப் பயன்படுத்தப்பட்டுவிடக் கூடாது என்று அவன் ஐந்து பேர் (கர்ணம்) அடங்கிய குழு ஒன்றை அமைத்தான் என்றும், அவர்கள் ஐவரும் அவனுக்கு ஐந்து புலன்களைப் போல இருந்தனர் என்றும் ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. அக்குழுவில் உள்ளவர்கள் பரஹிதகார்யர் என்றும், சமுத்திர சமதீரர் என்றும், அபாதிதமந்திர வீர்யர் என்றும் சதுரு பதாவிசுத்தர் என்றும் அழைக்கப்பட்டதாக அது மேலும் குறிப்பிடுகிறது. கர்ணத் தொழிலுக்கும் அரசனின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களே நியமிக்கப்பட்டார்கள். 'கர்ணம்' என்பது கணக்கு விவரங்களைக் கவனித்துக் கொள்ளும் அதிகாரிகளைக் குறிப்பிடுகிறது. பசவண்ணரும் ஆரம்பத்தில் ஒரு கர்ணமாக (கணக்காளராக) இருந்து வேலையில் சேர்ந்து பின்னர் கருவூல அதிகாரியாகப் பதவி ஏற்றவர் என்று நாம் முன்னமேயே கண்டோம். நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்தும் மூலைமுடுக்குகளிலிருந்தும் வெவ்வேறு சிற்றரசர்களிடமிருந்தும் வந்த அரச வருமானத்தை கருவூலத்திற்குச் சேர்ப்பித்தல், அரசனின் அனுமதியின் பேரில் அதைச் செலவிடுதல், இவை எல்லாவற்றையும் கணக்கெடுத்துக் கொள்ளுதல் போன்றன கருவூல அதிகாரியின் வேலைகளாகும். அதனால் இவ்வேலை மிகவும்

பொறுப்பான வேலையாகும். கருவூலத்தில் உள்ள பொருளில் ஏதேனும் குறைந்தால் அதற்கு அவனே பொறுப்பானவனாகும். அத்தொழிலில் பொருளுடன் நேரடியான தொடர்பு கொண்டிருந்ததனால் மக்களின் சந்தேகக் கண்கள் அவன் மேல் எப்போதும் மொய்த்துக் கொண்டிருக்கும். 'தண்ட நாயகன்' என்பது எல்லா அமைச்சர்களுக்கும், பெரிய அதிகாரிகளுக்கும் இணையாக இருந்துவந்த ஒரு பட்டப் பெயராகும்' 'தண்டநாயகர்' அல்லது 'தணாயகர்' என்னும் இச்சிறப்புப் பெயர் பசவண்ணரின் பெயரோடு சேர்ந்து கொண்டது. இச் சிறப்புப் பெயர் அவரது தமக்கை நாகலாம்பிகையின் மகனான சன்ன பசவண்ணனுக்கும்—அவன் அரசில் எப்பணியும் ஆற்றாமலிருந்தும் கூட—சேர்க்கப்பட்டு மக்களின் அன்றாட வழக்கில் 'சிக்கதணாயக' (சிறிய தண்டநாயகன்) என்னும் சிறப்புப் பெயர் அவனது பெயருடன் இணைக்கப் பட்டது.

பசவண்ணரின் பார்வையில் பிஜ்ஜளன் 'பவி'யாக (உலக வாழ்வில் சிக்கிக் கொண்டவனாகக்) காணப்பட்டான். பவி என்னும் சொல் வீரசைவ சமயத்தைச் சாராதவர்களைக் குறிப்பிடும் ஒரு சொல்லாகும். (சில வசன இலக்கியஆசிரியர்-களது கூற்றின்படி மனித இனத்தில் இருப்பது இரண்டே இரண்டு குலங்களே—ஒன்று பக்தர்களின் குலம், இன்னொன்று பவிகளின் குலம்). பிஜ்ஜளனின் கீழ் கருவூல அதிகாரியாகச் செயலாற்றிய பசவண்ணருக்கும் அவரது தலைவனான பிஜ்ஜளனுக்கும் இருந்த அரசியல் உறவு எப்படியிருந்தது?

பெரும்பாலும் எல்லா வீரசைவசமய நூற்களும் கருவூல அதிகாரியாக இருந்த பசவண்ணர் தனது வீட்டிற்கு வந்த மெய்யன்பர்களுக்கு வழங்கவேண்டும் என்பதற்காக தனது வீட்டில் பெருஞ்செல்வத்தை மலைபோலக் குவித்துவைக்க

எண்ணி பிஜ்ஜளனின் கருவூலத்திலிருந்து பெட்டிகளைக் கொண்டுவந்து, முத்திரைகளை உடைத்து அவற்றிலிருந்து மிகச் சிறந்த துணிமணிகளையும், பெருஞ்செல்வங்களையும் சேர்த்துக் கொண்டதாகவும் அவற்றை வீரசைவத் தொண்டர்களுக்கு வழங்கியதாகவும் உற்சாகத்துடன் விவரிக்கின்றன. (சமண சமய புராண நூல்களும்கூட பசவண்ணர் இவ்வாறு செய்ததாகக் குற்றம் சாட்டுகின்றன). இச்செய்தியை அவரது எதிரிகள் பிஜ்ஜளனிடம் கூறியபொழுது அவன் அவரைக் கோபித்துக் கொண்டான் என்றும் அதற்கு பசவண்ணர் அப்பொழுது 'சிவசரணர் உங்களது பொருட்களை விரும்பவில்லை; தமது பொருட்களையே தாம் எடுத்துக்கொண்டு சென்றனர்'' என்று கூறி கருவூலத்திலிருந்த நிதிகளின் கணக்கு விவரங்களைக் காட்டி அவையாவும் பெருஞ்செல்வமாக பலகோடியாகப் பெருகியிருக்கின்றனவேயல்லாது குறைந்தில என்பதை மெய்ப்பித்தபோது பிஜ்ஜளன் தலைகுனிந்து மௌனியானான் என்று வீரசைவக் கதைகள் கூறுகின்றன. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பசவண்ணரின் மேல் மேலும் மேலும் கூறப்பட்டு வந்ததால் ஒரு முறை பிஜ்ஜளன் தாங்க முடியாதவனாகி பசவண்ணரை குடும்பத்துடன் கல்யாணிலிருந்து வெளியேற்றிவிட்டதாகவும் விவரிக்கப்பட்டுள்ளது.

பசவண்ணரின் வசனங்களில் நான்கு இடங்களில் பிஜ்ஜளனைப் பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன, ஒரு முறை மெய்யன்பர்களின் திருக்கூட்டத்தில் அமர்ந்திருக்கும் பொழுது வீரசைவனல்லாத பிஜ்ஜளனின் கீழ் பசவண்ணர் சேவை செய்வது முறையா என்ற எதிர்ப்பு வந்தது. அதற்குப் பசவண்ணர் இவ்வாறு பதில் கொடுத்தார்.

அதிகாலை எழுந்து கண்ணைத் தேய்த்துக் கொண்டு
என்வயிற்றுக்கு, என் சொத்துக்கு,
என் பெண்டாட்டி பிள்ளைகளுக்கு என்று

யோசித்தால் என் மனதிற்கு மனமே சாட்சி!
'ஆஸனே சயனே யானே? சம்யர்கே சஹபோஜனே
சஞ்சரயந்தி மஹாகோரே? நரகே காலமக்ஷயம்'
என்னும் சுலோகத்தை பசவண்ணன் சொல்கிறான் என்பர்.

'பவி' பிஜ்ஜளனின் ஆசனத்தின் கீழ் உட்கார்ந்து
கொண்டு சேவை செய்கிறேன் என்று சொல்வர் பிறர்
பதில் கொடுப்பேன் அவர்களுக்கு, சொல்கிறேன்.
புலையர் புலையர்களின் வீடு நுழைந்து
ஓய்வில்லாமல் வேலைசெய்தாவது
உங்களைப் பற்றி சிந்திப்பேன் அல்லாது
என் வயிற்றுப் பாட் டிற்கு யோசித்தால்
தலையைக் கொடுக்கிறேன்! கூடல சங்கம தேவா.

இவ்வசனத்திலிருந்து பசவண்ணர் பவி பிஜ்ஜளனின் கீழ் சேவகம் செய்து வந்தது தனது குடும்பத்தின் பிழைப்புக்காக அல்லது என்பதும், தான் மிகவும் மதிக்கிற நேசிக்கிற மெய் யன்பர்களுக்காக, திருத்தொண்டர்களுக்காக என்பதும் தெளி வாகிறது. இன்னொரு வசனத்தில் தனது, மற்றும் பிஜ்ஜள னின் உறவுமுறையைத் தெளிவாகக் கூறுகிறார். அந்த வசனம் இவ்வாறு உள்ளது:

உடையவள் இருந்தால் ஏவலர்க்குக்
கேடில்லை காணீரோ
ஊரெனாமல் காடெனாமல் ஏவலனைத்
தேடிவரும் உடையவனும் உண்டோ?
வயிற்றிற்காக நான் பிஜ்ஜளனின் ஆளானால் என்ன?
'வேளேவாளி' என்னை ஏற்றுக் கொள்வான்
கூடலசங்கம தேவன்.

இத்துடன் இன்னொரு வசனத்தையும் நாம் காணவேண்டும்

வயிற்றிற்காக நான் இருக்கவில்லை,
சமயாச்சாரி நானையா
பாழாகி ஓடிப்போய்விடுபவன் நானல்லஐயா
கேள், கூடல சங்கம தேவா
மரணமே மஹாநவமி.

முதலாவது வசனம் பசவண்ணருக்கும் பிஜ்ஜளனுக்கும் இடையே நிலவிய உறவையும் இரண்டாவது அவருக்கும் மெய்யன்பர்களுக்கும் இருந்த தொடர்பையும் விளக்குகின்றன. அரசனிடமிருந்து சோளம் அல்லது வேறு பொருட்களைப் பெற்று அவனுக்குச் சேவகம் செய்வதே சோளவாளி (சோற்றுக்கடன்) ஆகும். இது இன்றைக் காலத்தைய சோற்றுக்கடன் அல்லது உப்புக் கடன் என்னும் சொல்லுக்குச் சமமானது. தாம் வெறும் சோற்றுக்காகவும், பணத்திற்காகவும் பிஜ்ஜளனிடம் வேலை செய்வதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். தமக்கு இதிலிருந்து—ஒரு வேளை பிஜ்ஜளனிடமிருந்தும் கூட—எந்த ஒரு கேடும் நேரப்போவதில்லை என்ற உண்மையைத் தெளிவுபடுத்தியுள்ளார். 'வேளேவாளி' என்பது நன்றிக்கடனைத் தெரிவிக்கும் முறையில் செய்யப்படும் கடைசிச் செயல்கள். தன்னைக் காப்பாற்றிய தனக்கு உணவளித்த தனது தலைவன் இறந்தால் அவனுக்காகத் தனது உயிரையும் மாய்த்துக் கொள்வதற்கே 'வேளேவாளி' என்று பெயர். தாம் கூடலசங்கமனுக்கு மட்டுமே 'வேளேவாளி' என்று மேலே சொல்லியுள்ளார். அதிலிருந்து, பிஜ்ஜளனின் மேல் நெருக்கமான அன்போ, மரியாதையோ இவருக்கிருந்தது என்று கூறவியலாது. மொத்தத்தில் அரசர்களைப் பற்றியே அவருக்கு அவ்வளவாக நல்ல எண்ணமில்லை. சன்னபசவண்ணர் கூட 'பொய்யானது பழமாகித் தோட்டம் போட்டுள்ளது அரசனிடத்தில்' என்று கூறுவதன் மூலம் அரசர்களின் மேல் அவர் கொண்டிருந்த வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட ஒரு

எண்ணத்தையே பசவண்ணர் கூட அரசர்களின் மேல் கொண்டிருந்திருக்க வேண்டும். அவரது பல வசனங்களில் இக்குறிப்புக்களைக் காணலாம்.

தம்மேல் அனாவசியச் செலவுகளைச் செய்தார் என்ற குற்றச்சாட்டு வந்த பொழுது அவர் கூறிய ஒரு வசனம்:

ஊரின் அருகே பால்பெருகிப் புரண்டோடும்போது
பாலுக்கென முரட்டுப் பசுவை நான் ஏன் நாடுவேன்?
வெட்கம் கெடுவெனோ? நாண மிழப்பனோ?
கூடல சங்கம தேவனின் குறையாச் செல்வமிருக்க
பிஜ்ஜளனின் கருவூலத்திற் காசைப் படுவனோ? நான்

இங்கு தமக்கு பிஜ்ஜளனின் கருவூலம் ஒருவனிடம் உதைக்கின்ற பசுவிருந்ததைப் போல என்றும் அவனது செல்வத்தினால் தமக்கு ஏதும் பயனில்லையென்றும் கூடலசங்கம தேவன் இருக்கும் வரை பிஜ்ஜளனின் நிதி தமக்குத் தேவையில்லை என்று குறிப்பிடுகிறார் ஆனால் 'ஊரின் அருகே' ஓடும் 'பால் ஆறு' எது என்று தெரியவில்லை.

இவையெல்லாவற்றையும் பார்த்தால் பசவண்ணரின் மேல் கருவூலப் பொருளைக் கையாண்ட குற்றச்சாட்டு மிகவும் பலமானதாக இருந்தது என்பது தெளிவாகிறது. இத்தகைய குற்றச்சாட்டுக்களையும் அவதூறுகளையும் அவர் மேலே கூறிய வசனத்தின் மூலம் மறுத்துள்ளார். அவரது வீட்டிற்கு நதி வெள்ளத்தைப் போலப் பெருக்கெடுத்து வந்த திருத்தொண்டர்களை உபசாரம் செய்வதற்கு அவரது வருமானம் மட்டும் எவ்வாறு போதுமானதாக இருந்திருக்க முடியும்? அதனால் அவர் பிஜ்ஜளனின் கருவூலப் பொருட்களை இதற்காகக் கையாண்டார் என்பதே பிறரது குற்றச்சாட்டு. ஆனால் மேலே கூறப்பட்ட வசனத்தில் பசவண்ணர் 'பிஜ்ஜளனின் கருவூலம் எனக்கேனய்யா?' என்று கேட்பதி

விருந்து அவர் அரச செல்வத்தைத் தமது அறச் செயல்களுக்குப் பயன்படுத்தவில்லை என்று உறுதியாக நம்ப இடமிருக்கிறது. ஆனால் கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனத்தைக் காண்போமாக :

யானை, செல்வம், லாயத்தின் குதிரை இருந்தும்
கேட்பாரில்லாமல் நான் ஏழையானேன் ஐயா
முன்பு சிந்துபல்லாளனின் மகனை யாசித்தாய்.
இனியும் நீ என்னைக் கேட்காவிட்டால்
உன்னைக் கட்டிப்போடுவேன்
கேட்டும் அன்பர்களுக்குக் கொடுக்க வில்லையெனில்
தலையை எடுத்துவிடு கூடல சங்கமதேவா.

யானை, செல்வம், லாயத்திலுள்ள குதிரைகள் போன்ற எவற்றை விரும்பினாலும் சரி நான் கொடுக்கிறேன் என்று கூறுகிறார்.

இத்தகைய எல்லா ஆதாரங்களையும் பார்த்தால் சிவநெறித் தொண்டரும், நல்லுள்ளம் கொண்டவருமான பசவண்ணர் சிறிது பொருளைக் கருவூலத்திலிருந்து எடுத்துத் தொண்டர்களுக்காகவும் அன்பர்களுக்காகவும் செலவு செய்திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. பிஜ்ஜளனின் பெருஞ் செல்வத்தில் சிறுபகுதி இவ்வாறு சென்றால் அதில் தவறு ஏதுமில்லை என்று அவர் எண்ணியிருந்திருக்கலாம். ஆனால் இதையே வீரசைவப் புராணங்கள் மிகவும் பெரிய அளவில் திரித்து சற்றும் மெய்யில்லாத புனைந்துரைகளைக் கட்டியுள்ளது. ஒருமுறை, பசவண்ணர் போர்வீரர்களுக்கு ஊதியம் கொடுத்துக் கொண்டிருக்கும் போது சில வீரசைவர்கள் வந்து பணம் கேட்டபொழுது அவையெல்லாவற்றையும் அவர்களுக்குக் கொடுத்து விட்டதாகவும்; இன்னொருமுறை, கன்னமிட்டுத் திருடுபவனான பிரம்மய்யன் என்பவனுக்கு

அரச கருவூலத்தில் எவ்வாறு கன்னமிடவேண்டும் என்னும் வழிமுறைகளைக் பசவண்ணரே கூறியதாகவும் கதைகள் கூறுகின்றன. இப்படிப்பட்ட கதைகள் பல உள்ளன.

பிஜ்ஜளனுக்கும் பசவண்ணருக்கும் அறநெறி சம்பந்தப் பட்ட பல கொள்கைகளில் மிகுந்த வேறுபாடு காணப் பட்டது. பிஜ்ஜளனோ ஒரு சம்பிரதாய வாதி; அவனது அரசிலிருந்த வீரசைவர்கள் எல்லோரும் பெரும்பாலும் சம்பிரதாய வாதிகளே. அவன் காளாமுக சைவப் பிரிவைச் சேர்ந்திருந்தான். ஆனால் அப்பிரிவோ வீரசைவப் பிரிவை எதிர்த்தது. அவனது அமைச்சரவையில் பலர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர்கள். பசவண்ணர் மக்களிடம் பரப்பு வதற்கு முயற்சி செய்து வந்த அறநெறியானது பல கோணங் களில் புரட்சிகரமானதாக விளங்கியது. இப்படிப்பட்ட சமயங்களில் பழமைக்கும் புதுமைக்கும் இடையே ஒரு போராட்டம் நடைபெறுவது தவிர்க்க இயலாதது. பழமை விரும்பிகள் தமக்கு பசவண்ணர் போன்றவர்களால் துன்பம் தரப்படுகிறது என்று பிஜ்ஜளனிடம் சென்று அவச்சொல் கூறி அவரைத் தண்டிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண் டனர் (பசவண்ணரானவர் பிஜ்ஜளன் தன்மேல் சுமத்திய முப்பத்தாறு குற்றச்சாட்டுகள் தவறானவை என்று கூறி வென்றிருப்பதாக சன்னபசவண்ணர் கூறியுள்ளார்). பிஜ்ஜளன் சந்தேகப் புத்தியுள்ளவனாக இருந்து வந்தான். தனது சிற்றரசன் பம்மரசன் என்பவன் தனது பணத்தைக் கையாண்டான் என்று கேள்விப்பட்டு அவனைக் கண்காணிப் பதற்கென ஐந்து கர்ணங்கள் அடங்கிய குழுவை நியமித் தான் என்ற செய்தியே இதற்குச் சாட்சி. அதனால் அவனுக்கு பசவண்ணரின் மேலும் வீரசைவ நெறியின் மேலும் விருப்பில்லாமையும் ஒருவகையான சந்தேகமும் தோன்றின. வீரசைவ சமயத்தை அழித்து விடவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருக்கவில்லை அவன். ஏனென்றால்

அச்சமயம் ஏற்கனவே அரசின் உதவியில்லாமலேயே மிகவும் சிறப்பாகப் பரவியிருந்தது. பசவண்ணரை வேலையிலிருந்து நீக்க வேண்டும் என்றும் அவன் எண்ணவில்லை. ஏனென்றால், அவருக்குப் பின்னால் ஒரு பெரிய கும்பல் இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், தான் முன்பே சாளுக்கியப் பேரரசின் உண்மையான உத்தராதிகாரியல்ல வென்றும் தான் செய்திருப்பது அறநெறியின்படி சரியானதல்லவென்றும் மனதிலேயே வைத்து புழுங்கிக் கொண்டிருந்திருக்கக் கூடிய பிஜ்ஜளன் எந்த ஒரு நெறியாவது ஆதரித்தும் பிறவற்றைக் கவனிக்காமல் இருந்தும் அதன் மூலம் மக்களது வெறுப்பைச் சம்பாதித்துக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் ஏனோ தெரியவில்லை வீரசைவசமய இலக்கியங்கள் பிஜ்ஜளன் வீரசைவ சமயத்தை மிக்க வெறுப்புடன் நோக்கி அதைப் புறக்கணித்தான் என்றும் எதிரிகளின் சொற்களைக் கேட்டுக் கொண்டு பல எதிர்நடவடிக்கைகளை மேற்கொண்டான் என்றும் கூறுகின்றன. 'பசவண்ணர் உண்மையில் உனது சிம்மானத்திற்கு மதிப்பளிக்கவில்லை; உனது கையிலுள்ள முத்திரை மோதிரத்திலிருக்கும் நந்திக்கே மதிப்பளிக்கிறார். என்று யாரோ கூறிய பேச்சைக் கேட்டுக் கொண்டு பிஜ்ஜளன் பசவண்ணரைச் சோதிக்கிறான். ஒரு முறை பசவண்ணர் பிஜ்ஜளனைச் சிம்மாசனத்திலிருந்து இறக்கிவிட்டு, நந்தி உருவம் பொறித்த மோதிரத்தை எடுத்துக்கொண்டு சிம்மாசனத்தை வணங்கிய பொழுது சிம்மாசனம் எரிந்து போயிற்று. இன்னொரு நாள் பசவண்ணரும் பிஜ்ஜளனும் மாறுவேடத்தில் கல்யாணில் வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது சில சிறுவர்கள் பசவண்ணருக்கு பிரசாதங்களைக் கொடுத்த பொழுது அவர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அப்பொழுது பிஜ்ஜளன் வேடிக்கைக்காக தனது ஈட்டி முனையினால் ஒரு தின்பண்டத்தை எடுத்து அவருக்குக் கொடுத்த பொழுது அதில் புழுக்கள் இருந்தன; ஆனால் அச்சிறுவர்கள் கொடுத்த பொருட்களிலோ அமுதம்

தோன்றியது. ஒருமுறை பசவண்ணரின் வீட்டிற்குத் தமது ஒற்றன் ஒருவனை வீரசைவ வேடத்தில் பிஜ்ஜளன் அனுப்பினான். அங்குசென்ற அவன் உண்மையிலேயே சிவபக்தனாக மாறிவிடுகிறான். இப்படிப்பட்ட கதைகள் நூற்றுக் கணக்கிலிருக்கின்றன. இக்கதைகளிலெல்லாம் பிஜ்ஜளனை ஒரு அறிவிலியாகவும், தான் செய்து பார்த்த சோதனைகளிலெல்லாம் மீண்டும் மீண்டும் தானே தோற்றுப் போவதாகவும், பசவண்ணரே வெல்லுவதாகவும் நிகழ்ச்சிகள் விவரிக்கப் பட்டுள்ளன.

ஆனால், எவ்வளவு ஆகியிருப்பினும் பசவண்ணர் தான் பிஜ்ஜளனின் ஆணையின் கீழ் செயல்படும் அதிகாரி என்பதையும் பிஜ்ஜளன் ஒரு திறமைமிக்க அரசன் என்பதையும் மறந்திருக்கவில்லை. பிஜ்ஜளனின் பலவகையான தவறுகளையும் சுட்டிக் காட்டி அவன் அவற்றிற்காக வருந்துமாறு செய்திருக்க வேண்டும். ஆனாலும் சிலசமயங்களிலாவது அவர் பிஜ்ஜளனின் அதிகாரத்திற்கும், கட்டளைக்கும் கீழ்ப்படிந்து அவனது கட்டளைப்படி நடந்து கொண்டிருந்திருக்க வேண்டும். அவரது ஒரு வசனம் இவ்வாறுள்ளது :

யானை அங்குசத்திற்கு அஞ்சுகிறதா? ஐயா
சிங்கத்தின் நகம் என்றல்லவா அஞ்சுகிறது.
நான் இந்த பிஜ்ஜளனுக்கு அஞ்சுவேனா? ஐயா
கூடல சங்கம தேவா
நீ சர்வ ஜீவதயாபாரியானதால்
உனக்கு அஞ்சுகிறேன்.

இவ்வசனத்தை சற்றே நிதானத்துடன் புரிந்து கொள்ள வேண்டும். யானையானது உண்மையில் அங்குசத்திற்கு அஞ்சுவதில்லை; ஆனால் அது சிங்கத்தின் நகம் என்று எண்ணியே அதற்கு அஞ்சுகிறது. அதனைப் போலவே,

தானும் உண்மையில் பிஜ்ஜளனுக்காக அஞ்சவில்லை. ஆனால் கூடலசங்கம தேவன் எல்லா உயிர்களிடமும் கருணை உள்ள வனாக இருப்பதால் கூடலசங்கனுக்கு மட்டுமே அஞ்சுவதாக அவர் சொல்லுகிறார். இதன் உட்பொருள் என்னவென்றால், அவர் பிஜ்ஜளனுக்கு அஞ்சுவது அவன் பிஜ்ஜளன் என்பதால் அல்ல என்றும் வேறொரு காரணத்திற்காக என்றும் ஆகிறது. அந்த வேறொரு காரணமானது; கூடலசங்கம தேவன் எல்லா உயிர்களிடத்திலும் அன்புள்ளவன்; அவ்வாறே பிஜ்ஜளனிடத்திலும் கருணை கொண்டுள்ளான். அதனால் இறைவனுக்கு அஞ்சி பிஜ்ஜளனிடம் அஞ்சவேண்டியிருக்கிறது. இல்லையென்றால் பிஜ்ஜளனிடம் அஞ்சவேண்டியதில்லை. இந்த விளக்கம் சரியானதாக இருந்தால், சிலசமயங்களிலாவது அவர் பிஜ்ஜளனுக்கு அஞ்சி தான் செய்தவை சரியல்ல என்று ஏற்றுக்கொண்டிருந்திருக்க வேண்டும். ஆனால் எச்சூழ் நிலையில் இவ்வசனத்தை இயற்றினார் என்று நமக்குத் தெரியவாய்ப்பில்லை. பசவண்ணர் தமது விரலில் உள்ள நந்திமோதிரத்தை எடுத்துக்கொண்டு சிம்மாசனத்தை வணங்கக் கூடும் என்று பிஜ்ஜளனின் குற்றச் சாட்டைச் சுமந்தபொழுது இவ்வசனத்தைக் கூறியதாக 'பசவேஸ்வர சட்ஸ்தலவசன கதாசாரம்' என்னும் நூல் கூறுகிறது. அந் நூலில் கூறப்பட்டிருக்கும் பல கதைகளைப் போலவே இதையும் நம்புவது கடினமே.

கல்வெட்டுக்கள் பிஜ்ஜளனை ஒரு சிறந்த மனிதனாக வருணிக்கின்றன. சமண புராணங்களும் அவ்வாறே தெரிவிக்கின்றன. ஆனால் வீரசைவ புராணங்களோ அவன் ஒரு அறிவிலி. பேடி, பாபி என்று வருணிக்கின்றன. இவ்விரண்டு விதமான விளக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பதால் இவ்விரண்டுமே உண்மைக்குப் புறம்பானதாக இருக்க வேண்டும் என்று கருத இடமுண்டு. பிஜ்ஜளனின் உண்மையான தன்மை இவ்விரண்டு விளக்கங்களுக்கும் இடைப்பட்ட

தாக இருந்திருக்க வேண்டும். அவன் வீரசைவசயத்தின் வளர்ச்சிக்குத் தடைசெய்தவன்; புரட்சிகரமான எண்ணங் களை எதிர்த்தவன் என்பதில் ஐயமில்லை. இதற்கு வேறு நபர்கள் பிஜ்ஜளனிடம் பசவண்ணரைப் பற்றிக் கூறிவந்த பொய்க் குற்றச்சாட்டுகளும் காரணமாக இருந்திருக்க வேண்டும். மேலும் தன்னையும் தனது நாட்டையும் எதிரி களிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்பதும் இதற்குக் காரணமாக இருந்திருக்கக் கூடும். இச்செய்திகளை மனதில் கொண்டு பிஜ்ஜளனை நோக்கினால் அவனைப் பற்றி வருணனைகள் செய்யும் போது சற்றே கவனமாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

இதுவரை பிஜ்ஜள—பசவண்ணர் உறவுநிலையைக் கண் டோம். குறிப்பாக பிஜ்ஜளனின் குணத்தைப் பற்றிச் சற்று விரிவாகப் பார்த்தோம். பிஜ்ஜளனின் வாழ்வுடன் பசவண் ணரின் வாழ்வு, சரியோ தவறோ எப்படியோ இணைந்து விட்டது. பசவண்ணரை நன்கு உணர்ந்துகொள்ள நாம் பிஜ்ஜளனையும் நன்கு புரிந்து கொள்ள வேண்டியது இன்றிய மையாதது.

கருவூல அதிகாரியாக வேலை செய்துவந்த பசவண்ண ருக்கு தாம் உண்ணும் உணவைச் சம்பாதிப்பதிலேயே தம் வாழ்நாளைச் செலவிட்டு வருகிறோமே, சிவபக்தியில் ஈடு படுவதற்கு தமக்கு நேரமே கிடைப்பதில்லையே என்ற மன வேதனை அடிக்கடி ஏற்பட்டுள்ளது.

இரவும் பகலும் என்னைப் பற்றி எண்ணவே நேரம்
சரியாயிருக்கிறது
உன்னைச் சிந்திக்க நேரமில்லை
ஐயோ! தந்தையே என்செய்வது? என் பழவினையோ!
ராட்டியைப் பொறுக்கி வைத்தேன். ஆனால் சமையல்
செய்து உண்ணும் அதிர்ஷ்டம் இல்லை
நீ கருணைகாட்டு கூடல சங்கமதேவா.

மாட்டின் சாணத்தைப் பொறுக்குவதிலேயே எனது வாழ் நாள் கழிகிறதே; அதைக் கொண்டு உணவு சமைத்து சாப்பிட எனக்கு இயலாமல் போகிறதே என்று சிறப்பாகக் கூறியுள் ளார். ஆனால் இந்த தொழிலில் அவர் பணம் ஈட்டுவது அவருக்காக அல்ல; சமயத்தொண்டர்களுக்கு, அன்பர்களுக்கு உதவவேண்டும் என்பதற்காகவே. ''நான் பிறர் சேவை செய் வேனையா வீரசைவர்களுக்கு வழங்குதற்கென்று'' என்று ஒரு வசனத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பசவண்ணர் இறைநெறி சாதனையை மேற்கொண்டிருந் தார். அதையே தனது முக்கிய குறியாக வைத்திருந்தார் என்பது உண்மை; ஆனால் அதற்காக அவர் உலகவாழ்வை வெறுத்துவிடவில்லை. இல்வாழ்வை நடத்திக் கொண்டே அதில் எதிர்ப்பட்ட சிக்கல்களைத் தீர்த்துக் கொண்டே முன்னேறினார்; அவற்றிற்காக அஞ்சி ஓடிவிடவில்லை. நீல லோசனை ஒரு இடத்தில் 'கஷ்டங்களைக் கண்ட பசவன்' என்று கூறுகிறாள். அவர் இல்வாழ்வில் பல துன்பங்களை அனுபவித்தவர். ஆனால் அவற்றின் கசப்பான அனுபவங்கள் அவர் அறநெறிப்படியான வாழ்வு வாழவேண்டும் என்னும் பசியைத் தூண்டிவிட்டன. உண்மையில் இல்வாழ்வு என்பது அறநெறிப்படியான வாழ்வின் ஒரு படியாகும். கடக்க வேண்டிய ஒரு படியாகும். இதை பசவண்ணர் பிறரைவிட மிகவும் சிறப்பாகத் தெரிந்துவைத்துக்கொண்டிருந்தவராக இருந்தார்.

7. பசவண்ணரின் சாதனை, சித்தி மற்றும் தனித்தன்மை

பசவண்ணரின் வாழ்க்கை ஒரு பெரிய போராட்டத்தின் கதையாகும். இப்போராட்டத்தை இரு மட்டங்களில் நாம் காணவேண்டும். ஒன்று, அவர் வெளியுலகுடன் அதாவது தமது சுற்றுப்புறச் சூழ்நிலையுடன் நடத்திய போராட்டம். இப்போராட்ட விளக்கங்களை முந்தின பகுதிகளில் நாம் கண்டோம். இனிவரும் பகுதிகளிலும் அதைக் காணலாம். மற்றொன்று, அவர் பக்தி சாதனைக்காக தனக்குள்ளே தானே, தம்முடன் தாமே நடத்திக்கொண்ட போராட்டம். இவ்விரண்டு போராட்டங்களும் அவரது வாழ்க்கையை உருவாக்கின; அவரது தனித்தன்மையை வெளிப்படுத்தின.

உலகம் என்றைக்குமே சரியாக இருந்ததில்லை. அங்கு நல்லனவும் உண்டு; அல்லனவும் உண்டு. மக்களில் கபடம், ஆடம்பரம். அகங்காரம், பல விதமான கொள்ளைகள், பொய், உயிர்வதை, போன்றன என்றென்றும் இருந்திருக்க வேண்டும். இவைகளைக் கண்டு சிலர் என்ன செய்வதென்றறி யாமல் கண்டுங்காணாதது போல இருந்து விடுகிறார்கள். இவற்றிற்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்வதனால் இவர்களுக்கு சிக்கல்கள் ஏற்படுவதில்லை. இன்னும் சிலர் அவற்றிலிருந்து விலகிச் சென்றுவிடுகிறார்கள். அவர்களுக்கும் சிக்கல்கள் ஏற்படுவதில்லை. ஆனால் அவற்றை எதிர்த்துப் போராடுபவன் பல சிக்கல்களை எதிர்நோக்கவேண்டி இருக்

கிறது. பசவண்ணர் இப்படிப்பட்ட சிக்கல்களை எவ்வாறு எதிர்த்து வெற்றிகொண்டார் என்ற விடை நமக்கு மிகத் தெளிவாகக் கிடைத்துள்ளது.

வெளிஉலகினைப் போலவே அஞ்சப்படவேண்டியது உள் உலகமுமாகும். நம் மனதானது நாம் சொல்வதைப் போலக் கேட்பதில்லை. அவன் இயல்பே எப்பொழுதும் தாவிக்கொண் டிருப்பது தான். அதன் விருப்பங்கள் அபாரமானவை. அதனுடன் போராடி அதைத் தன் கட்டுக்குள் வைத்துக் கொண்டு அதன் ஓட்டத்தை, தாவலை நமது குறிக்கோளுக்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்வது சிரமமானது. பசவண் ணரின் இத்தகைய மனப்போராட்டங்களின் விவரங்களை அவரது வசனங்களில் நாம் காணலாம்.

பசவண்ணரின் சாதனை அவரது இளமைக்காலத்தி லேயே துவங்கிவிட்டது என்றாலும் அது ஒரு குறிப்பிட்ட சிறப்பான குறிக்கோளுடன் துவங்கியது, கப்படி சங்கமத்தில் தான் என்று தெரிகிறது. பின்னர் தனது வாழ்வின் பெரு விருப்பான இறைவனின் திருவருளைப் பெறுதல் என்னும் குறியை எட்டும்வரை அவர் பலவகையான மனப்போராட்டங் களையும் இன்ப துன்பங்களையும் அடைந்தார்.

அவர் கொடுஞ்செயல் மலிந்திருக்கும் இவ்வுலகை எவ்வளவு கடுமையாகக் கோபித்துக்கொண்டாரோ அதன் குற்றங்குறைகளை எவ்வாறு கண்டித்தாரோ அவ்வாறே அவர் தன்னையும் தனக்குள் இருக்கும் குற்றங் குறை களையும் கண்டித்துக் கொண்டார். உண்மையில் பிறர் குறை களைவிடத் தமது குறைகளையே அவர் அதிகமாகக் கண்டித் துள்ளார், அவர் பிறக்கும் போதே சித்தராகப் பிறக்கவில்லை (உண்மையில் யாரும் பிறக்கும் போதே சித்தர்களாகப் பிறப்பதில்லை) அவருக்குள் சாதாரண மனிதனிடம் இருக்கும் குற்றங் குறைகள் யாவும் இருந்தன. இதை அவர் கண்டு காண்டார்.

எனது மனமோ அத்திப்பழம், பாரைய்யா
ஆராய்ந்து பார்த்தால் அதில் திரட்சி ஏதும் இல்லை
உலகின் டாம்பீகத்தில் என்னை ஒரு ஆளாக்கி
நீங்கள் வீட்டுள்ளீர்கள் கூடலசங்கமதேவா

மனதானது அத்திப்பழத்தைப் போலவே பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது. ஆனால் அதனுள்ளே ஏராளமான புழுக்கள் அடங்கியிருக்கின்றன. மனதைத் தூய்மைப்படுத்துவது இன்றியமையாதது. ஏனென்றால் தூய்மையான மனமே இறைவன் தங்குவதற்கு ஏற்ற இடமாக இருக்கிறது.

வீட்டினுள் வீட்டிற்குடையவன் உள்ளானோ இல்லையோ?
வாயிலில் புல்முளைத்து உள்ளே புழுதி நிரம்பிஉள்ளதே
வீட்டினுள் உடையவன் உள்ளானோ இல்லையோ?
உடல் முழுதும் பொய் நிறைந்து உள்ளம் வழிய நஞ்சு நிரம்பியுள்ள
வீட்டினுள் உடையவன் இல்லை
கூடல சங்கமதேவா!

நாம் ஒருவரைப் பார்ப்பதற்காக பல ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது வீட்டிற்குச் செல்கிறோம். அங்கு வீட்டின் வாயிற்படியில் புல் முளைத்திருக்கிறது. எங்கு பார்த்தாலும் புழுதியும் தூசும் படிந்துள்ளன. இச்சூழ்நிலையில் வீட்டில் வீட்டின் உரிமையாளன் இருக்கிறானா அல்லது இல்லையா என்பதை விசாரித்துத் தான் தெரிந்துகொள்ள வேண்டுமா? அப்படியே, கெட்ட எண்ணங்களைக் கொண்டுள்ள மனதை உடையவனின் மனதில் இறைவன் கண்டிப்பாக இருப்பதில்லை. மனதில் நாயகனான இறைவன் தங்குவதற்கு ஏற்றதாக நமது மனதைத் தூய்மையாக வைத்துக்கொள்வதொன்றே நமக்கு வழி. ஆனால் மனதின் உண்மைத்தன்மை எப்படிப்பட்டது?

மரமேறிய மந்தியைப் போல
பற்பல கிளைகளில் தாவிக்கொண்டிருக்கிறேன்
நொந்து கிடக்கும் நெஞ்சை நான் எவ்வாறு நம்புவேன்?
எவ்வாறு நான் அதை விரும்புவேன்?
எந்தை கூடலசங்கம தேவனிடம் போகவிடாதையா?

மனது குரங்கைப் போல நின்ற இடத்தில் நிற்பதில்லை. பரம் பொருளான இறைவனை வணங்கவேண்டும் என்று எண்ணி மனதைக் கட்டுப்படுத்துவதற்குள் நமக்கே தெரியாமல் அது வேறெங்கோ போய் விடுகிறது. நமது மனதைப் போல நம் முடனேயே இருந்து நம்மைக் கெடுப்பவர் வேறு யாரும் இல்லை.

பசவண்ணருக்கு இத்தகைய எல்லா அனுபவங்களும் இருந்தன. அவரது மனதின் ஆசைகளோ ஏராளம்.

நெய்ச்சுவைக்காக ஈட்டியை நமக்கும் நாயைப்
போன்ற தென்வாழ்வு!
உலகத்தொடர்பை விடாது என்மனம்
இந்த நாய்த்தன்மையைப் போக்குவாய்,
கூடலசங்கமதேவா, இது உன் கடமையாம்

உலகில் மனதைக் கவர்ந்திழுக்கும் பலபொருட்கள் இருக் கின்றன. அவற்றைப் பெறவேண்டும் என்று நம்முடைய மனது பேரிச்சை கொள்கிறது; அவற்றைப் பெற்று மகிழ் கிறது. ஆனால் அம்மகிழ்ச்சியுடன் நமக்குத் துன்பமும் வருகிறது. நெய்யின் சுவையை அறிந்து மகிழவேண்டும் என்று எண்ணி அந்நெய் தடவப்பட்டிருக்கும் கத்தியின் முனையை நக்கிய நாயினைப் போலவே நம்மனமும் துன்பப்படுகிறது. மனது உடலிச்சைகளின் அற்ப நேர இன்பத்திற்காக ஓடிக் கொண்டிருக்கிறது.

நாசமானேன் பஞ்சேந்திரியங்களின் சக்தியினால்
மதிகெட்டேன் மனத்தின் விகாரத்தினால்
பலம்கெட்டேன் உடல் விகாரத்தினால்
சரணானேன் கூடலசங்கமதேவனுக்கு

என்று அவர் புலம்புகிறார். பசித்துள்ள பசுவின் முன்பு பசும் புல்லை வைத்தால் அது அப்புல்லைத் தின்னாமல் வேறு என்ன செய்யும்? அதனால் தன் முன் ஆசைகளைக் காட்ட வேண்டாம் என்று இறைவனை வேண்டிக் கொள்கிறார். நாம் நமது குற்றங் குறைகளைக் களைந்து நல்லவர்களாகத் திருந்துவதற்கும் பதிலாக நாம் பிறரது குற்றங்குறை களையும் குறைபாடுகளையும் திருத்துவதிலேயே ஈடுபட்டு அதிலேயே நம்வாழ்வின் பெரும்பங்கைச் செலவழித்து விடுகிறோம். அதனால்

உலகின் குறையைத் திருத்த நீங்கள் ஏன் முயல்கிறீர்கள்
உங்கள் உடல்களை ஒழுங்கு படுத்திக் கொள்ளுங்கள்;
உங்கள் மனங்களை ஒழுங்கு படுத்திக் கொள்ளுங்கள்;
அடுத்த வீட்டுத் துன்பத்திற்காக அழுபவர்களை
எப்படி நம்புவானையா கூடலசங்கமதேவன்

நாம் உலகின் குறைகளைத் திருத்துவதற்கு முன்பு நம்மை நாமே முதலில் திருத்திக் கொள்ள வேண்டும். பசவண்ணர் செய்தது இதையே. அவர் மங்களி வேடம், கல்யாண் ஆகிய ஊர்களில் அவர் அறநெறியில் பெரும் புரட்சிகளை மேற் கொண்டு சமுதாயத்தைத் திருத்துவதற்கு முன்பாக தம்மைத் தாமே ஒழுங்கானவராகச் சீர்திருத்திக் கொண்டார்.

பசவண்ணர் இறைவனின் திருக்காட்சிக்காக பக்திநெறி யைத் தழுவினார். 'பக்தி' என்னும் இச்சொல் அவருக்கு மிகவும் பிடித்தமானது. இறைவன் இசைக்கு மயங்குவ தில்லை; வேதங்களைக் கற்றுத் தேர்வதினாலும் அவனை அடைய முடியாது. அவன் பக்தி வழிக்கே மிகவும் எளிய வனாகக் காணப்படுகிறான்.

இசைப்பிரியன் சிவன் என்பர்—
　　இசைப்பிரியன் சிவனல்லய்யா,
வேதப்பிரியன் சிவன் என்பர்—
　　வேதப் பிரியன் சிவனல்லய்யா,

இசைத்த இராவணனுக்கு அரைவாழ்வாயிற்று,
　　வேதமிசைத்த பிரமன் தலைபோயிற்று!
இசைப்பிரியனுமல்ல வேதப்பிரியனுமல்ல;
　　பக்திப்பிரியன் நம் கூடலசங்கமதேவன்

இவ்விசயத்நில் தமிழ் நாட்டின் நாயன்மார்களே இவருக்கு வழிகாட்டியாக விளங்கிவந்திருக்கின்றனர்.

பக்திநெறியில் சாதனை ஒரு விதத்தில் எளியது; இன்னொரு விதத்தில் கடினமானது. தூய மனதினாலும், எளிமையாலும், அடிமை பூண்டொழுகும் மனதாலும் அவனைப் போற்றவேண்டும். அவனுக்கே அர்ப்பணித்து விட்ட முழுமனதுடன் எப்பொழுதும் இறைவனை வணங்குவது. அவனது திருப்பெயரின் புகழினைப் பாடுவது, அவன் மேல் தூய்மையான உண்மையான அன்பை எப்பொழுதும் வைத்திருப்பதே பக்தி எனப்படும். இப்படிப்பட்ட ஒரு பக்தனின் வேண்டுகோள் வெகு விரைவில் இறைவனால் அருளப்படுகிறது. பக்தனை இறைவன் பலவாறு சோதித்துப் பார்க்கிறான், கொடுத்துப்பார்க்கிறான்; கெடுத்துப்பார்க்கிறான். இவ்வாறு பலவழியில் சோதித்து எல்லாசோதனைகளிலும் அன்பர் ஒரே விதமாக இறைவன்பால் அன்பு செலுத்திவந்தால் அவன் இறைவனால் ஆட்கொள்ளப்படுகிறான்.

பசவண்ணர் கூடலசங்கமனுக்காக பற்பல துன்பங்களை அனுபவித்துள்ளார். தாய்தந்தையர்களை முன்னமே இழந்து உற்றார் உறவினர் யாவரையும் துறந்து கப்படிசங்கமத்திற்கு

வந்த அவருக்கு சிவனைத் தவிர அன்பு செலுத்துபவர் வேறு யாரும் இல்லை. சிவனே தனக்கு எல்லாமும் என்று அவர் தீர்மானித்துக் கொண்டிருந்தார்.

தந்தை நீ, தாய் நீ;
சுற்றம் நீ; உறவு நீ;
நீயல்லாது வேறு யாருமில்லையையா!
கூடல சங்கமதேவா!
பாலில் ஆழ்த்துவாய் நீரில் ஆழ்த்துவாய்
பாலில் ஆழ்த்தினும் நீரில் ஆழ்த்தினும் நீயே துணை
கூடலசங்கமதேவா

தம்மைத்தாமே முற்றிலுமாக இறைவனுக்குக் கொடுத்து விட்டார்,, "இதோ நான் என்னை உனக்குக் கொடுத்து விட்டேன். என்னைப் பாலில் போட்டாலும் சரி, நீரில் போட்டாலும் சரி" என்று வேண்டிக்கொண்டார்.

என் ஆபத்து சுகம் துக்கம் எல்லாம் நீயே பாரையா;
மற்றுயாருமில்லை; ஹரஹர நீயேதானையா
என் தந்தைதாய் நீயே தானையா
கூடலசங்கம தேவா

அவர் உலக வழக்கத்தை எதிர்த்து நடந்தார்; உலகம் அவரைக் கைவிட்டு விட்டது. இப்படிப்பட்ட நிலையில் அவர் சங்கமதேவன் ஒருவனையே திடமாக நம்பினார். என்னைப் புரிந்து கொள்பவர்கள் உன்னைவிட்டால் வேறுயாருமில்லை என்று ஓரிடத்தில் வருந்துகிறார்.

இறைவனின் காட்சிக்காக அவர் மிகவும் ஏங்கியிருக்கிறார். வேண்டி வேண்டி, புலம்பிப் புலம்பி அவர் இறைவனை அழைக்கிறார்.

ஐயா ஐயா என்று அழைத்துக்கொண்டிருக்கிறேன்
ஐயா ஐயா என்று அழுதுகொண்டிருக்கிறேன்
ஓ என்றலாகாதா ஐயா?
எப்பொழுதும் உன்னையே அழைத்துக்கொண்டிருக்கிறேன்
ஓ என்னாமல் மௌனமேன் கூடலசங்கம தேவா?

அவரது அழைப்புக்களுக்கு ஓ என்று ஓசையிடாமல் மௌனமாக இருந்து விடுகிறான் இறைவன். அவர் இறைவனை வித விதமாக அழைத்த தோடல்லாமல் வேண்டியும், அழுதும், புலம்புகிறார்.

சேற்றில் விழுந்த பசுவைப் போல திசை திசை நோக்கிக் கூவுகிறேன்
ஐயோ! உதவுவார் யாருமில்லை ஐயகோ!
பசுவென்றென்னை கூடலசங்கமதேவா
கொம்பைப் பிடித்துத்தூக்குவாய்.
காட்டில் வழிதவறிய பசுவைப்போல
'அம்மா, அம்மா' என்று அலறுகிறேன்
'அம்மா, அம்மா' என்று கதறுகிறேன்
'வாழ்ந்துபோ' என்றருளாயோ
கூடலசங்கம தேவா!

தன்னைச் சேற்றில் விழுந்த பசுவினைப் போல என்று கூறிக் கொள்ளுகிறார். காட்டில் திசைதவறி கத்திக்கொண்டு நாலாபக்கங்களிலும் அலைகின்ற பசு நான் என்று கூறிக் கொள்கிறார். "யாருக்கும் யாருமில்லை, கெட்டார்க்கு உறவில்லை" என்பது அவரது முந்தின அனுபவம். அதனால் 'உலகத்தின் உறவினனான' கூடலசங்கமனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். இறைவன் பலமில்லாதவர்களுக்கு பலமாகவும், அனாதைகளுக்கு ஆதரவாளனாகவும், கீழே விழுந்தவர்களுக்கு ஊன்று கோலாகவும், நொந்தவர்களுக்கு ஆறுதல் அளிப்பவனாகவும் விளங்குகிறான்.

ஆனால் சில சமயங்களில் இறைவனின் மௌனத்தின் பொருள் விளங்காமல் தம்மேலே ஏதோ குறையுள்ளது என்று எண்ணிக் கொள்வார். தமக்கு அவன் மேலிருக்கும் நம்பிக்கை போதாது; தமது பேச்சில் பக்தியிருந்தும செயலில் பக்தியில்லை போலத் தெரிகிறது. "சொல்லுக்கு ஏற்ற செயலைக் கண்டால் கூடலசங்கமதேவன் உள்ளே இருப்பான்", இது இவருக்கு முந்தின சிவத்தொண்டர்களின் வாழ்வில் நடைபெற்ற நிகழ்ச்சியாகும். அதனாலேயே மீண்டும் மீண்டும் அத்தொண்டர்களை அவர் நினைவு கூருகிறார். சிந்து பல்லாளனின் மனைவியை இறைவன் கேட்டபொழுது அவன் அவளைக் கொடுத்து விட்டதை நினைக்கிறார்; சிறுத் தொண்டன் தனது மகனைத் தரவேண்டும் என்று கேட்கப் பட்ட பொழுது அவன் தனது மகனின் உடலைச் சமைத்துக் கொடுத்ததை எண்ணிப் பார்க்கிறார். தாசிம்மய்யன் வெகு சிரமப்பட்டு நெய்து விற்பனைக்குக் கொண்டு சென்ற துணியை வீரசைவ அன்பர் வடிவிலிருந்த சிவன் கேட்டு வாங்கிக் கொண்டதும், அதைக் கிழித்துப் போட்டுக் கொண்டதும் அவர் மனதிற்கு வந்தன. அத்தகைய நாயன்மார் களைப் போலவே தமக்கும் உண்மையையும், நேர்மையை யும், தன்னை முற்றிலும் இறைவனுக்கு வழங்கிவிடும் நல் எண்ணத்தையும் அருளவேண்டும் என்று வேண்டுகிறார். அவர்கள் நடந்து காட்டிய பாதையில் தன்னாலும் நடக்க முடியுமா என்று எண்ணி சில சமயங்களில் பயப்பட்டதும் உண்டு.

இதற்கிடையில் அவர் திருமணம் செய்து கொண்டார். உலகையும் கட்டிக்கொண்டார். அரச பதவியில் இருந்து அவர் பெற்ற அனுபவங்கள் மிகப் பல. அவற்றில் கசப் பானவையே அதிகம். இல்வாழ்க்கையில் புறஈர்ப்புச் சக்திகள் ஏராளம். அவை வெகு எளிதாக ஒரு மனிதனைத் தன்னலப் பிடியில் தள்ளிவிடுகின்றன; இறைவனை நினைக்கவிடாமல் செய்து விடுகின்றன.

அவர் தமது உலக வாழ்வில் பல தொல்லைகளை அனுபவித்தவர். சமுதாயத்தைச் சீர்திருத்தப் புறப்பட்ட அவருக்கு பல தொல்லைகள் எதிர்ப்பட்டன. ஆனால் இவற்றினால் அவர் மனம் வாடிவிடவில்லை.

நம்பியிருந்தால், மெச்சியிருந்தால், முழுதும்
மூழ்கியிருந்தால்
உடலைப் பரிட்சை செய்து பார்ப்பாய் நீ
மனதைப் பரிட்சை செய்து பார்ப்பாய் நீ
செல்வத்தால் பரிட்சை செய்து பார்ப்பாய் நீ
இவையெல்லாவற்றிற்கும் அஞ்சவில்லையெனில்
பக்தரைக்காப்பான் கூடல சங்கமதேவன்

தாம் எதிர்கொண்ட தொல்லைகளை இறைவன் தமக்கு அளித்துள்ள சோதனைகள் என்று கொண்டார். சோதனைகள் அவரது சாதனைகளை அதிகப்படுத்தினவே ஒழிய அவை அவரை வேதனை கொள்ளச் செய்யவில்லை.

பிஜ்ஜளனிடம் கருவூல அதிகாரியாக வேலை பார்த்து வந்த அவருக்கு ஓய்வு இல்லாத வேலை. அது அவரது முன்னேற்றத்திற்கு ஏற்ற வேலை அல்ல. ஆனால் அந்த அலுவலை அவர் ஏற்றுக்கொண்டு கடமையுணர்வுடன் செயலாற்ற வேண்டியிருந்தது. அவரது அலுவல்களுக்கு இடையில் குரு, லிங்கம், மெய்யன்பர்கள் பூசை செய்ய நேரம் சிக்குவது அரிதாயிற்று.

பொன்எனும் நாயை நச்சி உனைநான் மறந்தேன் ஐயா
பொன்தேடப் பொழுதல்லது சிவனைத் தொழப்
பொழுதில்லை
நாற்றத்தை விரும்பும் நாய் அமிர்தத்தைச் சுவைக்க
அறியுமோ
கூடலசங்கம தேவா,

ஒரு வசனத்தில் தனது பொழுது முழுவதும் காய்ந்த சாணத்தைப் பொறுக்குவதிலேயே கழிந்துவிட்டது; சமையல் செய்து உணவு உண்ண நேரம் இல்லையே என்று அவர் விவரிக்கிறார்.

ஆனால் இக்காரணங்களாலெல்லாம் அவர் இல் வாழ்க்கையை விட்டுவிடவில்லை. அவர் எங்காவது சென்று தனிமையிலிருந்து தமது அறநெறிச் சாதனைகளை மேற் கொண்டிருந்திருக்கலாம். அப்படிப்பட்ட துறவிகளும் இல்லாமலில்லை. ஆனால் துறவறம் அவருக்கு நல்வழியாகப் படவில்லை. தமது வீடுபேற்றுடன் இவ்வுலகமும் வீடுபேறு எய்தவேண்டும் என்ற பெரிய அவர்க் கொண்டிருந்தார். அதனால் அவர் இல்வாழ்வையே சிறந்தது என்று கருதினார்.

அவர் அதிகாரத்திலிருந்த பொழுது சிற்சில சமயங்கள் தாம் பிறப்பால் பிராமணரென்றும், அதிகாரத்தால் பிறரை விடப் பெரியவர் என்றும் எண்ணங்கள் வந்து அதனால் அகங்காரமும் தலைகாட்டியதுண்டு. அப்படிப்பட்ட சூழ் நிலைகளில் "உத்தம குலத்தில் பிறந்தேன் என்னும் சுமையை இறக்கிவிடையா" என்று சிவனை வேண்டிக் கொள்கிறார். பிறரது புகழ்ச்சிகள் அவரைக் கவர்ந்திருக்கின்றன. ஆனால் அவர் மிகவும் எச்சரிக்கையுடன் இருந்து அவற்றிலிருந்து தப்பினார். தம்மைப் புகழ்ந்து புகழ்ந்து சூலத்தால் குத்த வேண்டாம் என்று வேண்டிக்கொண்டுள்ளார். குலஅகந்தை, செல்வ அகந்தை போன்றவற்றை அவர் வென்றார். புகழ் என்பது மிகவும் நுண்ணிய ஓர் எதிரியாகும். அதைப்போல கேடு விளைவிக்கக் கூடியது வேறேதுமில்லை. அதனைப்பற்றி யும் அவர் கவனத்துடன் இருந்தார்.

அவரது பக்தி சாதனையைக் கேள்விப்பட்டு அவரது வீட்டிற்கு வந்த மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் ஆவார்கள். அவர்களுக்கெல்லாம் அவர் தமது திறனுக்கும் அதிகமாக

பொருட்களை வழங்கிவந்திருக்கிறார். 'நான் கொடுப்பவன்' என்று அவர் ஒருமுறை தற்பெருமைப்பட்டுக் கொண்டதாக அல்லம பிரபு தெளிவாகக் கூறியுள்ளான்(விவரங்கள் பின்னர் தரப்பட்டுள்ளன.) அவர் இவ்வாறு பாதை தவறி நடந்த பொழுதெல்லாம் சன்ன பசவண்ணன், அல்லமன், மடிவாள மாசிதேவன் போன்ற சிவத்தொண்டர்கள் அவரைச் சரியான பாதைக்குக் கொண்டு வந்தனர். அவரைத் தமது மகனைத் திருத்துவதைப் போலத் திருத்தினர்; தமது தலைவன் என்று எண்ணி நடந்துகொண்டார்கள். பிறர்கள் எப்படியோ, பசவண்ணர் மட்டும் வழிதவறிச் சென்றுவிடலாகாது என்ற சிந்தை அவர்களுக்கிருந்தது. தங்களது புரட்சிக்கும், சீர் திருத்தத்திற்கும் மையமாக விளங்கிய பசவண்ணரின் வாழ்க்கை நன்கு ஒளிவிட்டு பிரகாசிக்கும்படிப் பார்த்துக் கொண்டனர்; அதில் கண்ணுங் கருத்துமாக இருந்தனர்.

பசவண்ணர் தமது மனதை மிகவும் சுத்தமாக வைத்துக் கொண்டிருந்தார். தமது மனதின் மூலை முடுக்குகளில் இருந்த பொல்லாத எண்ணங்களையெல்லாம் எடுத்தெறிந்து விட்டார். சிவனில் நம்பிக்கையை வளர்த்துக்கொண்டார். இந்நம்பிக்கை மேன்மேலும் வளர வேண்டுமென்றால் இறைவன் பால் ஒருமனதான எண்ணத்துடன் அதி தீவிர ஈடுபாடு கொள்ளவேண்டும். அப்படிப்பட்ட சமயத்தில் தான் நம்பிய தெய்வமே அவனுக்கு எல்லாமுமாக இருக்கும்; வேறு எப்பொருளிருப்பினும் அவை இரண்டாந்தரமான தாகவே அமையும். வேறு தெய்வங்களைப் பற்றிய இகழ்ச்சி யும் அச்சமயத்தில் அவனது வாயிலிருந்து வரக்கூடும்.

இருவர் மூவர் என்று மகிழ்ந்து பேசவேண்டாம்;
ஒருவனே காணீரோ, இருவர் என்பது தவறானபார்வை!
கூடலசங்கமதேவனல்லாது வேறில்லை என்றது வேதம்!

என்னும் நம்பிக்கை பசவண்ணருக்கு இருந்தது. பல வசனங் களில் விஷ்ணு, பிரம்மா, போன்ற தெய்வங்களை இகழ்ந்து

பேசியதும் உண்டு. மெய்யன்பர்களின் வாழ்வில் இது ஒரு நிலை என்று நாம் கொள்ளவேண்டும்.

அவரது அறநெறிச் சாதனைகள் வெளிப்படையானதாக இருந்ததிலிருந்து சிறிது சிறிதாக அந்தரங்கமானதாக மாற ஆரம்பித்தது. இறைவன் அவரது பக்தி சாதனைகளை ஏற்று அருளினான். இறையன்பன் தான் வேண்டி வேண்டி அழுது அரற்றி இறையருள் என்னும் ஒளியைக்காணும் முன்பு அவன் அவனைச் சுற்றியுள்ள பேரிருளில் சிக்கிக் கொள்ளவேண்டியிருக்கும். அப்பொழுது தனது சாதனைகள் யாவும் பொருள் இல்லாது போய்விட்டனவே, தன்னால் ஒளியைக் காண்பது இயலாது, தன்னை இறைவன் கைவிட்டு விட்டனன் என்பனபோன்ற எண்ணங்களினால் அவன் மனமுடைந்து போகின்றான். இந்த தோல்வியின் காரணமாகத்தான் அஞ்ஞானமெனும் பேரிருளில் முற்றிலும் முழுகிப்போய் விட்டேனே என்ற விரக்தியின் எல்லையிலேயே ஒளி பிறக்கிறது.

பசவண்ணர் இத்தகைய தோல்வியைக் கண்டிருக்கிறார். இந்த இகவுலக துன்பத்தில் வாடுபவனையும், பரலோகத்திலிருந்து நெடுந்தூரத்தில் உள்ளவனையும் ஏன் பிறப்பித்தாய் என்று அவர் புலம்புவதைக் கேட்டால் கல்மனமும் கசிந்துருகும். நான் இல்வாழ்க்கை என்னும் கடலில் முழுகிப் போய் விட்டேன், எனவே இனி அதைக் கடக்கமுடியாது என்று துவண்டு போவதைக் காணலாம்.

காலில் கட்டிய குண்டு, கழுத்தில் கட்டிய குண்டு
முழுக்குகிறது குண்டு அமிழ்த்துகிறது குண்டு
இந்த இல்வாழ்க்கை கடலைத் தாட்டி
இறைவனே என்னைக் காப்பாற்று கூடலசங்க ஐயா.

இது ஒருவகையான துன்பமான நிலை, ஒருபுறம் உலகம் தன்னைக் கீழே இழுக்கிறது; ஆனால் மறுபுறம் பக்தி

சாதனை அவரை மேலே தூக்குகிறது' முழுகுவதற்கும் வழியில்லை, எழுவதற்கும் வழியில்லை. இது பெருந்துயரை உண்டாக்கும் ஒரு நிலையாகும்.

எத்தனை நாள் நீரில் கல் அமிழ்ந்திருந்தால் என்ன,
நனைந்து மிருதுவாக வல்லதோ?
எத்தனை நாள் உன்னை வழிபட்டால் என்ன ஐயா,
நெஞ்சில் பக்தி இல்லாதவரை?
பணங்காக்கும் பூதமாய் மாறியதென் வாழ்வு
கூடல சங்கம தேவா

இவ்வளவு காலம் அவர் சாதனைகள் செய்தும் அவையாவும் பயனற்றுப் போய்விட்டன என்று வருந்துகிறார். நிலத்தின் அடியில் மறைத்து வைக்கப்பட்டுள்ள செல்வத்தை பிசாசு காத்துவருகிறது. ஆனால் அவ்வாறு காத்துக்கொண்டிருப்பதே அதன் வேலை; செல்வத்தால் அதற்கு ஏதும் இன்பமில்லை. தன்னுடையதும் அப்படிப்பட்ட நிலையாகிவிட்டதே என்று அவர் மிகவும் துன்பப்பட்டார்.

ஆனால் இப்படிப்பட்ட தோல்விகளின் பயனாகவே நமக்கு இறையொளிகண்ணுக்குப்புலனாகிறது. சங்கமதேவன் இறுதிவரைக்கும் அவருக்கு அருள் வழங்கி வந்தான்.

கண்ட கனவிலும் புதையலே கண்டேன் ஐயா!
விடமுடியாத புதையலே கண்டேன், ஐயா!
கூடலசங்கம தேவன் எனும் பெரும்புதையலைக்
கண்டு, விடமாட்டேன், ஐயா!

இறைவன் இதுவரை அவரது மனதில் புதையலாக அதாவது மறைந்திருந்தான். தனது உள்ளங்கையின் மேலிருந்த இட்டலிங்கமானது அவரது மனதை ஆட்கொள்ளும் லிங்கமாயிற்று; இறைவன் தன்னைவிட்டு வேறு எங்கும்

இல்லை, தனக்குள்ளேயே இருக்கிறான் என்று உணர்ந்து கொண்டார். இறைவன் அவருக்கு தனது திருக்காட்சியை யருளினான்.

பொன் செருப்பணிந்தவன், பாம்பு கடித்த செஞ்சடையன்
உடலில் விபூதி அணிந்தவன், கரத்தில் கபாலம்
பிடித்தவன்
அர்த்தநாரியானவன், பாணனின் வாயில்காத்தவன்
சுந்தரருக்கு தூது நடந்தவன்
சோழனுக்குப் பொன் மழை பெய்வித்தவன்
என் மனதிற்கு வந்தவன், மெய்யன்பர்களின்
இதயத்திலிருப்பவன்
செய்யும் பூஜையை ஒப்புக்கொள்பவன் கூடலசங்கையன்
என்பவன்

இறைவன் தன்னிடம் மட்டுமில்லை, எல்லா இடத்திலும் அவன் இருக்கிறான் என்பதை

எங்கெங்கு நோக்கினும் அங்கெல்லாம் நீயே, தேவா!
எண்ணற்று விரிந்த பொருள்களின் வடிவெலாம் நீயே,
தேவா!
அண்டத்தின் கண்கள் நீயே; அண்டத்தின் முகமும் நீயே!
அண்டத்தின் தோள்கள் நீயே, அண்டத்தின் தாள்கள்
நீயே!
தேவா, கூடல சங்கம தேவா!

என்று விளக்கிக் கூறுகிறார். இறைவனின் திருக்காட்சி அவருக்குக் கிடைத்த பொழுது அவர் அடைந்திருக்கக் கூடிய பேரின்பமானது விவரிக்க இயலாதது. அந்த இன்ப அனுபவத்தில் அவர் எல்லாவற்றையும் மறந்தார். தன்னைத் தான் முற்றிலுமாக மறந்தார். கண் முழுதும் இன்ப உணர்ச்சி; உடல் முழுதும் சிலிர்ப்பு. அதனால் உடல்

முழுவதும் ஒருவகையான உணர்வு இறைவனின் ''நோட்டம் எல்லையில்லா இன்பம் கூட்டம் பேரின்பம்'' என்றாயிற்று. ''நதியுடன் நதி கல''ந்ததைப் போலாயிற்று.

பசவண்ணரின் சாதனை துவைத நெறியிலிருந்து ஆரம்பமாயிற்று. நான் பசு, அவன் பசுபதி என்பதே அவரது ஆரம்ப நம்பிக்கை. அவனுக்கும் எனக்கும் ஆண்டவன், அடிமை என்னும் உறவே உள்ளது என்றும் நம்பினார். அவர் தம்மை சதியென்றும் பரமாத்மனைப் பதியென்றும் கருதி அவன்மேல் அன்பு செலுத்திவந்தார். இதை ''மதுர பாவம்'' என்று அழைக்கின்றனர். பசவண்ணர் சன்னபசவண்ணனுக்கு உபதேசம் வழங்கியபொழுது தான் சிவனைத் திருமணம் செய்துகொண்டதாகக் கூறியதைச் சன்னபசவண்ணன் இவ்வாறு கூறுவதைக் காணலாம்; ''கூடலசங்கமதேவன் ஒருவனே நிலையானவன்; நாம் எல்லோரும் நித்திய சுமங்கலிகள்'' இறைவனுக்கு என்றும் இறப்பு இல்லை யாதலால் அவனை வழிபடுபவர்கள் யாவரும் நித்திய சுமங்கலிகள். வீரசைவ சமயத் தொண்டர்களில் அக்கமகா தேவி, கஜீச மசனய்யா, உரிலிங்கதேவன் போன்றவர்கள் யாவரும் இம்முறையிலேயே இறைவனை வழிபட்டனர். பசவண்ணரும் சில காலம், இம்முறையில் இறைவனைப் பூசித்து வந்தார். ''இறைவனை அடைய 'தலைவன் தலைவி' என்னும் பாவனை போதாதா!'' தலைவன்-தலைவி பாவனையில் இறைவனை எளிதில் அடையலாம் என்று ஒரு இடத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகமெலாமறிய எனக்கு ஒரு கணவன் உண்டு,
நான் சுமங்கலி என்றும் சுமங்கலி
கூடல சங்கமன் என்று எனக்கொரு கணவன் உண்டு.

அவனது திருவருளைப் பெற்ற பின்னர், அவனை ஏற்றுக் கொண்ட பின்னர் அவருக்கு வேறு எந்த ஆண் மகனையும் பிடிக்காமல் போய்விட்டது.

மனதிற்குப் பிடிக்காத புருஷன்
மனதில் நிலைப்பதில்லை, கேள் தோழி
சிவனல்லாது வேறு புருஷர்கள்
எனக்குப் பிடிக்காது கேள்தோழி
கன்னியாயிருக்கும் போது கூடினேன்
சிறு வயதில் உன்னுடன் வாழ்ந்தேன்
உன் ஆணை ஐயா, கூடலசங்கமதேவா

அவர் தனது குமரிப்பருவத்திலிருந்தே அவரை ஏற்றுக் கொண்டார். ஆனால் தலைவன் தலைவியை ஏற்றுக் கொள்ளாமல் பிரிந்து சென்றுவிட்டால் தலைவியானவள் படும் பிரிவுத் துயரம் மிகப் பெரியது. ''அன்பு பாராட்டு பவரைக் கொல்லத் தீட்டியகத்தி எதற்கு தோழி? அவர் வெறுத்தாலே போதாதா?'' என்று கஜேச மசணையன் கூறுவதைப்போல இறைவன் தன்னை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்று அடியவனுக்குத் தெரியவந்த பொழுது அவன் படும்துயர் சாவுக்குச் சமமானது. அந்த அனுபவத்தை அக்கமஹாதேவியின் கூற்றில் சொல்லவேண்டுமென்றால் ''நெருப்பில்லாத சுவாலை... வீச்சமில்லாத காயம்'' இப்படிப் பட்ட பிரிவுத்துயர்பற்றி விளக்கும் செய்திகள் பசவண்ணரின் பல வசனங்களில் காணப்படுகின்றன. தனது தலைவன் வர வண்டும் என்று தனது மனமென்னும் வீட்டை அலங்கரித்து 'கண்களே உயிராகி' காத்திருந்ததாகவும், அவன் வருவானோ மாட்டானோ என்று நிலைதடுமாறிப் போயிருந்ததாகவும் ஒரு வசனத்தில் குறிப்பிடுகிறார். ஆனால் இறைவனோ கருணையே வடிவானவன். தனது

தலைவி தனக்காகக் காத்து ஏங்கிக் கொண்டிருப்பதையும் மெய்மறந்திருப்பதையும் அறிந்து வந்து சேர்ந்துவிட்டான்.

புருஷனின் வீட்டுவிஷயத்தை என்னவென்று
 சொல்வேன் தோழி!
காமஇச்சை இல்லை
கண்களின் உள்ளேயிருக்கும் தீய பண்புகளைக்
 கலையாமல் பாரேன்
கையைக் கழுவாமல் தொடேன்
காலைக் கழுவாமல் சேரேன்
இப்படி சர்வாங்கமும் சுத்தமாயிருந்த காரணத்தால்
கூடலசங்கமதேவன் என்னைக் கூடிக்கொண்டான்தோழி

தலைவனுக்கு தலைவியின் திருக்காட்சி கிடைத்துவிட்டது, தலைவி பசவண்ணர் தலைவன் கூடலசங்கமனுக்கு தன்னைத்தான் அர்ப்பணம் செய்துவிட்டார்.

இவ்வாறு, இறைவனுக்கு அடிமை பூண்டொழுகும் நிலையிலும் தலைவன்-தலைவி நிலையிலும் பசவண்ணர் இறைவனின் திருவருளைப் பெற்றார். அவரது இச்சாதனை அத்துடன் நின்றுவிடவில்லை: மேற்கொண்டு சென்றது. அவரது மன வளர்ச்சியின் பயனாய் தானும் இறைவனும் வேறு வேறு அல்ல, ஒன்றே என்று எண்ணும் அத்துவைத நிலையை அடைந்தார். இறைவன் நெறிகளின் ஆரம்பத்தில் ஒன்றாக இருந்து இரண்டாகப் பிரிந்து தற்பொழுது மீண்டும் ஒன்றாக ஆனான்.

என்னென்பேன் என்னென்பேன் ஒன்றிரண்டானதை?
என்னென்பேன் என்னென்பேன் இரண்டொன்றானதை?
என்னென்பேன் என்னென்பேன் அழியாப் பெருமையை
வள்ளல் கூடலசங்கமதேவன் தானேயறிவான்.

அவ்வனுபவத்தை 'என்னென்பேன், என்னென்பேன்' என்று உணர்ச்சிப் பெருக்கெடுத்துக் கூறியுள்ளார்.

பூசையுள்ளவரை லிங்கத்தைப் பாடினேன்
பேச்சுள்ளவரை ஜங்கமரைப் பாடினேன்
நாவுள்ளவரை பிரசாதத்தைப் பாடினேன்
இம்மூவகையழிந்த பிறகு
என்னையே நான் பாடினேன், காணாய், கூடலசங்கம
தேவா!

தானே இறைவனின் உருவமாக இருக்கும் பொழுது தம்மைக் குறித்துத் தானே பாடிக் கொண்டார்.

கம்பீரமான சக்தியின் மஹாசக்தியுள்ளே உள்ளசக்திக்கு
சக்தியானேன் ஐயா
கூடலசங்கமதே வையன் என்னும் பெரும் ஒளியின்
ஒளியில் இருந்தேன் என்று
சொல்ல சொல்லை அறியேன் என்பதை என்னென்பேன்
ஐயா

தான் ஒளியில் ஒளியாகிவிட்டேன் என்று சொல்லக்கூட அவருக்குச் சொல் கிடைக்கவில்லை. இது ஒரு மிகப் பெரிய அனுபவம் இத்தகைய அனுபவத்தின் பொழுது சொற்கள் பிறப்பதில்லை; அங்கு எல்லையில்லாப் பேரின்பம் மட்டும் இருக்கிறது. அத்தகைய இன்பத்திலிருந்து கீழே இறங்கி வந்த பொழுது அது எனக்குத் தெரியவில்லை; அவனுக்கு மட்டுமே தெரியும் என்கிறார்.

மொத்த இருளின் இருட்டைக் களைந்தவனைக் காணீர்
ஒளிக்கே ஒளி சிம்மாசனமாகி
ஒளி ஒளியைக் கூடிய சேர்க்கையை
கூடலசங்கையன் தானே அறிவான்.

கல்லமடத்தின் பிரபுதேவர் என்பவர் 'பக்தி என்பதே இரண்டாக இல்லாமல் ஒன்றாவது. அவ்வாறு இரண்டாக இல்லாது ஒன்றாக இருப்பதே முக்தி' என்கிறார். பசவண்ணர் இப்படிப்பட்ட முக்தியைப் பெற்று சீவன் முக்தனானார். துவைதத்திலிருந்து ஆரம்பமான அவரது சாதனை அத்து வைதத்தில் சித்தியில் முற்றுப் பெற்றது. அவரது மனதின் எண்ணம் தடைப்பட்டு பேரமைதியைச் சேர்ந்தது. இவ்வாறு ஒளியைக் கண்டவருக்கு அப்படிப்பட்ட பேரின்பச் சூழ் நிலையை அனுபவித்தவருக்கு எப்பொழுதும் அதிலேயே நிலைத்து விட வேண்டும் என்ற இச்சை இருந்தது. அப்படிப் பட்ட ஒரு தன்மை அதற்கிருக்கிறது. புத்த சமயத்தின் மகாயானப் பிரிவின் படி புத்தன் சுமேர் என்னும் மலையின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு தனது மிகப் பெருஞ் சாதனையின் விளைவாக அடைந்த 'நிர்வாண' த்தில் மெய் மறந்து போய் விட இருந்த பொழுது, புத்தன் தம்மிட மிருந்து என்றென்றும் பிரிந்து சென்று விடுவான் என்று எண்ணி பூலோக மக்கள் கூவி அழைக்கத் தொடங்கினர். அப்பொழுது தனக்குக் கிடைத்திருந்த 'நிர்வாண' த்தைக் கை விட்டு விட்டு உலகில் துன்பங்களையும் துயரங்களையும் அனு பவித்து வருபவர்கள் இருக்கும் வரை தனக்கு அது வேண் டாம் என்று கூறி அங்கேயிருந்து இறங்கி வந்து உலகிற்காக உழைக்க ஆரம்பித்தார் என்று கூறப்படுகிறது. அவ்வாறே பசவண்ணர் தமக்குக் கிடைத்த மிகப்பெரும் தெய்வ அனுப வங்களில் மூழ்கி விடாமல் உலகத்திற்காக இல்வாழ்க்கையை மேற்கொண்டு வாழ்ந்தார்; உழைத்தார்.

இது மிகவும் சிறப்பான ஒரு செய்தி. அவருக்கு பக்தி சாதனைக்காக உலகத்தை, உலகவாழ்வை விட்டு விட வேண் டும்என்னும் எண்ணமில்லை. அவரில் இல்வாழ்க்கை மற்றும் துறவறம் என்னும் இரு நெறிகளும் மிகவும் இயல்பான மற்றும் சிறப்பான முறையில் கலந்திருந்தன. அவரது தனித்

தன்மை பெருமை படைத்தது. அரசில் பொறுப்பேற்று பிஜ்ஜளனின் அரசில் பணியாற்றினார்; சீர்திருத்தக்காரராகி சமுதாயத்தை மாற்றும், முன்னேற்றும் பணியில் ஈடுபட்டார்; அறநெறி ஒன்றின் சிறப்பான தலைவராகி அதனைப் பரப்புதற்குப் பெரும்பாடுபட்டார்; சிவநெறிச் சாதகராகி இறை நெறியின் மிகப்பெரும் சித்திகளைக் கைக் கொண்டார் வசன இலக்கிய ஆசிரியராகி வசனங்கள் இயற்றியுள்ளார். இவ்வாறு அவரது தனித்தன்மை பல கோணங்களில் சிறப்புப் பெற்று விளங்கியிருக்கிறது. அவர் தமது வாழ்வில் பலவிதமான பல சிறப்பட்ட சாதனைகளை சாதித்திருந்தார்.

பசவண்ணர் நம்மைப் போலவே பிறந்து வளர்ந்தவர். அவருக்குள் மனிதனுக்கு இயல்பாக இருக்கும் எல்லா நல்ல தீய எண்ணங்களும் இருந்தன. அவரும் எல்லோரையும் போல காமம், கோபம் போன்ற இயல்புகளையும் கொண்டிருந்தார். ஆனால் அவர் அத்தகைய கெட்ட இயல்புகளை அடக்கி அவற்றை வென்று வாழ்ந்தார். அவர் நம்மைப் போலவே மனிதராகத் தோன்றுவதால் அவர் நம்மை மிகவும் எளிதாகவும் வேதமாகவும் ஈர்க்கிறார். அவர் மனிதத்தன்மையிலிருந்து தெய்வத்தன்மை பெற்ற ஒரு மகான் ஆவார்.

பசவண்ணரின் நெறியில் மிகவும் முதன்மையானது ஒருவன் முதலில் தன்னைத் தானே சீர் செய்து கொள்ள வேண்டும் என்பதேயாகும். அவர் தன்னைத் தானே சிறிதும் ஈவிரக்கமில்லாமல் சோதனைகளுக்கு ஆளாக்கிக் கொண்டார். பிறரைப்பொருத்த விஷயங்களில் அவர் சிறிது கருணை காட்டியதுண்டு, அதிலும் குறிப்பாகச் சிவத் தொண்டர்களின் விசயத்தில் சற்று கூடுதலாகவேபொறுமை காட்டியுள்ளார். ஆனால், தன்னைப் பொறுத்து விஷயங்களில் அவற்றிற்கு அவசியமே இல்லை, அவர் தமது

வாழ்வை ஒரு திறந்த நூலைப் போலவே ஆக்கியிருந்தார். தன்னிடமிருந்த நற்குணங்களை எவ்வாறு விவரித்துள்ளாரோ அவ்வாறே பிற குணங்களையும் விவரித்துள்ளார். அவரது மனம் கண்ணாடியால் ஆன பாத்திரத்தைப் போன்றது. உள்ளே இருப்பவை யாவும் அதில் தெரிகின்றன. அவரது இத்தகைய இயல்பு வெகு எளிதில் எல்லோரது கவனத்தையும் ஆட்கொண்டது. ஏனென்றால் யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் அவரது மனதுடன் தொடர்பு வைத்துக் கொள்ள இயலும் என்னும் நிலை இருந்தது.

அவரிடம் இருந்த மற்றொரு பெரிய குணம் என்னவென்றால் தன்னைத் தான் அடிக்கடி திருத்திக் கொள்ளும் பேரவா. தம்மைப் பிறர் விமர்சிக்க அவர் வாய்ப்புக் கொடுத்தார். எப்பொழுதும் பிறர் தம்மைப் பாராட்டிக் கொண்டேயிருக்க வேண்டும் என்று அவர் எண்ணவில்லை. தனது குறைகளைச் சுட்டிக் காட்டியவர்களிடமும் அன்பு பாராட்டினார். ஒரு வசனத்தில் அவர்

அடித்தவரைக் காப்பாற்றியவர் என்பேன்
திட்டியவரைச் சுற்றம் என்பேன்
நிந்திப்பவரைத் தந்தை தாய் என்பேன்
என்னை ஆளாக்கிக் கொண்டவரை எஜமானரென்பேன்
குறை கூறியபவரை ஜன்ம பந்து என்பேன்
புகழ்பவர் என்னைப் பொன் சூலத்தால் குத்தியவர்
கூடலசங்கமதேவா.

என்று குறிப்பிடுகிறார். முன்னேறும் ஒரு மனிதனின் குணமே இதுவாகும். அவரது பேச்சிலோ அல்லது செயலிலோ குறையிருப்பதாக உணர்ந்த மறுநிமிடமே அதை பிறரிடம் சொல்லி விடுவார். பின்னர் அத்தகைய தவறுகள் மீண்டும் தன்னால் செய்யப்படாதவாறு பார்த்துக் கொள்வார். ஒரு சில தடவை

கள் அவரது செயலைப் போல் சொல்லும் இல்லாமலிருப்பது அவரை மிக்க துயரில் ஆழ்த்தியது. கள் பானையை வெளியில் சுத்தம் செய்தால் அதனால் என்ன பயன்? எனவே உலகின் குறைகளை திருத்துவதற்கு முன் அவர்களது குறைகளைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்று கூறி அதன்படியே அவர் தமது குறைகளையும் திருத்திக் கொண்டார்.

அவர் பன்னிரண்டாம் நூற்றாண்டின் புரட்சிக்கு அடி கோலியவர். புரட்சிக் கொடியை எடுத்துப் பிடித்தவர். எல்லா வசன இலக்கிய ஆசிரியர்களும் இவ்வுண்மையைக் கூறி யுள்ளனர். ஆனால் அவர் மட்டும் தன்னை அப்படிப்பட்டவர் என்று எப்பொழுதும் கூறிக் கொள்ளவில்லை. அவர் எப் பொழுதும் பின்னணியிலேயே இருக்க முயற்சி செய்தார். அவரது தனித் தன்மையின் ஒரு சிறப்பான அம்சம் என்ன வென்றால் நெறிப்படி நடப்பது. அவர் தமது குறைகளை அறிந்திருந்ததால் அவர் முற்றிலும் நெறிப்படி நடப்பவராக இருந்தார். அவ்வாறே, தான் சிறந்த மனிதர்கள் என்று பாவித்திருந்த திருத் தொண்டர்களுடன் தம்மைத் தாம் ஒப்பிட்டுக் கொண்ட போது தாம் மிகவும் சிறியவர் என்று தோன்றியது. அவரைப் பின்பற்றிய அன்பர்கள் அவர் இல் வாழ்க்கை நெறியிலும் அற நெறியிலும் பெற்ற சிறப்பைக் கண்டு புகழ்ந்திருக்க வேண்டும். இதனால் சில சமயங்களில் அவர் அகந்தை கொள்ளும்படியாயிற்று. ஆனால் உடனே அத்தகைய அகந்தையை, கர்வத்தை, அகம்பாவத்தைத் தூக்கி எறிந்து விடுவார். 'தனது வீட்டில் நடைபெற்ற வழி பாட்டுக் கூடங்களிலும் ஒரு முறை கூட அவர் தலைமை இடம் பெற்று அதில் வீற்றிருக்கவில்லை. பிறர் தம்மைப் பார்த்து 'வா, பசவையா' என்று அருகில் அழைத்தாலும் கை கட்டி வாய் பொத்தி ஒரு ஓரமாக ஒதுங்கிச் சென்று உட் கார்ந்து கொள்வார். வீட்டின் உள்ளே மெய்யன்பர்கள் லிங்கத்தை வணங்க ஆரம்பிக்கும் பொழுது இவர் வீட்டின்

வெளியே வந்து வாசற்படியில் நின்று 'சம்போளி, சம்போளி' என்று கூறிக் கொண்டு காத்திருப்பார். 'தன்னை விடச் சிறியவரில்லை, சிவன் அன்பர்களை விடப் பெரியவரில்லை' என்று அவர் திடமாக நம்பினார்.

அவரது சொல்லில் நல்ல பண்பு அதிகமாக இருக்கும். "ஐயா என்றவர்க்கு சுவர்க்கம், டேய் என்றவர்க்கு நரகம்", "மிருதுவான செல்லே எல்லா ஜபங்களும், மிருதுவான சொல்லே எல்லா தவங்களும்" என்று கூறியுள்ளார். அவர் எப்பொழுதும், தான் சொல்லியுள்ளதைப் போலவே, "கட்டிய கையும் பொத்திய வாயும்' உள்ளவராக இருக்க விரும்பினார், வீட்டிற்கு வந்தவர்களை உபசரிக்கும் முறையை இவ்வாறு விளக்குகிறார்.

'எங்கிருந்து வந்தீர்கள்? நலமா?' என்று கேட்டால்
உங்கள் செல்வம் சிதறி விடுமா?
'அமருங்கள்' என்றால் நிலம் பாழாகுமா?
வந்தவருடன் பேசினால் தலையும் வயிறும்
வெடிக்குமோ?

ஏதும் தாராவிடினும் குணமில்லா திருப்பின்
அவர் மூக்கை கூடலசங்கம தேவன் அறுத்தெறியா
திருப்பனோ?

வீட்டிற்கு வத்தவரை 'ஏன் வந்தீர்கள்? நன்றாக இருக்கிறீர்களா?' என்று கேட்பதால் நமது செல்வம் பறந்து போய் விடப் போவதில்லை. 'உட்கார்ந்து கொள்ளுங்கள்' என்று கூறுவதால் நிலம் தேய்ந்து போய் விடப் போவதில்லை. அவரை வரவேற்றுப் பேசுவதால் நமது தலையும் வயிறும்

1. ஒரு புலையன் ஊரின் உள்ளே வரும் போது சம்போளி. சம்போளி என்று கூவிக் கொண்டு வர வேண்டும். அவன் கூவலைக் கேட்டுப் பிறர் ஒதுங்கிச் சென்று விடுவர்.

வெடித்துவிடப் போவதில்லை. அவருக்கு நாம் எதையும் கொடுக்கா விட்டாலும் நல்ல பேச்சையாவது பேசக் கூடாதா?

இப்படிப்பட்டவர்களின் மூக்கை அறுக்காமல் விடப் போவதில்லை 'கூடலசங்கமதேவன்' என்னும் இக்கருத்து பசவண்ணரின் தனித் தன்மையின் இன்னொரு சிறப்பை விளக்குவதாக உள்ளது. நல்லவர்களையும் நல்ல பொருட்களையும் காணும் பொழுது அவர்எவ்வளவு மிருதுவாகப் பழகுகிறாரோ அவ்வளவுக்கவ்வளவு கடினமானவராக மாறி விடுகிறார். கெட்டவர்களையும் கெட்டவைகளையும் காணும் பொழுது தான் கண்ட சமுதாயத்தையும் அதன் குற்றங்குறைகளையும் சாடும் பொழுது எவ்வளவு கடுமையானவராக மாறி விடுகிறார் என்பதற்கு அவரது வசனங்கள் ஆதாரங்களாக இருக்கின்றன. தனது சொந்த விஷயங்களிலேயே கடுமையானவராக இருந்திருக்கும் இவர் பிறரது விஷயங்களிலும் அவ்வாறு இருந்ததைக் கெட்ட குணம் என்று கூறுவது ஏற்புடைத்தல்ல.

அவரது மனம் எவ்வளவு சுத்தமானதாக இருந்ததோ அவ்வளவு அழகானதாகவும் இருந்தது. உலகைக் கண்டு வெகுவாக கோபித்துக் கொண்டார். பாவச் செயல்களைச் செய்பவர்களைக் கண்டு 'ஒரு முறை சரண்' என்று சொல்லுங்கள், உங்களது பாவங்கள் யாவும் பறந்து சென்று விடும்' என்று நயமாக கேட்டுக் கொள்கிறார். மனிதர்களின் விஷயத்தில் மட்டுமல்லாது விலங்குகளின் விஷயத்திலும் அவர் மிகுந்த நேசம் காட்டினார். யாக யக்ஞங்கள் செய்யும்பொழுது விலங்குகளைப் பலியிடுவதை அவர் கண்டித்திருக்கிறார். தமது தொண்டர்கள் மாமிச உணவு அருந்தாமல் தாவர உணவு உண்ணும்படி வழக்கப்படுத்தினார். அவர் அரிசன மக்களிடம் எவ்வளவு அன்புடன் பழகி வந்தார் என்னும் செய்தியை முன்னமே சுருக்கமாகக் கண்டோம் (விவரங்களைப் பின்னர்க் காண்போமாக)

பசவண்ணரின் தனித்தன்மையின் இன்னொரு சிறப்பான அம்சம் என்னவென்றால் அவரது பாவனைகள் இதனால் அவரது வசனங்களுக்கும் கிடைத்திருக்கும் இலக்கியத் தன்மை போன்றனவற்றின் விவரங்களை அடுத்த பகுதியில் காணலாம்.

இவ்வாறு அவரது இயல்பை நாம் ஆராயுங்கால் அவரிடம் ஒரு தலைசிறந்த நாயகனுக்குத் தேவையான எல்லா குணங் களும் சரியான அளவில் இருந்ததைக் காண்கிறோம்.எளிமை, தியாகம், நல்லெண்ணம், மிருதுவான தன்மை மற்றும் கடினத்தன்மை. கவித்திறன் மற்றும் சொற்றிறன் பயமின்மை தூயமனது, தொண்டு செய்யும் மனப்பாங்கு இவையாவும் ஒரு சிறந்த தலைவனின் குணங்கள். அவர் ஒரு சிறந்த தலைவராகவும், சீர்திருத்தக்காரராகவும் இருந்தார். அவரது தனித்தன்மையைக் கண்டு வியந்த மருள சங்கரன் என்பவன் பசவண்ணர் நடந்ததே வழி, எல்லா உயிர்களுக்கும் அவன் சொன்னதே வேதம்' என்று கூறியுள்ளான். 'நான் பசவண்ணராகப் பிறக்க இயலாமற் போய் விட்டதே' என்று புலம்புகிறார் அல்லம பிரபு. அவரே ''சிவநெறியின் கொடி பிடித்து மனித உலகையும் சிவஉலகையும் இணைக்கும் ஏணியாக'' பசவண்ணர் விளங்கினார் என்று புகழ்ந்துள்ளார். இவரது கூற்றையே சன்ன பசவண்ணன் கையாண்டு 'மனிதஉலகையும் சிவன் உலகையும் இணைக்கும் ஏணியாக இருந்தீர்; கல்யாணில் வந்து அவதரித்தீர்' என்றும், நீலலோசனை-பசவண்ணரின் மனைவி 'உண்மையை நடைமுறைக்குக் கொண்டு வந்த குருவே' என்றும் போற்றுகின்றனர். சித்தராமன் அவரது செயல்களைப் புகழ்ந்து சிறப்பித்து 'கருமயோகம் செய்பவர்களைக் கோபித்து கண்டித்தார்' என்று கூறியுள்ளான், மடிவாள மாசிதேவன்

எங்கெங்கு பார்த்தாலும் அங்கங்கு பசவன் என்னும் கொடி
எட்டிப்பார்த்தால் லிங்கத்தின் கூட்டம்
நெருங்கிப்பார்த்தால் பக்தியெனும் ரசமையா

என்று புகழ்ந்து கூறியுள்ளான். அக்காலத்திலேயே பசவண்ணர் ஒரு அதிசயப் பிறவி என்னும் சிறப்பைப் பெற்றிருந்தார். உண்மையிலேயே அவர் ஒரு அதிசய மனிதர் தான்; ஏனென்றால் அவரது வாழ்க்கை முழுவதுமே ஒரு அதிசயம்.

8. அற மற்றும் சமுதாயச் சீர்திருத்தம்

பசவண்ணர் மங்களிவேடத்தில் துவக்கிய சீர்திருத்தச் செயல்கள் ஒரு முறையான அமைப்பை அடைந்தது கல்யாணில்தான்.

பசவண்ணர் பிறப்பிலிருந்தே சீர்த்திருத்தங்களைக் கூறியும் செயல்படுத்தியும் வந்ததை நாம் முன்னரே கண்டோம். ஒரு சீர்திருத்தக் காரன் எப்பொழுதும் தன்னைத் தனது சமுதாயத்திலிருந்தும் தனது அக்கம் பக்கத்தவர்களிட மிருந்தும் பிரித்துக் கொண்டு தனித்து நின்று சமுதாயத்தைக் கூரிய கண்ணினால் பார்க்கிறான். எப்பொழுது ஒருவன் தன்னைச் சுற்றியுள்ள சமுதாயத்தில். தனக்குள்ள தனிப்பட்ட இடத்தை அனுபவித்துக் கொண்டு—அங்குள்ளவை சரியான வையோ இல்லையோ—அதை ஏற்றுக் கொண்டு நடப்பது தனது கடமை என்று கருதி தனது வாழ்வை நடத்திக் செல்கிறானோ அப்போது அவனது வாழ்வு பிரவாகத்தில் வீழ்ந்து விடுகிறது. இவ்வாறு வாழ்வதில் ஒரு வகை யான சிறந்த அனுபவம் இருக்கிறது. உலகியல் வகை யான நன்மையும் இருக்கிறது. ஆனால் சீர்திருத்தக் காரனான ஒருவன் அந்த பிரவாகத்திலிருந்து தனது வாழ்வின் சக்கரங் களைக் காப்பாற்றிக் கொள்கிறான். தன்னை உறுதியாகப் பற்றியிருக்கும் சமுதாயப் பழக்க வழக்கங்களையும் சம்பிர

தாயங்களையும் கட்டுப்பாடுகளையும் தூக்கி எறிந்து விட்டு வெளியேறிவிடுகிறான். அச்சமுதாயத்தில் இல்லாத—அச் சமுதாயத்தவர்களது பார்வையில் பொருள் இல்லாததாகத் தோன்றும்-பார்வையொன்று அவனிடம் தோன்றுகிறது. அதாவது சொந்தமாகச் சிந்திக்கும் திறன் அவனில் வளர்ந்து வருகிறது. இதுவே முதற்படி. சொந்தமாகச் சிந்திக்கும் திறன் என்றால் பிறரது ஆலோசனைகளால் பாதிக்கப்படாத ஆனால் அவற்றின் உதவியை மட்டும் பயன் படுத்திக் கொண்டு தான் தனியனாகி தன்னுடைய தனிப் பட்ட திறமையால் நன்கு சிந்தித்துச் செயல்படுவது என்று பொருள். இத்தகைய சொந்தமாகச் சிந்தித்துச் செயல் படும் திறன் வளரும் பொழுது அவன் எவ்வாறு நல்லெண்ணத் துடன் ஒரு காலத்தில் துவக்கப்பட்ட சில கட்டுத்திட்டங்கள் பின்னர் சடங்காகி சம்பிரதாயங்களாகி அவை ஏன் செயல் படுத்தப்படுகின்றன என்னும் உண்மையான காரணம் மறக் கப்பட்டு அவை எவ்வாறு சமுதாயத்தில் பயனற்றுக் கிடக் கின்றன என்பதைப் புரிந்து கொள்கிறான். சமுதாயத்தில் கீழ்மட்டத்திலிருக்கும் மக்களை மேல்மட்டத்திலிருப்பவர்கள் தமது இன்பத்திற்குப் பயன்படுத்திக் கொள்வது அவனது கவனத்திற்கு வருகிறது. இத்தகைய சமுதாயச் சீர்கேடுகளைக் கண்டு கொள்வது இரண்டாம்படி. இத்தகைய சீர்கேடுகளைக் கண்டு அவனுடைய மனது கொதிக்கிறது. துன்பத்தில் துவண்டிருப்பவர்களுக்காக அவனது மனம் வருந்துகிறது, உருகுகிறது அவர்களுக்காக உழைக்கும் எண்ணமும் அவர் களது முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் சிந்தையும் அவனில் உதயமாகிறது. இது மூன்றாம்படி. மேற்கொண்டு தாம் கடைப்பிடிக்கும் வழிமுறைகள் யாவை என்பதை சீர்திருத்தக் காரர்கள் தாமே தீர்மானித்துக் கொள்வார்கள். அவனது ஆலோசனை, அனுபவம், கடைப்பிடிக்கும் வழி இவையெல் லாம் சம்பிரதாயத்தில் ஊறியவர்களுக்குப் பொருளற்றன வாகத் தோன்றுவதோடல்லாமல் தமது சொந்த விருப்பங்

களுக்கு விரோதமாகவும் ஆகிவிடுகின்றன. பசவண்ணரின் சொல்லில் இதைச் சொல்லவேண்டுமென்றால் 'உலக விரோதி' சரணன் யாருக்கும் அஞ்சுவதில்லை'—சீர்திருத்த வாதி உலகின் எதிர்ப்பைத் தெரிந்திருந்தும் அதில் ஈடுபடு கிறான். அத்துடன் தானே துன்பங்களைப் போக்கிக் கொள்ளுகிறான். அதனால் பயம் எங்கு வந்தது? முதன் முதலில் அவன் சமுதாயத்தின் மேல்மட்டத்தவரைக் கடுமை யாக எதிர்த்துப் போராட வேண்டும். கீழ்மட்டத்து மக்களின் மூடத்தன்மையைப் போக்கும் பெருமுயற்சியை மேற்கொள்ள வேண்டும். இவற்றிற்காக அவன் தனது இன்பம், அமைதி போன்றனவற்றைப் பலிகொடுக்கிறான். மிகுந்த துன்பம், உடலாலும் உள்ளத்தாலும் வதை போன்றனவற்றை அனுபவிக்கிறான். சமுதாயத்தின் எதிரிகளுக்கு நியாயமாகக் கொடுக்கப்பட வேண்டிய தண்டனையைக் கொடுப்பதில் தன்னைத் தானே பலியாக்கிக் கொள்ளும் வாய்ப்பு கிடைத் தால் அவனுக்குப் பெருமகிழ்ச்சி. அவன் வாழ்ந்த போது அவனை ஏற்றுக் கொள்ளாத உலகம் அவன் மடிந்த பின்னர் அவனுக்கு மஹாத்மா பட்டத்தைத் தருகிறது. பசவண்ணர் பிறப்பிலேயே ஒரு சீர்திருத்தவாதியாகவும் மஹாத்மாவாகவும் விளங்கினார்.

இது அவர் தம் இளமைக் காலத்தில் உபநயனச் சடங்கை எதிர்த்து நின்றதிலேயே தெரிகிறது. அவர் முக்கியமாக எதிர்த்தது பிராமணியத்தையும் அதன் பொருளற்ற சம்பிரதாயங்களையும் மற்றும் மக்களை உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று பிரித்த அதனது கொடுமையான செயலையுந்தான். இத்துடன் அக்காலத்தில் பிற சமய நெறி களில் காணப்பட்ட குறைபாடுகள், பொதுமக்களின் பல தெய்வ வழிபாட்டு முறை, அவர்களது மூடத்தன்மை, அதன் காரணமாக சமுதாயத்தில் மலிந்திருக்கும் சீர்கேடுகள் இவை களையெல்லாம் கண்ட அவர் மனது புதுசமுதாயத்தைப்

படைக்கும் பணியில் ஈடுபட்டது. அவர் ஏற்றுக்கொண்ட வீரசைவ சமயத்தில் விதைவிட்டிருந்த நுண்ணிய பல அம்சங்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அவைகளுக்கு உயிரளித்து தான் கடைப்பிடித்துப் பிறரும் கடைப்பிடிக்கும் வழியைக் காண்பித்தார். இந்த கண்கொண்டு பார்த்தால் அவரது மற்றும் பிற சிவத்தொண்டர்களின் வசனங்கள் யாவும் வெறும் வசனங்கள் அல்ல, தாம் 'நடந்துபார்த்து சொல்லிய வசனங்கள் ஆகும் என்பது தெளிவு.

இங்கு ஒரு சிறு எச்சரிக்கை கொடுப்பது அவசியம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் நடைபெற்ற சீர்த்திருத்தங்கள் எல்லாவற்றுக்கும் பசவண்ணரைக் காரணமாக்குவது தவறானது. அவருக்கு உதவிபுரிபவர்களாக இருந்த நூற்றுக்கணக்கான மெய்யன்பர்கள் அவருக்கு மெய்வழியைக் காண்பித்தனர். அவர்களுள்ளும் மிகவும் சிறந்த சீர்திருத்தக் காரர்கள் இருந்தனர். அவர்கள் யாவருக்கும் மையமாக இருந்த பசவண்ணர் அப்புரட்சியின் ஒரு சங்கேதமாக இருந்தார். பெரும்பாலும் எல்லா வசன ஆசிரியர்களும் பசவண்ணரால் உலகம் சிறப்படைந்தது. அவரால் இங்கு நெறி துவக்கப்பட்டது, மனித உலகமும் தெய்வ உலகமும் ஏணியால் இணைக்கப்பட்டன என்று பலவாறாகப் புகழ்கின்கினர். இதனால் அப்புரட்சியில் மிகவும் சிறப்பான பங்குபணியாற்றியவர் பசவண்ணர் என்பது ஐயத்திற்கு இடமில்லாமல் தெளிவாக்குகிறது. அதனால் அவருக்குச்சேரும் புகழ் அவரது காலத்தில் இருந்த எல்லா சிவத்தொண்டர்களுக்கும் சேரும் என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

புதுச் சமுதாயத்தைப் படைப்பதற்காக பசவண்ணர் செய்த முதல் வேலை என்னவென்றால் தமது திருக்கோயிலின், அறநெறியின் வாயில்களை—உள் அறைகளின் வாயில்களைக்கூட எல்லோருக்காகவும் திறந்து வைத்திருந்தார். அங்கு உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் குலவேறு

பாடுகள் இல்லை. செல்வன், வறியவன் என்னும் பாகு பாடில்லை. அவர் கற்பித்த அறநெறியும் அவ்வாறே எல்லோருக்கும் பொதுவானதாக இருந்தது.

திருடாதே, கொலை செய்யாதே, பொய் சொல்லாதே,
சினவாதே பிறரைக் கண்டு கடுகடுக்காதே,
தன்னைப் புகழாதே, பிறரைக் கண்டு புழுங்காதே.
இதே அந்தரங்க சுத்தி, இதே பகிரங்க சுத்தி,
இவையே எங்கள் கூடல சங்கம தேவனை' வசமாக்கும்
வழியாம்.

அன்பில்லாத நெறி எங்குள்ளது?
அன்பே வேண்டும் எல்லா உயிர்களிடத்தும்
அன்பே நெறியின் ஆதாரமையா
கூடலசங்கையனைத் தவிர்த்து வேறுயாரும் வேண்டாம்
பாரையா.

சம்சாரம் என்பது ஒரு காற்றில் உள்ள விளக்கு
செல்வம் என்பது ஒரு சந்தைக் கூட்டம், பாரையா!
இதை நம்பிக் கெட வேண்டாம்—செல்வம் என்பது
மறவாமல் பூஜை செய்வது நம் கூடல சங்கம தேவனை

தேவலோகம் பூலோகம் என்பது வேறில்லை பாரும்
உண்மை சொல்லுமிடம் தேவலோகம்
பொய்யிருக்குமிடம் பூலோகம்
ஆசாரமே ஸ்வர்க்கம் அநாசாரமே நரகம்
நீயே இதற்கு ஆதாரம் கூடலசங்கம தேவா.

அறநெறி எவ்வளவு தூய்மையானது! சிவனை நம்பவேண்டும் அகத்தையும் புறத்தையும் தூய்மையாக வைத்துக் கொண்டால் அங்கு இறைவன் வந்து தங்குவான், கயமை வேண்டாம். கொல்லவேண்டாம், கோபிக்க வேண்டாம், பொய் வேண்டாம், தற்புகழ்ச்சி வேண்டாம், பிறரைக்

கண்டு பொறாமை கொள்ள வேண்டாம். சிவனை நம்புவ தோன்றே வழி. அறநெறியென்றால் எங்கோ எட்டாத தூரத்தில் இருக்கும் ஒரு பொருள் என்று எண்ணிக் கொண்டிருந்த சம்பிரதாயவாதிகளைப் பார்த்துக் கொண்டு அதை விட்டு ஒதுங்கியே வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இவரது சொற்கள் மெய்சிலிர்ப்பை ஏற்படுத்தி யிருக்க வேண்டுமல்லவா!

இவ்வாறு ஈர்க்கப்பட்ட மக்களில் பலர் இந்நெறியினால் நமக்கு நன்மை வரும் என்று வந்தனர்; மற்றும் சிலர் அவர் வழங்கும் உணவின் மீது ஆசை கொண்டு அன்பர்கள் ஆனார்கள். நாலாவிதமான குலங்களிலிருந்தும், நாலாவித மான தொழில் செய்பவர்களிலிருந்தும் நாலாவிதமான இயல்புகளைக் கொண்ட மக்கள் வந்தனர். இதனால் பசவண்ணரைப் போன்ற அறநெறித் தலைவர்கள் எதிர் கொள்ள வேண்டியிருந்த சிக்கல்கள் பல. இவைகளை வசன ஆசிரியர்களே சொல்லியுள்ளனர். அவர்களுக்கெல்லாம் விபூதி அபிசேகம் செய்து கழுத்தில் லிங்கத்தைக் கட்டி குரு உபதேசம் செய்தார். அவர்களுள் மாரி, மசணி, மைலாரன், எக்கநாதி, பைரவன் போன்ற சூத்திர தெய்வங்களை வழி படுபவர்கள் இருந்தனர். அவர்களது அந்த நம்பிக்கைகளைப் போக்கி சிவனொருவனே தெய்வம் என்று அறநெறி காட்ட வேண்டியதாயிற்று.

பக்தரைக் கண்டால் கட்டித் தழுவுவார்;
சமணரைக் கண்டால் அம்மணமாவார்;
அந்தணரைக் கண்டால் அரிநாமம் கூறுவார்;
அவரவரைக் காணும்போது அவரவர்க் கேற்றவாறு!
வேசிக்குப் பிறந்தவர்களை என் கண்ணில் காட்டாதே,
ஐயா!
கூடலசங்கமனை வணங்கி, பக்தர் என்ற பேர் கொண்டும்
பிறதெய்வம் தொழும்வரை என்னென்றழைப்பேன்,
ஐயா?

என்று கோபமாகக் கூறுகிறார். அவரது நெறியில் புதிதாகச் சேர்ந்தவர்களில் எவ்வளவோ பேர் கட்குடியர்களாகவும், புலால் உண்பர்களாவும், சுத்தமில்லாதவர்களாயும் இருந்தனர். அதை விடுவித்து அவர்களைத் தூயவர்களாகவும் அமைதியானவர்களாகவும் மாற்றினார். ஆனாலும் பிறவிக் குணம் அவ்வளவு எளிதாகப் போய்விடுமா?

நாவின் இச்சைக்காக மதுமாமிசம் தின்பர்
கண்களின் இச்சைக்காக பரஸ்திரியைப் பார்ப்பர்
லிங்கத்தைக் கட்டியிருப்பதால் பலன் என்ன?

என்று பசவண்ணர் கூறினால், சன்னபசவண்ணரோ அதை விடக் கடுமையாக "...தாம் முன்னர் பாவியாக இருந்தபோது சுவைத்த சாராயம், மாமிசம், கஞ்சா, பவிகளின் தொடர்பு, பவிகள் சமைத்த உணவு போன்றன தவறானவை என்று உணர்ந்து அவற்றை விடாதிருப்பவர்கள் அந்த பூனை, பன்றி நாய், கழுதை, கோழி இவைகளுக்கும் மட்டமானவர்கள், பார்" என்று மிகுந்த கோபத்துடன் கூறுகிறார். மேலும், எத்தனையோ வீடுகளில் கணவன் சிவவழிபாட்டினைத் தழுவி அவனை வணங்குதற்குப் பிரசாதங்களைத் தயார் செய்து வைத்தால் மனைவியோ மாரி, மசணி போன்ற தெய்வங்களின் அடியாளாகி கள், புலால் போன்ற பொருட்களைத் தனது கடவுளுக்குப் படைத்துவந்தாள். ஆண் மக்களைவிடப் பெண்மக்களிடம் சம்பிரதாயத்தை அனுசரிக்கும் பழக்கம் அதிகம்தானே?

இவ்வாறு சிறுநெறிகளிலிருந்து விடுபட்டு வீரசைவ நெறியில் சேர்ந்து மெய்யன்பர்களானவர்கள் தத்தமக்குள் சாதி, குலம் போன்ற பாகுபாடுகளைக் காணக்கூடாது என்னும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஏனென்றால், ஒரு முறை வீரசைவராக ஆனபின்பு அவர்கள் எல்லோரும் சமமே. அவர்கள் பிறநெறிகளைத் தழுவிய உறவினருடன் தொடர்பு

வைத்துக் கொள்ளாமல் சிவநெறித் தொண்டர்களுடனேயே தொடர்பு, உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் விதித்தார். மேலும், பாசுபதம் போன்ற சிவநெறிக் குருக்களிடமிருந்து அறநெறி கற்றுக் கொண்டவர்கள் இருந்தால் அவர்களது அந்த லிங்கங்களை எடுத்துவிட்டு வீரசைவ குருக்களின் மூலம் வேறு லிங்கங்களைக் கட்டுவித்தார்.

பிறநெறியைத் தழுவியிருந்தவர்கள் வீரசைவநெறியைத் தழுவிய பொழுதும் ஒன்றாக உண்ணுவதில் மட்டும் ச்ாதி வேறுபாடுகளைக் சருத்தில்கொள்ளாமலிருந்தார்களே தவிர திருமணம் போன்ற விஷயங்களில் சாதிப்பாகுபாட்டினைக் கவனித்துவந்தனர்.

உண்பதிலும் உடுப்பதிலும் நெறியழிந்ததென்பார்கள்,
கொள்வினை கொடுப்பனைஎன்றால் குலம்பார்ப்பார்கள்.
இவர்களை நான் எப்படி ஐயா உன் பக்தரென்பேன்?
இவர்களை நான் எப்படி ஐயா சிறந்தவர்களென்பேன்?
கூடல சங்கமதேவா, கேளாய்,
இது மாதவிடாய் உடையாள் நன்னீரில் குளித்தது
போலாம்.

சாதிப்பாகுபாடுகளை அழிப்பதற்கென்று துவங்கிய அறநெறியிலேயே புதுப்புதுப் பாகுபாடுகள் பின்வாசலின் வழியாக வந்தால் சாதிப்பாகுபாடுகளை அழிக்கும் பணியின் பயன் தான் என்ன? அதனால் பசவண்ணரைப் போன்றவர்கள் பெரிய அளவிலான செயல்களின் மட்டுமல்லாது. தாம் கடைப்பிடிக்கும் சிறுசிறு செயல்களிலும் கூட பாகுபாட்டினைத் தவிர்க்க முயற்சிசெய்தனர்.

பொருளற்ற செய்கைகளைச் செய்வதை பசவண்ணர் கண்டித்தார். அவற்றிற்குப் பதிலாக பொருளுள்ள மதச் சடங்குகளைக் கற்பித்தார். சன்னபசவண்ணர் இப்படிப்பட்ட ஐம்பது மதச் சடங்குகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்

வேறு பெண்களின் மேல் இச்சைகொள்ளா திருப்ப து, பிறர் பொருளை விரும்பாதிருப்பது, பொய் சொல்லாதிருப்பது, விலங்குகளை வதைக்காமலிருப்பது, நன்கு நீராடுவது, பிரணவ முத்திரை உள்ள ஆடைகளை உடுப்பது, பற்குச்சி யைத் தெய்வத்திற்குக் காட்டிவிட்டு பல்தேய்ப்பது போன்றன அவர் கற்பித்த நெறிகளில் சில. அகத்தூய்மை புறத்தூய்மை ஆகிய இரண்டையும் வசன ஆசிரியர்கள் வற்புறுத்திக் கூறி யுள்ளனர். அவ்விரண்டில் எதையும் ஒதுக்கித்தள்ள முடியாது.

இன்னும் சில வீரசைவ குருக்கள் பக்தர்களுக்கு உபதேசம் செய்துவிட்டுப் பின்னர் அவர்கள் இழிகுலத்தவர்கள் என்று கூறி அவர்களது வீட்டில் உணவு உட்கொள்ள விரும்பாமல் அவர்களிடமிருந்து அரிசி, கோதுமை போன்றவற்றைப் பெற்றுச்சென்றனர். இதைப் பல வசன ஆசிரியர்கள் வெகு வாகக் கண்டித்துள்ளனர். குருவானவர் அறநெறிச் சிந்தை யால் பக்தரைவிடப் பெரியவராக இருக்கலாம். ஆனால் சமுதாயநெறிகளின்படி அவர் எப்படிப்பட்ட தனித்தன்மை யையும், சிறப்பையும் கொண்டிருக்கவில்லை. ''எக்குலத்தவ னாயின் என்? சிவலிங்கமுள்ளவனே குலமகன்'' என்று பசவண்ணர் கூறுகிறார். இன்னும் சிலர் தாம் வீரசைவரான உடனே தாம் பெரியவராகிவிட்டோம் என்று எண்ணிக் கொண்டு பிறநெறி தழுவியுள்ள மக்களைத் திட்டியும் அவ மதித்தும் சுற்றிக் கொண்டிருக்கின்றனர். இதையும் வசன ஆசிரியர்கள் கடிந்துள்ளனர். மேலும் சிலர், ஆரம்பத்தில் பிற நெறிகளிலிருந்துவிட்டு இடையில் வீரசைவராகி, பின்னர் தமது வீரசைவக் கொள்கைகளை விட்டுவிட்டு பழையபடி ஆனதும் உண்டு அப்படிப்பட்டவர்களை வாழும் போது மட்டுமல்ல இறந்தபின்னருங்கூடத் தீண்டலாகாது என்கிறார் பசவண்ணர் (''பிறவியில் புறச் சமயத்தோன், பின்னர் பழைய நெறியைத் துறந்து சிவபக்தனாக மாறி இறுதியில் மீண்டும் புறச் சமயத்தைச் சேர்வோரைத் தீண்டலாகாது''.)

குருவால் வழங்கப்பட்ட இட்டலிங்கத்தை மிக்க கவனத்துடன் வழிபடவேண்டும் என்னும் நெறியின் காரணத்தால் தான் பசவண்ணரைப் போன்ற அறநெறிக் காவலர்கள் கோயில்களைக் கட்டுதல், அங்கு சென்று அங்குள்ள லிங்கத்தை வழிபடுதல் போன்றவற்றைக் கண்டித்தனர். இறைவன் உங்களது உள்ளங்கையிலேயே இருக்கும் பொழுது கோயில்களுக்கு ஏன் செல்லவேண்டும் என்பது அவர்களது வாதம்.

உள்ளவர் சிவாலயம் அமைத்தனர்,
நான் என்செய்வேன்? ஏழையேன் ஐயா;
என் கால்களே தூண்கள்; உடலே கோயில்;
தலையே பொற்கலசம், ஐயா
கூடலசங்கமதேவா கேளையா
ஸ்தாவரத்திற்கு அழிவுண்டு, ஜங்கமத்திற்கு இல்லை.

எப்படியிருந்தாலும் கோயில்கள் செல்வந்தர்களுக்கு உரிய பொருள். அங்கே நடைபெறுவது ஆடம்பரமான பூசை—இது அவரது அனுபவமாக இருந்தது. 'கட்டிக்கொண்டிருக்கும் லிங்கத்தை விட்டுவிட்டு மலையில் உள்ள லிங்கத்திடம்' செல்பவரை ஆம்பிகர சௌடையன் என்னும் கவியும் 'மடியிலுள்ள லிங்கத்தை விட்டுவிட்டு கோயிலுக்குச் சென்று லிங்கத்தை வழிபடுபவரை மடிவாள மாசம்யன் என்பவனும் கண்டிக்கின்றனர். கோயில்கள் சம்பிரதாய முறைப்படி இருப்பவர்களின் உடமையாகிவிட்டபடியாலும், அதனுள்ளே செல்லும் உரிமை சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டிருப்பதாலும், கோயில்கள் காளாமுகர்களின் முக்கிய மையங்களாக இருந்தமையாலும் வீரசைவசமயத்தவர்கள் கோயிலில் உள்ள லிங்கங்களை வழிபடும் முறையை எதிர்த்து வந்தனர்.

தீர்த்தயாத்திரைகளுக்குச் செல்லும் பொழுது மக்கள் படும் தொல்லைகளைப் பார்த்து வசன ஆசிரியர்கள் மனம்

வருந்தினர். காசியைப் போன்ற புண்ணியத்தலங்களுக்கு புனிதயாத்திரை மேற்கொண்டவர்கள் திரும்பிவரும் விஷயத்தில் எல்லோருக்கும் ஐயமிருந்தது. பர்வத மல்லையன் என்னும் ஸ்ரீசைல மல்லிகார்ஜுனனைக் காண புனிதப் பயணம் மேற்கொண்ட ஏழை மக்கள் கடனுக்குப் பணம் வாங்கிக் கொண்டு வெறுங்காலில் நடந்து கொண்டு காவடியைத் தோளில் சுமந்து மிக்க களைப்புடன் தட்டுத்தடுமாறிக் கொண்டு செல்லும் காட்சியை ஒரு வசன ஆசிரியர் விளக்கி அவர்களுக்கு சிவனின் திருக்காட்சி கிடைப்பதில்லை என்று கூறுகிறார். இறைவன் உனது கையிலேயே இருக்கும் பொழுது உனது மனத்திலேயே இருக்கும் பொழுது அவனைத் தேடிக் கொண்டு வெளியே ஏன் செல்லவேண்டும் என்று மக்களுக்கு விளக்கிக்கூறுகிறார்.

இத்துடன் பசவண்ணர் மக்களின் பலவிதமான குருட்டு நம்பிக்கைகளைச் சாடுகிறார், 'மடி' என்னும் தூய்மை, 'நாள்'கள், பிறப்பு இறப்பால் உண்டாகும் அசுத்தம், நியமங்கள் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும் என்றார். இவற்றால் வீணாகும் நேரம், செல்வம் மற்றும் திறன் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டினார். உண்மையான பக்தன் பஞ்சாங்கத்தைப் பார்க்க வேண்டியதில்லை என்றும், இறைவனின் திருவருளைப் போற்றிய நாளே நல்லநாள், திதி என்றும் கூறினார்.

பசவண்ணருக்கு அரிசனங்கள் என்றால் மிகுந்த கருணை மற்றும் அன்பு. அவர்களை ஊரின் வெளியில் வாழவைத்து 'புலையர்' என்று அழைத்துக் கடுமையாக நடத்துவது அவருக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. உயர்குலத்தில் பிறந்தும் மோசமாகச் சண்டாளர்களைப் போன்று வாழ்கிறவர்களை அவர் கண்டுள்ளார். அதைப் போலவே இழிகுலத்தில் பிறந்திருந்தும் இயல்பாகவே சிறந்தவர்களாக வாழ்பவரையும்

அவர் கண்டுள்ளார். இதனால் தொழில், குலம் இவற்றி னைக் கொண்டு மனிதனை உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்று பாகுபாடு செய்வது மிகப்பெருங் கொடுஞ்செயல் என்று அவர் உணர்ந்தார். வெவ்வேறு தொழில்களைச் செய்வது அவரவரது வாழ்விற்காக மட்டுமே. வேதங்களைக் கற்றமை யால் பிராமணன், துணிகளை நெய்வதால் நெசவாளி, அவ் வாறே கம்மாரன், ஓடக்காரன், புலையன் என்று பலர் பலப் பல தொழில்களை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் யாவரும் மனிதர்களே. இவர்களைத் தாழ்ந்தவன், உயர்ந்தவன் என்று பாகுபடுத்துவது மூடத்தனம் அப்படியென்றால், உலகில் புலையரில்லையா? இருக்கிறார்கள் என்கிறார் பசவண்ணர்.

கொல்பவனே சக்கிலியன், புன்புலால் தின்பவனே புலையன்!
குலமேதோ, அவர்கள் குலமேதோ?
எல்லாவுயிர்க்கும் இன்பமே ஆக எனவேண்டும் எங்கள்
கூடலசங்கமன் அடியரே நற்குலத்தோர்.

இதைப் பசவண்ணர் பிறருக்குக் கூறுவதற்காக—போதனைக் காக—மட்டும் கூறவில்லை. அவரிடம் அவ்வப்போது தான் பிறப்பால் பிராமணன், சிறந்தவன் என்னும் எண்ணங்கள் தலைகாட்ட ஆரம்பித்தன என்பதற்கும் அவற்றை அப்பொழுதே தூக்கி எறிந்து தன்னைத் தாழ்த்தப்பட்ட வருக்கும் தாழ்ந்தவராக கருதிக்கொண்டு தமது மனதின் தூய்மையைக் காப்பாற்றிக் கொண்டார் என்பதற்கும் அவரது பல வசனங்களில் ஆதாரங்கள் உள்ளன. மாதா சன்னையன், டோகர கக்கையன் என்னும் இருவரும் புலை யர்கள். அவ்விருவரையும் அவர் மிகவும் சிறப்பித்துள்ளார். அவ்விருவரது வீட்டின் வேலைக்காரர்களின் மகன் தான் என்று கூறிக்கொள்ளும் அளவுக்குச் சென்றிருக்கிறார் அவர். அரிசனன் ஒருவன் திருத்தொண்டனானால் அவனது வீட்டின் நாய்க்கு ஐம்பெரும் இசைக்கருவிகள் முழங்க திரு

விழாவில் சிறப்பிக்கிறேன் என்று கூறுமளவுக்குச் சென்றிருப் பதைக் காண்கிறோம். தனது மனதிலிருந்து உயர்ந்தவன்— தாழ்ந்தவன், தீண்டத்தகுந்தவர் — தீண்டத்தகாதவர் என்னும் எண்ணங்களைத் தூக்கி எறிந்திருந்த பசவண்ணர் எல்லோரையும் ஒன்றாகக் காணும் தன்மை கொண்டிருந் தார். அவர் வாழ்வில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி இங்கு நினைவு கூரத் தக்கது.

கல்யாண் நகரின் புறத்தே நகர எல்லையில் வாழ்ந்து வந்த அரிசன மக்களின் சேரியை 'பெரிய மஹேஸ்வர சேரி' என்று பசவண்ணர் கருதிவந்தார். ஒருநாள் அங்கு சென்ற பொழுது ஒரு வீட்டிலிருந்து சிவனின் திருப்புகழைப்பாடும் ஒலியைக் கேட்டார். அது சம்போளிநாகிதேவன் என்னும் அரிசன சிவ பக்தனின் வீடாகும். பசவண்ணர் பக்தியால் ஈர்க்கப்பட்டு அவ்வீட்டின் உள்ளே நுழைந்து இறைவனை வணங்கி அவனிடமிருந்து பிரசாதம் பெற்றுக் கொண்டார். இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சிக்காகவே காத்துக் கொண்டிருந்த சும்பிரதாய வாதிகள் - அவரது எதிரிகள் - பிஜ்ஜளனிடம் ஓடி வந்து தமது வர்ணாசிரம நெறியே பாழாயிற்றென்றும், சாதி கலந்துபோயிற்று என்றும் கூறினர். புலையனின் வீட்டிற்குள் நுழைந்த பசவண்ணர் தனது மாளிகைக்குள்ளும் நுழைந்து அதன் தூய்மையைக் கெடுக்க வேண்டாம் என்று பிஜ்ஜளன் கூறி தனது மாளிகையினுள் வராமல் திறந்த வெளியில் வந்து தன்னைச் சந்திக்கும்படிச் சொல்லியனுப்பு கிறான். பசவண்ணர் வரும்வரை அவன் மனம் கோபத்தால் கொதித்துக் கொண்டிருந்தது. ''நீ பிராமணனாக இருந்தும் பக்தி மிகுந்து தலைக்கேறி புலையனின் வீட்டில் உண்ணுவது சரியா'' என்று கேட்ட பொழுது பசவண்ணர் ''சிவபக்தர்கள் எப்பொழுதும் புலையர்கள் அல்லர்'' என்று விளக்கிக் கூறினார்.

பசவண்ணரின் இச்செயலைப் பழமையில் ஊறியவர்கள் வெகுவாக எதிர்த்ததில் வியப்பு ஏதுமில்லை. அவரது இத்த கைய புரட்சிகரமான செய்கைகள் பிஜ்ஜளனுக்கு ஏற்புடைத் தாக இல்லை. ஆனால் அவரது தொண்டர்கள் இதை ஏற்றுக் கொண்டனர். அவரது கொள்கைகளை அவரே செயல் படுத்திக் காட்டினார். துருகாஹி ராமண்ணன் என்னும் வசன ஆசிரியன் உலகில் இருப்பது இரண்டே குலம்; கெட்டவர்களின் குலம் ஒன்று, உயர்ந்தவர்களின் குலம் மற்றொன்று என்று சொல்லி மேலே கூறப்பட்ட கொள் கையைத் தெளிவாக்குகிறான். ''கையில் லிங்கம், மனதில் வேறுஎண்ணம் உடலில் வெறும் பொய் என்று உள்ளவர்கள் உண்மையிலேயே புலையரைவிட எந்தவகையில் நல்லவர்கள்? என்று அல்லமபிரபு கேட்கிறான். அம்பிகர சௌடையன் தனது வசனமொன்றில் புலையர்கள் ஊருக்கு வெளியில் இருக்கிறார்கள் என்னும் மக்களைப் பார்த்து 'அவர்கள் ஊரில் இல்லையா' என்று கேட்கிறான். 'தாயைத் திட்டிய வனையும், தந்தைக்கு மறுபதில் சொல்பவனையும், பிறர் மனைவியை நாடுபவனையும், வழியில் முள்ளைப் போட்ட வனையும் புலையன் என்று அழைக்க வேண்டும். இப்புலையர் களால் நமக்குத் துன்பமே தவிர நன்மையேதுமில்லை. ஆனால் ஊரின் வெளியிலிருக்கும் புலையர்களால் செய்யப்படும் செருப்பு, கயிறு, சாட்டை, படகு போன்றன நமக்கு மிகவும் பயன் படுவனவாக இருக்கின்றன'' என்பது அவனது வாதம், இதனை இல்லையென்று மறுப்பது இயலாதல்லவா?

பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரசைவர்கள் பரப்பிவந்த புரட்சிகரமான கொள்கைகளில் மற்றொன்று 'காயகம்'. 'காயகம்' என்றால் காயம் அதாவது உடலுக்குத் தொடர்புடையது. இதனால் குறிப்பிடப்படுவது என்ன வென்றால் உடலானது உடல் உழைப்பையும், மனித னானவன் தன் வாழ்க்கைக்காகச் செய்யவேண்டிய தொழி

லையும் செய்யவேண்டும் என்பதாகும். வீரசைவர்களின் கொள்கைகளின் படி ஒவ்வொருவனும் ஏதாவதொரு தொழிலைச் செய்ய வேண்டும். தொழில் ஏதும் செய்யாமல் பிறரைச் சார்ந்திருப்பவனுக்கு உலகில் இடமில்லை. 'குருவானாலும் தொழில் செய்தால்தான் மோட்சம்'' என்று நூலிய சந்தையன் கூறுகிறான். அவன் கூற்றின்படி, முள்மரத்தின் இலையாக இருந்தாலும் உடலுழைப்பால் கிடைத்ததை மட்டும் லிங்கத்திற்குப் படைக்கவேண்டும். சிவலெங்க மஞ்சண்ணன் என்பவன் ''உடல் உழைத்து, சலிக்காமல் இளைக்காமல், மனம் நோகாமல், கெஞ்சியும் தொந்தரவு கொடுத்தும் பெறுவது அன்னமாகுமா?'' என்கிறான் உடலாலும் மனத்தாலும் உழைக்கவேண்டும்; அதன் பலனாகக் கிடைக்கும் செல்வமே சிறப்பானது. பசவண்ணர் அதற்காக வல்லவா புறநெறியைச்சேர்ந்தவனாயிருந்தாலும் சரி என்று பிஜ்ஜளனிடம் தொழில் புரிந்தார்.

காயகம் என்னும் சொல்லுக்கு 'உடல் உழைப்பு' என்னும் பொருள் மட்டும் இல்லை. அதற்கு மேலும் பொருள் இருக்கிறது. உழைப்பு மனிதன் அறநெறிச் சாதனையினை சாதித்துக்கொள்ள உதவும் ஒரு சாதனம் ஆகும். அப்பொழுதுதான் அதற்கு உரிய பலன் கிடைக்கிறது அல்லமபிரபு தனது வசனமொன்றில் 'செய்யும் செயலை வைத்தே வேறொன்றையும் அறிய வேண்டும்' என்கிறான். நாம் செய்வது எந்த தொழிலாக இருந்தாலும் அதைச்சிறப்பாக எவ்வகையான குறைபாடும் இல்லாது இது இறைவன் நமக்குக் கொடுத்திருக்கும் பணி என்று எண்ணி அதைச்செய்தால் அதே சாதனையாகிறது. அவ்வேலையிலிருந்து தனக்குக் கிடைக்கும் பலனில் எல்லாவற்றையும் தானே பயன்படுத்திக் கொள்ளாமல் அதில் சிறுபாகத்தை தன்னைப் போல அதிர்ஷ்டசாலிகளாக இல்லாத பிறருக்கு ஒதுக்கவேண்டும். இப்படிப்பட்ட கண்ணோட்டத்துடன் நாம் செய்யும் தொழிலை மேற்கொண்டால் அதில் இறைவனைக் காணலாம்.

அதனால் 'காயக'த்தின்படி எந்த ஒரு தொழிலும் உயர்ததும் அல்ல: தாழ்ந்ததும் அல்ல. பசவண்ணர் பிஜ்ஜள னிடம் கருவூல அதிகாரியாக இருந்தார். மடிவாள மாசையன் துணி வெளுக்கும் தொழில் செய்தான்; மோளிகேய மாரய்யன் விறகு வியாபாரம் செய்தான்; அம்பிகர செளடையன் ஒரு படகோட்டி; ராயசம்மஞ்சண்ணன் பசவண்ணரின் ஏவலாள்; மேதரகேதையன் பாய் கூடை பின்னும் தொழில் செய்தவன்; நூலிய சந்தையன் கயிறு திரிப்பவன்; கலாகத பொம்மையன் வேடம் புனைந்து நடித் தவன்; கொட்டணத சோமவ்வை என்பவள் நெல்குத்தும் தொழில் செய்தவள்; ஒக்கல முத்தையன் விவசாயம் செய் தவன்; வீரதேவம்மாள் நாள்தோறும் பெண்களுக்கு வசனங் களைப் படித்துக் காட்டியவள்; சாங்கு போல்லய்யன் தினமும் அதிகாலையில் மக்களை உறக்கத்திலிருந்து எழுப்பி லிங்கத்தை வணங்குவதைத் துவக்கிவைக்கும் தொழிலைச் செய்தவன்; கேளிகெய மஹாதேவி ஒரு நாட்டியக்காரி; ஹள்ளய்யன் செருப்பு தைக்கும் அரிசன தொழிலாளி; வைத்திய சங்கண்ணன் ஒரு மருத்துவன்; துருகாஹி ராமண்ணன் கால்நடைகளைப் பார்த்துக் கொள்பவன். இவ் வாறு பசவண்ணரால் ஈர்க்கப்பட்டு அவரிடம் வந்து சேர்ந்த மக்கள் பல்வேறு வகையான தொழில்களைச் செய்து வந்தனர். ஆனால் இவர்களுக்குள் எத்தகைய பாகுபாடும் இருக்க வில்லை. இவர்கள் எல்லோரும் திருக்கூட்டத்தில் உட்கார்ந்திருக்கும் பொழுது சமமானவர்களாகவே நடத்தப் பட்டார்கள். ஒருவரை யொருவர் விமரிசித்துக் கொண்டார் கள்; திருத்திக்கொண்டார்கள்.

இதன் பயனாக செல்வந்தர்கள் வறியவர்கள் என்னும் பாகுபாடு வெகுவாக மறைந்தது. பசவண்ணரும் செல்வந்தர் களின் செல்வத்தைப் பற்றி கடுமையாகவே கூறியுள்ளார்.

பாம்பு கடித்தவரைப் பேசவைக்கலாம்:
பேய் அடித்தவைரப் பேசவைக்கலாம்;
செல்வமெனும் பூதம்பிடித்தவரைப்
பேசவைக்க இயலாது, காணீர்!
வறுமை என்னும் மந்திரவாதி வந்தால்
உடனே கூறுவார்கள், கூடல சங்கமதேவா என்றே!

பாம்பு கடித்தவரை, கிரகம் பிடித்துக் கொண்டவரைப் பேச வைக்க இயலும் ஆனால் செல்வம் என்னும் கிரகம் பிடித்துக் கொண்டவரைப் பேசவைத்தல் இயலாதது. அவர்கள் செருக்கினால் மௌனியாக இருக்கிறார்கள். பிறருடன் தாம் பேசுவதே அவர்களுக்குச் செய்யும் ஒருவகையான கருணை என்று எண்ணிக்கொள்ளுகின்றனர். ஆனால் ஏழ்மை என்னும் மந்திரக்காரன் வந்தவுடன் அவர்கள் பேசுகின்றனர். எப்படிப் பட்ட தாக்குதல் இது! செல்வந்தர்கள் தமது பொருள் மிகுந்திருக்கும் தன்மையாலும் அதனால் உள்ள பலத்தாலும் செருக்குடன் நடந்துகொள்வதைப் பசவண்ணர் கண்டிருக்கிறார், அனுபவித்திருக்கிறார். அவர் செல்வம் என்றால் பாவத்தின் சின்னம் என்றே எண்ணியிருந்தார்.

பாவியின் பணம் கழுவாய்க்கல்லது நற்பணிக்குச்
செலவாகாதய்யா!
நாயின் பால் நாய்க்குட்டிக்கல்லது பஞ்சாமிர்தத்துக்குப்
பயன் படுமோ?
நமது கூடலசங்கமன் அடியார்க்கல்லது
செலவிடும் பணம் பாழே காணையா

செல்வம் என்பது பாவத்தின் மூலாதாரம் என்பது அவரது கருத்து.

அவர் ஒருமுறை கூறுகிறார்
கோவிலுக்களித்தும் நன்கொடை தந்தும் பூசனை
புரிவேன் எனும் எல்லோரும் கேளுங்கள்
காசுக்குவாங்கிய செருப்பை வெளியில் கழற்றிவிட்டுக்

கோயிலினுள் சென்று வழிபடுவேன் அங்கே
என் செருப்பின் நினைவல்லது இறைவன் நினைவே!
யில்லை
செல்வம் சேர்த்து வைக்காதீர், வைத்தால் வினை
தொடர்வது தப்பாது
கூடலசங்கமன் சரணர்கள் துய்ப்பதற் கென்று
ஆக்குங்கள்.

செல்வந்தர்கள் தானதருமம் செய்யும்போது கூட - கோயிலுக்குச் சென்ற பக்தன் வெளியே விட்ட தனது செருப்பைப் பற்றியே எண்ணிக்கொண்டிருப்பதைப்போல தமது செல்வத்தைப் பற்றியே எண்ணுபவர்களாக இருக்கின்றனர். ஆகவே செல்வத்தைச் சேர்க்க வேண்டாம். ஈட்டிய செல்வத்தை பக்தர்களுக்கு வழங்குங்கள்.

அரசர் மனையில் அரசியாய் வாழ்வதினும்
அடியார் மனையில் அடிமையாய் வாழ்வது உயர்ந்தது;
ஏனெனில் 'அபிசேக நீர் கொடு 'மலர் கொண்டுவை':
'இலிங்கத்திற்கு நிவேதனம் தா' என்பர்
கூடலசங்கமனின் பெருமனையில்
'அடியார் மிச்சில் உண்பாய் சேவகனே' என்பரன்றே

செல்வந்தர்களின் வீட்டில் உண்மையான பக்தி இல்லை; அங்கே இருப்பதெல்லாம் வெறும் பகட்டே. ஆனால் வறியவர்களோ உண்மையிலேயே பக்தர்கள்; உண்மையில் அவர்கள் மனமா வறுமையில் வாடுகிறது? 'வீட்டைப்பார்த்தால் வறியவன்' மனதைப் பார்த்தால் செல்வந்தன்' ஆதலால், பசவண்ணர் பக்தர்களுக்குள் ஏழையென்றும் பணக்காரனென்றும் பாகுபாடுசெய்வதை கண்டித்தார். 'ஏழையென்று சொல்லவேண்டாம் சிவமுத்திரை அணிந்தவரை உண்மையான நெருக்கத்துடன் பூசை செய்பவர்கள் அவர்களே'' என்கிறார். வீரசைவர்களுள்ளும் சிலர் நல்லாடை உடுத்திக் கொண்டிருக்கலாம், வேறு சிலர் கிழிந்தஆடை அணிந்து

கொண்டிருக்லாம். அதனால் சிலர் அவர்களுக்குக் காண்பிக்கும் மரியாதையில் பாகுபாடு காண்பித்தனர். இன்னும் சிலரோ வெகு தூரத்திலிருந்து வந்த வீரசைவன் என்று அருகிலிருக்கும் வீரசைவனைத் தூற்றி வந்தனர், இதையும் பசவண்ணர் தாக்கினார்.

இத்தகைய கண்டனங்களுக்கும் தாக்குதல்களுக்கும் பொருள் உள்ளது. ஏனென்றால், பசவண்ணர் பெரிய அதிகாரத்திலிருந்தும் தமது எல்லா செல்வங்களையும் பக்தர்களுக்கென வழங்கி ஏழ்மையை ஏற்றுக்கொண்டார். தனக்காக தனது குடும்பத்துக்காக நாளை தேவைப்படக்கூடுமே என்று சிறிதைக்கூட எடுத்துவைத்துக் கொள்ளவில்லை.

பொன்னோ ஆடையோ பிறவோ
இன்று நாளைக்கென விரும்பிவைத்துக்
கொண்டிருந்தால்
உன் மீதாணை, உன் பழவடியார் மீதாணை!
உன்னடியார்க்குத் தொண்டு புரிவதல்லாது
வேறொன்றறியேன் கூடலசங்கமதேவா!

அவர் கூடல சங்கமதேவனை வணங்குவது 'ஏழ்மையை வழங்கு' என்று

உடைந்த பானையும் என் வீட்டில் இல்லாது செய்வாய்.
கொடு தேவா என் கையில் சிறு துரும்பே;
'ம்ருடதேவா நின் தஞ்சம்' என்று பிச்சைக்குபோனால்,
அங்கே,
'நடதேவா' என்றே கூறிடச்செய்வாய், கூடலசங்கம
தேவா!

பசவண்ணரின் வாழ்க்கை வரலாற்றைப் பார்த்தாலும் அவர் இதே எண்ணத்தைக் கொண்டிருந்தார் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பசவண்ணர் ஏழைகளின் பங்காளன், ஏழைகளின் பிரதிநிதி. ஏழைகளுக்கு மானம், கௌரவம், மனதிடம் போன்றவற்றை வழங்கியவர். குலம், சாதி, செல்வம் என்னும் பாகுபாடுகளைப் பார்க்காமல் எல்லோரது வீடுகளுக்கும் சென்று அவர்களது ஏவலன் போல நடந்து கொண்டிருப்பதை அவரது வாழ்க்கை வரலாறு சிறப்பித்துக் கூறுகிறது. இதை மனதில் கொண்டு அவரைப் பார்த்தால் அவர் உண்மையிலேயே ஒரு சமுதாய வாதி, சமதர்மவாதி என்பது தெளிவாகிறது. அவரது புரட்சி முக்கியமாக ஏழைகளின் கூட்டத்தில் நடந்த புரட்சியாகும். ஏழைகளுக்காக ஏழையால் நடைபெற்ற புரட்சி.

பழைய இந்தியக் கண்டமாகட்டும், பழங் கருநாடமாகட்டும் பெண்கள் ஒதுக்கி வைக்கப்பட்டவர்களாகவே இருந்தனர் அவர்களுக்கு ஆண்களுக்கு இருக்கும் அளவிற்குச் சமமான உரிமைகளும் சந்தர்ப்பங்களும் இருந்தன என்று ஏற்றுக்கொள்வது கடினமானது. .இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் பசவண்ணரும் அவரைப் போன்ற பிற வசன ஆசிரியர்களும் மேலே கூறப்பட்ட கொள்கைகளினைக் கடைப்பிடித்துக் கிடைக்கவேண்டிய உரிமைகளைக் கிடைக்கும்படிச் செய்ய முயற்சி செய்தனர். பெண் என்பவள் மாயை அல்லள்; பெண் உண்மையில் கபிலசித்த மல்லிகார்ஜுனன் என்று சித்தராமய்யன் கூறுகிறான், அல்லமபிரபு, பொன், பெண், மண் இவை மாயையல்ல. மனதில் உள்ள ஆசையே மாயை' என்கிறான். அவரே மேலும், பார்ப்பதற்கு எவ்வாறு இருகண்கள் தேவையோ அவ்வாறே வாழ்வதற்கு ஆண்-பெண் என்னும் இருகண்கள் வேண்டும், அப்பொழுதுதான் வாழ்வு முழுமையாகும் என்கிறான். பல வசன ஆசிரியர்கள் ஆண்-பெண் என்னும் பாகுபாடே தவறானது என்று கூறுகின்றனர். அவர்களுக்குள் காணப்படும் பாகுபாடெல்லாம் புறத்தோற்றப் பாகுபாடே தவிர வேறில்லை. இதை முதலில் உணர்ந்த தேவரதாசிம்மையன் கூறுகிறான்-

மேலே மூடி வந்தால் பெண்ணென்பர்
தாடி மீசை வந்தால் ஆணென்பர்
நடுவில் சுற்றும் ஆத்மா ஆணும் அல்ல பெண்ணும்
அல்ல காண் ராமநாதா

இவ்வசனத்தின் பொருள் இவனுக்குப் பின்னர் வந்த அம்பிகர சௌடையன், சத்யக்கன், கொக்கவ்வை போன்ற வசன ஆசிரியர்களுக்கு எவ்வளவு பிடித்திருந்தால் அவர்கள் தமது வசனத்தில் இதையே சொல்லுக்குச் சொல் அப்படியே பயன்படுத்தியிருப்பர்.

பெண்ணும் மதிக்கப்படவேண்டிய ஒரு உயிர் என்று உணர்ந்து வெளிப்படுத்தியது வீரசைவ நெறியின் சிறப்பான கொள்கைகளில் ஒன்றாகும். இதன் பலனாக பெண்கள் ஆண்களுடன் சமுதாயத்திலும் அறநெறியிலும் சம உரிமை பெற்று வரலாயினர். பெண் மாயை என்று குறை கூறிவந்தது நின்று அவள் குடும்பத்தின் இன்பத்திற்கும், பக்தி சாதனைக்கும் உதவுபவள் என்னும் எண்ணம் சிறப்படைந்தது. தேவர தாசிம்மையன் கீழ்க்கண்டவாறு விளக்கிக் கூறுகிறான்.

சதிபதிகள் ஒன்றாகக் செய்யும் பக்தி சிவனுக்கு
ஏற்புடையது
சதிபதிகள் ஒன்றாகாதவனின் பக்தி
அமுதத்தில் விஷம் கலந்ததைப் போல காண்ராமநாதா.

தேவரதாசிம்மையன் தனது மன இயல்புடன் பொருந்தக் கூடிய இயல்புடைய பெண்ணைத் தேடித்தேடி இறுதியில் துக்களை என்பாளைத் திருமணம் செய்து கொண்டதாகக் கதைகள் கூறுகின்றன.[1]

தேவரதாசிம்மையன் தனது மனதைப் புரிந்துகொள்ளக் கூடிய பெண் கிடைக்கும் வரைத் திருமணம் செய்து கொள்வதில்லையென்று உறுதிபூண்டு, அப்படிப்பட்ட பெண்ணைத் தேடிவந்தான். இவ்வாறு இருக்கும் பொழுது அவன் முதேனூருக்கு வந்தான். அங்கு சிறிதளவு மணல் கலந்த

வீரசைவ நெறியானது பெண்களை எந்த ஒரு இடத்திலும் இழித்துப் பேசவில்லை. இல்வாழ்க்கை தவிர்க்கப்பட வேண்டியது என்று சொல்லி அதை ஒதுக்கித் தள்ளவில்லை. இல்வாழ்க்கையே மனிதனுக்கு மிகவும் சிறப்பானது என்று பசவண்ணர் தெளிவாகக் கூறியுள்ளார். பிற பெண்களை நாம் போற்ற வேண்டும். கூடலங்கமதேவனின் மனைவியைப் போன்றவர்கள் அவர்கள் என்று ஒருஇடத்தில் கூறியுள்ளார்.

அரிசி, ஒரு கரும்புத்துண்டு இவற்றைக் கொண்டு நீரில்லாமல் விறகில்லாமல் மணல்கலந்த அரிசியிலேயே பாயசம் செய்யும் பெண்ணைத்தான் திருமணம் செய்து கொள்வதாகத் தெரிவித்தான். இதைக் கேட்டதுக்களை என்பவள் அவனைக் கேட்டுக் கேட்டு சிறிதளவு கரும்பு கொண்டுவந்து அதிலிருந்து பால் பிழிந்து சக்கையைக் காயவைத்து அதையே விறகாகப் பயன்படுத்தி அடுப்பேற்றி கரும்புப்பாலில் அரிசியைக் கலந்து கலக்கிய பொழுது மணல் கீழே தங்கிவிட்டது. மேலே இருந்த பாயசத்தைப் பாத்திரங்களில் ஊற்றி குடிப்பதற்குக் கொடுத்தாள். அவளது அறிவை மெச்சிய தாசிம்மையன் அவளைத் திருமணம் செய்து கொண்டு முதேனூரிலேயே நெசவுத் தொழிலை மேற்கொண்டு தங்கிவிட்டான். அவள் தனது கணவன் மீது கொண்டிருந்த பக்தி மிகவும் சிறப்பானது. கணவனின் சொல்லுக்கு என்றும் மறுசொல் சொல்லியதில்லை அவள். ஒரு முறை வீரசைவர்கள் ''இல்லறம் சிறந்ததா, துறவறம் சிறந்ததா'' என்னும் பொருள்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் தமது விவாதத்திற்கு முடிவு கிடைக்காமல் தாசிம்மையனிடம் வந்தனர். அவர்களைத் தமது தறியின் அருகில் உட்கார வைத்தான். அப்பொழுது நடுப்பகலின் வெயில் நன்றாக வீசிக் கொண்டிருந்தது. எனினும் அப்பொழுது அவன் 'நூல் அறுந்து போயிற்று, விளக்குக் கொண்டு வா' என்று கூறினான். அவள் உடனே விளக்கைக் கொண்டு வந்து கொடுத்தாள். தலையின் மேல் தலைப்பாகை இருந்தும் 'தலைப்பாகை கொண்டு வா' என்று கூறிய பொழுது அவள் வந்து எடுத்துக் கொடுத்தாள். 'நேற்று முன் தினம் செய்த கஞ்சி சூடாக இருக்கிறது' என்று அவன் கூறிய பொழுது, அவள் வந்து அதை முறத்தால் விசிறி ஆற்றினாள். அப்பொழுது தாசிம்மையன் வீரசைவர்களிடம் 'இப்படிப்பட்ட பெண் கிடைத்தால் இல்வாழ்க்கையே

இதன் பயனாகப் பல பெண்ங்கள் தமது அனுபவங்களை வசனங்களாகப் பாடியுள்ளனர். பசவண்ணரின் மனைவியரான நீலலோசனையும் கங்காம்பிகையும் பெரிய வசன ஆசிரியர்கள், அவர்களது தமக்கையான நாகலாம்பாளும் வசனங்களை இயற்றியுள்ளாள். ராட்டை சுற்றி வாழ்ந்து வந்த அம்மவ்வை, தோசை சுடும் தொழில் செய்த பிட்டவ்வை, நூற்கும் தொழில் செய்த கதிர் ரெம்மவ்வை, அரிசி குத்தும் தொழில் செய்த சோமவ்வை, போன்றவர்கள் வெவ்வேறு

சிறந்தது. எதிர்த்துப் பேசுகின்ற பெண்ணாக இருந்தால் துறவறமே சிறந்தது' என்று கூறினான்.

தமிழ்நாட்டின் திருக்குறளின் ஆசிரியரான திருவள்ளுவர் பற்றிய செய்திகளிலும் இப்படிப்பட்ட கதையொன்று உள்ளது. அவரிடமும் ஒருவன் வந்து மேலே கேட்கப்பட்ட கேள்வியைக் கேட்டானாம். அவர் தமது தறியின் மேல் உட்கார்ந்து கொண்டு நடுப்பகலாக இருந்த பொழுதும் 'ஊசி காணாமல் போய் விட்டது' 'விளக்கு கொண்டு வா, என்று அவர் கூறிய பொழுது அவர் மனைவி விளக்குக் கொண்டு வந்தாள். ஒருமுறை கிணற்றிலிருந்து நீர் இறைத்துக்கொண்டிருக்கும் பொழுது இவர் வேண்டுமென்றே அழைத்தார். அதைப்பாதியிலேயே விட்டு விட்டு ஓடி வந்தாள் அவள். அப்பொழுது திருவள்ளுவர் தாசிம்மையனைப்போலவே அவனுக்கு பதில் கொடுத்து அனுப்பினார். அவரது மனைவி என்றும் கணவனைக் கேள்விகள் கேட்பவளல்ல. ஆனாலும் அவள் மனதில் ஒரு கேள்வி இருந்தது; அதன் பதிலைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் விருப்பு இருந்தது. அப்பொழுது இறக்கும் தறுவாய்; திருவள்ளுவர் தனது மனைவியின் அருகில் துன்பத்துடன் உட்கார்ந்திருக்கிறார். அப்பொழுது அவள் 'என்து கடைசி ஆசை ஒன்றிருக்கிறது. இதை நிறைவேற்றுவீர்களா? என்று பணிந்து கேட்டாள். 'நீங்கள் சாப்பிடும் பொழுது ஒரு ஊசி, ஒரு குவளை நீர் இவற்றை வைத்துக் கொள்ளுகிறீர்கள். அதன் பொருளைத் தெரிந்து கொள்ளும் விருப்பம் எனக்கு இருக்கிறது' என்றாள். அதற்கு திருவள்ளுவர் 'ஒன்றுமில்லை, உணவு படைக்கும் பொழுது கீழே சிதறி விட்டால் அதை ஊசியால் குத்தி எடுத்து நீரில் கழுவதற்காக அவ்வாறு செய்தேன். ஆனால் ஒரு முறையும் உணவு கீழே சிதறவில்லை. நீயும் ஏன் என்று கேட்கவில்லை' என்று பதில் சொன்னார். அப்பொழுது மனதிருப்தியுடன் அவள் கண்ணை மூடினாள்.

தொழில்களைச் செய்தனர். தொங்கின் மகாதேவி என்பவள் அதிகாலையில் வீரசைவர்களை உறக்கத்திலிருந்து எழுப்பும தொழிலைக் கைக் கொண்டிருந்தாள். வீரதேவம்மாள் என் பவள் வீரசைவர்களின் வசனங்களை ஓதி வந்தாள். சத்தி யக்கா என்பவள் வீரசைவர்களின் வீடுகளுக்குச் சென்று அற நெறியைப் பரப்பி வந்தாள். இவர்கள் மட்டுமல்லாமல், அக்க மஹாதேவி,ராணிமஹாதேவி,முக்தாயக்காலக்கம்மாபோன்ற மிகவும் சிறந்த வசன ஆசிரியர்களை நாம் காண்கிறோம். அரங்குகளில் ஆண்களுடன் அமர்ந்து அவர்களுடன் வாதம் செய்து எவ்வளவோ முறை அவர்கள் செய்யும் தவறுகளைப் பெண்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஆய்தக்கி மாரையன் என்பானின் மனைவி லக்கம்மாள் என்பவள். பசவணரின் வீட்டில் வீரசைவர்களுக்கு அரிசியைப் படியால் அளந்துக் கொடுக்கும் பொழுது கீழே சிதறும் அரிசியைப் பொறுக்கி சுத்தம் செய்து வீட்டுக்குக் கொண்டு வருவான் மாரையன். ஒரு நாள் அவன் தனக்குத் தேவையானதற்கும் அதிகமாக அரிசியை வீட்டிற்குக் கொண்டு வந்த பொழுதுச் சிவத்தொண் டர்களுக்கு பற்று இருத்தலாகாது என்று கூறிக் கணவனுக்கு அறிவு புகட்டி லக்கம்மாள் அதிகப்படியான அரிசியைத் திருப்பியனுப்பி விட்டாள். தனது அண்ணன் அஜகண்ணன் காணாமற் போய் விட்டதால் வெகுவாக வருந்திக் கொண்டி ருந்த முக்தாயக்காளை ஆறுதல் சொல்லித் தேற்றலாம் என்று அல்லமபிரபு வந்த பொழுது இருவருக்கும் மிகவும் சிறப்பான சர்ச்சை நடைபெற்றது. பசவண்ணர் லிங்கத் துடன் கலப்பதற்கு முன்பு கூடலசங்கமத்திற்கு வருமாறு சொல்லியனுப்பிய பொழுது அவள் இங்கு கூடலசங்கமன் இல்லையா? என்று கேட்டு போகாமல் அங்கேயே லிங்கத்துடன் கலந்து விட்டாள். பெண்கள் தமக்குள் ஒழிந்து கிடக்கும் திறன்களையும் சக்திகளையும் அறிந்து கொண்டு அதற்கேற் றாற் போல் தமது வாழ்வை அமைத்துக் கொண்ட செய்திகள் பிரபலமாகவுள்ளன.

இவ்வாறு வசன ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் தலைவரான பசவண்ணர் ஆகியோர் செய்த சிந்தனைகள், மேற்கொண்ட செயல்கள் அவர்களின் காலத்திற்கு மிகவும் புதியன. பழமையில் ஊறியவர்களுக்கு இவர்கள் செய்த ஒவ்வொன்றும் அதிர்ச்சியளித்தது. பசவண்ணர் சாதாரன மக்களின் சிந்தனை இயக்கத்திலேயே புரட்சியைத் தோற்று வித்தார். இதனால் சமுதாயம் விழிப்புற்றது. அவரது கொள்கைகளில் உண்மையைக் கண்டது; அதைத் தழுவியது. புது சமுதாயம் ஒன்று உருவாக வழி வகுத்தது. பழமையில் ஊறியவர்களான மக்கள் இதை முழுமையாகவும் கடுமையா கவும் எதிர்த்தனர். பசவண்ணரை ஒதுக்கி வைக்கப் போவ தாகவும், அவரது வாழ்வை முடித்து விடப்போவதாகவும் அச் சுறுத்தினர். ஆனால் அவர் இவையெல்லாவற்றையும் மிக்க தைரியத்துடன் எதிர்த்து நடை போட்டார். தன்னை எதிர்ப்போர்களுக்காகத் தான் என்றும் அஞ்சி தலை வணங்கப் போவதில்லை என்று கூறினார்.

யார் சினந்து நம்மை என்ன செய்வார்கள்?
ஊர் சினந்து நம்மை என்ன செய்யும்?
நம் பெண்ணிற்குப் பிள்ளை தர வேண்டா;
நம் நாய்க்குச் சோறிட வேண்டா?
யானை மேல் செல்பவனை நாய் கடித்தல் ஒல்லுமோ,
நம்மை, நமது கூடலசங்கமன் துணையுள்ளவரை?

துன்பங்களை எதிர் கொள்ள அவர் எப்பொழுதும் சித்தமாக இருந்தார். நாளை வரும் துன்பம் இன்றே வாட்டும்; இன்று வரும் துன்பம் இப்பொழுதே வரட்டும் என்னும் மனதிடம் கொண்டிருந்தார் அவர்,

நாளை வருவது நமக்கின்றே வரட்டும்;
இன்று வருவது நமக்கிப் போதே வரட்டும்;
இதற்கு யார் அஞ்சுவர், இதற்கு யார் அழுவர்?

பிறந்தோர் யாவரும் இறப்போர் திண்ணம் என்பது
போல
நம் கூடலசங்கமதேவர் எழுதிய எழுத்தை மாற்று
வாரோ
அரி அயன் ஆகியோர்க்கும் ஆகாது!

தமது கொள்கைகளின் வெற்றிகளுக்காக சாவையும் தழுவிக் கொள்ள அவர் தயாராக இருந்தார். ஏனென்றால் 'பிறந்தவரெல்லோரும் இறக்கவேண்டும்' என்பது உலக நியதியல்லவா?

ஆயுள் தீர்ந்தாலன்றி மரணமில்லை
கூறிய சொல் தவறின் அல்லது வறுமையில்லை
எனவே அஞ்சுவதேனோ உலகவர் பழிக்கு?
அஞ்சுவதேனோ, கூடலசங்கமதேவர், நின் ஆளாய
பின்னும்?

இப்படிப்பட்ட வசனங்கள் எல்லாம் பசவண்ணர் தமது கொள்கைகளின் செயற்பாட்டிற்காக பட்ட துன்பங்களையும் துயரங்களையும் விளக்குவதை நாம் காணுகிறோம். தனது மக்களுக்காக உலகத்தின் எதிர்ப்பை சம்பாதித்துக் கொண்டார்; ஆனால் உலகிற்கு அவர் அஞ்சவில்லை. கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனம் பசவண்ணரின் போராட்டத்தின் இயல்பைச் சிறப்பாக விளக்குகின்றது.

நான் நியாயவாதி தாட்சண்யம் காட்டுபவனல்ல
நான் லோகவிரோதி, தொண்டன் யாருக்கும்
அஞ்சுவதில்லை

கூடலசங்கமதேவரின் பேரொளியில் இருக்கும்போது தாம் செய்வது சரியானது, அதற்கு இறைவனின் அருள் இருக்கிறது என்னும் நம்பிக்கை அவருக்கு இருந்தது.

பசவண்ணர் மேற்கொண்ட சமுதாய சீர்திருத்தச் செயல்கள் தற்காலத்தவர்களான, மிகவும் முன்னேறியுள்ள, நமக்கும் வியப்பையளிக்குமாறு உள்ளது. கருநாடகத்தைப் பொறுத்தவரையில் சொல்வதாயிருந்தால், அதன் வரலாற்றில் அதுவே முதல் புரட்சியாகும். அதற்குச் சமமான இரண்டாவது புரட்சியைப் பார்க்க வேண்டுமென்றால் நாம் இருபதாம் நூற்றாண்டிற்கு வர வேண்டும்.

9. பசவண்ணரும் அவரது சமகாலத்தவர்களும் □ □

இளமைக் காலத்திலேயே உற்றார் உறவினரதும் மற்று பெற்றோர்களது அன்பு எப்படி இருக்கும் என்பதை அறிந்து கொள்ளாமல் இழந்த அவற்றைப் பசவண்ணர் மெய்யன்பர் களிடமிருந்து பெற்று மகிழ்ந்து வந்தார். எனக்கு யாரும் இல்லையென்று சொல்லுகிறீர்கள். நான் பாணன், மயூரன், காளிதாசன் போன்றோரின் உறவினன். கக்கையன், சன்னையன் போன்றோர் என்னை எடுத்து முத்தங் கொடுத் துள்ளனர்'' என்னும் பொருள்படும்படி ஒரு வசனத்தில் கூறியுள்ளார். வைதீக நெறியைப் பின்பற்றியும் பரப்பியும் வந்த அவருக்கு விபூதி. ருத்திராட்சம், இட்டலிங்கம் போன்றவற்றைத் தரித்திருப்பவர்கள் யாவரும் மெய்யன்பர் களே என்று எண்ணிக் கொள்வார்.

இடக்கையில் கத்தி, வலக்கையில் புலால்
வாயில் கள், கழுத்தில் இலிங்கம் இருக்கட்டும்
அவரும் அன்பரென்பேன் மெய்யன்ரென்பேன்
கூடலசங்கமதேவா அவர்களை முகலிங்கிகள் என்பேன்.

தான் தோற்றத்தைக் கண்டு நம்புவரே தவிர அவர்களது மனத்தூய்மை தமக்குத் தேவையில்லை என்று கூறியுள்ளார், இது நமக்கு வியப்பைத் தருவதாக இருக்கலாம். இங்கு அவரது கூற்றை ஏற்றுக்கொள்வது சிறிது கடினமானதாக இருக்கலாம். இத்தகைய கொள்கையால் நன்மைகளைக்

காட்டிலும் தீமைகளே அதிகமாக விளையும் என்றும் எண்ணலாம். ஆனால், ஒரு அறநெறியைப் பரப்ப வேண்டும் என்று எண்ணிப் புறப்பட்டு விட்ட ஒருவன் சிற்சில சமயங் களில் மிகுந்த கவனத்துடன் சிக்கல்களை அணுகும் சிந்தனை யுடன் செயல்பட வேண்டியிருப்பது கட்டாயமோ என்னவோ! ஆனாலும் அவர் தமது வீட்டிற்கு வந்த வீரசைவர்களின் குலம், தொழில் போன்றவற்றை விசாரிப்பதில்லை என்று உறுதி கொண்டிருந்ததை நாம் மனதில் கொள்ள வேண்டும். கள்ளன், சிறையிடப்பட்டவன், பாம்பாட்டி, சேவகன் இப்படி வருபவர் யாராக இருந்தாலும் அவர்கள் தொண்டர் களின் வடிவத்தில் இருந்தால் போதும், நம்பிவிடுவார். அவரது எண்ணத்தின் படி இட்டலிங்கம் என்பது ரசவாதம் செய்யும் கல். அதைத் தொட்டால் போதும், யாரானாலும் மெய்யன்பர்களாகிவிடுவர். இது நம்பிக்கையின், பொறுப்பின் கடைசி எல்லையாகும். ஆனால் சிலசமயங்கள் அவர் இத்தகைய நம்பிக்கை தனக்கு சரியானதல்ல என்று உணர்ந் திருக்க வேண்டும். மனத்தூய்மை இல்லாதவர்கள் திருநீறைப் பூசிக்கொண்டால் அது அடுப்புச் சாம்பலைப் பூசிக் கொண்டது போல், எத்தகைய பலனையும் அளிக்காது என்றும் உருவத்தைவிட பக்தியே சிறப்பானது என்றும குறிப்பிட்டுள்ளார். வேம்பு விதையை விதைத்து வெல்லக் கட்டியைப் போட்டு அதற்குப் பாலும் தேனும் நெய்யும் ஊற்றினாலும் அங்கு கசக்கும் பழங்களைத் தரும் வேப்ப மரமே வருமே தவிர நல்ல மரம் வளராது என்னும் கசப்பான அனுபவம் அவருக்குச் சில சமயங்களில் கிடைத்தது. ஆனாலும் அவர்கள் தோற்றத்தினால் மட்டுமே சிவனைத் தொழுபவர்களாக காணப்படுவதால் வெகுவேகமாக பழைய தோற்றத்திற்கு வந்துவிடுகிறார்கள். ஆனால். அறிவிற் சிறந்தவர்களும், உண்மையை நேசிப்பவர்களும் ஆன சன்ன பசவண்ணன், மடிவாளமாசிதேவன் போன்றோரின் அறிவுக் கூர்மை அவரை நடத்திச் சென்றது.

முன்னரே நாம் பார்த்தது போல பசவண்ணர் தமது வீட்டின் (மஹாமனை) வாயில்களை எல்லோருக்காகவும் திறந்து வைத்திருந்தார். அவரது வீட்டிற்கு வந்து சென்றவர்களின் எண்ணிக்கைக்கு அளவில்லை. எத்தனையோ முறை வீரசைவர்களுக்சாகக் காத்து நின்று கொண்டிருந்த அவர், 'காய்ந்த சறுகின் சரக்கெனும்' சத்தம்கேட்டஉடனே அன்பர்கள் வந்துவிட்டனர் என்று அப்பக்கம் பார்ப்பார். அவர்களைப் பார்க்க முடியாமை என்னும் நோயினால் அவரது கண்ணிலிருந்து நீர் தழும்பியது. கூர்மையான ஆயுதங்களைத் தலையில் வைத்துக் கொண்டு நொந்துபோவார். இவ்வாறு பிரிந்திருப்பதைவிட இறப்பதே மேல் என்று கருதினார். என்றாவது ஏதாவது நற்சகுனங்கள் தோன்றினால் அன்று யாராவது வீரசைவர்கள் தமது வீட்டிற்குக் கட்டாயமாக வருவார்கள் என்று நம்பினார். அன்பர்கள் வீட்டின் முன் வந்து நின்று 'சிவா' என்றால் போதும்

கடுகின்மீது கடல்புரண்டு வந்தது போலாயிற்று,
களிப்பெருக்கில் அகங்குழைந்தாடுவேன்,
மகிழ்ச்சிப் பெருக்கில் குதித்துச் சுழன்றாடுவேன்;
கூடல சங்கமன் சரணர் வந்தால்
களித்துப் பெருத்துக் கொழுத்துக் குதித்தாடுவேன்!

அவருக்கு ஏற்பட்ட இன்பம் பெரியது. அவரை வீட்டுக்குள் அழைத்துச் சென்று உபசரித்து அவருக்குச் சேவை செய்வார். அவர் மனதும் இவர் மனதும் கலந்து எல்லோருக்கும் மயிர்க் கூச்சம் வந்துவிடும். அவர்கள் எல்லோரும் உட்கார்ந்து கொண்டு, இங்கு பாருங்கள், இங்கு பாருங்கள்' என்று பசவண்ணரைக், கூப்பிட்டால், இவர் அவர்களது அருகில் சென்று பணிவாகப் பேசி அமர்ந்து கொள்வாரே தவிர, அவர்களுடன் சமமாக என்றும் உட்கார்ந்து கொண்டதில்லை. அவர்களுடன் சிவனின் மற்றும் தொண்டர்களின் கதைகளைப் பற்றிப் பேசியும், பழம்பாடல்களைப் பாடியும்

ஆடியும் பக்தியினால் மெய்மறந்து போவார். தன்னைவிடச் சிறியவர் இல்லையென்றும், சிவபக்தர்களை விடப் பெரிய வர்கள் இல்லை என்றும் கருதினார். அவரது பக்தியையும் மிகுந்த ஈடுபாட்டையும், பணிவையும், தூயமனதையும் கண்ட அன்பர்களின் மனது பெருமையடைந்தது. அவர்கள் யாவரும் இறைவனுடன் மிக்க ஈடுபாடு கொண்டு ஒரு இன்ப உணர்வை அடைந்தனர். பசவண்ணரின் அறிவு ஒளி இவர் களால் பிரதிபலிக்கப்பட்டு இவர்களும் அறநெறிச் சிந்தையை வளர்த்துக் கொண்டனர். அங்கு உற்பத்தியான ஒரு விசித்திர மானஅனுபவ வெள்ளத்தில் எல்லோரும் நீந்தித் திளைத் தனர். தத்தமது குற்றங்குறைகளை நீக்கிக் கொண்டு தூய்மையானவர்களாக ஆயினர். பசவண்ணருக்கோ இப்படிப்பட்ட அடியார் திருக்கூட்டங்களில் கழிந்த மணிகள் நிமிடங்களாகத் தோன்றின. உண்மையிலேயே அவர் தானே ஒரு இடத்தில் கூறியிருப்பதைப் போல 'கூடல சங்கமன் அன்பர்களின் பக்தியின் பைத்தியமா' கத்தான் இருந்தார்.

இது அவர் வீட்டில் நடைபெற்ற திருத்தொண்டர்களின் கூட்டங்களைப் பற்றிய ஒரு செய்தி. இன்னொன்று, அதே யளவு அல்லது அதைவிடச் சிறப்பான ஒரு செய்தியாகும். அதைப்பற்றி இனிக் காணலாம்.

பசவண்ணரின் தனித்தன்மை காந்தத்தைப் போலப் பலரைக் கவர்ந்து இழுத்தது. இந்திய மண்ணின் வெவ்வேறு மூலைகளிலிருந்தும் கல்யாணிற்கு மக்கள் வந்த வண்ண மிருந்தனர். அவர்களுள் சிவநெறிச் சான்றோர்களும், பக்தர் களும், சிறந்த கொள்கைகளை உடையவர்களும் இருந்தார் கள். சாதாரண துவக்கநிலைத் தொண்டர்களும் இருந்தனர். இன்னும் சிலரோ அங்கு வழங்கப்படும் உணவுப் பொருட் களின் மீது ஆசை கொண்டு சிவவேடம் தாங்கி வந்தனர்; கள்வர்களும், நயவஞ்சகர்களும் கூட இருந்தனர். முதலில்

கூறப்பட்ட சான்றோர்களைப் பற்றிக் காண்பதற்கு முன்பாக இரண்டாவதாகவும் மூன்றாவதாகவும் கூறப்பட்ட வகையைச் சேர்ந்த மக்களைப் பற்றிக் காண்போமாக.

ஒரு நாள் 'நான் வேண்டுபவர்கள் இல்லாததால் ஏழை யானேன். வேண்டிய வீரசைவர்களுக்குக் கொடுக்காமலிருந் தால் வாழ்வு வீண்' என்னும் பொருள்படும் வசனம் ஒன்றைக் கேட்ட கலிங்கநாட்டின் (இன்றைய ஒரிஸ்ஸா) மஹாதேவி செட்டி என்பவனுக்கு பசவண்ணரை அறிமுகம் செய்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் தோன்றிற்று நான் போய்ப் பத்து எருதுகளின் சுமையுள்ள மாணிக்கம், முத்து, பொன் போன்றவற்றைக் கேட்டு அவரைத் தோற்கடிக்கிறேன் என்று அவரிடம் வந்து சேர்ந்தான். அவரது சூதில்லாத உண்மையான அன்பைத் தெரிந்துகொண்டு தான் செய்ய விருப்பது தவறானது என்று உணர்ந்தான். அந்த தடுமாற்றத்தில் தான் அவரிடம் கேட்கவேண்டும் என்று எண்ணி வந்தவைகளை மறந்துபோய் பத்து எருதுகளின் சுமையுள்ள துவரை சோளம் மற்றும் கடலை ஆகியவற்றைக் கேட்டுவிட்டான் அதைக் கேட்டு பசவண்ணர் சிரித்துவிட்டு, அவன் மனம் திருப்தியடையும் அளவு செல்வம் கொடுத் தனுப்பினார். இன்னொரு நாள் சில கள்ளர்கள் கெட்ட எண்ணத்துடன் கழுத்தில் கத்தரிக்காய் லிங்கத்தைக் கட்டிக் கொண்டு அன்பர்களின் வேடத்தில் வந்தனர். எல்லோரை யும் போல அவர்களையும் பசவண்ணர் வரவேற்று பூசை செய்யும்பொழுது 'உங்கள் லிங்கங்களை எடுங்கள்' என்று கேட்டுக் கொண்ட பொழுது அவர்கள் நடுங்கிக் கொண்டு நின்றார்கள். பசவண்ணருக்கு இதில் ஏதோ சூதிருக்கிறது என்று புரிந்தது. ஆனாலும் அவர்களுக்குச் செய்த உபசரிப்பில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை. அவரது பெருந்தன்மை அக்கள்ளர்களின் மனதை மாற்றியது; கள்ளர்கள் பக்தர்களா யினர். இன்னொரு நாள் கள்ளர்கள் வீரசைவரின்

வேடத்தில் வந்து அவரது பசுக்களைக் கவர்ந்து கொண்டு சென்று விட்டனர். அவர் வீட்டு பசுமேய்ப்பவன் செய்தியைக் கூறிய பொழுது அவர் சொன்னார் ''சிவ வேடமும் கள்ளத் தனமும் ஒரே இடத்தில் இருப்பது இயலாது. உரிமையாளர் கள் தமது பொருளைத் தாமே எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள். பசுக்களை எனக்குக் கொடுத்தவனும் சங்கன், இன்று எடுத்துக் கொண்டு சென்றவனும் சங்கனே'' என்று இறையருளினால் உணர்ச்சி வசப்பட்டவராகக் கூறினார். இதை அவரது வசனம் கீழ்க்கண்டவாறு விளக்குகிறது.

> பசுக்களைக் கள்வர் திருடினர் என வேண்டாம், ஐயே, உம் தர்மம்!
> கூவ வேண்டாம் ஐயே, உம் தர்மம்!
> தேட வேண்டாம் ஐயே, உம் தர்மம்!
> அங்கு அதைத் தின்பவரும் சங்கன், இங்கு தின்பவரும் சங்கன்
> கூடல சங்கமதேவா, ஒரே மனோபாவனை.

இது மட்டுமல்லாது பசுக்களைப் பிரிந்து கன்றுகள் இருக்க லாகாது என்று கூறி அவற்றையும் விரட்டி விட்டார். அவை துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடுவதைக் கண்டு அவர் கண் களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் கொட்டியது. கன்றுகள் ஓடிப் போய்த் தாயைச்சேர்ந்திருக்கக் கூடும்.

வீரசைவர்கள் வந்து கேட்பதைக் கொடுக்க வேண்டும் என்று அவர் உறுதி பூண்டிருந்தார் (மஹாதேவ செட்டி அதைச் சோதித்துப் பார்க்க வந்து தோற்றுப் போனானல் லவா!), வீரசைவர்கள் என்றால் அவருக்கு மிகுந்த அன்பு. இறைவன் என்னும் மரத்திற்கு வீரசைவர்களே வேர் என்று கருதினார். கீழே நீர் ஊற்றினால் மரமானது மேலே பலன் தருகிறது. பக்தனுக்கு எல்லை இருக்க வேண்டுமே தவிர

வீரசைவத்திற்கு எல்லையில்லை என்பது இவரது திடமான நம்பிக்கை. 'வீரசைவனை மனிதனாக எண்ணினால் நரகம் தப்பாது' என்று தமது அன்பர்களை அவர் எச்சரிக்கை செய்கிறார். அவ்வளவு மட்டும் அல்ல, அவர் மிகவும் கோபத்துடன் இவ்வாறு கூறுகிறார்:

அர்த்தத்தை அனர்த்தமாக்கி தொல்லை செய்யட்டும்
பெற்ற குழந்தைகளைத் துண்டு துண்டாக்கி வீசட்டும்
காதலிக்கும் பெண் கண் முன்னேயே அன்புடன்
சுற்றட்டும்
இப்படி மூன்று விதமான புறக் கூட்டங்கள்
என் மேல் சம்பவித்து உடலைச் சித்திரவதை
செய்யட்டும்
சூலத்தால் குத்தும் தண்டனை வரட்டும்
கிடைக்கும் பிச்சை கிடைக்காது பலபாகமாகச் சிதறிப்
போகட்டும்
அப்போதும் லிங்க ஆராதனையே செய்வேன்
தொண்டர் பூஜையே செய்வேன், பூஜைக்குத் தப்புவதில்லை
இந்த உறுதி கொஞ்சம் தப்பினாலும்
நீ அப்போதே என் மூக்கை அறுத்து விடு
கூடலசங்கம தேவா.

வீரசைவர்களைப் பற்றி அவர் இவ்வளவு உயர்ந்த எண்ணம் வைத்திருந்தார்.

இதற்கு ஒரு சோதனைக் காலமும் அவர் வாழ்வில் வந்தது. அவரது அறநெறியை ஒப்புக் கொண்டு அவரது தொண்டர்களானவர் பலர் விலை மாதுகளாகவும், வழி தவறியவர்களாகவும் இருந்தனர். ஒரு நாள் ஒரு காமுகன் நீலலோசனையின் ஆடைகளைத் தனது காதலிக்காக வேண்டினான். பசவண்ணர் அவனுக்கு அதைக் கொடுக்கச் செய்

தார். இன்னொரு நாள் அவரது மனைவி கங்காம்பிகையின் காதில் உள்ள முத்தாலான தோட்டைக் கவர்வதற்காக வீரசைவ வேடத்திலிருந்த ஒரு கள்ளன் அவள் காதின் மீது கை வைத்தான். அப்பொழுது அவளுக்கு வலியேற்பட்டதால் கத்தினாள். இதைக் கண்ட பக்தர்கள் யாவரும் பயந்தனர். ஆனால் பசவண்ணரோ இதைப் பார்த்து 'ஐயோ, சங்கனின் கை நொந்திருக்குமே' என்று வருந்தினாரே தவிர கள்ளனைத் தடுக்கவில்லை. அப்பொழுது ஒரு வசனம் அவர் வாயிலிருந்து வந்தது:

> உடனிருந்த மனைவியென்று நம்பியிருந்தேன் ஐயா
> கைபிடித்த நல்ல மனைவி என்று நம்பியிருந்தேன் ஐயா
> ஐயோ, நம்முடைய ஐயனின் கை நொந்திருக்குமே
> கழற்றிக் கொடடீ சண்டாளத்தியே
> கள்ளனின் வீட்டிற்குப் பெருங்கள்ளன் வருவானோ
> கூடலசங்கம தேவன் அல்லாது யாருமில்லை

தோடுகளைத் தானே கழற்றி அக் கள்ளனுக்குக் கொடுத்தார். இவ்வாறு வீரசைவர்களுக்காக அவர் எதைச் செய்தவற்கும் தயாராக இருந்தார். மேலும், பசவண்ணரை அதிர்ஷ்டசாலி என்றே கூற வேண்டும். அவருக்காக எப்படிப்பட்ட தியாகத்தையும், நமது ஊகங்களுக்கும் மேற்பட்ட தியாகங்களைக் கூட, செய்ய அவரது மனைவியர்கள் தயாராக இருந்தனர்.

இது வரை பசவண்ணரின் வீட்டிற்கு வந்த பக்தர்களின் குழுக்களைப் பற்றியும், அங்கு நடை பெற்ற சமயக்கூட்டத்தைப் பற்றியும் கண்டோம். அவரது வீட்டிற்கு நாலாவித மான பண்புள்ள மக்கள் வந்து சென்றனர் என்பதற்குச் சில எடுத்துக் காட்டுகளைக் கண்டோம். இனி அவரிடம் வந்த சாதகர்கள், சித்தர்கள், அன்பு நெறியாளர்களைப் பற்றி காண்போமாக. இவர்களே பசவண்ணர் செய்த பெருஞ்சீர் திருத்தங்களுக்குத தூண்டு கோல்களாக இருந்தனர்.

அவர்களில் அல்லம பிரபு அக்ரகண்யன் என்பவன் ஒருவன். அவன் பள்ளிகாவே எனும் ஊரில் பிறந்து வளர்ந்தவன். அவனது இளமைப் பருவத்தில் ஒரு நாள் கொக்கேஸ்வரர் ஆலயத்தில் காமலதே என்னும் கன்னிப் பெண்ணைச் சந்தித்தான். இருவரும் ஒருவரையொருவர் விரும்பினர்; மணம் புரிந்து கொண்டனர்; இல் வாழ்க்கை நடத்தினர். பல ஆண்டுகள் அவர்கள் வாழ்வு இன்பமாகச் சென்றது. இந்த அன்பு மயமான இன்ப வாழ்வினிடையில் ஒரு முறை காமலதே காய்ச்சலால் உடல் நலங் கெட்டாள்; அதிலேயே இறந்தும் விட்டாள். அவளை மனப் பூர்வமாகக் காதலித்து ஏற்றுக் கொண்ட அல்லம பிரபுவிற்கு மிக்க துயராயிற்று. அப்பொழுதே அவன் வாழ்வில் ஒரு வைராக்கியம் பிறந்தது. உலக வாழ்வின் பக்கம் தாவிச்சென்ற மனதை அறநெறியின் பால் திருப்பினான். சிறிது சிறிதாகச் சாதனைகளின் மூலம் அறநெறியில் பேரறிஞன் ஆனான்.

பின்னர் அவர் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று அறநெறியைக் கற்பித்து பலர் நல்வழியைக் கடைப்பிடிக்க வழிவகுத்தார். தமையன் மடிந்து போனதால் மிகவும் மன வருத்தமுற்று அழுதுகொண்டிருந்த முக்தாயக்காள் என்பவளைத் தேற்றி, நல்லறிவைப் பெறச் செய்தார்; கொக்கையன் என்னும் ஊரைச்சுத்தம் செய்யும் தொழிலைச் செய்பவனுக்கு மனதைச் சுத்தம் செய்யும் விதத்தை விளக்கிக் கூறினார். கர்மயோகத்தில் அக்கறையுள்ளவனாக இருந்த சித்தராமனுக்கு அத்துடன் மனதை ஒருமுகப் படுத்திச் செய்யும் சாதனைகளையும் கற்பித்தார். மேலும் அவனை சைவசமயத்திலிருந்து வீரசைவ சமயத்திற்கு மாற்ற கல்யாணிற்குக் கூட்டிவந்தார். அவர்களிருவரும் வந்த பொழுது பசவண்ணர் லிங்கத்தை வணங்குவதில் முழுகியிருந்ததனால் அவர்களை உள்ளே அழைத்துவர வேலைக்காரனான அப்பண்ணன் என்பவனை அனுப்பினார். பிரபு

பொய்க்கோபத்துடன் உள்ளேவர ஒப்பவில்லை. இதைத் தெரிந்துகொண்ட பசவண்ணர் ' இது அவர் வீடு, வீரசைவர் களின் வீடு. அவர் வீட்டுக் காவலுக்காக நான். அவர் தமது வீட்டிற்கு தான் வரும்போது நான்போய் ஏன் அழைத்து வரவேண்டும்?'' என்று கூறி மீண்டும் அப்பண்ணனை அனுப் பினார் அல்லமபிரபு பசவண்ணரிடத்தில் சிறு அளவில் அகங்காரம் தலைதூக்க ஆரம்பித்திருப்பதைக் கண்டு அவர் வீட்டிற்குள் நுழையவில்லை. அப்பொழுது சன்னபச வண்ணன் தானே பசவண்ணரிடம் சென்று எச்சரித்த பொழுது அவர் தமது தவற்றை உணர்ந்தார்., எல்லோரும் சேர்ந்து அவர்களை அழைக்க வந்தனர். அங்கு வாயிலில் அல்லமபிரபுக்கும் பசவண்ணருக்கும் சர்ச்சை நடைபெற்றது. வீரசைவனை வெளியில் நிறுத்திவிட்டு உள்ளே லிங்கத் திற்குப் பூஜை செய்வது சரியல்ல என்றும், வீரசைவர்களுக்கே உடல், மனம், பொருள் ஆகியவற்றை ஒப்புவித்துவிட வேண்டும் என்றும் அல்லம பிரபு பசவண்ணரைக் கண்டித் தார். அதற்குப் பசவண்ணர் ''உடலைக் கேட்டவுடன் கொடுப்பேன், மனதைக் கேட்டவுடன் கொடுப்பேன், செல் வத்தைக்கேட்டவுடன் கொடுப்பேன்'' என்றார். 'கொடுப் பவன் நான்' என்னும் அவர் அகங்காரத்தை அல்லமபிரபு போக்கி ''...அகங்காரம் என்னும் ஆயுதத்தைப் பிடித்துக் கொண்டு செய்யப்படும் பக்தி தன்னையே குத்தும். கோஹேஸ்வரன் என்னும் விரோதியை வெல்லவேண்டு மெனில் அறிவு என்னும் கத்தியைப் பிடிக்கவேண்டும் பார் பசவண்ணா'' என்று எச்சரித்து வீட்டின் உள்ளே வந்தார். அங்கு உள்ளே சென்றதும் முதலில் பிரசாதங்கள் வைக்கப் பட்டிருக்கும் பாத்திரத்திற்கு அருகிலிருந்த மருளுசங்கர தேவர் என்பவரைச் சந்தித்தார். அவர் அல்லமபிரபுவைக் கண்டதும் வசந்த மாதத்தில் மாமரத்திலிருந்து குருத்து தோன்றுவதுபோல் எழுந்து வந்தார். தமது வீட்டிலேயே

எவ்வளவோ ஆண்டுகள் அவர் இருந்தும், பசவண்ணருக்கு அவரது பெருமை தெரிந்திருக்கவில்லை. அவர் ''இருப்பதே வேறாக இருக்கும் அருவாக'' இருந்தார். பார்வைக்கு எளிய வராகத் தோன்றினாலும் அவர் சிறந்த மனிதராக விளங்கினார். அல்லம பிரபுவின் கூர்மையான அறிவு இதைக் கண்டுணர்ந்தது.

பசவண்ணரின் பெரிய வீட்டில் நடைபெற்ற திருக் கூட்டங்களில் பிரபுதேவர் மிகவும் குறிப்பிடத்தக்கவராக இருந்தார். அவரது அறிவுத் திறனை எல்லோரும் வெகுவாகப் பாராட்டினர். அவரது 'சோகம்' (தானே இறைவன் எனும் நிலை) என்னும் அத்துவைதத்தையும், பசவண்ணரின் 'தாசோகம்' (சிவபக்தர்களுக்குச் செய்யும் தொண்டு) என்னும் துவைத நிலையையும் கண்ட சன்னபசவண்ணன் வாயிலிருந்து சூடான சொற்கள் வந்தன. 'உண்டென்பதை பசவண்ணன் கொண்டான்; இல்லையென்பதை அல்லமன் கொண்டான்' என்கிறார் அவர். பசவண்ணரின் முன்பாகவே காயகநெறியைப் பற்றியும், இட்டலிங்க நெறியின் தேவையைப் பற்றியும், வீரசைவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய இடம் பற்றியும் சர்ச்சிக்கப்பட்டன. சித்தராமனுக்கு சன்னபசவண்ணனால் இட்டலிங்க உபதேசம் செய்து வைக்கப்பட்டது. அ ல் ல ம பி ர பு அக்கமகாதேவியை எல்லோரின் முன்பாகவும் பலவிதமான கேள்விகளைக் கேட்டு பரிசோதித்து அவரது அறிவின் கூர்மையை எல்லோருக்கும் தெளிவுபடுத்தினார். இது நடைபெற்ற சில தினங்களில் அல்லமபிரபு கல்யாணைவிட்டுப் புறப்பட்டு நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று தமது நெறியைப் பரப்பி மீண்டும் கல்யாணிற்கு வந்து பல பெருஞ் சிறப்புக்களைப் பெற்றார். (அவருக்குக் கிடைத்த மதிப்பால் சில வீரசைவர்களுக்கு மனஉறுத்தல் ஏற்பட்டது). இறுதியில், அவர் எல்லோருக்கும்

அவரவர்கள் இறையருளில் முன்னேறிச் செல்லவேண்டிய வழியைக்காட்டி, ஸ்ரீசைலத்தின் கதளிவனம் சென்று இறைவனுடன் கலந்தார்.

பசவண்ணர், சன்னபசவண்ணர் போன்ற வீரசைவர்கள் யாவரும் அல்லமபிரபுவைத் தமது குருவென்றே போற்றினார்கள். அவர் உண்மையிலேயே பெரிய ஞானி. பெரும் ஞானிகளாக விளங்கிய அவரிடம் சாதி, குலம் என்னும் பாகுபாடுகளைக் காணும் தன்மையும் இருக்கவில்லை. அப்படிப்பட்டவர்கூட ஒரு இடத்தில் தான் பசவண்ணரிடமிருந்து பக்தியைக் கற்றுக் கொண்டதாகச் சொல்லுகிறார். அவர் ஓரிடத்தில் பசவண்ணரை இவ்வாறு புகழ்ந்து கூறியுள்ளார்.

கல்யாண் எனும் விளக்கில் பக்திரசம் எனும் எண்ணெய் ஊற்றி
ஆசாரம் எனும் பக்தியில் பசவண்ணன் எனும் ஜோதியையேற்ற
சுடர்விட்டு எரிந்ததையா சிவனின் பிரதாபம்
அந்த ஒளியின் உள்ளே சோபித்துக்கொண்டிருந்தன
எண்ணில்லாத கணங்கள்...

பசவண்ணர் தூய ஒளி என்பது உண்மை; ஆனால் சுடர் விட்ட பிரகாசமாக ஒளித்தது மட்டும் சிவனின் பிரதாபம். எவ்வளவு சிறப்பான உவமை!

அக்கமகாதேவியும் பசவண்ணரும் சமகாலத்தவரே. அக்காலத்திலிருந்தவர்களில் இவளைப் போல் நமது கவனத்தை ஈர்ப்பவர்கள் மிகச் சிலரே, இவள் உடுதடி எனுமிடத்தில் சிவபக்தராக இருந்த பெற்றோர்களுக்குப் பிறந்தவள். அவர்களுக்கு இவள் ஒரே குழந்தையாகப் பிறந்தாள். இளமையிலிருந்தே ஸ்ரீசைலத்தில் காட்சிதரும் மல்லிகார்ஜுனனின் மேல் அளவிடற்கரிய அன்புகொண்டிருந்

தாள். நாட்கள் செல்லச் செல்ல இறைவன்மேல் கொண் டிருந்த பக்திமுற்றி அவனையே தனது கணவனாகப்பாவித்து வாழ ஆரம்பித்தாள். சிறந்த அழகியாகவும், இளம் பருவத்து வனப்பு யாவற்றையும் பெற்றிருந்தவளாகவு மிருந்த அவளை கௌசிகன் என்னும் அரசன் வற்புறுத்தித் திருமணம் புரிந்து கொண்டான். அவளது உடல் அவன் அரண்மனையிலிருந் தாலும் மனம்மட்டும் இறைவனிடம் தஞ்சம் பூண்டிருந்தது. சிவபக்தனாக இல்லாமலும் காமுகனாகவும் இருந்த அவனுடன் வாழ்க்கை நடத்துவது கடினமாகி, தான் போட்டிருந்த மூன்று நிபந்தனைகளையும் மீறியதையே காரணமாகக் கொண்டு எல்லாவற்றையும் புறக்கணித்து விட்டு வெளியேறிவிட்டாள். தனிமையில் புறப்பட்டுச் சென்ற அவள் வழியில் கயவர்களால் சொல்லொணாத் துயருக்கு ஆளானாள். இறைவனின் மேல் அவள் கொண் டிருந்த அளவிடற்கரிய அன்பே அவளை அத்துயரங்களி லிருந்து காப்பாற்றியது. அவள் கால்வைத்த இடம் செழித் தது, அவளது சொற்கள் சிவதத்துவங்கள் ஆயின, அவளது வழி சிவநெறியாக இருந்தது. அக்காலத்தில் சாதகர்கள் பலர் குழுமியிருந்த கல்யாணிற்கு வந்து பசவண்ணரின் வீட்டில் நடைபெற்ற திருநெறிக் கூட்டத்தில் கலந்து கொண்டாள். அவளது அறிவின் சிறப்பை அறிந்திருந்த அல்லமபிரபு அதை உலகிற்குத் தெரியவைக்கவேண்டி சில விவாதங்களை அவளுடன் நடத்தினார். அவ்விவாதங்களி லெல்லாம் அவள் மிகவும் சிறப்பான விளக்கங்களைக் கொடுத்துத் தான் இறைவனுக்கு மனதைக் கொடுத்த சங்கதியைத் தெரிவித்தாள். அவள் உடலின் மேல் சற்றும் பற்றில்லாமல் விளங்கிவந்தாள். என்பதை எல்லோரும் அறிந்துகொண்டனர். அவளது அளவு கடந்த கடவுட்பற்றை அல்லமன் போன்ற எல்லோரும் சிறப்பித்துப் புகழ்ந்தனர். கல்யாணில் அவள் வீரசைவர்களின் மகளைப் போல இருந்து அமைதியான முறையில் வாழ்ந்து வந்தாள். பழைய

துன்பங்கள் யாவும் மறந்துபோயின. இவ்வாறு சில காலம் இருந்து பின்னர் அவள் ஸ்ரீசைலத்திற்குப் புறப்பட்ட பொழுது பசவண்ணர் போன்றோருக்குப் பெருந் துயரேற் பட்டது. தன்னை வழியனுப்ப வந்த தொண்டர்களிடம் அவள் ''சன்னமல்லிகார்ஜுனனின் கைபிடித்து நான் உங்களுக்கு நற்பெயரை ஈட்டித்தருகிறேன்'' என்று சொல்லி விட்டு ஸ்ரீசைலத்திற்கு வந்து அங்கு கதளிவனத்தில்

கிக்கீ கிக்கீ என்று சத்தம் செய்யும் கிளிகளே
நீங்கள் பார்க்கவில்லையா நீங்கள் பார்க்கவில்லையா
குரல் உயர்த்திப்பாடும் குயில்களே
நீங்கள் பார்க்கவில்லையா நீங்கள் பார்க்கவில்லையா
இறங்கிவந்தாடும் தும்பிகளே
நீங்கள் பார்க்கவில்லையா நீங்கள் பார்க்கவில்லையா
நதிக்கரைகளில் விளையாடும் அன்னங்களே
நீங்கள் பார்க்கவில்லையா, நீங்கள் பார்க்கவில்லையா
மலைகளில் குகைகளில் ஆடும் மயில்களே
நீங்கள் பார்க்கவில்லையா, நீங்கள் பார்க்கவில்லையா
சன்னமல்லிகார்ஜுனன் எங்கிருக்கிறான் என்று
நீங்கள் சொல்லுங்கள் நீங்கள் சொல்லுங்கள்

என்று பாடினாள். சிலகாலம் அங்கு வாழ்ந்து இறுதியில் இறைவனின் திருவடியைச் சேர்ந்தாள்.

அக்கமகாதேவி பசவண்ணரைத் தன்னை ஈன்றெடுத்த தந்தையாகவே எண்ணிப் புகழ்ந்து பாடியுள்ளாள். தனது வசனங்களில் அவளது துன்பமான வாழ்விற்கு அவர் மருந்தாக இருந்தார். ஆழ்ந்த அனுபவங்களால் உருவாக்கப் பட்ட அவளது வசனங்களில் படிப்பவர்களின் மனதை உருக்கும் தன்மை உள்ளது. அக்காலத்திய வீரசைவப் பெண் மணிகளில் அவள் ஒரு துருவ நட்சத்திரம்.

சித்தராமன் என்பவன் பன்னிரண்டாம் நூற்றாண்டின் மிகவும் சிறப்பானவர்களில் மற்றொருவனாவான். அவன் சொன்னலிகே என்னும் ஊரில் ஒக்கலிக கௌண்டரான மொரடிய முத்தன் மற்றும் சுக்கவ்வை என்னும் பெற்றோர் களுக்கு அவர்களின் மூப்புப்பருவத்தில் பிறந்தவன் ஆவான். அவனுக்கு அவனது பெற்றோர்கள் தமது குலதெய்வமான தூளிமாகாளன் என்னும் பெயரைச் சூட்டியிருப்பினும் அப்பெயர் நிலைக்கவில்லை. இளமைக் காலத்தில் அவன் உலகமக்களின் கண்களுக்கு ஒரு பயித்தியத்தைப் போலத் தெரிந்தான். இவ்வாறு அவன் வீட்டிலிருப்பதைவிட வெளி யில் சென்று பிற சிறுவர்களைப் போல ஆடுமாடுகளையாவது மேய்க்கட்டும் என்று எண்ணி அவனது பெற்றோர்கள் அவனை அத்தொழிலிற்கு அனுப்பினர். அவன் தினந்தோறும் மாமரத்தின் கீழேயிருந்த லிங்கத்தை வழிபட்டு வீட்டி லிருந்து கொண்டுவந்த உணவைப் பிற சிறுவர்களுடன் பங்கிட்டு உண்டு மாலையில் வீடு திரும்புவான். அவனுக்கு பர்வதமல்லையனைப் பார்க்கவேண்டும் என்ற பேரவா இருந்தது. ஒரு நாள் அவரைக் காணப் புறப்பட்டுச் சென்ற மக்களின் கூட்டத்தில் தானும் சேர்ந்து ஸ்ரீசைலத்திற்குச் சென்றான். அங்கு சென்று 'எனக்கு மல்லையனைக் காட் டுங்கள்' என்று கூறிய பொழுது அவர்கள் சிவலிங்கத்தைக் காட்டினார்கள். அவன் இறைவனைத் தனது கற்பனையால் உருவகித்து வந்தது அவ்வாறு இல்லை. தனக்கு மல்லை யனின் திருக்காட்சி கிடைக்கவில்லையென்று துன்பமுற்று அங்கிருந்த மலையுச்சியிலிருந்து விழுந்துவிட எண்ணிச் சென்ற பொழுது இறைவன் தனக்குத் திருக்காட்சி கொடுத்ததைப்போன்ற அனுபவம் அவனுக்கு ஏற்பட்டது. பயித்தியக்காரனாக ஸ்ரீசைலத்திற்குச் சென்ற சிறுவன் ஞானி யாகி சொன்னலிகே திரும்பி வந்தான் தூளிமாகாளனை அவனது பெற்றோர்களும் வணங்க ஆரம்பித்தனர். இதனால் அவன் தனியாகச் சென்று வேறு ஒரு மடத்தைக் கட்டி

கோயிலை எழுப்பி சிவனை அதில் நிறுவி வழிபட்டு வந்தான். சிறிது சிறிதாக அவனது புகழ் எல்லா இடங்களுக்கும் பரவிற்று. அவனது மனம் மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்று எப்பொழுதும் சிந்தித்து வரலாயிற்று அவன் செய்த சமுதாயத் தொண்டுகளில் சிறப்பானதாக சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். அவை, பெரிய ஏரி ஒன்றைக்கட்டுவித்து கால்நடைகளுக்கும் மக்களுக்கும் புல் பூண்டுகளுக்கும் நீர் கிடைக்குமாறு செய்தது; சொன்னலிகே என்னும் பெரும் நகரைக் கட்டுவித்தது; கடனின் பிடியில் சிக்கியிருந்த மக்களை அவற்றிலிருந்து காப்பாற்றியது; சமுதாயத் திருமணங்களை நடத்திவைத்தது; இவ்வாறு பல. இப்படி அவன் சமுதாயத்தொண்டுகளில் மூழ்கி மிக்க சேவை செய்து வந்தபொழுது அல்லமபிரபு சொன்னலிகேக்கு வந்து அவனுக்குக் கடவுள் நெறியைக் கற்பித்தார் சித்தராமன் உயிர்களின்மீது அன்பு கொண்டவனாகவும், சிறந்த ஒழுக்க முள்ளவனாகவும் இருந்தாலும் அவனுக்கு வீரசைவ நெறி யின் உபதேசம் ஆகியிருக்கவில்லை. அவனுக்கு அதைச் சிறிதளவு கற்பித்துப் பிறவற்றைச் சன்னபசவண்ணனிட மிருந்து தெரிந்துகொள் என்றும் அதற்காக அவன் கல்யாணிற்கு வரவேண்டும் என்றும் கூறினார். அவனும் அங்கு சென்று பசவண்ணர் போன்றோரைச் சந்தித்தான். அங்கு பசவண்ணரின் வீட்டிலிருந்த வீரசைவர்கள் சித்த ராமன் தனது கழுத்தில் லிங்கம் கட்டியிருக்கவில்லை என்றும் அவன் லிங்கத்தைக் கட்டிக்கொள்ளவேண்டும் என்றும் வாதம் செய்தனர். அதற்கு அல்லமன் "மேலே சென்று விட்டவனுக்கு ஏணியெதற்கு? கர்மயோகியான சித்தராம னுக்கு லிங்கம் கட்டிக் கொள்ளவேண்டிய அவசியமில்லை" என்று சொன்னார். ஆனாலும் தொண்டர்கள் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. வானில் பறக்கும் பட்டமென்றாலும் கீழேயிருந்து ஒருவன் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று விவாதம் செய்தனர். இறுதியில் சித்த

ராமனுக்கு சன்னபசவண்ணன் லிங்கம் கட்டி வீரசைவ நெறியில் சேர்த்துக் கொண்டான். அவன் சில காலம் கல்யாணில் வீரசைவர்களின் கூட்டத்திலிருந்து பின்னர் சொன்னலிகேக்குத் திரும்பி வந்தான். அங்கு தெய்வநெறி சமுதாய நெறி இரண்டையும் சிறப்பாகப் போற்றி இறுதியில் தான் கட்டுவித்த ஏரியின் நடுவிலிருந்த சமாதியில் இறைவனடியினைச் சேர்ந்தான். அவன் இறைவனின் பாதத்தைச் சேர்ந்தது பசவண்ணரின் மறைவுக்குச் சில காலத்திற்குப் பிறகு.

அக்காலத்தில் மிகவும் சிறந்து விளங்கிய சித்தராமன் வீரசைவ மதத்தைத் தழுவியது மிகவும் முக்கியமான செய்தியாகும். வீரசைவ நெறி அதிகமாகப் பரவுவதற்கு இது உதவியது. சித்தராமன் தனது பல பாடல்களிலும், வசனங்களிலும் பசவண்ணர், சன்னபசவண்ணன், அல்லமன் மாசிதேவன், அக்கநாகம்மா போன்றவர்களைச் சிறப்பித்துக் கூறியுள்ளான். பக்தி ஸ்தலம் பசவண்ணனுக்கு ஆயிற்று. 'பக்தனாக வேண்டுமென்றால் பசவண்ணனாக வேண்டும்' என்று இரு இடங்களில் கூறியுள்ளான். அவர் வீட்டின் திருத்தொண்டர்களின் கூட்டங்களில் ('மஹானுபாவ கோஷ்டி') ஒளியும் ஒளியும்கூடி மூடத்தன்மையை ஒழித்துக் கட்டியதைத் தெரிவிக்கிறான். பசவண்ணரின் வசனங்களின் தாக்கம் இவனது படைப்புக்களில் மிகுந்துள்ளதை நாம் காணலாம்.

பிஜ்ஜளன் கொலை செய்யப்பட்டதன்மேல் அவனது தம்பியான கர்ணதேவன் தனக்கு பிஜ்ஜளன் கவனித்து வந்த அமைச்சர் பதவி வேண்டும் என்று விரும்பி சித்தராமனுக்குச் செய்தி சொல்லியனுப்பிய பொழுது அவன் அவனது விருப்பத்தை ஏற்கமறுத்துவிட்டான் என்று ராகவாங்கன் தனது சித்தராமசரிதத்தில் தெரிவித்துள்ளார். உண்மையில்

இந்த கர்ணதேவன் பிஜ்ஜளனின் தம்பி அல்லன்; அவனது மூத்தமகனின் மகன்-அதாவது பேரன். இவன் சித்தராமனின் சிறப்பையும் பெருமையையும் பயன்படுத்திக் கொண்டு பட்டத்திற்கு வரவேண்டும் என்று மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்காமல் சென்றுவிட்டன. பிஜ்ஜளனின் பின்னர் அவனது இரண்டாம் மகனான ராயமுராரி சோவிதேவன் என்பவன் பட்டத்திற்கு வந்தான்.

பசவண்ணரின் சமகாலத்தில் வாழ்ந்தவர்களில் இன்னொருவர் சகலேசமாதரசன் என்பவர். இவன் அவரை விட வயதில் மூத்தவன். இவனது தந்தையான மல்லரசன் மிகுந்த சிவபக்தன். கல்லகுரியென்னும் நாட்டின் அரசன் அவன் தனது மகனுக்குப் பட்டம் கட்டிவிட்டு ஸ்ரீசைலத்தில் அமைதியான வாழ்வை அமைத்துக்கொண்டு சிவன் மேல் அன்பு செலுத்தி வந்தார். மாதரசன் சில நாட்கள் அரசை ஆண்டு பின்னர் ஒரு வைராக்கியத்தின் பேரில் ஸ்ரீசைலம் சென்று தந்தையைத் தேடினான். சிறிது காலம் தேடியபிறகு தனது தந்தையைக் கண்டான். மல்லரசன் தனது மகனைத் தன்னுடன் சிறிது காலம் வைத்திருந்துவிட்டுப் பின்னர் கல்யாணிற்குச் சென்று பசவண்ணரிடம் இருந்துவா என்று ஆணையிட்டார். அவ்வாறே சகலேசமாதரசன் கல்யாணிற்கு வந்து பசவண்ணரின் திருக்கூட்டத்துடன் சேர்ந்தான். இவன் பல வசனங்களை இயற்றியுள்ளான்.

சகலேசமாதரசன் ஒரு சிறந்த இசை வல்லுனனாக இருந்தான். அவன் ராவணஹஸ்தம், கின்னவீணை, கச்சப வீணை, தும்புரவீணை, சாரங்கவீணை போன்ற இசைக் கருவிகளை இசைத்து தன்னைத் தானே மறந்து இறைவனின் திருப்புகழைப் பாடிவந்தான். இவனுடைய வசனங்களில் பசவண்ணரின் படைப்புக்களின் தாக்கத்தைக் காணலாம்.

ஹிப்பரிகை என்னும் சிற்றூரிலிருந்து கல்யாணிற்கு வந்து அங்கு துணி வெளுக்கும் தொழில் செய்து கொண் டிருந்தவன் மாசையன் என்பவன் ஆவான். நாள்தோறும் அன்பர்களின் வீடுகளுக்குச் சென்று அழுக்குத் துணிகளைப் பெற்றுவந்து நீர் நிலைக்குச் சென்று அவற்றை வெளுத்து திருப்பிக் கொடுத்து வந்தான் இவன். இவனது இயல்பு கடுமையானதாக இருந்தது. தன்னைத் தீண்டும் வீரசைவர் களல்லாதோரை தண்டிப்பேன் என்று கூவிக்கொண்டும் மணியடித்துக்கொண்டும் வீதிகளில் செல்லும் இவனது பக்தி எந்த அளவுக்குத் தீவிரமானதாக இருந்ததென்றால் பிஜ்ஜளனின் எச்சரிக்கைக்கும் இவன் பயப்படவில்லை. 'தான் கொடுப்பவன்' என்னும் அகங்காரம் பசவண்ணரிடம் தோன்றியபோது அதைப் போகச் செய்தவன் இவன். இவனுடைய சுபாவத்தையே கொண்டிருந்த இன்னொருவன் அம்பிகரசௌடையன் ஆவான். பசவண்ணரின் வீட்டில் அறநெறிக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது தான் வீட்டின் வெளியே நின்று அன்பர்களின் காலணிகளைப் பார்த்துக் கொள்ளுகிறேன் என்று வசனம் ஒன்றில் கூறியுள்ளான். இருவரும் முரட்டுத் தன்மையுடை யவர்கள். உலகில் அநியாயம், பொய்மை போன்றவற்றைக் கண்டால் சுற்றிவளைக்காமல் நேரிடையாகவே அதைக் கண்டிக்கும் தன்மையை இவர்களது வசனங்களில் காணலாம். மாசிதேவன் தனது வசனங்களில் ஒன்றில் அக்காலத்தில் பசவண்ணரின் சிறப்பு எல்லா இடங்களிலும் பரவியிருந்தது என்று மிகவும் அழகாகக் கூறியுள்ளான்--''எங்கெங்கு பார்த் தாலும் அங்கங்கு பசவணென்னும் கொடி, எட்டிப்பார்த் தால் லிங்கத்தின் கூட்டம், நெருங்கிப் பார்த்தால் பக்தி யெனும் ரசம் ஐயா.'' பசவண்ணரின் பெயரைக் கூறிக் கொண்டு சோற்றுக்காக திருத்தொண்டர் வேடம் பூண்டிருக் கும் வீரசைவர்களை மிகவும் கண்டித்திருக்கிறான். இவன்

பசவண்ணரின் வீட்டில் நடைபெற்ற திருக்கூட்டங்களில் மிகவும் தெளிவாகத் தனது எண்ணங்களைத் தெரிவித்தவர் களுள் ஒருவன்.

மோளிகேயமாரையன் என்பவன் அக்காலத்தின் மற்று மொரு சிறந்த மனிதன். அவன் முதலில் காஷ்மீரத்தில் அரசனாக இருந்தவனென்றும் அவனிடம் நலமாக இருந்த ஆறாயிரம் வீரசைவர்களைப் பசவண்ணர் அழைத்துக் கொண்டார் என்றும் அதனால் சினமுற்ற அவன் பசவண்ணரைக்கொன்றுவிடத் தனது ஆட்களை அனுப்பிய பொழுது அவர்கள் பக்தர்களானார்கள் என்றும், பின்னர் தானே கல்யாணிற்கு வந்து அங்கு நகரின் வெளியிலிருந்த குடிசையொன்றில் தங்கிக்கொண்டான் என்றும் கதைகள் கூறுகின்றன. அவனது மனைவி ராணி மகாதேவியும் கணவ னுடன் வந்து ஏழ்மையைத் தழுவிக்கொண்டாள். அவன் விறகு வெட்டி வந்து விற்றுத்தனது பிழைப்பை நடத்தி வந்தான். நாள்தோறும் காட்டிலிருந்து விறகு வெட்டிக் கொண்டு வந்து விற்று அதனால் வந்த பணத்தைக்கொண்டு பல அன்பர்களை மகிழ்வித்துத் தானும் மகிழ்ந்தான். அன்பர்களுக்காக ஏழையான அவன் வீட்டுக் கஞ்சியே பச வண்ணரின் வீட்டு அறுசுவை உணவினைவிட பிடித்தமான தாயிற்று. இதையறிந்த பசவண்ணருக்கு மாரையனின் ஏழ் மையைப் போக்க வேண்டும் என்னும் எண்ணம்தோன்றிற்று. அவர் ஒரு முறை மாரையன் வீட்டில் இல்லாத பொழுது வந்து மகாதேவியளித்த உணவைப் பெற்றுக் கொண்டு புறப் படும் பொழுது யாருக்கும் தெரியாமல் அந்த வீட்டில் பணப் பையை விட்டு விட்டு வந்தார். வீட்டிற்கு வந்து பையைப் பார்த்த மாரையன் இது பசவண்ணரின் வேலை என்று அறிந்து 'நமது இறைவன் கொடுத்த வேலையே நமக்குப் போதும்; பிறரின் கருணை வேண்டாம்' என்று கூறி அப்பணத்தை மறுத்து விட்டான். ராணி மகாதேவி தனது

வசனங்களில் தமது பழைய வாழ்வின் இன்ப நினைவுகளை நினைவு கூர்ந்திருந்தாலும் அப்போதைய ஏழ்மை வாழ்வையும் அவள் இன்பமுடன் ஏற்றிருந்தாள். அவள் உண்மையிலேயே ஒரு மிகச் சிறந்த குடும்பப் பெண்ணாக விளங்கினாள்.

இப்படிப்பட்ட தன்மையைக் கொண்டதே இன்னொரு குடும்பமும், ஆய்தக்க மாரையன் மற்றும் லக்கம்மாள் இருவரும் கணவன் மனைவியர். பசவண்ணரின் வீட்டில்வீரசைவத் தொண்டர்களுக்குப் படியில் அரிசி போன்ற தானியங்களை வழங்கும் பொழுது கீழே சிதறும் தானியங்களைப் பொறுக்கிக் கொண்டு வந்து வீட்டில் தரும் வேலையை மாரையன் செய்து வந்தான். ஒரு நாள் வீரசைவர்களின் திருக்குழுவில் உழைப்பைப் பற்றிய சர்ச்சை வந்தது. இறுதியில், ஒருவன் மோட்சம் அடைவதற்கு உடல் உழைப்பு மட்டும் போதாது; இறைவனைத் தெரிந்து கொண்டால் மட்டுமே மோட்சம் கிடைக்கும் என்னும் முடிவிற்கு வந்தனர். இதைக் கேட்ட மாரையன் வெறுப்புற்று வேலைக்குச் செல்லாமல் வீட்டிலேயே உட்கார்ந்து விட்டான். லக்கம்மாள் அவனிடம் வந்த வேலைக்குச் செல்லுமாறு எழுப்பினாள். அவனும் சென்று அவசர அவசரமாக அதிகமான தானியங்களைப் பொறுக்கிக் கொண்டு வந்து தன் மனைவியிடம் கொடுத்த பொழுது அவள் ''ஆசையென்பது அரசிக் கல்லாது சிவபக்தருக்கு உண்டா?'' என்று அவனுக்கு அறிவு கூறி அதிகப் படியான அரிசியைத் திருப்பியனுப்பி விடுகிறாள். இவர்கள் இருவரும் மிகச் சிறந்த சிவபக்தர்கள் மேலும் வசன ஆசிரியர்களும் கூட ஏழ்மையிலிருந்தாலும் இன்பமாக வாழலாம் என்பதற்கு இவ்விரு குடும்பங்களும் மிகச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

கின்னரி பொம்மையன் அல்லது சின்னரையன் என்னும் ஒரு சிவபக்தன் கின்னரம் என்னும் இசைக் கருவியை இசைக்கும் தொழிலைச் செய்து வந்தான். அவன் கல்யாணிற்கு வந்த பொழுது பசவண்ணர் அவனை நன்றாக ஆதரித்தார். சந்தித்த சில நாட்களுக்குள்ளேயே இருவரும் நெருங்கிய நண்பர்களாயினர். கின்னரையனுக்கு வெங்காயம் என்றால் மிகுந்த பற்று. ஒரு நாள் அவன் வெங்காயத்தை வரவழைத்து மேல் தோலை நீக்கி சுத்தம் செய்து கொண்டிருந்த பொழுது அங்கே வந்த பசவண்ணர் 'இந்த உண்ணத் தகுதியில்லாத பொருளை யார் கொண்டு வந்தது?' என்று கோபத்துடன் கேட்டார். இதனால் மன வருத்தமுற்ற கின்னரையன் கல்யாணை விட்டுப் புறப்பட்டுப் போய் விட்டான். இதைக் கேள்விப்பட்ட பசவண்ணருக்கோ உயிர் போனது போலாயிற்று. வெங்காயத்தால் ஏற்பட்ட கோபத்தை வெங்காயத்தாலேயே தீர்க்கிறேன்' என்று கூறி வெங்காய ஊர்வலத்தை புறப்படச் செய்தார். சிவ பக்தக்கள் வண்டிகள் நிரம்ப வெங்காயத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். வெங்காய வண்டிகளின் முன்னர் மக்கள் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் சென்றனர். யானை குதிரைகளுக்குக் கூட வெங்காயத்தையே சேணமாகவும் அணிகலன்களாகவும் அணிவித்னர். மக்கள்வெங்காயத்தை முடிந்து கொண்டனர்; அதனாலான உடைகளை அணிந்து கொண்டனர். பசவண்ணர் கழுத்தைச் சுற்றியும் வெங்காய மாலையை அணிந்து கொண்டு கையிலும்வெங்காய மாலையைச் சுற்றிக் கொண்டார். இப்படிப்பட்ட அபூர்வமான ஊர்வலம் புறப்பட்டு கல்யாணைத் தாண்டி அருகிலிருந்த ஊரைச் சேர்ந்தது. இதைக் கண்ட கின்னரையனின் கோபமெல்லாம் கரைந்து போய் பசவண்ணரைக் கட்டித் தழுவினான். வெங்காய வண்டிகளையும்' தோரணங்களையும் பார்த்தவாறே பசவண்ணரின் வீட்டிற்குத் திரும்பினான் அன்றைய சமையலில் வெங்காயம் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது என்பதைக் கூற,வேண்டிய அவசியமில்லை.

ஒரு முறை இந்த கின்னரையன் இறந்து போனதாகவும் அப்பொழுதே பசவண்ணரின் உயிரும் பிரிந்ததென்றும்பின்னர் அவனது உயிர் திரும்பி வந்தது என்றும் அப்பொழுது பசவண் ணரின் உயிரும் திரும்பிற்று என்றும் கதைகள் கூறுகின்றன.

இப்படிப்பட்ட கதைகள் இன்னும் பல உள்ளன. ஒரு முறை வீரசைவகுரு ஒருவர் பசவண்ணரின் வீட்டிற்கு வந்தார். அப்பொழுது பசவண்ணர்உணவருந்தி சற்று ஒய்வெடுத்துக் கொண்டிருந்தார். அவர் உள்ளே அனுமதிக்கப்படாததால் அப்படியே திரும்பிப் புறப்பட்டு சென்று விட்டார். அவருடன் பசவண்ணரின் உயிரும் போயிற்று; அவர் வந்த பொழுது இவர் உயிரும் வந்தது என்று ஒரு கதை கூறுகிறது. பச வண்ணர் ஒரு 'வீரசைவ உயிர்' என்பதைக் கூறுவதற்காகப் பிறந்த கதைகள் இவை.

இறுதியாக அவரது தமக்கை மகனான சன்னபசவண்ண னைப் பற்றிக் காண்போமாக. இவர் அக்கநாகம்மாளின் மகனாவார். இவரை வசன ஆசிரியர்கள் 'சிறிய தண்ட நாயகர்' என்று அழைத்துச் சிறப்பித்துள்ளனர். பசவண்ண ருக்கு இவர்மேல் மிகுந்த அன்பு. அவரே இவருக்கு இட்ட லிங்க உபதேசம் செய்தவர். இவர் சிறந்த கல்விமானாகவும் பெரும் அறிஞனாகவும் விளங்கினார். வீரசைவ நெறியின் கொள்கைகளை விளக்கும் நூல்கள் யாவற்றையும் இவர் மிகவும்சிறப்பாகக் கற்றிருந்தார். இவர் சிறந்தஞானியாகவும் இருந்தார். விவாதக் குழுக்களில் இவர் சிறப்பான இடம் பெற்று முன்னணியிலிருந்து வந்தார். இவர் பசவண்ணரைப் போல உணர்வுஜீவியாக விளங்காமல் அறிவு ஜீவியாக விளங் கினார். சித்தராமனுக்கு உபதேசம் செய்து அவனை வீரசைவ சமயத்தில் சேர்த்துக் கொண்டார் என்னும் செய்தியை நாம் முன்பே கண்டோம்.

இங்கு நாம் கண்டவர்கள் பசவண்ணரிடம் வந்து சென்ற நூற்றுக்கணக்கானவர்களில் மிகச் சிலர் மட்டுமே. அவரது உதவியாளராக இருந்த ராயசம் மஞ்சண்ணன், நெருங்கிய உதவியாளரான படிஹாரி உத்தண்ணன் மற்றும் ஹடப்ப அப்பண்ணன், அப்பலூரில் சமணர்களைத் தோற்கடிக்கப் பல அதிசயங்களைச் செய்த ஏகாந்த ராமையன், பிஜ்ஜளனின் உணவுத் துறையில் அதிகாரியாக இருந்த மிகக்கடுமையான சிவ பக்தனான சொட்டளபாசரசன், வீரரசநிதி முசுடே சௌடையன், வீரசைவர்களுக்காகச் சேவை செய்யும் பொருட்டுத் தனது இட்டலிங்கத்தையும் துறக்கத் தயாராக இருந்த நுலிய சந்தையன், நம்பிக்கையில்லாத மனைவியின் செயலால் வைராக்கியம் கொண்டு கல்யாணிற்கு வந்து பசவண்ணரின் வீட்டிலிருந்த பக்தர்களை 'பசவனின் வீட்டு எச்சில் பாத்திரங்களைச் சுற்றும் ஈக்கள்' என்று நகைச்சுவையுடன் கூறிய கட்டிவாளையன் இப்படி இன்னும் பல வீரசைவர்கள் அவரது வாழ்வில் வந்து சென்றனர். அவர்கள் எல்லோரைப் பற்றிய விபரங்களும் இங்கு கொடுக்கப்படவில்லை.

இப்பகுதியின் துவக்கத்தில் பக்திப் பரவசத்தால் ஆட்டம் ஆடிய வீரசைவக் குழுக்களை நாம் பார்த்தோம். அக்குழுக்களின் இன்னொரு முகத்தையும் நான் காண வேண்டும். சாதகர்களும், ஞானிகளும், சிந்தனையாளர்களும் அங்கு சேர்ந்த பொழுது உணர்ச்சிப் பெருக்கு குறைந்து சிந்தனை ஆரம்பமான பொழுது அறநெறிக்கொள்கைகள், குரு, 'லிங்கம், வீரசைவம், தொழில் (காயகம்) போன்ற பொருள்கள் குறித்து விவாதங்கள் நடைபெற்றன. கல்லோடு கல்மோதி நெருப்பு வருதல் போன்று மனமும் மனமும் தொடர்பு கொண்டமையால் உண்மைநெறி சிறப்பாக வளர ஆரம்பித்தது. சிறியவர்—பெரியவர் என்று வேறுபடுத்தாமல் ஆண்—பெண் என்று பாகுபாடு செய்யாமல், செல்வந்தன். புலையன் என்று பிரிக்காமல் எல்லோரும் அந்த சர்ச்சைகளில்

பங்குகொண்டனர். சூழ்நிலை ஏற்பட்டபொழுது இன்னொருவனைப் போற்றுவது, வேறொருவனின் தவற்றைத்திருத்தத் தயங்குதல் போன்றன அங்கு நடக்கவில்லை. வீரசைவ நெறியின் வளர்ச்சிக்கு இப்படிப்பட்ட குழுக்கள் மிகுந்த உதவி செய்திருக்கவேண்டும். இக்குழுக்களுக்கு 'அனுபாவ கோஷ்டி', 'மஹானுபாவபிரசங்கம்', 'அனுபவமண்டபம்', 'கணதிந்திணி', 'விசாரமண்டபம்' போன்ற பெயர்களிட்டுச் சிறப்பித்து பிற்காலத்தவர்கள் அழைத்தனர். இப்படிப்பட்ட குழுக்கள் பசவண்ணரின் வீட்டில் மட்டுமல்லாது வேறு இடங்களிலும், சொல்லப் போனால் வீரசைவர்கள் எங்கெல்லாம் கூடினார்களோ அங்கெல்லாம் கூடிச் செயல்பட்டன. பரந்தமனதுடன் சர்ச்சைகள் நடத்திய இத்தகைய குழுக்களினால் மக்களின் மனதிற்குள் மிகவும் ஆழமாகப் பதிந்துவிட்ட குருட்டு நம்பிக்கைகளை அழிப்பது சாத்தியமாயிற்று.

பசவண்ணர் எப்பொழுதும் மக்களால் சூழப்பட்டு இருந்தார். மக்கட்கூட்டம் அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அவருக்கு உற்சாகம், பெருமகிழ்வு போன்றனவற்றை அவ்வப்பொழுது வழங்கிவந்தவை இரு நிகழ்ச்சிகளாகும். ஒன்று இறைவனை வழிபடுவதால் கிடைப்பது, மற்றொன்று மக்களால் சூழப்பட்டிருப்பதால் கிடைப்பது.

நீர் தப்பிய மீன் வாழ்வது இல்லை
சிவகணங்களுடன் என்னைச் சேர், லிங்கமே
சிவசிவா கூடலசங்கமதேவா
முந்தானை நீட்டிக் கெஞ்சுகிறேன்

மீனுக்கு நீரிருப்பதைப் போன்று அவருக்கு மக்கட்கூட்டம். மக்கள் இல்லாவிட்டால் அவரது வாழ்வு வெறுமையாகக் காணப்பட்டது; வாழ்வு தொந்தரவானதாக இருந்தது. அவர் வாழ்ந்த வீட்டின் பெயரான 'மஹாமனை' உண்மையிலேயே தன் பெயருக்கு ஏற்றாற்போல் விளங்கியது.

10. இறுதிநாட்கள்

பசவண்ணரின் பார்வையில் வீரசைவநெறி மிகுந்த வேக மாக வளர்ச்சியடைந்தது. வெவ்வேறு இனங்களையும் மதங் களையும் சேர்ந்த மக்கள் மிகுந்த எண்ணிக்கையில் வீரசைவ நெறியைத் தழுவினர். அவ்வாறே புதிதாக வீரசைவ நெறி யைத் தழுவியவர்களில் இந்நெறியின் கொள்கைகளும், நீதி களும் பின்னர் பிடிக்காமல் போய்விட்டதால் தங்கள் பழைய நெறியைத் தழுவியர்களும் உண்டு; ஆனால் இவ்வாறு மாறிய வர்களின் எண்ணிக்கை குறைவானது என்றே கூறவேண்டும். இவ்வாறு வெவ்வேறு நெறிகளைச் சார்ந்தவர்களும் வீரசைவ நெறியைச் சார்ந்தமையால் வீரசைவநெறி தழைத் தோங்கியதைக் கண்டு பிற நெறியினர் இந்நெறியின் மீது பொறாமை கொள்ள ஆரம்பித்தனர். தமது மதத்தின் சிறப்பு குன்றிவரும் செய்தி யாருக்குத்தான் இனிக்கும்? அவர்கள் உண்மையிலே வீரசைவநெறியின் வளர்ச்சியைக் கண்டு பயந் தனர். அவர்கள் பிஜ்ஜளனிடம் சென்று உண்மைகளையும் பொய்களையும் கலந்து கதைகட்டி புனைந்துரைத்து பசவண் ணரின் மீது பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர்.

இப்பொழுது பிஜ்ஜளனின் பக்கமிருந்து செய்திகளைக் காண்போமாக. அவன் சாளுக்கியப் பேரரசை நேர்மையற்ற வழிகளில் கைப்பற்றிப் பட்டத்திற்கு வந்தவன். எவ்வளவோ தைரியம் நிரம்பியவனாக இருந்தாலும் அவன் மனதின் ஒரு மூலையில் சிறிது பயம் இருக்கத்தான் செய்தது. தவறு செய்

துள்ளோம் என்னும் எண்ணம் அவன் மனதில் சிறிது இருந்து கொண்டு வேலை செய்துகொண்டிருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவன் எப்படிப்பட்ட வகையான புது மாற்றங் களையும் விரும்புபவன் அல்லன். சமுதாயமானது முன்பிருந்து எப்படி இயங்கிக் கொண்டிருக்கிறதோ அப்படியே இனியும் சென்றாலே போதும் என்று எண்ணியிருந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட அவனது கண்ணோட்டத்தில் வீரசைவமதம் பெற்ற வளர்ச்சியும் அதன் புரட்சிகளும் அவனுக்கு ஏற்புடைத்தாக இருக்கவில்லை.

வர்ணாசிரமமுறையைக் காப்பாற்றுவது ஒரு அரசனின் முக்கிய கடமை என்று இந்தியாவின் பழங்காலத்திலிருந்து நம்பப்பட்டு வருகிறது. இதைப் பிற நெறியைச் சேர்ந்த வர்கள் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டு வீரசைவ நெறியானது வர்ணாசிரம முறையைக் கடைப் பிடிக்க மறுக்கிறது என்று பிஜ்ஜளனிடம் குற்றம் கூறி னார்கள். பழைய அறநெறிகள் யாவும் பாழ்செய்யப் படுகின்றன என்னும் எண்ணத்தை அவன் மனதில் நிரப்பினர். மேலும், பிஜ்ஜளன் பழைமையை விரும்புபவனாக இருந் தான். அவன் சிவ பக்தனாக இருந்தாலும் புரட்சிகளுக்கும் மாற்றங்களுக்கும் தயாராக இல்லை. புரட்சியின் நெறியை ஏற்றுக் கொண்டால் அது வர்ணாசிரம முறையை எதிர்ப்ப தாகவே பொருள் படுகிறது. அத்துடன், வீரசைவ மதத்தை நாம் சிறப்பித்தால் நாட்டில் உள்ள ஏராளமான மக்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதையும் அவன் உணர்ந்திருந்தான். அவன் இருந்த நிலையில் இதற்கும் கூட அவன் தயாராக இல்லை.

அவனிடம் பசவண்ணரைப் பற்றிக் குறை கூறியவர்களில் பிராமணர்கள், பாசுபதப் பிரிவைச் சேர்ந்த சைவ சமயத் தவர், வைணவர்கள், சமணர்கள் இப்படி எல்லோரும் இருந் தனர். பிஜ்ஜளன் தானாகவே சைவ மதத்தைத் தழுவியவன்

ஆவான். அவனுக்கு பிராமணர்களிடம் பக்தியிருந்தது. வீரசைவ நெறியானது இந்த பிற நெறிகளை விரோதிப்பதும் அவற்றின் சிறப்பைக் குறைப்பதும் அவனுக்குப் பிடிக்க வில்லை.

மேலும், பிஜ்ஜளனுக்கும் பசவண்ணருக்கு மிடையில் பல தடவை மோதிக்கொள்ளக்கூடிய சூழ்நிலைகள் உருவாயின. இருவருக்குமிடையில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்தன. எடுத்துக்காட்டாக, சிவநாகமையன் வீட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியைக் கூறலாம். புலையர்களின் கூட்டத்தோடு பசவண்ணர் தொடர்பு வைத்திருப்பது பிஜ்ஜளனுக்குப் பொறுக்கமுடியாத துயரைத்தந்தது. அவர் தனது அரசைச் சிறுமைப் படுத்துகிறார் என்று அவனுக்குப் பலமுறை மனதில் தோன்றியிருக்க வேண்டும். பசவண்ணர் சிம்மாசனத்திற்கு உரிய மதிப்பளிக்கவில்லை, அதை வணங்கவில்லை; உண் மையில் அவர் தமது கையில் உள்ள முத்திரை மோதிரத்தி லிருக்கும் நந்தியையே வணங்குகிறார், பணிகிறார் என்றும் சந்தேகித்தான். மேலும், அவர் கருவூல அதிகாரியாகி நாட்டின் செல்வத்தைத் தனது சொந்த காரியங்களுக்காகப் பயன்படுத்துகிறார் என்னும் மிகப்பெரிய குற்றச்சாட்டும் இருக்கவே இருந்தது. அத்துடன், அவன் யாரையும் நம்பாமல் சந்தேகக் கண்ணோடு காணும் இயல்பு படைத்தவன் என்பதை முன்னரே கண்டோம். பசவண்ணரின் தூய மனம், சிறந்த பண்பு, தெய்வ பக்தி போன்றவற்றின் மேல் அவனுக்கு நம்பிக்கையிருந்தாலும், அவரை மரியாதையுடனும் மதிப் புடனும் நடத்துவதற்கும் இன்னும் பல காரணங்கள் இருந் தாலும் அவனது பார்வையிலிருந்து பார்க்கும் பொழுது அவர்மேல் வெறுப்பு, மற்றும் சந்தேகம் போன்றவை உருவா வதற்குக் காரணங்களிருந்தன. பீமகவியானவன் 'பசவ புராணத்'தில் கூறியுள்ளதை உண்மையானதாக நாம் எடுத்துக்கொண்டால் அதன்படி, கசபையன், கரியன், கேச

மையன், போன்ற பிஜ்ஜளனிடன் சிறந்த அமைச்சர்கள் பசவண்ணரைப் பற்றி அவனிடம் பலதரப்பட்ட குற்றங் குறைகளைக் கூறினர். இவ்வமைச்சர்கள் பிஜ்ஜளனின் ஆட்சியில் அவனுக்குப் பின்பலமாக இருந்து பல உதவிகள் செய்துள்ளனர். அவர்களின் மேல் அவனுக்கு முழு நம்பிக்கை இருந்தது. அவர்களுக்கு அதிகாரத்திலும், பதவியிலும் கீழ்ப் பட்டவராயிருக்கும் பசவண்ணர் நாள் தோறும் மக்களி டையே சிறப்புப் பெற்றுவருவதையும் மதிக்கப்பட்டு வரு வதையும் அவரது புகழ் வளர்ந்து வருவதையும் கண்டு அவர்களுக்குப் பொறாமை தோன்றியிருக்கவேண்டும்.

பசவண்ணருக்கு பிஜ்ஜளனின் மேல் ஆரம்பத்தில் உண் மையான மதிப்பும் மரியாதையும் இருந்திருக்க வேண்டும். ஆனால் இறுதிவரையிலும் அவர் அவனுக்கு அதேயளவு மதிப்பும் மரியாதையும் அளித்துவந்தார் என்று தோன்ற வில்லை. மொத்தத்தில், அரசர்களைப் பொறுத்தவரையில் யாராயிருந்தாலும் அவருக்கு அவ்வளவாக நல்ல எண்ணம் இருக்கவில்லை. அரசனின் வீட்டில் அரசியாக இருப்பதை விட சிவபக்தரின் வீட்டில் அடிமையாக இருப்பது சிறந்தது என்று ஒரு வசனத்தில் கூறியுள்ளார். அரசனின் கோபத்தைச் சம்பாதித்துக் கொண்டால் நாட்டில் இருப்பது கடினம் என்னும்உண்மை அவருக்குத் தெரிந்திருந்தது ('அரசுகோபித் தால் நாட்டில் இருத்தலாகாதையா' என்பது அவர் கூற்று.) ஆனாலும் அதற்குப் பயப்படும் தன்மை அவருக்கு இல்லை.

வேடன் ஒரு முயல் கொண்டு வந்தால் பணந்தந்து
வாங்குவீர் ஐயா'
நாடாண்ட அரசன் பிணத்தை அரைப்பாக்கிற்கும்
கொள்வாரில்லை, காணீர்
முயலை விட இழிந்தது மனிதவாழ்வு! முழுமையாய்
நம்புவாய்
எங்கள் கூடலசங்கம தேவனை.

என்னும் வசனத்தில் அரசனின் பிணம் என்றால் பாக்கைக் கொடுத்துக் கூடக் கொள்வாரில்லை என்று கூறுவதிலிருந்து அரசர்களைப் பற்றிய அவரது எண்ணத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

அரசர்களின் விவகாரம் செல்வமும் சிருங்காரமும்
சேர்ந்து ஸ்திரமில்லாதது, மனிதா
பாழாயிற்று கல்யாண், பாழாயிற்று பார்!
ஒரு ஜங்கமனின் அபிமானத்தால்
சாளுக்கிய ராஜனின் ஆட்சி போனது
கலந்தது, கூடலசங்கமதேவா உம்முடன் [1]

அரசனின் தொடர்பு. பொருள், அழகு போன்றன நிலையானதல்ல என்பது நம்பிக்கையாக இருந்தது. அவர் கொள்கையின்படி சிவபக்தியொன்றே நிலையானது.

---

1. அறிஞர்கள் இவ்வசனத்திற்குப் பொருள் கூறுவதில் கருத்து வேறுபாடு உடையவர்களாக உள்ளனர். 'சாளுக்கிய ராயன்' என்றால் பிஜ்ஜளன் என்று சிலர் பொருள் கூறுகிறார்கள். முதலாவதாக, அவன் சாளுக்கிய அரசன் அல்லன் அவன் பாழானது ஒரு வீரசைவனால் அல்ல; இரு பக்தர்களினால் தான் அவனுக்குப் பிறகு கல்யாண் பாழாகிவிடவில்லை. அதனால் இவ்வாறு பொருள் கொள்வது தவறானது. இன்னும் சிலர், கலசூரி அரசனான பிறகு பட்டத்திற்கு வந்த சாளுக்கிய அரசனின் இறப்பையும் கல்யாண் பாழானதையும் குறிப்பிடுகிறது என்று பொருள் கூறுகின்றனர். இதைஏற்றுக் கொண்டால் பசவண்ணர் சுமார் 1180-90 வரைவாழ்ந்திருந்தார் என்று முடிவு கட்ட வேண்டியிருக்கிறது. இது முற்றிலும் தவறானது. இவ்வசனத்தில் தனது காலத்தில் சிறப்படைந்திருந்த ஏதோ ஒரு கதையை பசவண்ணர் இங்கு குறிப்பிட்டுள்ளார் போலத் தெரிகிறது. பசவேஸ்வ சட்ஸ்தல வசனகதாசாரம்' என்னும் நூலின் படி அக்கதையானது ஒரு சாளுக்கிய அரசன் ஒரு வீரசைவனின் மனைவியைக் கவர்ந்து சென்று விட்டபொழுது அதைக் கேள்விப்பட்ட சலதங்கமல்லையன் என்னும் வரி வசூலிக்கும் அதிகாரி அந்த அரசனைக் கொன்றான்' என்பதாகும். இக்கதைக்குத்தக்க

மேலும், அவர் தமது வசனங்களில் பிஜ்ஜளனைப்பற்றிக் கூறியுள்ள கூற்றுக்களைப் பார்த்தாலும் அவருக்கு அவன் மேல் மதிப்பிருந்தாகக் கூறுவதற்கில்லை என்பது விளங்கு கிறது. அவனைப் 'பவி' (வீரசைவரல்லாதவரைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு கடுஞ்சொல்) என்று குறிப்பிட்டிருக் கிறார். சிவபக்தர்களுக்குத் தொண்டு புரிவதற்காகத் தனக்குப் பொருள் வேண்டும். அதற்காக மட்டுமே நான் அவனிடம் தொழில்புரிகிறேன் என்றும் கூறியுள்ளார்,

சன்ன பசவண்ணரைப் போன்ற பிற வசன ஆசிரியர் களும் கூட பசவண்ணர் பிஜ்ஜளனிடம் கொண்ட மோதல் களில் வெற்றி கொண்டதாகக் கூறியுள்ளனர். இதைப்பற்றிய விவரங்களை நாம் முன்பே காண்போம்.

மேலும், பிஜ்ஜளன் வீரசைவ நெறியின் சீர்திருத்தக் கருத்துக்களை ஏற்றுக் கொள்ளாமல் அதை எதிர்த்து வந்தான். அதன் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற் கான முயற்சிகளை மேற்கொண்டான். மற்றும் ஒரு செய்தி அவன் கேள்விப்பட்ட செய்திகளை சோதித்துப் பார்ப்பதற் காக பசவண்ணரைப் பல வழியில் பல விதமான சோதனைக்கு ஆளாக்கினான். அப்படிப்பட்ட சமயங்களில் அவரைக் கேலி செய்யவும் அவரது சிறப்பைக் கெடுக்கவும் வேண்டும் என்னும் எண்ணத்துடன் அவன் செயல்பட்டிருக்க வேண்டும்.

ஆதாரங்களில்லை அரசனின் பெயர் என்ன என்பதும் குறிப் பிடப்படவில்லை. அதனால் இந்தக் கதையையும் நம்புவது சிரமமாக இருக்கிறது. எனவே இந்த வசனத்தில் குறிப்பிடப் பட்டுள்ள கல்யாணுடன் தொடர்புகொண்டுள்ள செய்திக்கு இன்னும் சரியான விளக்கம் கிடைக்காமல் ஐயத்திற்கிட மானதாக இருக்கிறது.

வரலாற்றின்படி பதினொன்றாம் நூற்றாண்டில் கல்யாண் சோழர்களினால் ஒருமுறை அழிக்கப்பட்டது. அதற்கும் மேலே கூறப்பட்ட வசனத்திற்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதோ என்னவோ தெரியவில்லை.

இப்படிப்பட்ட விரும்பத்தகாத நிலையில் அவர்களுக் கிடையிலிருந்த உறவு முறிந்து பகைமையாக உருவெடுத்து அது சிறிதுசிறிதாக வளர்ந்ததில் ஆச்சரிய மேதுமில்லை. முன்னரே நாம் பார்த்தது போல, சில சமயங்களில் பிஜ்ஜளனின் முன்பு பசவண்ணர் அஞ்சியவரைப் போல நடந்து கொள்ள வேண்டியதாயிற்று; அவன் கோபமுற்றுச் சீறிய பொழுது தலைகுனிந்து நிற்க வேண்டியதாயிற்று. வீரசைவத் தொண்டர்களும் பிஜ்ஜளனின் மேல் ஒரு வகை யான வெறுப்பை வளர்த்துக் கொண்டிருந்தனர். தமது அற நெறியின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக நிற்கும் பிஜ்ஜளனைப் பற்றிப் பலரின் மனம் புகைந்து வந்தது.

இந்த பின்னணியில் பசவண்ணரின் வாழ்க்கையின் இறுதி யில் நடைபெற்ற சம்பவங்களை நாம் பரிசீலனை செய்ய வேண்டி இருக்கிறது.

கல்யாணில் ஜெகதேவன் என்னும் பெயருடைய அதிகாரி ஒருவன் இருந்தான். அவன் பசவண்ணரின் திருநெறியால் கவரப்பட்டு அவரது அறநெறியைத் தழுவினான். ஒரு நாள் அவன் பசவண்ணர் மற்றும் வேறுசிலரைத் தனது வீட்டிற்கு வரவழைத்து அவர்கள் வருவதற்கு முன்னமே சில பிராமணர் களை அழைத்து உபசரித்தான். இதனால் பசவண்ணருக்குக் கோபம் வந்தது. வீரசைவ பக்தனான பின்பு வீரசைவ ரல்லாதாருக்குத் தொண்டு செய்வது அவருக்குப் பிடிக்க வில்லை. அவனிடம் மிகுந்த கோபத்துடன் சண்டையிட்டார். அப்பொழுது ஜகதேவனுக்கு மிகுந்த வருத்தம் ஏற்பட்டது. இனி இப்படிப்பட்ட சிவத்துரோகம் நடைபெற்றால் சிவதுரோகியைக் கொன்று இந்த பாவத்தைக் கழித்து விடுகிறேன் என்று உறுதியெடுத்துக் கொண்டு வீரதாம்பூலம் பெற்றுக் கொண்டான்,

இதே கல்யாணில் அல்லய்யன் மற்றும் மதுவய்யன் என்னும் இரு சிவபக்தர்கள் இருந்தனர். அவர்களில் அல்லய்யன் என்பவன் அரிசன குலத்தைச் சேர்ந்தவன்; மதுவய்யன் பிராமணன் இருவரும். வீரசைவர்களாகி பசவண்ணர் போன்றோரின் நெருங்கிய நண்பர்களாகிப் பழகி வந்தனர். இருவரும் ஒருவருக்கொருவர் திருமணத் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்பினர். மதுவய்யன் தனது மகளை அல்லய்யனின் மகனுக்குத் திருமணம் செய்து வைக்கத் தயாராய் இருந்தார். இதற்கு பசவண்ணரின் முழுச் சம்மதமும் ஆதரவும் இருந்தது என்பதைக் கூறவும் வேண்டுமோ! இச்செய்தியோ கல்யாணில் உள்ள, பிற மக்க ளிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கியது. அவர்கள் அதிர்ச்சிக்கு உள்ளாகி பிஜ்ஜளனிடம் சென்று செய்தியைக் கூறினர். பிஜ்ஜளன் அவர்களை வரவழைத்து நீதிஅநீதி களைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டு மிக்க கோபங்கொண்ட வகை அவர்களது கண்களைச் சிதைத்து விட்டான்.

இது வீரசைவ மக்களிடையே பெரும் புயலை உருவாக் கியது. இதுவரை அவர்கள் பிஜ்ஜளனின் வீரசைவ நெறிக்கு எதிரான செயல்களை எப்படியோ ஒரு வழியாகச் சகித்து வந்தனர். இப்பொழுது மிகுந்த அமைதியான இயல்பு உடையவர்களும் சிறந்த நெறியாளர்களும் சிவநெறித் தொண்டர்களுமான இரு சிவபக்தர்கள் நீதிக்குப் புறம்பாகத் தண்டிக்கப்பட்டதால் இத்தனை நாட்களாக இருந்து வந்த அவர்களது கோபமும் மனவெறுப்பும் தூண்டிவிடப்பட்டன. எல்லோரும் குழுமினர். அதில் ஜகதேவனையும் சேர்த்துக் கொண்டனர். இதுவரையில் பிஜ்ஜளனை நாம் பொறுத்துக் கொண்டிருந்தோம்; இனியும் அவன் இருந்தால் அவனால் வீரசைவ நெறிக்கும் வீரசைவர்களுக்கும் துயரம் தான் நேரும். அதனால் அவனைக் கொலையே செய்துவிட வேண்டும் என்று குழு தீர்மானம் செய்தது. ஜகதேவன்

முன்னர் எடுத்துக் கொண்டிருந்த உறுதியை அவனுக்கு ஞாபகமூட்டி, இனியும் தாங்கள் இந்நகரத்திலிருக்கக் கூடாது என்று தீர்மானித்து எல்லோரும் வெளியே புறப்பட்டனர். பசவண்ணர் போன்றோர் கப்படி சங்கமத்திற்குச் சென்றனர். சன்ன பசவண்ணன், மடிவாள மாசிதேவன் போன்றவர்கள் உளிவே எனும் பகுதியின் பக்கம் புறப்பட்டனர்.

இந்த ஜகதேவன் வீட்டிற்கு வந்த பொழுது அவன் தாயானவள் 'நீ பிஜ்ஜளனைக் கொல்லாவிட்டால் உனக்கு இறைவனின் பிரசாதங்கள் கிடைக்காது. உனக்குப் பசியாக இருந்தால் வேண்டுமானால் நாயைப் போல உண்க' என்று கூறி நிலத்தின் மேல் சோற்றைப் போட்டாள். அவன் நாயைப் போல அச்சோற்றைத் தின்றான். அவனுடன் மொல்லென், பொம்மன் என்னும் வேறு இருவரும் சேர்ந்து கொண்டனர். மறுநாள் மாலை பிஜ்ஜளன் தனது அரசவையைக் கூட்டியிருந்தான். சிறப்பான அந்த அரண்மனையில் வரிசையாக விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. சிற்றரசர்கள் வரிசையாக வந்து அரசனுக்குத் தமது மரியாதையைக் காட்டி விட்டுப் போய்க் கொண்டிருந்தனர். அப்பொழுது என்ன நடைபெறுகிறது என்பதைப் பிறர் தெரிந்து கொள்வதற்குள்ளாக மூன்று பேர் வந்து அரசனைக் கொன்று விட்டனர். இது நடைபெற்றது சுமார் கி. பி. 1167ல். அவர்கள் 'சிவத்துரோகியின் சம்காரமாயிற்று' என்று கூவிக்கொண்டு தமது எண்ணம் நிறைவேறி விட்டது என்று மகிழ்ந்தனர். ஜகதேவன் தனது தலையைத் தானே நெறித்துக் கொண்டான். பிஜ்ஜளனின் படை வீரர்களால் கல்யாணிலிருந்த பல சிவபக்தர்களின் வீடுகள் நாசமாயின. உளிவேக்குச் சென்ற சன்ன பசவண்ணன் போன்றோரையும் படைவீரர்கள் துரத்திச் சென்றனர். இரு குழுக்களுக்கும் இடையே வழியில் போராட்டம் நடைபெற்றது. எப்படியோ சன்னபசவண்ணன் போன்றோர் வென்று உளிவேயைப் போய்ச் சேர்ந்தனர்.

கப்படி சங்கமத்தைச் சேர்ந்த பசவண்ணர் அங்கு நீண்ட நாட்கள் வாழவில்லை. தான் வணங்கி வழிபட்டு வந்த இறைவனின் திருமுன்பு சில மாதங்கள் கழித்தார். கடந்த சமீப நாட்களில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் அவரது மனதைக் கலக்கின. முன்னர் தமது இளமையில் தமக்குப் புகலிடம் கொடுத்து வரவேற்பளித்த அதே கப்படி சங்கமம், ஜோகுலன்பாடியுள்ள அதே கிருஷ்ணா-மலபிரகரி நதிகள் போன்றன அவருக்கு மனமகிழ்ச்சியளித்தன. தமது உலக வாழ்வு இத்துடன் போதும் என்று தீர்மானித்துக் கல்யாணி லேயே தங்கியிருந்த நீலலோசனையை அழைத்து வருமாறு தனது ஆளான அப்பண்ணனை அனுப்பினார். ‘பசவண்ணர் இயற்கையுடன் ஒன்றவிருக்கிறார், தாங்கள் அங்கு வர வேண்டும்’ என்று அவன் கூறிய பொழுது அவள் சிரித்துக் கொண்டே ‘சங்கையன் அங்கு மட்டுமிருக்க வில்லை, இங்கும் இருக்கிறான். நான் இங்கேயே லிங்கத்துடன் ஒன்றி விடுகிறேன்’ என்று கூறித் திருப்பியனுப்பி விட்டாள். பின்னர் பசவண்ணர் கூடலசங்கமத்தில் இரு நதிகளும் கூடுமிடத்தில் சுமார் 1167-8ம் வருட அளவில் தமது வாழ்வை முடித்துக் கொண்டார். அலை கடலிலும், சுழல் காற்றிலும் அடங்குவது போல் பசவண்ணர் சங்கமனுடன் இணைந்து விட்டார். மசையன் கூறியதைப் போலவே ‘தூய ஒளியில் சேர்ந்து சூன்யத்தில் கலந்து விட்டார். அவர் இறைவனுடன் இணைந்து விட்ட செய்தியைக் கேட்டு வீரசைவர்கள் மிக்க துயருற்றனர்.

பசவையா பசவையா பயமில்லாத மானே
பசவையா பசவையா உடலில்லாது உருவமாயிருக்கிறாய்
கர்ம விரஹிதனானாய் சங்கையனில் நிர்மலமூர்த்தி
பசவா.

என்று பலவாறாக நீலலோசனை புலம்பி தானிருந்த இடத்தி லேயே சிவனுடன் இணைந்து விட்டாள். அக்கநாகம்மனும் கல்யாண் என்னும் துன்பத்தால் மிகவும் நைந்து போனாள்.

விளக்கில் பக்தி என்னும் எண்ணெயால் ஒளி நீண்ட நாட்களுக்குப் பரவிற்று; ஆனால் இப்பொழுது விளக்கு உடைந்து போயிற்று, எண்ணெய் சிதறிப் போயிற்று; ஒளி ஒளியில் கலந்து விட்டது.

பிஜ்ஜளன் கொலை செய்யப்பட்டது சரியா என்னும் கேள்வி பலாது மனத்தில் எழலாம். இன்றைய கண்ணோட்டத்தில் அது சரியானதல்ல என்று தோன்றக்கூடும். ஆனால் அக்காலத்திய நம்பிக்கை எவ்வாறிருந்தது என்பதைக் கவனித்தால் இக்கேள்விக்கு நமக்குப் பதில் கிடைக்கும். பசவண்ணர் 'தயையே தர்மத்தின் மூலமையா' என்று கூறியவர், இது உண்மை. ஆனால் அறத்திற்கும், பக்தர்களுக்கும் துன்பம் இழைக்கப்பட்ட பொழுது அந்தக் கொடுமையை எதிர்த்தே ஆக வேண்டும் என்பது வீரசைவ நெறியின் கொள்கையாக இருந்தது. சிவத்துரோகம் நடைபெற்றால் பக்தன் அதைப் பார்த்துக் கொண்டு இருத்தலாகாது. சிவத்துரோகியைக் கொல்ல வேண்டும்; இல்லையென்றால் தன்னைத் தானே மாய்த்துக் கொள்ள வேண்டும்; இல்லையென்றால் அவ்விடத்தை விட்டு அகன்று விட வேண்டும். இது அக்காலத்தில் நிலவிய நம்பிக்கை. இந்த நம்பிக்கைக்குப் பல வசன ஆசிரியர்களும், இன்றைய கவிகளும் தமது ஒப்புதலைத் தெரிவித்துள்ளனர். அதனால் பிஜ்ஜளன் கொலை செய்யப்பட்டது அக்காலத்தைச் சேர்ந்தவர்களுக்கு பாவச் செயல் என்று தோன்றா திருந்திருக்க வேண்டும்; இன்றைய பல கவிஞர்களும் அவ்வாறு எண்ணவில்லை.

பசவண்ணர் இறைவனுடன் ஒன்றிய பின்னர் மோளிகை மாரையன், மடிவாள மாரையன், சித்தராமன், துருகாஹி ராமண்ணன், சன்ன பசவண்ணன் போன்றோர் வாழ்ந்து வந்தனர். இவர்கள் மடிந்த பின்னரும் அறம் அழியவில்லை, வீரசைவர்களின் மண்ணுடல் அழிந்த பின்னரும் அவர்களது சொல், செயல், கொள்கை போன்றவை நீண்ட நாட்கள் வாழ்ந்தன. வீரசைவத் தொண்டர்கள் மக்களின் மனதில்

ஏற்படுத்திய சிந்தனைகள் வேர் விட்டு வளரலாயின. அதனால் அவை நன்கு வளர்ந்து பலனளித்தது. பசவண்ணரின் இளமைக் காலத்தில் சிறிய அளவில் பரவியிருந்த அற நெறி ஒன்றானது அவரது மற்றும் அவரது தொண்டர்களின் கடுமையான உழைப்பாலும் தியாகத்தாலும் பரிணமித்து தென் இந்தியா முழுவதும் முக்கிய நெறியாகப் பரவி வளர்ந்தது. அவர் கற்பித்த சிறந்த கொள்கைகள் அவருக்குப் பின்னர் கடைபிடிக்கப் பட்டனவா அல்லது பிற நெறிகளின் கொள்கைகளைப் போலவே மறைந்து போயிற்றா என்பது இந்நூலின் குறிக்கோளுக்கு அப்பாற்பட்டது.

பிஜ்ஜளன் சாளுக்கியப் பேரரசைத் தனதாக்கிக் கொண்டு அரசனானாலும் அதன் இன்பங்களை அவன் அனுபவிக்கவில்லை, அவனது ஆதரவால் கலை, இலக்கியம் போன்றன வளர்ந்தனவா என்றால் அதுவும் இல்லை. அவனது காலத்திற்குப் பிறகு அவன் மகன் முராரி சோவிதேவன் சில காலம் அரசாண்டான், அவனுக்குப் பின்னர் அவனது தம்பிகளான மல்லிகார்ஜுனன். சங்கமன், ஆகவமல்லன் மற்றும் சிங்கணன் ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக சுமார் 1184-ம் ஆண்டுவரை ஆண்டு வந்தனர். இறுதியில் ஆட்சி புரிந்தவன் வலிமை குறைந்த அரசனாக இருந்தான். பிஜ்ஜளனால் வஞ்சிக்கப்பட்டு அரசை இழந்த சாளுக்கியனான மூன்றாம் தைலபனின் மகனான நான்காம் சோமேசுவரன் கல சூரிகளிடமிருந்து அரசாளும் உரிமையைத் திரும்பப் பெற்று சாளுக்கியப் பேரரசை மீண்டும் நிலை நாட்டினான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக சாளுக்கியப் பேரரசர்களில் இவனே கடைசி அரசனாக ஆக வேண்டியதாயிற்று. இவனுக்குப் பின்னர் இப் பேரரசின் வட பகுதியில் உத்தரகிரி யாதவர்களும், தென் பகுதியில் துரை சமுத்திரத்தின் ஹொய்சலர்களும் உரிமை கொண்டாடித் தமது நாட்டுடன் சேர்த்துக் கொண்டனர். சுமார் நூற்றைம்பது ஆண்டுகள் வரை கருநாடக நாட்டின் பண்பாட்டின் கண்ணாக விளங்கிய கல்யாண் சுமார் 1190-ல் வேறு நாட்டவர்களின் தாக்குதல்களால் அழிந்து போயிற்று என்பது உண்மை. ஆனால் அப்பெயர் கருநாடக மக்களின் மனதில் அழியாது நிலைத்து நிற்கும் என்பதும் உண்மை.

11. வசனங்கள்

பசவண்ணர் ஒரு சிறந்த அறநெறிக் கொள்கையாளராக விளங்கியதைப் போலவே ஒரு சிறந்த வசன ஆசிரியராகவும் விளங்கினனர். கன்னடத்தில் வசனங்களை எழுதியிருப்பவர்களில் அவர் முதலாமவர் அல்லர்; அவருக்கு முன்னரே தேவர தாசிம்மையன், போன்றோர்கள் வசனங்களை எழுதியுள்ளார். அவர்களது வழியைப் பின்பற்றியே பசவண்ணர். அல்லமன், சன்னபசவண்ணர் போன்ற பலர் வசனங்களை இயற்ற ஆரம்பித்தனர். இத்தகைய வசன ஆசிரியர்களுள் தலைசிறந்தவரும் நமது கவனத்தை ஈர்ப்பவராகவும் இருப்பவர் பசவண்ணரே.

அவரது காலத்தில் கவிஞர்கள் இலக்கிய நடை மிகுந்துள்ள காவியங்களை இயற்றி வந்தனர்: இவை பழங்கன்னட மொழியிலிருந்தன. ஆனால் அச்சமயத்திலேயே பழங்கன்னடம் மறைந்து நடுக்கன்னடம் என்னும் கன்னட வழக்கானது மக்களின் பேச்சு வழக்கில் காணப்பட்டது. ஆனாலும் கவிஞர்களும் புலவர்களும் அறிவிற் சிறந்தோர்களுக்கு மட்டும் பயன்படத்தக்க வரையில் அவர்களுக்கு மட்டும் புரிந்தால் போதும் என்ற எண்ணத்தில் வடமொழிச் சொற்கள் மிகுந்துள்ள பழங்கன்னட வழக்கையே தமது படைப்புக்களில் பயன்படுத்தி வந்தனர். இவை சாதாரண மனிதர்களுக்கும் சிறிது கல்வியறிவுடையவர்களுக்கும் பயன் படாதவையாகவே இருந்தன. இப்படிப்பட்ட சமயத்தில்,

இந்த சம்பிரதாயத்தைக் கைவிட்டுவிட்டு சாதாரண மனிதர்களுக்குப் புரியும் விதத்தில் அன்றைய பேச்சு வழக்கையே பயன்படுத்தி வசன நடையில் இலக்கியத்தைப் படைத்தது அறநெறியைப் பரப்ப வேண்டும் என்னும் அவரது எண்ணத்தையும் சாதாரண மக்கள் மீது வைத்திருந்த அன்பையும் கருணையையும் தெளிவாகக் காட்டுகிறது. கன்னட இலக்கிய வரலாற்றில் வசன இலக்கியங்கள் தோன்றிய காலம் ஒரு புரட்சிக்காலமாக இருந்தது.

வசனம் என்பது ஒரு தனிப்பட்ட வகையான இலக்கியமாகும். அது உரைநடை மற்றும் பாடல் இரண்டிற்கும் இடைப்பட்ட நடையைக் கொண்டிருக்கும். சொல்லுவதைச் சுருக்கமாகவும் நேராகவும் எல்லோருக்கும் பொருள்படும் படியும் விளக்கவல்லது வசன இலக்கியம். இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகள் பசவண்ணரின் வசனங்களில் இருப்பதைக் காணலாம்.

அவரது வசனங்களை எளிதாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக வேண்டி பல பகுதிகளாகத் தொகுக்கலாம். வெளிப்படையாக அறநெறியை விளக்கும் வசனங்கள்; சமுதாயத்தின் குற்றங்குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் திருத்த முயலும் வசனங்கள், அவரது தனிப்பட்ட அனுபவங்களைக் கூறும் வசனங்கள், இப்படிப் பல பகுதிகளாகப் பிரிக்கலாம். ஆனால் ஒரு செய்தியை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும், இத்தகைய பகுப்பும் தொகுப்பும் நாம் எளிதாகப் படிக்கவேண்டும் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்துடன் செய்யப்பட்டனவேயன்றி வேறு காரணங்களுக்காக அல்ல. ஒரு வசனம் அவரது தனிப்பட்ட அனுபவங்களை விளக்கலாம், அதே வசனம் அறநெறி விளக்கத்தையும் கொண்டிருக்கலாம். மொக்குகளாகி சில வசனங்கள் அவரது அனுபவங்களின்

இயல்பாகவே முகிழ்ந்திருக்கலாம். இன்னும் சில பிரயத்னத்துடன் உருவாக்கப்பட்டிருக்கலாம். எப்படியிருப்பினும், அவரது வசனங்கள் யாவும், படிப்போருக்கு ஒரு வகையான சுவையையும் இன்பத்தையும் அளிக்கவல்லனவாக உள்ளன. அவரது வசனங்களில் சுவையில்லாதனவும் உள்ளன என்பது உண்மையே; ஆனால் அவற்றின் எண்ணிக்கை குறைவு.

அவர் வசனங்களை இயற்றியது சிறப்பாக நீதி நெறி விளக்கத்திற்காகவும் அறநெறி விளக்கத்திற்காகவும் ஆகும். அதனால் அவர் சாதாரண மக்கள் தமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தி வந்த வழக்காகிய நடுகன்னடத்தைப் பயன்படுத்தினார். அவர் அவற்றைக் கூறியுள்ள முறையும் மக்களுக்கு மிகவும் பிடித்தமான முறையிலேயே உள்ளது.

திருடாதே, கொலைசெய்யாதே, பொய்யும் சொல்லாதே
சினவாதே, பிறரைக் கண்டு கடுகடுக்காதே;
தன்னைப் புகழாதே, பிறரைக்கண்டு புழுங்காதே
இதே அந்தரங்க சுத்தி, இதே பகிரங்க சுத்தி
இதே எங்கள் கூடல சங்கமதேவனை வசமாக்கும் வழியாம்.

இறைவனை அடையும் வழி எவ்வளவு எளிதானது என்பதை எவ்வளவு நன்றாகக் கூறியுள்ளார்! இதில் பொருள் விளங்காமல் இருக்கக் கூடிய சொற்கள் ஏதுமில்லை. இங்கு விளக்கியுள்ள நெறியில் தவறு உள்ளது என்று ஏதாவது சொல்லுவது இயலுமா? சாதாரண மக்களுக்கு இப்படிப்பட்ட நெறிகளை இப்படிப்பட்ட நடையில் கூறுவது மிகவும் பிடித்துள்ளது.

மக்களுக்கு நெறிகளைக் கற்பிக்கும் பொழுது பசவண்ணர் கையாண்டுள்ள வழியையும் நாம் கவனிக்க வேண்டும். சாதாரண மக்களுக்குப் பொருள் விளங்கக் கூடிய உவமைகளையும், செயற்பாடுகளையும், நம்பிக்கைகளையும் ஏராளமாகப் பயன்படுத்தியுள்ளார்.

நீருக்குத் தாமரை அலங்காரம்; சமுத்திரத்திற்கு
அலையே அலங்காரம்;
பெண்ணுக்குக் குணமே அலங்காரம்; வானிற்கு நிலவே
அலங்காரம்;
நம் கூடல சங்கனின் தொண்டர்களுக்கு
நெற்றித் திரு நீறே அலங்காரம்.

இதில் அறிவை விளக்கும் முயற்சியைவிட மனதை விளக்கும் முயற்சியும் உண்மையை விளக்கும் முயற்சியும் இருப்பதைக் காணலாம். நீரிற்கு தாமரை அழகூட்டுகிறது. கடலுக்கு அலைகளால் அழகு, பெண்ணுக்குக் குணமே அலங்காரம், அவ்வாறே சிவபக்தர்களின் நெற்றிக்கு திருநீறே அலங்காரம்.

பானை செய்ய மண்ணே அடிப்படையாம்;
தோடு செய்யப் பொன்னே அடிப்படையாம்;
சிவநெறி அறியக் குரு நெறியே அடிப்படையாம்;
நமதுகூடல சங்கமன தேவனை யறிய
அடியவர் கூட்டமே அடிப்படையாம்.

வீரசைவர்களின் கூட்டம் மிகவும் முக்கியமானது என்று விளக்கியிருப்பதில் தர்க்க ரீதியில் சற்றே ஏற்றுக் கொள்ள இயலாததாக இருக்கக் கூடும்; ஆனால் அதைக் கூறுவதில் கடைப்பிடிக்கப்பட்டுள்ள முறையானது படிப்போரை நம்ப வைப்பது போலுள்ளது.

இப்படிப்பட்ட தர்க்கங்களை அவரது பல வசனங்களில் நாம் காணலாம். தேள் குட்டிபோட்டால் அதற்கே சாவு. வாழை குலை ஈந்தால் அதே அதற்கு முடிவு, அவ்வாறே, தொண்டு செய்யும் பக்தனுக்கு மனம் கெட்டுப் போனால் அதே அவனுக்கு முடிவு என்னும் கூற்றைக் கவனியுங்கள். இதிலும் அப்படிப்பட்ட தர்க்கமேயுள்ளது. நம்பத்தூண்டும்

வழியிலும் இனிமையான முறையிலும் வாதம் செய்து இறுதியில் ஒரு அறிவுரையைக் கூறுவது இதன் நோக்கம். நாம் எத்தனையோ முறை நம்மை பெரியவர்கள் என்று எண்ணிக் கொள்கிறோம். ஆனால், விலங்குகளுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்த்தால் விலங்குகளின் பிணத்திற்கு விலையிருக்கிறது. ஆனால் மனிதர்களுக்குள் வேறு யாருக்கும் வேண்டாம். அரசனின் பிணத்திற்காவது—விலையுண்டா? இதைக் கேட்கும் சாதாரண மக்கள் ஆம் ஆம் என்று தலையாட்டுவதைப் பார்க்கலாம். இத்தகைய பார்வை அவர்களது மனதை ஈர்க்கிறது. பசவண்ணர் தமது மிகச்சிறந்த நடையில் மக்களின் மனதைத் தனதாக்கிக் கொண்டு அதை விரிவாக்கிப் பின்னர் அறநெறிகளைக் கற்பிக்கும் முறையை நாம் கூர்ந்து, கவனிக்க வேண்டும். அவர் மனித இயல்பை மிகவும் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார்.

பசவண்ணர் இயல்பாகவே சற்று தீவிரமானவர். அவர் மனது மிகவும் சூட்சுமமாக இருந்தது. ஏதாவது ஒரு நிகழ்ச்சியை அவர் கண்ட பொழுதோ, கேட்ட பொழுதோ அதைப்பற்றி மிகவும் ஆழமாகச் சிந்தித்துப் பின் செயல் படுவது அவரது இயல்பு இன்பமோ துன்பமோ, கோபமோ, இரக்கமோ, விருப்போ வெறுப்போ எதாக இருந்தாலும் அவர் அதை ஏற்று அனுபவித்தார். நல்ல செயல்களை நிகழ்ச்சிகளைக் கண்ட பொழுது அவர் மனம் மகிழ்ச்சியில் திளைத்தது. இம்மகிழ்ச்சி அவரது வசனங்களில் பிரதிபலிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். எத்தனையோ வசனங்கள் அவரது மனம் அடைந்த மகிழ்ச்சியின் பயனாக எழுதப் பட்டவை. ஒரு முறை பலிகொடுப்பதற்கென்று கட்டப் பட்டிருந்த ஆட்டுக்குட்டியொன்று அவரது கண்ணில் பட்டது அது தோரணத்திற்காகக் கட்டப்பட்டிருந்த இலை தழைகளைத் தின்றுகொண்டிருந்தது. அக்காட்சி மனித சமுதாயம் முழுவதிலும் உள்ள இரக்கமின்மையைக்

காட்டிற்று அவருக்கு. இறப்பு எல்லோருக்கும் உறுதி. ஆனாலும் அதைப் புரிந்து கொள்ளாமல் வயிற்றுக்காக மக்கள் விலங்குகளை உண்கிறார்களே. இத்துடன் அவர் ஆட்டுக்குட்டியின் மேல் துக்கமும் கொள்கிறார். அதைக் கொன்று தின்பவர்கள் வாழப் போவதில்லை; நாளை சாகப் போகிறவர்கள் தான்.

விழாவிற்கென வந்த பலியாட்டுக்குட்டி
தோரணத் தளிர்களைத் தின்றது;
கொல்லப் போகிறார்கள் என்பதறியாமல்
வேகப்போகும் உடலை வளர்க்க முயன்றது!
மக்கள் பிறந்ததும் அவ்வாறே, பெற்றதும் அவ்வாறே
கொன்றவர் மிஞ்சினார்களோ, கூடல சங்கம தேவா?

தன்னைத்தானே ஆத்ம சோதனை செய்து கொள்ளும் பொழுதும், சமுதாயத்தைச் சாடும் பொழுதும் இப்படிப் பட்ட தீவிரமே அவரிடம் காணப்படுகிறது.

எலே, எலே, மனிதா பேராசை வேண்டாமடா
வளர்பிறை தேய்பிறையாம் செல்வம் நிலையல்ல
அழியா அரசு பெறவே கூடலசங்கம தேவனே
மறவாமல் பூசை செய்வாய்!

என்னும் வசனத்திலும்

எலே, எலே பாவகர்மம் புரிந்தவனே!
எலே, எலே பிரம்மஹத்தி யொத்த பாவம் புரிந்தவனே
ஒரு முறை 'தஞ்சம்' என்றுரைப்பாய்
ஒரு முறை 'தஞ்சம்' என்றால் பாவம் பறந்தோடுமே
பாவமனைத்துக்கும் கழுவாய் தேடப் பொன் மலைகளே
தேவைப்படும்
எனவே ஒரு முறை 'தஞ்சம்' என்றே கூறாய்
எங்கள் கூடல சங்கம தேவனுக்கே.

என்னும் வசனத்திலும் இதைக் காணலாம். நிலையில்லலாத செல்வத்தை நம்பி இருப்பவர்கள் மற்றும் பாவச் செயல்கள் செய்பவர்கள் ஆகியோர் மேல் அவருக்கு இருக்கும் இரக்கம் இங்கு தெளிவாகத் தெரிகிறது. 'எலே எலே' எனினும் சொற். களில் இருக்கும் தீவிரம் அவரது அனுபவத்தின் சிறப்பை விளக்குவதாக உள்ளது.

தனக்குச் சிறந்த ஆலோசனைகள் தெரிந்திருக்கலாம். நிறைந்த அனுபவங்கள் கிடைத்திருக்கலாம். ஆனால் அவற்றைக் கேட்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் எளிதாகப் புரியும் படியும் அவற்றை அவர்கள் கடைப் பிடிக்கும் படியும் சொல்வது எளிதான செயல் அல்ல. அனுபவம் என்பது தன்னிடமிருந்து எடுத்து வேறொருவனின் மனதில் திணிப்பது என்று பொருள் படாது. அதைச் சரியான சொல்லில் சொல்ல வேண்டும். அச் சொல்லைக் கேட்ட படித்த மனிதனுக்கு உண்மையான அனுபவம் கிடைக்க வேண்டும்.

பசவண்ணருக்குத் தமது அனுபவங்களை மிகவும் சிறந்த, ஏற்ற சொற்களால் கூறும் திறனிருந்தது. சிற்பி தனது மனதில் தோன்றிய கற்பனையைக் கல்லில் வடிப்பது போல, பசவண்ணர் தமது சொற்களில் தமது அனுபவங்களை விளக்கி யுள்ளார். அவரது ஒவ்வொரு வசனமும் ஒவ்வொரு சொற் சிற்பமாகும்.

அவரது வசனங்களின் சிறப்பு என்ன வென்றால் சுருக்க மாகும். பத்து சொற்களில் சொல்ல வேண்டியதை நாலே சொற்களில் கூறி முடித்து விடுவார். பிறவற்றைப் படிப்பவர் களின் கற்பனைக்கு விட்டு விடுவார். இதனால் அவரது வசனங்களுக்கு ஒரு வகையான நளினம் உண்டாகிறது. அவர் நேராகச் சொல்லி விளக்கியிருப்பனவற்றை விட சொல்லாமல் சொல்லி விளக்கியிருப்பவை அதிகமாக இருக்கின்றன.

இவ்வாறு சொல்லாமல் சொல்லியுள்ளவற்றைப் படிப்பவர்கள் தமது கற்பனைத் திறனுக் கேற்ப விளங்கிக் கொள்ளும் படித்தமது வசனங்களை அமைத்துள்ளார். இதையே 'த்வனி' என்று இலக்கணத்தில் அழைப்பர்.

சம்சார மென்னும் வலையில் சிக்கிக் கொண்டேனையா;
என்னைக் காப்பாற்றையா, காப்பாற்றையா!
எனக்குத் திறனில்லை! திறனில்லை!!
கூடலசங்கமதேவா, சிவனே! சிவனே!!

''உலகமென்னும் காட்டில் நான் ஏதுமறியாத ஒரு விலங்கு. இல்வாழ்க்கை பல இன்பங்களின் ஆசையைக் காட்டி என்னை ஈர்த்தது. அந்த வலையில் நான் வந்து விழுந்து விட்டேனே. விழுந்த பின்னர் புரிந்தது அதில் சிறப்பில்லை என்று. இறைவனே, என்னைக் காப்பாற்ற வேண்டும்'' இந்த வசனம் பசவண்ணரின் மனப் போராட்டங்களை அறிந்து கொள்ள உதவுகிறது.

நெய் சுவைக்காக ஈட்டியை நக்கும் நாயைப் போன்ற
தென் வாழ்வு;
உலகத் தொடர்பை விடாது என் மனம்.
இந்த நாய்த் தன்மையைப் போக்குவாய்,
கூடலசங்கமதேவா, இது உன் கடமையாம்!

இதில் எதையும் அவர் விவரிக்கவில்லை. எல்லாம் குறிப்பால் உணர்த்தப்படுகின்றன. நான் நாய்; வாழ்க்கை என்பது கத்தி! அதன் இன்பங்கள் நெய். இத்தகைய உவமைகளை நாம் புரிந்து கொண்டால் மட்டுமே பொருள் விளங்குமே தவிர அவரது அனுபவங்கள் அவ்வளவு தீவிரமாக நமக்குத் தெரிய வருவதில்லை.

பூலோகம் என்பது இறைவனின் நாணயச் சாலை;
இங்கே செல்லுபடியாகிறவர்கள் அங்கும் செல்லுபடி யாவாரையா;
இங்கே செல்லுபடியாகாதவர்கள் அங்கும் செல்லு படியாகார்
கூடலசங்கமதேவா.

இங்கு இருப்பவை உண்மையில் மூன்றே வரிகள். ஆனால் அவற்றின் பொருள்? படிக்குந்தோறும் இன்பந் தரக் கூடிய தாக இருக்கிறது. நாணயச் சாலையில் நாணயங்களின் மேல் முத்திரை குத்துகிறார்கள். நாணயம் என்றால் என்ன? உண்மையில் அது ஒரு உலோகத் துண்டே. ஆனால் அத் துண்டிற்கு நாணயச் சாலையில் அரசின் முத்திரை குத்தப் பட்ட பின்னர் அது வெளியில் புழங்கப்படுகிறது, செலுத்தப் படுகிறது. செலாவணிக்குத் தகுதியும் பெறுகிறது. அதாவது, முதலில் உலோகத் துண்டு நாணயச் சாலையில் தகுதியுள்ள தாக ஆக்கப்பட வேண்டும்; அதன் பின்னரே அது வெளியில் ஏற்கப்படும். அப்படிப்பட்டவனே மனிதனும். இந்த உலக மானது இறைவனின் நாணயச் சாலை. நாமெல்லாம் உலோகத் துண்டுகள். இங்கு நாம் தகுதியுள்ளவர்களாக ஆக வேண்டும்; உண்மையானவர்களாகவும் அற நெறியுள்ளவர் களாகவும் வாழ வேண்டும். அப்பொழுது தான் அங்கு, வெளியில், அதாவது மேலுலகில் நாம் ஏற்கப்படுவோம்; இறைவனால் ஏற்கப்படுவோம். நாம் முதலில் இவ்வுலகில் நல் வாழ்வு வாழ வேண்டும் என்னும் நெறியை இதை விட எளிதாகவும் இனிமையாகவும் கூற இயலுமோ?

பசவண்ணருக்குச் சுவையில்லாமல் பேசிப் பழக்கமில்லை. அவரது சில பெரிய வசனங்கள் சுவையில்லா திருப்பதுண்டு; அவை அவரது சிறிய வசனங்களின் அளவுக்கு தீவிரமான விளைவுகளை நம்மில் ஏற்படுத்துவதில்லை. இப்படிப்பட்ட

சிலவற்றை விட்டு விட்டால் பிற வசனங்களில் அவர் பயன் படுத்தியுள்ள சொற்கள், பழமொழிகள்: உவமைகள். எதுகை மோனைகள், சொற்றொடர்களின் அமைப்பு, சொற்களின் மற்றும் கூட்டுச் சொற்களின் அமைப்பு, வரம்பு மீறிய ஆனால் அழகான சந்தம் இவை ஒவ்வொன்றும் அதிசயிக்கத் தக்க வையாக உள்ளன. இவை யெல்லாவற்றிற்கும் எடுத்துக் காட்டுகள் கொடுத்து விளக்குவதற்கு இங்கு வாய்ப்பில்லை. ஆனாலும், அவற்றின் சிலவற்றைப் பற்றிய விளக்கங்களைக் கீழே காணலாம்.

பசவண்ணருக்கு உவமை மூலம் கூறுவதென்றால் பிடித்த மானது. தான் சொல்ல வேண்டியுள்ள பொருளையும் அனு பவத்தையும் விளக்க வந்த அவருக்கு அவர் எப்பொழுதோ கண்ட ஏதோ ஒரு நிகழ்ச்சி நினைவிற்கு வருகிறது. அப்படிப் பட்ட பல நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் எடுத்துக்காட்டு களாகக் கொடுத்து தமது தற்போதைய அனுபவத்தைத் தெளிவாக்கியுள்ளார்.

'எனது மனம் அத்திப்பழம், பாரைய்யா. ஆராய்ந்து பார்த்தால் அதில் திரட்சி ஏதுமில்லை". இந்த வசன அமைப்பு முன்பே விளக்கப்பட்டுள்ளது. 'நெய்யின் சுவைக்காக கத்தியை நக்கும் நாயைப் போல வாழ்கிறேன்' என்னும் உவமையையும் முன்பே நாம் கண்டோம். ''பறங்கிக் காய்க்கு இரும்புக் கவச மிட்டால் இறுகி அழுகுவதல்லாது வலிமை பெறுவதில்லை.' அதைப் போலவே கெட்ட எண்ணமுள்ள மனிதனுக்கு சிவன ருளை விளக்கினால் அவன் எவ்வாறு பக்தனாவான்? இரும்புக் கவசத்தை கெட்டியான பொருளுக்கு இட்டால் அது இன்னும் வலிமை பெறும். ஆனால் பறங்கிக் காய்க்கு இரும்புக் கவசமிட்டால் அது கெட்டுப் போகுமே தவிர வலிமை பெறுவதில்லை. கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனம் இதே கருத்தை வேறு வகையில் கூறுகிறது.

சாணத்தில் பிடித்த விநாயகனைச் சம்பங்கி மலர்
கொண்டு பூசித்தால்
அலங்காரம் ஆகுமல்லாது நாற்றம் விடுவதில்லை,
அண்ணா!

மண் பொம்மையை விடாது நீரில் கழுவினால்
அடுத்தடுத்துச் சேறாவதல்லது அதன் இயல்பு மாறாது,
அண்ணா!

உலகில் ஊறிய மனிதனுக்குச் சிவ தீட்சை தந்தால்
கெட்டவன் ஏன் சிவ பக்தன் ஆகான்
கூடல சங்கம தேவா?

இப்படிப்பட்ட வசனங்களுக்கு விளக்கங்களே தேவைப்படுவதில்லை; பொருள் அவ்வளவு தெளிவாகப் புரியுமாறு கூறப்பட்டுள்ளது.

இன்னும் சில உவமைகளைக் காண்போமாக. 'பாம்பின் வாயில் உள்ள தவளை பசித்துப் பறக்கும் ஈயை விரும்புவது போல' 'வாழ்க்கை என்பது ஒரு காற்றிலகப்பட்ட விளக்கு, செல்வம் என்பது சந்தைக் கூட்டம்'. எப்படிப்பட்ட சிறப்பான உவமைகள் இவை! பாம்பு தவளையை விழுங்குகிறது; ஆனாலும் அந்த உணர்வு தவளைக்கு இல்லை. அது பசியினால் தனக்கு முன்னால் பறந்து கொண்டிருக்கும் ஈயைப் பிடிக்க தனது நாக்கை விரிக்கிறது. மனிதனின் நிலையும் இப்படிப்பட்டது தான். விளக்கில் எண்ணெயிருக்கிறது, திரியிருக்கிறது, எரிந்து கொண்டிருக்கிறது. இன்னும் நீண்ட நேரம் எரிந்து கொண்டிருக்கும் என்று எண்ணுவதற்குள் காற்று வீசி அழிந்து விடுகிறது. உடல் திடமாக இருக்கிறது, இன்னும் வயதாகிவிடவில்லை, இன்னும் நீண்ட நாள் வாழ்வான் என்று பிறர் எண்ணிக் கொண்டிருப்பதற்குள் ஒரு நாள் இருந்தாற்போலிருந்து அவன் படுத்து விடுகிறான்; பிறர் வருவதற்குள் உயிரும் போய் விடுகிறது. சந்தை வெளியில் காலையில் யாருமில்லை, இருந்தாற்போலிருந்து நடுப்

பகலில் ஆங்காங்கு மக்கள் கூடுகிறார்கள்; கூச்சல் கேட்கிறது. இரவில் மீண்டும் அமைதியாகி விடுகிறது. அப்படிப்பட்டது தான் ஒருவனிடம் சேரும் செல்வமும். சிறிது பணம் சேர்ந்ததும் ஓசையெழுப்புகிறது, அப்படியே புறப்பட்டும் போய்விடுகிறது. மனிதனின் துயரத்தையும் அவன் வாழ்வின் நிலையாமையையும் மேலே கூறப்பட்ட உவமைகள் தெளிவாக விளக்குகின்றன.

இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான உவமைகள், உருவகங்கள் அவரது வசனங்களில் காணப்படுகின்றன. கீழே அவரது வசனங்களில் இரண்டு தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டு அவற்றில் உள்ள நயத்திற்குக் காரணம் என்ன என்பதற்கான விளக்கம் தரப்பட்டுள்ளது.

நிமிஷத்திற்கு நிமிஷம் ஐயே, சணநேரத்தில் பாதி ஐயே!
கண்மூடித்திறந்து பார்க்கும் வேகம் ஐயே!
சம்சாரம் ஆகும் ஐயே! சம்சாரம் போகும் ஐயே!
சம்சாரம் ஒப்பும் ஐயே!
கூடல சங்கம தேவா

நீ செய்த மாயை என்ன ஐயே! மேகத்தின் நிழல் ஐயே! வாழ்கையென்பது நிலையற்றது; அது ஒரு மாயை, மேகத்தின் நிழல்-என்பதே இவ்வசனத்தின் முக்கிய பொருள். ஆனால் அதைக் கூறியுள்ள விதம் மிகவும் சிறப்பானது. முதல் நான்கு வரிகள் மக்களைச் சிந்தித்துக் கூறப்பட்டன. 'ஐயே' என்று சொல்வது கவனத்தை ஈர்க்கும் ஒரு முறையாகும். வாழ்வு எவ்வளவு நிலையில்லாதது! நிமிடமே மிகவும் சிறியது; நிமிடத்தை விடச் சிறியது சணம். அந்த சணத்தில் பாதியளவு காலத்திற்கு நிலையானதே வாழ்வு. இந்த சணமும் அதிகமாகத் தோன்றிற்றோ என்னவோ! வாழ்க்கை என்பது கண் மூடித்திறக்கும் நேரத்[illegible] யானது என்று மேலும் கூறு[illegible]

நிலையின்மையை மிகச் சிறப்பாகக் கூறியுள்ளார் 'ஐயே' என்னும் சொல்லைத் திரும்பத் திரும்பக் கூறியிருப்பதன் மூலம் எப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை நாம் கவனிக்க வேண்டும் 'சம்சாரம் ஆகும் ஐயே.....'' என்னும் தொடரில் 'சம்சாரம்' என்னும் சொல் மூன்றுமுறை திரும்பத் திரும்பப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இறுதி இரண்டு வரிகளும் கூடல சங்கம தேவனைப் பற்றியன. வாழ்க்கை என்பது அவன் செய்த மாயை, மேகத்தின் நிழல் முழுவசனத்தையும் படித்தால் அதில் ஒருவகையான மனப்போராட்டமும், பொறுமையின்மையும், பயமும், மன எழுச்சியும், ஒரு நிமிடத்தில் என்னென்னவோ ஆகி விடுகிறதே. அதனால் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்னும் குறிப்பும் இருப்பதைக் காணலாம். இந்த மனப்போராட்டம், பயம் போன்றவற்றிற்கு ஏற்றாற் போல மொழி நடையும் வேகமாகச் செல்கிறது.

இத்தகைய சிறப்பான பசவண்ணரின் வசனங்களில் இன்னொன்றைக் காண்போமாக. முன்பே என்னும் சொல்லினை மீண்டும் மீண்டும் பயன் படுத்தியுள்ளதால் இவ்வசனத்தை அடிபிரித்துப் பொருள் கொள்வது எளிதாக இருக்கிறது. 'சாவு தொடுவதன் முன்பே' இறைவனைப் போற்றி வணங்க வேண்டும்'. முதல் வரியில் கடலின் அமைப்பை உவமையாக்கிக் கூறியுள்ளார். வாழ்க்கையென்னும் கடல் எல்லோரையும் சூழ்ந்துள்ளது.

பல்வீழ்ந்து முதுகுகூனி பிறர்க்குச் சுமையாகா முன்பே
கால்மேல் கையூன்றிக் கோல் பிடியா முன்பே
மூப்பினால் உடல் அழியா முன்பே, சாவு தீண்டாத முன்பே
பூசை செய்வாய் எங்கள் கூடல சங்கம தேவனையே

மனிதர்களில் வயோதிகப் பருவத்தில் அக்கடல் கொந்தளித்து மேலேறுகிறது அதன் 'கொந்தளிப்பு' அதாவது அவனது மகிழ்ச்சி ஆரம்பமாகிறது. அந்த கொந்தலிப்பால் உண்டாகும் நுரை அவனைத் தாக்கியதோ என்னவோ என்று கூறுவதற்குள் அவனது முகத்தில் கொந்தளிப்பு அதாவது வெண் மயிர்கள் தோன்றுகின்றன. பெருங்கடலின் அலைகள் எழுந்து எழுந்து வருவதைப் போல, அவனது முகத்தில் 'அலைகள்' அதாவது சுருக்கங்கள் தோன்றுகின்றன. உடல் ஒரு கூடு போன்றது. பின்னர் பற்கள் விழுகின்றன, முதுகு வளைகிறது. வயோதிகன் ஆன பின் வேறொருவரின் பாது காப்பில் இருக்க வேண்டி ஏற்படுகிறது. அதுவரை தலை தூக்கிப் பெருமிதத்துடன் நடந்தவன் இப்பொழுது தனது கால் மேல் ஒரு கையை ஊன்றிக் கொண்டும் இன்னொரு கையால் கோலைப் பிடித்துக் கொண்டும் நடக்க வேண்டிய தாயிற்று. மூப்பு அவனது அழகை விழுங்கி விட்டது. அப்பொழுது சாவு அவனைச் சிறிது சிறிதாக நெருங்கி வருகிறது. அத்துடன் அவனது கதை முடிகிறது. மனிதனின் இந்த வாழ்க்கை வரலாறு நமது இதயத்தை நடுங்க வைக்கிறது. மிகுந்த சிறப்பான முறையில் துவங்கும் இந்த வசனத்தில் இளமையில் பெருமிதம் கொண்டு திரியும் மனிதனை மூப்பு வந்து சிறிது சிறிதாக அவனைத் தாக்கு வதையும் அவன் தோற்றம் மாறிப் போவதையும் மிகவும் சிறப்பான முறையில் விவரித்துள்ளார்.

பசவண்ணர் தமது வசனங்களில் கன்னட மொழியில் உள்ள சிறப்பம்சங்கள் யாவற்றையும் மிகவும் சிறப்பான முறையில் பயன்படுத்திக் கொண்டுள்ளார். அவரது எண்ணத் திற்கு ஏற்றாற் போல மொழி வளைந்து கொடுக்கிறது; ஏறுகிறது; ஆடுகிறது. அவர் கன்னடத்தில் மிகச் சிறந்த அற நெறிகளை விளக்கிக் கூறவல்லவர். தமது தனிப்பட்ட அனுபவங்களை விளக்கிக் கூறவல்லவர். மென்மையான

சொற்களால் அறிவுரை வழங்க வல்லவர்; கடுமையாகத் திட்ட வல்லவர். எள்ளல், நகைச்சுவை, சாடுதல் போன்றன அவர் வசனத்தி லிடம் பெற்றிருப்பதைக் காணலாம். அவரது அனுபவங்களைத் தெளிவாக விளக்கிட கன்னட மொழி துணைபுரிந்தது. அதில் மிகையில்லை, ஆடம்பரமில்லை, செயற்கையில்லை, அவரது வாழ்க்கையைப் போலவே, அவரது மொழி நடையும் உள்ளது. அது ஆர்பாட்டமில்லாமல் ஆனால் திறன் வாய்ந்ததாக விளங்குகிறது. அவரது முழுமைத் தன்மை அவர் வசனங்களில் காணப்படுகிறது. பசவண்ணரைப் போல கன்னடத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தி அதை வளர்த்தவர்கள் கன்னட இலக்கிய வரலாற்றில் குறைவே.

பசவண்ணரின் மனது ஒரு கவிஞனின் மனது. அதனாலேயே அவரது நூற்றுக்கணக்கான வசனங்கள் பாவகீதங்களைப் போல விளங்குகின்றன. அவரது வசனங்களைப் படித்துவிட்டு மறப்பது மிகவும் கடினமானது. படிப்பவர்களின் மனதை ஆட்கொள்ளும் தன்மை அவைகளுக்கு உள்ளது. பசவண்ணர் பன்னிரண்டாம் நூற்றாண்டின் வீரசைவ நெறியில் ஏற்பட்ட சீர்த்திருத்தங்களுக்கு முக்கிய காரணமாக இருந்தவர். அவரது வசனங்களில் அந்த காலத்தின் நிகழ்ச்சிகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அவரது தனித்தன்மையின் சிறப்பு அவரது குழுவினரிடையே பரவியதைப் போல அவரது வசனங்களின் சிறப்பு பிற வசன ஆசிரியர்களிடையே பரவியது. அவரது பல யுக்திகளையும், எண்ணங்களையும் பிற வசன ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். அம்பிகா சௌடைய்யன், சன்ன பசவன், மோளி செய மாரைய்யன், சகலேச மாதரசன், கணதாசி வீரண்ணன், அடப்பத்தப்பண்ணன், மடிவாள மாசிதேவன் போன்றோர்களின் வசனங்களைப் படித்தால் பசவண்ணரின் நினைவு அவ்வப்போது வருகிறது. எடுத்துக்

காட்டிற்கு, பசவண்ணரின் 'கல் நாகத்தைக் கண்டால் பால் ஊற்றுவார்கள், உண்மையான நாகத்தைக் கண்டால் கொல்லென்பாரைய்யா' என்னும் வசனம் அம்பிகா சௌடைய்யன் வசனத்தில் 'கல் நாகரைக் கண்டால் பால் ஊற்று என்பாள், வாழும் நாகரைக் கண்டால் கொல், கொல் என்பாள்' என்று உருமாறி வந்துள்ளது. உலகின் குறையை நீ ஏன் திருத்துகிறாய் ஐயா' என்னும் பசவண்ணரின் வசனத்தை சன்ன பசவண்ணர் பயன்படுத்தி யுள்ளதைக் காணலாம். அதுமட்டுமல்லாது, ஒரு செய்தியை உறுதிப்படுத்துவதற்காக பசவண்ணரின் ஒரு வசனத்தை ஆதாரமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார். பசவண்ணரின்' ''சிலருக்கு நல்லவனாக இருக்கின்றேனே தவிர என் மனதிற்குச் சுத்தமானவனாக இருக்க வேண்டுமைய்யா'' என்னும் வாக்கு சகலேச மாதரசனின் ''ஜனங்களின் பார்வையில் நான் நல்ல வன்; ஆனால் என் மனதின் பார்வையில் நல்லவன் அல்லன்'' எனும் வாக்கில் காணலாம். பசவண்ணரின் 'மேருவின் தன்மையை காகத்தில் எவ்வாறு காணமுடியும்' என்னும் அடியை கணதாசி வீரண்ணன் அவ்வாறே பயன்படுத்தி யிருப்பதைக் காணலாம். இவ்வாறு அவரது படைப்புக்களைப் பயன்படுத்தியுள்ளமைக்குப் பல ஆதாரங்களைக் கூறிக் கொண்டே போகலாம்.

இத்தகைய தாக்கமும் இயல்பானதே. ஏனென்றால் பசவண்ணரின் மற்றும் வேறு வசன ஆசிரியர்களின் வசனங்களை மக்கள் பாடினர். அவரே ஓரிடத்தில்

தாள மறியேன் பண்ணும் முறையுமறியேன்,
அமிர்தகணம் தேவகணம் அறியேன்,
உனக்குத் துன்பந் தாராவகையில்
யானறிந்தவாறு பாடுவேன், கூடலசங்கமதேவா!

என்று கூறியுள்ளார். பசவண்ணர் பாடப்பாட அந்த ஆவேசத்தில் மக்கள் ஆடத் தொடங்கினர் என்று கூறுவ

தற்குப் போதுவான ஆதாரங்கள் உள்ளன. சித்தராமனின் வசனங்களை அவனது மாணவர்கள் சுத்தபைரவி ராகத்தில் பாடினார்கள் என்று ராகவாங்கன் எனும் புலவன் கூறு கிறான். வசன ஆசிரியர்களின் வசனங்களைப் படித்து மனப் பாடம் செய்து கொண்டு அவற்றைப் பாடி ஆடும் தொழிலைச் சில பெண்கள் மேற்கொண்டிருந்தனர். இதனால் எல்லா வசன ஆசிரியர்களின் வசனங்களும் நாட்டின் எல்லாப் பகுதியி லும் பரவிற்று. கல்யாணிற்கு வந்த சிவத் தொண்டர்களும் பசவண்ணரின் வாயிலிருந்து வந்த வசனங்களைக் கேட்டு மருளடைந்தனர்.

பசவண்ணர், அல்லமன், சன்னபசவண்ணன் போன்றோர் களின் வசனங்களால் ஈர்க்கப்பட்டு வெவ்வேறு தொழிலில் ஈடுபட்டிருந்த சாதாரண மக்களும் கூட தத்தமது தொழில் களில் பயன்படுத்தும் சொற்களைப் பயன்படுத்தி வசனங்களை இயற்றியுள்ளனர். பசவண்ணரின் வாழ்வு இந்த சாதாரண மனிதர்களுக்கு வாழ்க்கையின் உண்மையை விளக்கியது என்றால் அவரது வசனங்களோ துன்பங்களை நீக்கின.

பசவண்ணர் ஓரிடத்தில் சொல் என்றால் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் குறித்து ஒரு வசனம் எழுதியுள்ளார்.

பேச்சு முத்து மாலைபோல் குளிர்ந்து இருக்கவேண்டும்
பேச்சு மாணிக்க ஒளிபோல் விளங்க வேண்டும்
பேச்சு பளிங்குபோலத் தூய்மையாய் இருக்கவேண்டும்
பேச்சை இறைவன் மெச்சி 'ஆம் ஆம்' என்று கூறல் வேண்டும்.
பேச்சுக் கேற்ப நடவாதிருந்தால் விரும்புவானோ
எம் கூடலசங்கம தேவன்?

இந்த வசனம் அவரது வசனங்களின் இயல்பை விளக்குவன போலல்லாமல் வேறு எவ்வாறுள்ளது? பசவண்ணர் பேசி னார். லிங்கம் அதை மெச்சி 'ஆம், ஆம்' என்றது.

12. செய்திகள்

பசவண்ணர் இறைவனின் திருவடியை அடைந்து தற்பொழுது எண்ணூறு ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் காலத்திற்குள் மக்களின் வாழ்க்கையும் மக்களின் நம்பிக்கைகளும் எண்ணங்களும் வெகுவாக மாறியுள்ளன. நமக்கு முந்தைய மக்கள் நம்பிவந்த பல செய்திகள் தற்போது மறுக்கப்பட்டுவிட்டன; கைவிடப்பட்டும் விட்டன. பழங் காலத்திலிருந்து கடைபிடிக்கப்பட்டு வருகிறது என்னும் எண்ணத்திற்காகவே நம்பிக்கைகளின் மீது நம்பிக்கை கொள் ளாமல் அறிவு என்னும் உரை கல்லின் மீது இட்டு சோதித்துப் பார்க்கும் சிந்தனை தற்போதைய மனிதனிடம் காணப்படு கிறது. இப்படிப்பட்ட வளர்ச்சியடைந்துள்ள இந்த காலத் திற்கும் இளைய தலைமுறையினருக்கும் பசவண்ணரின் வசனங்களிலிருந்து செய்திகள் ஏதேனும் கிடைக்குமா? அவர் கொடுக்கக் கூடியவரா?

பசவண்ணர் எப்படிப்பட்ட குறைபாடும் இல்லாத முழு மனிதர் அல்லர் (இந்தக் கண்ணோட்டத்துடன் பார்த்தால் உலக வரலாற்றில் உள்ள இத்தனை பேர்களில் குறைபாடு ஏதுமற்ற முழுமையானவர்கள் கிடைப்பார்களா என்பது ஐயமே). அவர் செய்தது, சொல்லியது யாவையும் நமக்கு பொருந்தக்கூடியன. ஏற்றுக்கொள்ளக் கூடியன என்றால் அது மிகையே. அவரது வசனங்களில் தன் நெறியைப் புகழ்வது, போற்றுவது மற்றும் வேறுதெய்வங்களை

இகழ்வது போன்ற செய்திகள் ஏராளமாக இருக்கின்றன. அவை அந்த காலத்திற்கு, அவரது எண்ணத்திற்கு தேவை யாக இருந்தன என்று மட்டும் சொல்லவேண்டுமே தவிர தற்காலத்தில் கடைப்பிடிக்கப்படுவதற்கு ஏற்றன என்று கூற முடியாது என்பது உண்மை. அவ்வாறே அவர் வீரசைவர் களுக்குக் கொடுத்த மிகுதியான சிறப்பு, திருநீறிருந்தால் போதும், என்று எண்ணிய மனவியல்பு போன்றவை கூட இக்காலத்திற்குப் பொருந்தக் கூடியனவல்ல. அவர் தமது சாதனைகளின் ஒரு கட்டத்தில் தமக்கு இயல்பாக உள்ள குறைபாடுகளைப் போக்கிக்கொள்ளச் செய்வதற்கு எவ்வளவு துயரடைந்திருக்கிறார் என்பதை நாம் முன்னரே கண்டோம். இவ்வாறு மனிதர்களிடம் காணப்படும் இயல் பான குறைபாடுகள் சில அவரிடம் காணப்படுகின்றன. இப்படிப்பட்ட குறைபாடுகள் அவரிடம் க்ாணப்படுவ தனாலேயே அவர் நமக்கு மனிதராகவும், மரியாதை செய்யப் படுபவராகவும் தோழராகவும் தோற்றமளித்து நம்மை ஈர்க்கிறார். இக்கண்கொண்டு பார்த்தால் மக்கள் அவருக்கு அளித்திருக்கும் 'அண்ணன்' என்னும் சிறப்புப்பெயர் பொருள் உள்ளதாக விளங்குகிறது.

அவரிடமிருந்த சில குறைபாடுகளை விட்டு விட்டால் அவரது வாழ்வு மற்றும் கற்பித்த கொள்கைகள் நமக்கு எப்படிப்பட்ட பெரிய செய்திகளை வழங்குகின்றன.

நம்மில் பலர் குருட்டு வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக் கிறோம். இன்னும் சிலர் ஏதோ வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள்; எப்படியோ நானும்கூட வாழ்ந்து கொண்டிருக் கிறேன் என்பதே அவர்களது எண்ணம். அவர்களுடைய வாழ்விற்கு ஒரு உறுதியான நிலையில்லை. குறிக்கோளில்லை. ஆனால் செயற்கருஞ்செயல்களைச் செய்து முடித்துள்ள பெரியோர்களின் வாழ்க்கையைப் பார்த்தால் அவர்கள்

யாவரும் தமது வாழ்வில் சிறப்பான குறிக்கோளை வைத்துக் கொண்டே வாழ்ந்தார்கள் என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். காற்று வீசிய பக்கம் அவர்கள் அடித்துச் செல்லப் படவில்லை. தாம் தீர்மானித்திருந்த திசையிலேயே நடை போட்டார்கள். அவர்கள் நடந்த திசையில் காற்று வீசிற்று. சிறப்பான குறிக்கோளானது அவர்களது வாழ்விற்குப் பொருளைத் தந்தது. பசவண்ணரின் வாழ்வு தமது கொள்கைகளைச் சாதித்துக் கொள்ளும் ஒரு மிகப் பெரிய போராட்டமாகவே இருந்தது. அவருக்கு எவ்வளவோ துயரங்கள் வந்தும் அவரை முன்நடத்திச் சென்றது அவரது உயர்ந்த கொள்கைகளே.

சில சமயங்களில் வாழ்வில் சிறந்த குறிக்கோள்களை வைத்திருப்பதும் அவற்றைப் பற்றிச் சிறப்பாகப் பேசுவதும் மிகவும் எளிதான செயல்களாகி விடுகின்றன; ஆனால் அக் குறிக்கோள்களை எட்டுவது மட்டும் மிகுந்த கடினமான செயலாக இருந்துவிடுகிறது. இது அரத்தைப்போலச் செயல் பட்டு போகும்போதும் வரும்போதும் அவனுக்குத் துயர் தருகிறது. தம்மைத்தாமே முதற்கண் சரிசெய்து கொள் ளாமல் பொதுமக்களுக்குத் தொண்டு செய்வதே நமது குறிக்கோள் என்று மக்களுக்கு அறிவுரை கூறுகிற, வாய் நிறையப் பேசுகிற சன்னியாசிகளும், இல்வாழ்க்கை மேற் கொண்டுள்ளவர்களும் தமது குறிக்கோளில் தோற்றுப் போவதோடல்லாமல் சமுதாய எதிரிகளாகவும் ஆகிவிடு கிறார்கள். அவர்கள் சமுதாயத்தைத் திருத்தப்புறப்படும் முன்னர் தம்மைத்தான் திருத்திக் கொள்ளவேண்டும். உலகச் சீர்திருத்தத்திற்கு தனி மனித சீர்திருத்தமே முதற்படி என்பதற்கு பசவண்ணரின் வாழ்க்கை ஒரு சிறப்பான எடுத்துக் காட்டாகும்.

சிறப்பான செயல்களைச் செய்ய முற்பட்டுள்ள ஒருவனுக்கு அவனது முயற்சிக்குப் பல தடங்கல்கள் வரலாம்.

ஆனால் அவன் அதைப் பற்றித்துயர் கொள்ளாது அவற்றை எதிர்த்து நிற்றல் வேண்டும். இந்த முழு உலகமுமே எதிர்த் தாலும், அவனுக்குத் தனது குறிக்கோளில், திட்டங்களில் உண்மையான நம்பிக்கையிருந்தால் அவன் யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. ஆனால் யாருக்கும் அஞ்சமாலிருத்தல் என்பதற்கு அகங்காரம் கொண்டிருத்தல் என்பது பொருள் அல்ல. அவன் நீதிக்குப் புறம்பானவற்றையும், அறத்திற்குப் புறம்பானவற்றையும் எவ்வளவு உறுதியுடன் எதிர்க் கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அன்புடன் நெறிப்படியுள்ளன வற்றையும், நற்குணத்தையும் அணுகுகிறான் என்று பொருள். தான் எந்த நற்செயல் செய்தாலும் அது அவனுக்கு அகங்காரத்தை அளிக்கக்கூடாது. 'செய்தேன் என்பது மனதில் பதிந்தால் இறைவனின் உடுக்கை நமக்கு துன்பந்தரும். செய்வதை எவ்விதமான எதிர்ப்பார்ப்புக்களும் இல்லாமல் செய்ய வேண்டும். எத்தனையோ முறை, ஒரு செயலைச் செய்தவனுக்கு அதன் பிரதிபலனாக நன்மை விளையாதிருந் திருக்கலாம். அதையும் மன அமைதியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும், மேதரகேடிய்யன் கூறுவதைப் போல 'பக்தர் களுக்கு இன்பமும் சரி, துன்பமும் சரி.'

உலகில் எந்த விலங்கும் சோம்பல் கொண்டிருக்கவில்லை. ஒவ்வொரு உயிரும் உலகில் தான் வாழ்வதற்கு உழைத்தே தீரவேண்டும். சிறுகுட்டி வளர்ந்து பெரிய விலங்கானதும் அது தனது உணவைத் தானே தேடிக் கொள்ள வேண்டி ஏற்படுகிறது. ஆனால் சோம்பல் தன்மை மனிதர்களிடம் தான் மிகுந்து காணப்படுகிறது. அதன் பயனாக அவர்கள் வாழ்வில் இடர்ப்படுகிறார்கள். அதற்குப் பதிலாக ஒவ்வொரு வரும் தன்னாலியன்ற ஒரு தொழிலை மேற்கொண்டு அதில் உண்மையாக உழைத்து வந்தால் அவர்கள் இன்பம் பெறு கிறார்கள், உலகும் இன்பமடைகிறது. தான் செய்துவரும்

தொழிலைப்பற்றி ஒருவன் நல்ல எண்ணங்கள் கொண்டிருக்க வேண்டும்; அதனால் கிடைக்கும் பலன்களைப் பற்றி அவன் குறைபாடு கொண்டிருத்தலாகாது. இன்பம் என்பது மனதின் நிறைவே தவிர கடையில் வாங்கப்படும் பொருள் அல்ல. இதனால் ஒருவன் தான் மேற்கொண்டிருக்கும் தொழிலை இறுதி வரையிலும் விடாமல் செய்து கொண்டிருக்க வேண்டும் என்று பொருள் இல்லை. வேறு தொழில் சிறப்பானதாக இருக்கக்கூடும் என்று அவனுக்குத் தோன்றினால் அதை மேற்கொள்ளலாம். ஆனால் தான் செய்து வரும் தொழிலில் இருக்கும் வரை அதில் குறை ஏதுமில்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். வெறுப்பின் காரணமான பொறுப்பின்மை அவனிடம் தலைதூக்காமலிருக்க வேண்டும். இல்லையென்றால் அவனுக்கும் கேடு, நாட்டிற்கும் கேடு.

தனது தொழிலால் ஈட்டிய பொருளில் தன்னால் இயன்ற அளவு பிறருக்கு உதவும் வழக்கத்தைக் கற்க வேண்டும். உலகில் துன்பம் உள்ளது. அவையெல்லாவற்றை யும் தன்னாலேயே போக்கிக் கொள்வது இயலாதது. 'மலைக்குக் குளிரெடுத்தால் அதை எதைக்கொண்டு. போர்த்துவது? நாம் என்ன செய்ய முடியும்' இவ்வாறு. எண்ணிக் கொண்டு பலர் 'நம்மைநாம் பார்த்துக்கொண்டால் காப்பாற்றிக் கொண்டால் போதும்' என்று மன அமைதி கொள்ளுகின்றனர். இதைப்பசவண்ணர் ஏற்றுக்கொள்ள வில்லை. நமது இன்பதில் சிறிதளவையாவது நமக்கு அருகிலி ருப்பவர்களுடன் பகிர்ந்து கொள்வோம் என்று கூறுகிறார். நம்மிடம் சில சமயம் பணமில்லாதிருக்கலாம். ஆனால் நல்ல சொற்கள் கூடவா இல்லாமல் போய்விட்டது? 'வாருங்கள்', 'நலமாக இருக்கிறீர்களா?' 'ஐயோ பாவம்' என்று கூறுவது கூடவா இயலாமற் போய்விட்டது? நம்மால் வழங்குவதற்கு இயலாமற் போய்விட்டால் பரவாயில்லை; நல்ல சொற்களை

யாவது சொல்லுவோம் என்கிறார் பசவண்ணர். உழைப்பு, உண்மை, தியாகம் இவைகளே தொழிலின் முக்கிய அம்சங்கள். பசவண்ணரின் வாழ்க்கை உடலுழைப்புக் கொள்கைக்கு (காயக தத்துவம்) ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வுலகத்தில் பழங்காலந்தொட்டு மேல், கீழ் என்னும் பாகுபாட்டு உணர்வு உள்ளது. இது சாதியைப் பற்றிய தாகவோ அல்லது பொருளாதார நிலை பற்றியதாகவோ உள்ளது அல்லது அறிவு நிலைபற்றியும் தொழில் நிலை பற்றியும் இருக்கலாம். ஒருவன் பிறருடன் தன்னை ஒப்பிட்டுக் கொண்டு தான் சிறியவன் என்று எண்ணிக் கொண்டும் வேறு பலருடன் வெவ்வேறு கண்ணோட்டத்துடன் ஒப்பிட்டுக் கொண்டு தான் பெரியவன் என்று எண்ணிக்கொண்டு பெருமைபட்டும் வாழ்கிறான். இதற்குப் பதிலாக 'என்னை விடச் சிறியவர்கள் இவ்வுலகில் இல்லை' என்று எல்லோரும் எண்ணினாலோ? அப்பொழுது எவ்வித பிரச்சினையும் இல்லை. ஒருவேளை இது எல்லோராலும் பின்பற்ற முடியாத கொள்கையாக இருக்கலாம். ஆனால் ஏற்றத்தாழ்வை நீக்க வேண்டும் என்று எண்ணி முயற்சி செய்தால் அப்பொழுது இக்கொள்கை ஏற்கப்பட்டுவிடலாம். மக்கள் எல்லோரும் ஒன்றே, ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள் என்னும் மிகச் சிறப்பான உண்மையை உலகிற்குத் தெரியப் படுத்த வேண்டும். இதை உணர்ந்து கடைப்பிடித்தால் உலகம் சிறக்கும். பசவண்ணர் சமுதாயத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வுகளைத் தமக்கே உரித்தான வழியில் பிரித்துணர முற்பட்டிருக்கிறார். தமது அறநெறிக்குள் எல்லோருக்கும் அனுமதியளித்து, உள்ளே வந்தவர்கள் யாவரும் எல்லா முறையிலும் சமமானவர்களே என்று கூறி அவர்களைச் சிறப்பித்தார். அவரது தொண்டு மனப்பாங்கு, உலகை நல்வழிப்படுத்தும் எண்ணம் மதிக்கப்பட வேண்டியவை.

துறவறம் மிகப் பெருங் கொள்கையாகும். மனிதன் தனது மேன்மைக்காக, உலகின் நலத்திற்காக இல்வாழ்க்கையை விட்டுவிட்டு துறவியாகிறான். தனது எல்லா சக்திகளையும் அடக்கி ஒருமுகப்படுத்திச் செயற்படுவதனால் அவன் செய்ய இயலாத செயல்களைச் செய்கிறான். அப்படிப்பட்ட சாதனைகளைச் செய்து பெருந்தகையான துறவிகள் இதற்கு முன்னர் பலர் தோன்றி மறைந்துள்ளனர். இப்பொழுதும் அப்படிப்பட்டவர்கள் சிலர் இல்லாமலில்லை. ஆனால் மக்களை வஞ்சிப்பதில் துறவறத்திலிருப்பவர்களுக்கு ஈடுஇணையாக யாரையும் கூறஇயலாது. துறவிகளின் வேடத்திற்கு மக்கள் அஞ்சுகிறார்கள். அவர்களால் கிடைக்கக் கூடிய சாபங்களுக்காக அஞ்சுகின்றார்கள். மக்களின் அறிவின்மையைத் துறவிகள் தமது சுயநலத்திற்கும், தற்பெருமைக்கும் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். அவர்களது திரைமறைவிலான வாழ்வை மக்கள் அறிந்தாலும் அதைப் பொருட்படுத்துவதில்லை. இதை வசன ஆசிரியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால் இல்வாழ்வை விட்டுச் செல்ல வேண்டும் என்று எங்கும் கூறவில்லை. இங்கு இந்த உலகத்தில் சிறப்பாக வாழ்வதையே அவர் கற்பித்தார். இவ்வுலகம் இருப்பது துறவு மேற்கொள்வதற்காக அல்ல, புறக்கணிப்பதற்காக அல்ல, இன்பமாக வாழ்வதற்கே. ஆனால் இன்பம் என்பது அறநெறிக்குப் புறம்பானதாக இருத்தலாகாது. அப்படிப்பட்ட வாழ்க்கையை இங்கு சிறப்பாக நடத்தினால் பரலோகத்தில் நமக்கு முக்தி கிடைக்கும். ஆதலால் பசவண்ணர் இப்பூவுலகின் மேலிருக்கும் நமது வாழ்விற்குச் சிறப்பினைச் சேர்த்தார்.

'பசவண்ணரின் எண்ணம் இன்பப் பெருங்கடலையா' என்று சித்தராமன் ஓரிடத்தில் கூறியுள்ளான். அவன் அவரது காலத்தில் வாழ்ந்தவன். அவரருகில் நீண்ட நாட்கள் ஒன்றாக இருந்தவன்; அவரது நெருங்கிய நண்பனாகி

அவரது சொற்களையும் செயல்களையும் பார்த்தவன். அவனைப் போலவே அவரைப் பக்கத்திலிருந்து பார்த்த பிறகும் அவரைப் பற்றிச் சிறப்பாகக் கூறியுள்ளனர். அருகிலிருந்து பார்க்கப்பட்டு எவ்வளவு நெருங்குகிறோமோ அவ்வளவு சிறப்பானவராக விளங்கும் மனிதர்களில் பசவண்ணரும் ஒருவராவார். நாம் அவரைப் பிரிந்து எண்ணூறு ஆண்டுகள் ஆகின்றன. ஆனாலும் அவர் பரப்பிய வீரசைவநெறியின் தொண்டர்கள் நாள்தோறும் அவரை நினைவு கூருகிறார்கள். எழுந்தால், கீழே விழுந்தால், துன்பம் வந்தால் 'பசவா, பசவா' என்கிறார்கள். 'பசவா' என்பது அவர்களது வாழ்வில் மூன்றெழுத்துக்களைக் கொண்ட சஞ்சீவி மந்திரம், தாரக மந்திரம் போன்றது பீமகவி ''பசவனின் பெயர் சிவனின் முக்கிய கணங்கள் எல்லாவற்றின் பெயரிலும் தலையாயது என்கிறான். எல்லா பக்தர்களின் பெயரும் பசவண்ணரின் பெயரில் அடங்கியுள் ளன. அவரை நினைத்தால் எல்லோரையும் நினைத்ததைப் போல. சித்தரஞ்சேசன் என்னும் புலவன் 'பசவநாமம் வீர சைவரின் மனதிற்கு அழகூட்டும்' என்று கூறுகிறான். அவரது பெயர் அவ்வளவு அழகானது. கன்னட மக்களுக்கு அவரது நினைவு இன்றும் பேரின்பக் கடலாக உள்ளது; அவரது ஞாபகம் எப்பொழுதையும்விட இப்பொழுது, மிகவும் சீர்கெட்டிருக்கும் வாழ்வை நடத்திக் கொண்டி ருக்கும் நமக்கு இன்றியாமையாததாகிறது. அவர் கூறினார். அவ்வாறே செயல்பட்டார். மக்களுக்காக உழைத்தார். இதே அவரது செய்திகளின் சுருக்கம்.

எமது வெளியீடுகள்

சுந்தர பாண்டியனின்

- பகல் கனவுகள்
  புதுக் கவிதைகள்
- கன்னடியர் மகள்
  நாட்டுப்புற வரலாற்று
  நாவல்

இலக்குவின்

- எழுபதுகளில் கலை
  இலக்கியம் திறனாய்வு

சமுத்திரனின்

- இலங்கை தேசிய இனப்
  பிரச்சனை ஆய்வுரை

சிவசேகரத்தின்

- நதிக்கரை மூங்கில்
  புதுக்கவிதைகள்

பவ்வா வெளியீடு